# THE TAMIL
# REVENUE LAW MANUAL.

சென்னை ராஜதானியிலுள்ள
கணக்கர், மணியகாரர் முதலிய
ரெவினியூ உத்தியோகஸ்தர்களுக்கும்,
ரயிதுவாரி மிராசுதார்களுக்கும்,
கிராம உத்தியோக பரீக்ஷை கொடுப்பவர்களுக்கும்,
ஜமீன்தார் மிட்டாதார் முதலியவர்களுக்கும்
மிகப்பிரயோஜனமாயுள்ள

## தமிழ்
# ரெவினியூலாசங்கிரகம்.

இஃது
சென்னை லா பப்ளிஷர்
ம-ா-ா-ஸ்ரீ
**டி-கோபாலகிருஷ்ணய்யர்**
வேண்டுகோளால்
இயற்றப்பட்டது.

MADRAS.

T. GOPALAKRISHNA IYER,
LAW PUBLISHER.

*(Copy-right Registered.)*

Madras:
PRINTED AT THE CITY PRESS,
*Popham's Broadway.*

# PREFACE.

## முகவுரை.

நமது தமிழ் நாட்டிலுள்ள பொது ஜனங்களுக்கு சாதாரணமாய் தங்கள் ஜில்லாக்களில் ரெவினியூ உத்தியோகஸ்தர்கள் அனுஷ்டிக்கிற நடவடிக்கை முற்று மறியாதவர்களாயிருக்கின்றனர். மிராசுதார்கள், கர்ணங்கள், மணியம், முனிசீப்புகள் இவர்கள் செய்யவேண்டியது இன்னதென்று அறியாதவர்களாயிருப்பதுபற்றி அவர்களுக்கு வெளிப்படையாய் இன்னது அனுஷ்டிக்கவேண்டியதென்றும் சொல்லுகிறது அன்றியும் இப்புத்தகத்தில் ஸ்டாண்டிங்கு ஆர்டர் உத்தரவுகள் சங்கிரகமாக எழுதப்பட்டிருக்கிறதேயன்றி மொழிபெயர்ப்பாயில்லை. இப்புத்தகம் நம் நாட்டாருக்கு இன்றியமையாதது பற்றியும், இதுவரையில் இம்மாதிரி புத்தகம் இல்லாததுபற்றியும், தற்காலத்தில் இதை வெளியிடலாயிற்று. இதில் அனேக குறைப்பாடுகளும் பிழைகளும் இருந்தபோதிலும் இப்புத்தகம் வாங்குபவர்கள் மன்னிப்பார்களென்று நம்புகிறேன். அன்றியும் இரண்டாம் பதிப்பு இன்னும் மாறுதல்களுடன் இன்னும் கொஞ்ச நாளைக்குள் வெளியிடவேண்டிய அவசியம் நம் தமிழ் ஜில்லாக்களிலுள்ளவர்கள் இப்புத்தகத்தை அங்கிகரிப்பதனால் வருமென்று முழு நம்பிக்கையுடனிருக்கிறோம்.

P. V. S.

# CONTENTS.

# அடக்கம்.

பக்கம்.


பீடிகை ... ... ... 1

PART I.

முதல் பாகம்.

சேக்ஷன் I.

Standing orders ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ் ஸங்கிரகம், தீர்வைபோடவேண்டிய பத்ததி ... ... ... 2

கணக்குகளிலிருப்பதைப் பார்க்கிலும் அதிகமாகவாவது, குறைந்தாவது விஸ்தீரணமாயிருக்கும் நிலத்திற்குத்தீர்வை, புஞ்சைநிலத்தின்பேரில் தண்ணீர் தீர்வை ... ... 3

சொந்த கிணறுகள், சொந்த வரிகள் கட்டிக்கொள்வது ... 5

உடைந்துபோன கவர்ன்மெண்டு ஏரியை ஜனங்கள் சொந்தச்செலவால் சீர்படுத்திக்கொள்வது ... ... ... 7

தாங்கல்களின் சொந்த ரிபேர், காட்டாறுகளிலிருந்தும், மடுவுகளிலிருந்தும் தண்ணீர்பாயப்படும் நிலத்திற்குத் தீர்வை ... ... ... ... ... ... 9

விடுதிமரங்களும், கவர்ன்மெண்டு தோப்பு நிலங்களும் ... 11

பொதுப்பிரயோசனத்திற்கும், சொந்தத்திற்கும் வைக்கப்படும் தோப்பு ... ... ... ... ... 12

நிலங்களின்பேரில் ஆக்கிரமித்தல் ... ... ... 13

இருபோகசாகுபடி ... ... ... ... ... 14

தண்ணீர்பாய்ச்சல் ஆதாரமில்லாத நஞ்சைநிலம், எடுபட்ட ஏரிமுழுவடையிலிருக்கும் நிலம், ஹக்குசாசனம் ... 15

பட்டாமாற்றுதல் ... ... ... ... ... 17

பட்டாவில் சேர்ந்த நிலங்கள் விஷயத்தில் குடியானவனுக்கு உண்டாயிருக்கும் சுதந்தரம் ... ... ... 21

கூட்டுபட்டா, பட்டாகொடுத்தல்... ... ... ... 22

ஜமாபந்தி, ரிமிஷன் அல்லது முஜரா ... ... ... 23

காலாகாலத்து ரிமிஷன் ... ... ... ... 24

நிலங்களை சப்டிவிஷன் செய்வது ... ... ... 25

பக்கம்.

கவுல்கள், தீர்வையுள்ள நிலத்திற்கு கைப்பற்ற வேண்டிய தற்காக செய்யவேண்டிய நடவடிக்கை ... ... ... 26
சோடி ராஜிநாமா கொடுத்தல் ... ... ... 31
தீர்வைவிழாதநிலத்தை விற்பனைசெய்வது ... ... ... 32
தீர்வைவிழுந்தநிலங்களை தீர்வையில்லாமல் விடுதல், வீடு கட்டுவதற்காக நிலங்கொடுப்பது ... ... ... 34

சேக்ஷன் II.

ரெவினியூ கலெக்ஷன், ரெவினியூசெலுத்தல் ... ... 36
வருஷவாரி வசூல், கிஸ்தியை தள்ளிவைத்தல், பழமுதல் பாக்கிவஜா, தீர்வை வசூல்செய்தல்... ... ... 38
1864ஞு சென்னை II-வது ஆக்டின்படி நடத்தவேண்டிய நடவடிக்கை ... ... .. ... ... 39
சர்க்கார்பாக்கிக்காக விற்பனைசெய்வது, அப்புறப்படுத்திய நிலத்தை ரெவினியூபாக்கிக்கு ஏலத்தில்போடுவது ... 56
பூ சுவதந்தரம் இன்னுனுடையதென்று தெரியாதிருந்தால் அந்தகாலத்தில் நடவடிக்கை, கெவர்ன்மெண்டாருக்காக ஏலத்தில் எடுப்பது ... ... ... 57
பிராசஸ் கொடுப்பது ... ... ... ... 58
சிவில்கோர்ட்டாருடைய தீர்ப்பையனுசரித்துவிற்கப்படும் பூமியின்பேரில் பாக்கிவசூல் ... ... ... ... 59
சிவில் கோர்ட்டாருடைய தீர்ப்பை யனுசரித்து மறியல் செய்யப்பட்ட பூமியின்பேரில் பாக்கிவசூல், சுபாவனிதி, நிலவிருத்தி சம்பந்தமான சடன்களைக்குறித்து 1883ஞுத்திய 19-வது ஆக்ட் 10-வது பிரிவின்படி செய்யப்பட்ட விதிகள். ... ... ... ... 60
1831ஞு 6-வது சட்டப்பிரகாரம் நடத்தவேண்டிய அமுல் ... ... ... ... ... ... 72

சேக்ஷன III.

இனமும் அதைச்சார்ந்த விஷயமும்.

இனம் செடில்மெண்டுக்காக புதிதாக ஏற்பட்ட விதிகள் ... 75
இனம் கமீஷனரால் செடில்மெண்டான இனம்களின் விஷயத்தில் கலெக்டரது வேலை.... ... ... ... 87
வார்சு முறைமை, இனம்களை சப்டிவிஷன்செய்வது, கீழ்க்குத்தகை முதலியன. ... ... ... ... 89
ராஜாங்க காரியங்களுக்காக எடுத்துக்கொண்ட மானியங்களுக்கு கம்பன்ஸேஷன் கொடுத்தல். ... ... ... 90

தண்ணீர்தீர்வை, அதிக அல்லது மிச்சநிலங்களின் விஷயத்தில் நடத்தவேண்டிய நடவடிக்கை. ... ... ... 91
மானியங்களை விட்டுவிடவேண்டியது, விற்பனை. ... ... 92

## சேக்ஷன் IV.

## பொதுவிஷயங்கள்.

சுதேசிகளுக்கு தர்ம சத்திரங்கள் ... ... ... 92
கோர்ட் ஆப் வாட்ஸ்நிலத்தீர்வை விதிப்பதும் வசூல்செய்வதும் 93
தீர்வைவஜா, பவுண்டுபண்டு ... ... ... 94
ஜனனமரண ரிஜிஸ்திரேஷன் ... ... .... ... 95
தேவாலயங்களில் உத்சவம், அம்மைகுத்துதல் ... ... 96
வெள்ளத்தைப்பற்றி தந்திசெய்யவேண்டியதைக்குறித்து, தொத்துவியாதிகள்நேரிடும்போது செய்யவேண்டியவை .... 97
தண்டுகளுக்கு வழிப்பிரயாணத்துக்கு வண்டி முதலானவைகளைச் சம்பாதித்துக்கொடுத்தல்... ... ... 98
வழியிலே தண்டுக்கு சாமக்கிரியைகளைச் சேகரித்துக்கொடுக்கும் விஷயம் ... ... ... ... ... 100

---

## PART II.

## இரண்டாம் பாகம்.

சென்னப்பட்டணம் 1864ஞூ 2-வது ஆக்ட்... ... 103
சென்னப்பட்டணம் 1865ஞூ 8-வது ஆக்ட் ... ... 125
பொதுவான காரியங்களுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்களை எடுத்துக்கொள்ளும் விதம் .... ... 158

---

## PART III.

## மூன்றாம் பாகம்.

விலேஜ்தாலூகா கணக்குகள் ... ... ... 177
இரிகேஷன் ரிவினியூ கணக்குகளை தயார் செய்வதற்காக ரிவினியூ செட்டில்மெண்டுஅண்டு ஆக்ரிகல்சா டைரெக்ட்டர் பிறப்பித்த பத்ததிகள் ... ... 203

---

# THE TAMIL
# REVENUE LAW MANUAL.

## தமிழ் ரெவினியூ லா சங்கிரகம்.

### பீடிகை. (INTRODUCTION.)

இந்துதேசமானது கிரேட்பிரட்டன் அன்டு அயர்லாண்டுதேசத்ததிபதியும், இந்தியா சக்கிரவர்த்தினியுமாகிய மகாமேன்மை தங்கிய விக்டோரியா அவர்களுடைய ஆளுகைக்குட்பட்டது. அதைச்சேர்ந்த துரைத்தனகாரியங்கள் யாவற்றையும் செகிரிடிரி ஆப்ஸ்டேட்ஸ் பார்த்து வருகிறார். இந்தியாவின் சுதேச துரைத்தனம் கவர்னர் ஜனரலின்கீழ் இருக்கின்றது. கவர்னர் ஜனரலுக்கு கீழ்ப்பட்டிருக்கிற இராஜ்யத்தை இராஜதானிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவ்விராஜதானிகளில், அனேக இலாக்காக்க ளிருக்கின்றன. அவற்றுள், லாண்டு ரெவினியூ டிபார்ட்டுமென்டு என்பது குடிகளிடத்தி லிருந்து ரெவினியூ வசூல் செய்யவும், குடிகளுக்கு நிலத்தைப் பகுத்துத்தரவும், குடிகளுக்குள் நில சம்பந்தமாக உண்டாகும் சச்சரவுகளைத் தீர்க்கவும், புது ஏற்பாடுகள் செய்யவும் அதிகாரம் இருக்கின்றது. இந்த அதிகாரத்தை முழுதும் செலுத்துவதற்கு நமது இராஜதானியில் போர்ட் ஆப் ரிவினியூ ஏற்பட்டிருக்கிறது. ரெவினியூ போர்ட்டுக்குக் கீழ்ப்பட்டு ஷை அதிகாரங்களை நடத்த ஜில்லாக்களில் கலெக்டர்கள் இருக்கின்றார்கள். அந்த கலெக்டர்கள் அனுசரிக்கவேண்டிய ஏற்பாடுகள் ஸ்டான்டிங் ஆர்டர்ஸ் என்னும் பேருடையதாய் ரெவினியூ போர்டி லிருந்து அடிக்கடி வெளியாகின்றது. அந்த ஸ்டாண்டிங்கு ஆர்டர்ஸிலிருந்து லான்ட் ரெவினியூவுக்கு இன்றியமையாதனவாகிய சில உத்தரவுகளின் சங்கிரகங்களை யெழுதுகிறோம்.

# PART I.
# STANDING ORDERS.
## ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ் ஸங்கிரகம்.

### சேக்ஷன் 1.

### தீர்வை போடவேண்டிய பத்ததி. (B. S. O. 1.)
### (*Rates of Assessment.*)

ரயத்துவாரிநிலங்களின்பேரில் தீர்வையைத்திருத்துபாடு செய்யவேண்டிய விதிகள்.

1. நிலங்களை அனுசரித்துத் தீர்வை போடவேண்டும்.

2. பூமியின் வகுப்பு சாத்தியப்பட்டவரையில் ஒரே ஏற்பாட்டின்கீழ் இருக்கவேண்டும்.

3. தீர்வை, ஒரு புலத்தினின்றும் உண்டாகும் வருமானத்தில் அரைப்பங்குக்குள் இருக்கவேண்டும்.

4. புஞ்சை நிலத்தின்மேல் இருபோகதீர்வை போடக்கூடாது. நஞ்சை நிலத்திற்குத்தண்ணீர்ப்பாய்ச்சல் ஆதாரமிருந்தால் இருபோகத்தீர்வை போடவேண்டும். இரண்டாம்போகதீர்வை, முதல் போகதீர்வையில் பேர்பாதி. பாய்ச்சலுக்குத் தண்ணீர் இல்லாவிட்டால் தீர்வை வஜா செய்யலாம்.

6. சாதாரணமாக நிலத்தை நஞ்சை புஞ்சையென்று இரண்டு வகுப்பாகப் பிரிக்கவேண்டும்.

7. ஒரு கிணற்றின்கீழ் பத்துகஜத்துக்குள் இருக்கும் நிலத்துக்கு புஞ்சை தீர்வை போடவேண்டும்.

2. நிலங்களைப் பிரிப்பதில் செய்யவேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செடில்மெண்டு டிபார்ட்மெண்டார் செய்வார்கள். அப்படிச் செய்தபின் ஒருவயலில் சராசரி இருபது வருஷகாலம் உண்டாகும் சாகுபடி கணக்கின்பேரில் தீர்வை விதிக்கப்படும். இப்படி தீர்வை ஏற்பட்டதன்பேரில் தரங்கள் பிரிக்கப்படும்.

5. போர்டு உத்தரவன்னியில் பைமாஷிலாவது, செடில்மென்டுரோட்டிலாவது மாறுதல் செய்யக்கூடாது.

6. அதிக தீர்வையின்நிமித்தம் ஒருவன் நிலத்தைவிட்டு ஓடிப் போய்விட்டால், அந்தக் கீழ் உத்தியோகஸ்தர்கள் கலெக்டருக்குத் தெரியப்படுத்தவேண்டியது.

---

## கணக்குகளில் இருப்பதைப்பார்க்கிலும் அதிகமாகவாவது, குறைந்தாவது விஸ்தீர்ணமாயிருக்கும் நிலத்திற்குத்தீர்வை. (B. S. O. 2.)

(*Assessment of lands found in excess or deficient.*)

ஜமாபந்தி காலத்தில் நிலம் அதிகமாகக் காணப்பட்டால், அதற்குத் தீர்வைபோடவேண்டிய கிரமமாவது,—ஒரு நிலத்திற்கு கணக்கில் கண்டிருக்கிற விஸ்தீர்ணத்திற்கு 100-க்குப் பத்து அதிகமாகவிருந்தால் அதற்குத் தீர்வை போடவேண்டியது. நிலம் குறைந்திருந்தபோதும் மேற்கண்ட விதியை அனுசரிக்கவேண்டியது.

2. அதிக தீர்வை நிலத்தின் விஸ்தீரணத்தால் உண்டானதென்று தீர்மானிக்கப்படாது. ஏனென்றால், முதலில் தீர்வை ஏற்படுத்தியபோது நிலத்தின் சாகுபடியைக்கொண்டு தீர்வை யேற்படுத்தப் பட்டதுபற்றி. (B. S. O. 1. பார்க்கவும்.)

---

## புஞ்சை நிலத்தின்பேரில் தண்ணீர்த்தீர்வை. (B. S. O. 4.)

(*Water rate on dry lands.*)

2. புஞ்சை நிலங்களில் நஞ்சைப்பயிர் சாகுபடி செய்தால் கீழ்க்கண்ட ஜாப்தாவின்படி நிலதீர்வை விதிக்கவேண்டும்.

| | முதல்வகுப்பு. ஏரி, நதி, கால்வாய். | இரண்டாம் வகுப்பு. |
|---|---|---|
| A. புஞ்சையில் நஞ்சை சாகுபடி செய்தால் ஏக்ரா 1-க்கு ... | 4 0 0 | 3 0 0 |
| B. இரண்டாம்போகத்துக்கு ... | 2 0 0 | 1 8 0 |
| C. கரும்பு, வெற்றிலே, வாழை, மஞ்சள், தோட்டக்கால் பயிர்கள் சாகுபடி செய்தால் ஏக்ரா 1-க்கு ... | 6 0 0 | 4 8 0 |

| | முதல் வகுப்பு ஏரி, நதி, கால்வாய். | இரண்டாம் வகுப்பு. |
|---|---|---|
| D. புஞ்சையின் முதற்போகத்துக்காவது இரண்டாம் போகத்துக்காவது எப்போதாவது தண்ணீர்ப் பாய்ச்சினால் ... | 200 | 180 |
| E. புஞ்சை தானியத்திற்கு தண்ணீர் விடாமல் பாய்ச்சினால் முதல் போகத்துக்கு | 300 | 240 |
| இரண்டாம் போகத்துக்கு ... | 200 | 180 |

3. தண்ணீர்ப்பாய்ச்சுகிறவிஷயத்தில், தண்ணீர்த்தீர்வை, தண்ணீர்ப்பாய்ச்சுதலினால் உண்டாகும் சாகுபடி விஸ்தீர்ணத்தின்பேரில் விதிக்கப்படும்.

4. ஒரே நிலத்தில் இரண்டு மூன்று விதமான தானியங்கள் பயிர் செய்தால் அவ்வவ் விஸ்தீரணத்துக்குத் தகுந்தபடி அந்தந்த தீர்வை விதிக்கப்படும்.

5. பட்டாவில் தீர்வை விதிக்காத நிலம் இருந்தால் அதை சாகுபடி செய்யும்பட்சத்தில் அந்த விஸ்தீரணத்திற்குத் தகுந்தபடி தீர்வை விதிக்கவேண்டும்.

---

2—5 ரூல்சுகள் தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, மலையாளம், தென்கன்னடம், ஆகிய ஜில்லாக்களில் உபயோகத்திற்கு வராது.

6. நாற்றின் நடவுக்காக புஞ்சை நிலத்தில் தண்ணீர் பாய்ச்சினால் அதற்குத் தீர்வை விதிக்கப்படாது.

7. ஒரு ஜலாதாரத்தி னின்றும் கசிந்துபோகும் ஜலத்தைப் பாய்ச்சினால் அதற்குத்தீர்வை கிடையாது.

8. முதல் போகத்தை இரண்டுதரம் அறுவடை செய்தால் அதற்கு ஒரே தண்ணீர்த் தீர்வை.

9. ரெவினியூ இனிஸ்பெக்டர் கிராமாதிகாரி இவர்கள் உத்தரவன்னியில் கவர்ன்மெண்டு பாய்ச்சலாதாரத்திலுள்ள ஜலத்தை பாய்ச்சலுக்கு உபயோகப்படுத்தக்கூடாது.

10. உத்தரவன்னியில் ஜலத்தை உபயோகித்தால் தண்டத்தீர்வை கலெக்டர் விதிக்கலாம்.

11. காட்டாறுகளினின்றும் வரும் ஜலத்தை உத்தரவின்றி உபயோகப்படுத்திக்கொள்ளலாம்.

6—11. எல்லா ஜில்லாக்களுக்கும் சம்பந்தப்பட்டது

---

சொந்த கிணறுகள். (B. S. O. 7.)

*(Private Wells.)*

1. குடிகள் சொந்தமாகக்கிணறுகள் வெட்டிக்கொண்டு அந்த ஜலத்தைப் பாய்ச்சிக்கொண்டால், அதற்குத்தீர்வை அதிகம் செய்வதில்லை. ஆனால் டிஸ்டிரிக்ட்டு முழுவதிற்கும் தீர்வை அதிகரித்தால் அப்பொழுது மாறுதல் செய்யலாம்.

2. கிணறுகள் வெட்டும்காலத்தில் கலெக்டருக்கு அதைப்பற்றித் தெரியப்படுத்த அவசியமில்லை. கர்ணம் அதைக் கணக்கில்பதிய வைத்திருந்தால் போதும். அதைக்கொண்டு கலெக்டர் தன்னுடைய கணக்கில் பதிவுசெய்துகொள்ளலாம்.

3. கவர்ன்மெண்டு ஜலாதாரத்துக்குச் சமீபத்தில் சொந்த நிலத்தில் கிணறு வெட்டிக்கொள்ளலாம்.

4. சொந்த கிணற்றிலிருந்து புஞ்சைநிலங்களுக்கு ஜலம் பாய்ச்சிக்கொள்ளலாம். அதற்குத் தண்ணீர்த்தீர்வை கிடையாது.

7. ஏற்றம் முதலிய நீர் தூக்குங் கருவிகளினால் டிஸ்டிரிக்ட்டு கலெக்டர் உத்திரவைக்கொண்டு கவர்ன்மெண்டு ஜலாதாரத்தினின்றும் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ளலாம். அப்படி பாய்ச்சிக்கொண்டால், அதற்கு முக்கால் தண்ணீர் தீர்வை விதிக்கப்படும்.

---

சொந்த ஏரிகள் கட்டிக்கொள்வது. (B. S. O. 8.)

*(Private construction of tanks.)*

1. சொந்த ஏரிகள் கட்டிக்கொள்ளவேண்டுமானால் கலெக்டருக்கு விண்ணப்பஞ்செய்துகொள்ளவேண்டியது.

2. அந்த விண்ணப்பத்தைக் கலெக்டர், தாசில்தாருக்கனுப்பி அப்படி ஏரி கட்டிக்கொள்வதனால் கவர்ன்மெண்டு ஜலாதாரத்துக்காவது, கால்வாய்களுக்காவது ஏதாவது இடையூறுகள் உண்டாவென்று தெரிந்துகொள்ளவேண்டியது.

3. அப்படி இடையூறில்லாதிருந்தால் கலெக்டர் கட்டிக்கொள்ள உத்தரவு கொடுக்கலாம்.

4. கவர்ன்மெண்டு அனுமதியின்றி ஒருவேலை தொடங்கினால், அதனால் யாதொரு ஆடங்கமுமில்லாதிருந்தபோதிலும் அதை நிறுத்திவிட கலெக்டருக்கு அதிகாரமுண்டு. அப்படி உத்தரவின்றி ஒரு ஏரி கட்டி முடிந்துவிட்டால அதனால் உண்டாகும் பாத்தியதையை அவனடையான்.

5. சொந்த ஏரி கட்டிக்கொண்டால் அந்த ஏரியிருக்கும் விஸ்தீரணத்தின் 10-வருஷ நிலத்தீர்வையை கட்டிவிடவேண்டும். சொந்தநிலமல்லாமல், அன்னியருடைய நிலத்தில் ஜலம் பிடிக்கும் பட்சத்தில் அவனுக்கு அவ்விஸ்தீரணத்திற்குத்தகுந்த வேறுநிலம் கொடுத்துவிடவேண்டும்.

6. ஏரி கட்டினபிற்பாடு பப்ளிக் ஒர்க்ஸ் இலாகாவைச்சார்ந்த ஒருஉத்தியோகஸ்தன் மேற்பார்வை பார்க்கவேண்டும். அப்படிபார்த்ததின்பேரில்ஷை உத்தியோஸ்தன் பெரியகலங்கல் கட்டவேண்டுமென்றுவது, கனத்த கரைபோடவேண்டுமென்றுவது சொன்னால் அதனை உடனே சொந்தக்காரன் செய்து தீரவேண்டும். அதற்குக்கலெக்டர் காலஅளவை நிர்ணயிக்கலாம். அப்படி அவன் ரிப்பேர்கள் செய்யாவிட்டால் கவர்ன்மெண்டார் செலவில் ரிபேர் செய்வார்கள். தண்ணீர்த் தீர்வை வஜாவுக்கு அருகனல்லன்.

7. பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டார் வேலை துவக்குதற்கு முன் ஜாகையை வந்து பார்க்கவேண்டுவது அவசியமல்ல.

8. கவர்ன்மெண்டு பப்ளிக் ஒர்க்ஸ் இலாகா ஜலாதாரத்துக்குச்சமீபத்தில் ஒரு புதிய வேலை துவக்கினால், அந்த வேலை துவக்குகிறதற்கு முன்பு அவ்விடத்தின் ரிவினியூ அதிகாரி பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்டுமெண்டி னின்றும் கவர்ன்மெண்டு ஜலாதாரத்துக்கு ஏதா

வது இடையூறு உண்டாவென்று தெரிந்துகொண்டுதான் உத்தரவு கொடுக்கவேண்டும்.

---

## உடைந்துபோன கவர்ன்மேண்டு ஏரியை ஜனங்கள் சொந்தசெலவால் சீர்படுத்திக்கொள்வது. (B. S. O. 9.)

## (*Private repairs of Government tanks.*)

ஐந்துவருஷத்திற்கு மேற்பட்டு பழமையாயிருக்கும் ஏரிகளைப் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்டுமெண்டார் சீர்திருத்த யோசிக்காதவிஷயத்தில்ஜனங்கள் சொந்த செலவால் சீர்படுத்திக்கொள்வதற்கும், விடுவதற்கும் கலெக்டருக்கு அதிகாரமிருக்கிறது. அதற்கு சம்பந்தப்பட்ட நிலத்திற்கு போர்டாரால் பிரதிஜில்லாவுக்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தீர்வையாவது, குத்தகைத்தீர்வையாவது கட்டிவிடவேண்டும். ஷை குத்தகைத்தீர்வை கலெக்டரால் நிஷ்கரிஷை செய்யப்படும்.

2. மழையினால் நிறம்புகிற ஏரிகளென்றால், எந்த ஏரிகள் மழை பெய்தபோது காற்றுப் பக்கத்தில் நிறம்பி பிரவாகிக்கும் ஜலத்தால் நிறம்புகிறதோ அந்த ஏரிகள் என்று அர்த்தம். இவைகளை ரிபேர் செய்வதற்குக்கலெக்டர் உத்தரவு கொடுக்கலாம். ஆனால் அவர் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டாரை, அந்த ஏரி மழையினால் நிறம்புகிற ஏரியாவென்று கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டியது.

3. இதர விஷயங்களில் கவர்ன்மெண்டாருடைய பாத்தியதைக்காவது, ஜனங்களுடைய சுதந்தரத்துக்காவது விரோதமாக இருக்குமாவென்பதை பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டாருடன் கலெக்டர் ஆலோசிக்கவேண்டியது. இதன்றியும், கீழ்வரும் விவரங்களையும் விசாரிதத்ல வேண்டும்.

(1) ஏரிகள் எப்பொழுது கட்டப்பட்டது. எப்படி அதற்கு ஜலம் வருவது.

(2) எவ்வளவு காலமாக சீர்படுத்தாமலிருக்கிறது.

(3) முதலில் ஏரிகட்டுவதற்கு பட்டுபடியானதொகை (ஏறக்குறைய.)

(4) பத்துவருஷங்களில் சீர்திருத்துவதில் செலவானதொகை,

(5) ரிப்பேர் செய்தால் அதன் கீழிருக்கும் ஆயக்கட்டு நிலத்தின் விஸ்தீரணம்.

(6) ரிப்பேர் செய்தபின் அதன்கீழ் சாகுபடியாகும் நிலத்தின் விஸ்தீரணம்.

(7) இனி, கவர்ன்மெண்டாருக்கு ஜலாதாரவிஷயத்துக்கு உதவுமாவென்பது.

(8) அதைச்சீர்படுத்துவனல் இதர சொத்துக்களுக்கு ஏதாவது கெடுதலை உண்டாகக்கூடுமா என்பது.

(9) சொந்த செலவில் சீர்படுத்திக்கொள்வதனுல், அந்த ஏரிக்குப் பாத்தியஸ்தர்களாக இருக்கிறவர்கள் எல்லோரும் சேர்ந்திருக்கிறார்களா என்பது.

(10) டிஸ்ட்ரிக்டு இஞ்சினீருடைய அபிப்பிராயம்.

4. கலெக்டருக்கு விண்ணப்பம் செய்துகொண்டால், அந்த விண்ணப்பத்தை கலெக்டருக்கு இஷ்டமிருந்தால் அங்கீகரித்துக்கொள்ளலாம். கலெக்டர் கவர்ன்மெண்டாருக்கு இலாபம் வருகிறதென்று மாத்திரம் அப்ளிகேஷனை அங்கிகரிக்க வேண்டுவதில்லை. அந்த ஏரியின்கீழ் கால்வாசி ஆயக்கட்டு நிலம் நஞ்சைப்பயிர் சாகுபடியாய்க்கொண்டிருந்தால், கலெக்டர் தாக்காஸ்து தள்ளிவிடலாம்.

5. ரிபேரில்லாத ஏரிகளென்றால், ஐந்துவருஷகாலமாக ரிபேர் செய்யாமல் பாழாயிருக்கும் ஏரிகள். அப்படிப்பட்ட ஏரிகளின் கீழ் கால்பங்கு விஸ்தீரணம் சாகுபடியானல் அந்த ஏரியை பாழடைந்த ஏரியென்று எண்ணக்கூடாது. எந்த ஏரியை ஜனங்களுக்கு விடுவதனுல் கவர்ன்மெண்டாருடைய தீர்வையில் சாஸ்வதமாக குறைவுவுண்டாகுமென்று எண்ணப்படுகிறதோ அந்தஏரியை ஜனங்களுக்கு விட கவர்ன்மெண்டு அனுமதிவேண்டும்.

6. இந்தநிபந்தனைப்பிரகாரம் ஏரிகளை ஜனங்களுக்கு விட்டால் நிஷ்கரிஷையான ஆயக்கட்டுத் தீர்வையைச் சாகுபடி செய்தாலும் செய்யாவிட்டாலும் கட்டவேண்டியது.

7. 6-வது செக்ஷனில் கண்டவிஷயத்தை ரெவினியூ உத்தியோகஸ்தர்கள் ஜனங்களுக்கு வற்புறுத்திச்சொல்லவேண்டும். அன்றி

யும், சர்க்கார் பாக்கிக்காக கொஞ்சம் நிலம் ஏலம் போடப்பட்டால் அந்த நிலத்தை எடுக்கிறவனுக்கு ஜலபாத்யதையும் உண்டு.

8. சொந்த மராமத்து ஜனங்கள் செய்துகொள்வதில் அவர்கள் எப்படி செய்துகொண்டாலும் அதைப்பற்றி கவர்ன்மெண்டார் யோசிக்கவேண்டுவது அவசியமல்ல. ஆனால், ரிபேர் செய்யாவிட்டால் கலெக்டர் உத்தாவை ரத்துசெய்துவிடலாம்.

9. ஷை நிபந்தனைகளின் பிரகாரம், ஒரு ஆயக்கட்டு மொத்த பாத்யதையுடையவன், கலெக்டருடைய உத்தரவன்னியில் அந்த பாத்தியதையை விட்டுவிடக்கூடாது.

---

## தாங்கல்களின் சொந்தரிபேர். (B. S. O. 9 *a.*)

(*Private repairs of small isolated tanks,*)

1. 50 ஏகராவுக்குள் விஸ்தீரணநிலத்திற்குப் பாயும்படியான ஜலங்களை நிலச்சொந்தக்காரனை ரிபேர் செய்துகொள்ளும்படியாக பாழாயில்லாமலிருந்தாலும் கவர்ன்மெண்டார் விட்டுவிடலாம். அன்றியும், அப்படி விடுவதனால் கவர்ன்மெண்டாருடைய வருமானத்துக்குக் குறைவுவரக்கூடாது.

2. ஷை விஷயத்துக்காக அப்ளிகேஷன்கள் கலெக்டருக்காவது டிவிஷனல் ஆபீசருக்காவது செய்துகொள்ளலாம். கலெக்டருடைய தீர்மானமே கடைசியானது.

---

## காட்டாறுகளிலிருந்தும், மடுவுகளிலிருந்தும் தண்ணீர்பாயப்படும் நிலத்திற்குத் தீர்வை. (B. S. O. 10.)

(*Lands irrigated by Jungle streams or natural pools.*)

1. காட்டாறுகளிலிருந்தும், மடுவுகளிலிருந்தும் தண்ணீர் ஒரு நிரு நிலத்திற்குப்பாய்ந்தாலும், பாய்ச்சப்பட்டாலும் அதற்காக தீர்வைதாஸ்தி, அல்லது பசலி தாஸ்தி விதிக்கக்கூடாது. அப்படி பாய்ச்சிக்கொண்டதனால் கவர்ன்மெண்டாருடைய ஜலாதாரத்தைக் குறைவுபடுத்தாமலிருக்கவேண்டும். மேலும், அந்த ஜலாதாரத்தின் பாத்யதை கவர்ன்மெண்டாருடையதே. எவனொருவன் அந்த ஆறு

களுக்கு அணைகட்டிட்டு ஜலம் பாய்ச்சிக்கொள்ளவேண்டு மென்னும் கருத்துடையவனு யிருக்கிருனே அவன் கீழ்க்கண்டவிதியை அனுசரிக்கவேண்டும்.

2. மேற்கண்டவேலையைச்செய்யவேண்டுமென்று உத்தேசித்திருப்பவன் கலெக்டருக்கு எவ்வித வேலையை எவ்விடத்தில் செய்யவேண்டுமோ அதைக்கண்டு அப்ளிகேஷன் செய்துகொள்ளவேண்டியது,

3. அப்படி வந்த அப்ளிகேஷனை கலெக்டர், தாசில்தாரனுக்காவது இதரரெவினியூ உத்தியோகஸ்தனுக்காவது அனுப்பி, அதில் கண்டிருக்கும் இடத்தை நேரில்போய்ப்பார்த்து அப்படி வேலைசெய்துகொள்வதனல் கவர்ன்மெண்டாருடைய ஜலாதாரத்துக்காவது, ஜனங்களுடைய சொந்த நீர்ப்பாய்ச்சல் கால்வாய்களுக்காவது இடையூறு உண்டாகுமா என்பதையும், பக்க நிலங்களில் உள்ள பயிருக்கு விரோதமாக இருக்குமா வென்பதையும் விசாரித்து எழுதும்படிச் செய்யவேண்டும்.

4. அப்படி இடையூறு இல்லையென்று ரிபோர்ட்டு வந்ததன் மேல் கலெக்டர் தர்க்காஸ்துதாரனுக்கு உத்தரவளிக்கலாம். அப்படிச்செய்யும் வேலையை ஒரு பப்ளிக் ஓர்க்ஸ் இலாகா உத்தியோகஸ்தன் சரியென்று அங்கீகரிக்க வேண்டியது.

5. பப்ளிக் ஓர்க்ஸ் இலாகா உத்தியோகஸ்தன் சிலவேறுபாடுகள் செய்யவேண்டுமென்று சொன்னல் அவன் சொல்லுகிறபடி தர்க்காஸ்துதாரன் செய்யவேண்டியது. அந்த வேலைகளைச் செய்ய கலெக்டர் போதுமான கால அளவை கொடுக்கவேண்டும். அப்படி மாறுதல் செய்யத்தவறினல் கம்பன்ஸேஷன் கொடாமலே கவர்ன்மெண்டார் ஷெ வேலையை தாங்களேஎடுத்துக்கொண்டு [illegible] தண்ணீர்த்தீர்வை விதிப்பார்கள்.

6. இதராளுடைய சுதந்தரத்திற்கு இடையூறு நேரிடும்பக்ஷத்தில் அப்படிப்பட்டவர்கள் ஆக்ஷேபம் செய்கிறதில்லையென்று சம்மதபத்திரிகையை வாங்கி தாக்கல் செய்யவேண்டும்.

7. மேற்சொல்லிய விதிகளெல்லாம் காட்டாறுகளுக்கே உரித்தானது.

விடுதிமரங்களும், கவர்ன்மேண்டு தோப்பு நிலங்களும். (B. S. O. 5.)

(*Scattered trees and Government Tope lands.*)

1. பட்டாவில்லாவது, இனும் நிலத்திலாவது, புறக்கடையிலாவது நிபந்தனையில்லாமல் விடப்பட்ட நிலங்களிலாவது இருக்கும் மரங்களை கவர்ன்மெண்டு உத்தரவில்லாமலே பிரயோஜனப்படுத்திக் கொள்ளலாம்.

2. மலையாளம், திருநெல்வேலி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் தவிர, மற்ற ஜில்லாக்களில் பட்டா நிலங்களில் மரங்கள் வைத்துக் கொண்டால் அவைகள் நிலச் சொந்தக்காரனுடையது. இனும் நிலங்களிலாவது, புறக்கடையிலாவது இருக்கும் மரங்களுக்குத் தீர்வை கிடையாது.

3. தண்ணீர் ஆதாரமில்லாத புஞ்சைநிலத்தில் தோப்புவைத்து தண்ணீர் பாய்ச்சிக்கொண்டால் தண்ணீர்த் தீர்வை கட்டவேண்டும். தென்னை, வாழை முதலிய மரங்களை ஜலாதாரமுள்ள நிலத்தில் வைத்துப் பயிர்செய்தால், நிலத்துக்குத் தக்கபடி ஒருபோக தீர்வையோ அல்லது இருபோக தீர்வையோ அதைக் கட்டிவிட வேண்டும்.

4. புறம்போக்கு நிலத்தைப் பட்டாவின்கீழ் கொண்டுவரும் பக்ஷத்தில், அவ்விடத்திலுள்ள மரத்தின்விலையை தர்க்காஸ்துதாரன் கட்டிவிடவேண்டும்.

5. கவரன்மெண்டு தோப்புகளை தரத்தீர்வை கட்டிவிட்டால் குடிகளுக்குக் கொடுத்து விடலாம். அப்படி கொடுத்துவிடுவதில், தோப்புவைத்து வளர்த்தவன் சந்ததியானுக்கு முதல் பாத்தியதை யுண்டு.

6. புறம்போக்கு நிலத்தில் மரத்தீர்வை விழுந்த மரங்கள் இருந்தால், அப்படிப்பட்ட நிலத்தை ஒருவன் தர்க்காஸ்து செய்தால், அவனுக்கு விடுகிறதற்கு முன்பு மரத்தீர்வை கட்டுவோன், தரத் தீர்வை கட்ட வுடன்பட்டால் அவனுக்கு அதை விட்டுவிடலாம். தரத்தீர்வையைவிட, மரத்தீர்வை அதிகப்பட்டிருந்தால், நிலத்தை தர்க்காஸ்து செய்யக்கூடாது.

7. இப்படி நிலங்களை சொந்த குடிகளுக்கு விடுவதில் கலெக்டர் தீர ஆலோசித்து விடவேண்டும்.

8. சில நிலங்களில் மரங்கள் இருந்தபோதிலும், அவைகட்குக் கிரயம்பெற்றுக்கொள்ளாமலே தர்க்காஸ்துதாரனுக்கு விட்டுவிடலாம். ஆனால், அம்மரங்களைவெட்ட தர்க்காஸ்துதாரனுக்கு அதிகாரமில்லை. அவன் இலை, காய் முதலியவைகளை உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

9. தோப்புகளுக்கு நிலத்தீர்வைகட்ட ஒருவரும் வராவிட்டால் கலெக்டர் மரத்தீர்வை வசூல்செய்யும்படியான ஏற்பாடு செய்யவேண்டும்.

10. அப்படியும் மரத்தீர்வைகூடக்கட்ட மனிதனகப்படாவிட்டால், மாசூலைச்சேர்த்து விற்பனைசெய்ய ஏற்பாடுசெய்யவேண்டும்.

11. சில இடங்களில் நிலப்பட்டா ஒருவன்பேரிலும், மரப்பட்டா ஒருவன்பேரிலும் இருக்கிறது. மரப்பட்டாதாரன், நிலப்பட்டாதாரனிடத்தில் தீர்வையை சட்டமாட்டேனென்றால், கலெக்டர் ஒவ்வொருவரிடத்திலும் அவ்வவர் கட்டவேண்டிய வரியின் தொகையை வசூல் செய்யவேண்டும்.

14. வரிகட்டத்தவறினால் நிலத்தை மரத்துடன் ஏலம்போடப்படும். மரத்தைமாத்திரம் பிரத்தியேகமாய் ஏலம் போடப்படமாட்டாது.

16. தசபந்தம் இனும்தாரர்கள் ஏரிகளில் இருக்கும் மரங்களை உபயோகப்படுத்திக்கொள்ளலாம்.

17. ஏரிக்கரைகளில் இருக்கும் மரங்களும் மேற்படியானுடையதே,

---

போதுப்பிரயோசனத்துக்கும் சொந்தத்திற்கும் வைக்கப்படும் தோப்பு. (B. S. O. 6.)

(*Trees planting for Public and private purposes.*)

1. தர்மத்திற்குத் தோப்பு வைக்கவேண்டுமென் றிருப்பவன் டிவிஷனல் ஆபீஸர் உத்தரவை முதலிற் பெறவேண்டும். அவர்கள் உத்தரவு கொடுக்காவிட்டால், முழுத்தீர்வையையும் கட்டவேண்டும். ஒருசத்திரம் அல்லது ஜனங்கள்கூடும் பொது இடம் இவைகளுக்குச் சமீபத்தில் தோப்பு வைத்துக்கொள்ளலாமென்று கலெக்

டர் உத்தரவுகொடுத்தால் அந்த தோப்புவைப்பவன் நிலத்தில் மரங்கள் பெரிதாகும்வரையில் இடையில் ஏதாவது பயிர்செய்து கொள்ளலாம். மரங்கள் பெரிதானபிற்பாடு அதனால் வரும் மாசூலை தர்மத்துக்கு உபயோகப் படுத்திக்கொள்ளும் பக்ஷத்தில் தீர்வையை கலெக்டர் வஜாசெய்துவிடலாம்.

2. (*a*) சொந்த பிரயோசனத்திற்காக விறகு முதலிய எரிகரும்புகள் பயிரிடுவதற்காக நிலங்களில் தோப்புவைக்க வேண்டுமென்று உத்தரவுகேட்டால் கலெக்டர் கொடுக்கலாம். சாகுபடி செய்தாலும், செய்யாமற் போனாலும் முதல் 20 - வருஷத்திற்குத் தீர்வையில்லை. (*b*) இந்த நிபந்தனையின் பிரகாரம் கொடுக்கப்பட்ட நிலம் 10 - வருஷகாலமாக கரம்பாக இருக்கிற நிலமாயிருக்கவேண்டியது. சாகுபடியாகும் நிலத்தில் வைக்கப்பட்டால், அந்த தோப்புக்காக உபயோகப்படுத்தின நிலத்திற்கு செடிவைத்தகாலம் முதல், சாகுபடி ஆனாலும், ஆகாமற்போனாலும், பூர்த்தியான தீர்வையை வாங்கவேண்டும். (*c*) மேற்படி நிபந்தனைப்பிரகாரம் கொடுக்கப்பட்ட நிலத்தின்மேல் 20 - வருஷ காலமானபின் பூராவான தீர்வை வசூல் செய்யப்படும்.

3. மரத்தீர்வை இனாமாகக் கொடுக்கப்பட்ட தோப்புகளுக்கு சர்க்கார் ஜலத்தைப் பாய்ச்சிக்கொண்டால் அதற்குத் தண்ணீர்த் தீர்வை கட்டவேண்டும்.

4. ஷை நிபந்தனை பிரகாரம் நிலம் சம்பாதித்தபிறகு கௌலில் கண்டபடி நடந்துகொள்ளத் தவறினால் முழுத்தீர்வையும், எக்காலம்முதல் கௌலின் ஷரத்தை மீறிநடக்கிறானோ அதுமுதல் முழுத்தீர்வையும் கட்டவேண்டும். அன்றியும், கௌலும் போய்விடும்.

5. ஷை ரூல்ஸ்பிரகாரம் சர்க்கார் தீர்வை யில்லாமல் கொடுக்கப்பட்ட நிலத்தில், தோப்பை கொஞ்சங்கொஞ்சமாக ஐந்துவருஷத்திற்குள் வைத்து பூர்த்திசெய்யவேண்டும்.

---

## நிலங்களின்பேரில் ஆக்கிரமித்தல். (B. S. O. 16.)
### (*Encroachment.*)

1. பட்டணங்களிலாவது, கிராமங்களிலாவது, அல்லது அவைகளுக்குச் சமீபத்திலாவது இருக்கப்பட்ட கவர்ன்மெண்டு நில

ங்களிலும், ரோட்டுகளிலும், தெருக்களிலும், சதுரங்களிலும், மைதானங்களிலும் யாரும் பிரவேசிக்காதபடி ரெவினியூ உத்தியோகஸ்தன் பார்த்துக்கொள்ள வேண்டியது.

2. மேலும் கிராமங்களினுடைய பொது நன்மைக்காகவும், ஸ்மசானம், சந்தை, தோப்புகள் இதற்காக விடப்பட்ட நிலங்களில் யாரும் பிரவேசிக்காதபடி ரெவினியூ உத்தியோகஸ்தன் பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்வகைய ஸ்தலங்கள் அவசியமாய் வேண்டியிருக்கிறதற்கு அதிகமாயிருந்தாலொழிய அவைகளில் பிரவேசிக்க உத்தரவளிக்கக் கூடாது. ஏனென்றால், இப்படிப்பட்ட ஸ்தலங்களுக்காக பட்டாகொடுத்து அதனால் சர்க்காருக்குண்டாகும் ஸ்வல்ப வரும்படி கிராமத்தார் வெகுநாளாக அனுபவித்துவரும் சுதந்தரங்களை கம்மிப்படுத்தி, அதனால் அவர்களுக்கு உண்டாகும் அசௌக்கியங்களுக்கு ஒருபரிகாரத்தை உண்டுபண்ணிவைக்காது.

---

## இருபோகசாகுபடி (B. S. O. 17.)

### (*Second crop.*)

1. ஒருபோகத்தீர்வை விழுந்த நஞ்சைநிலத்தில் இரண்டாம் போகப்பயிர்செய்தால் அதற்குத்தண்ணீர்த்தீர்வை கட்டவேண்டும். அது சாதாரணமாக முதல்போகத் தீர்வையில் பேர்பாதியிருக்கும். தண்ணீர்த்தீர்வை பிரத்தியேகமாக இருக்கும்பக்ஷத்தில் அதைக்கட்டவேண்டும்.

2. மூன்றும் போகத்திற்குத் தீர்வைகிடையாது.

3. நஞ்சை நிலத்தில் புஞ்சைப்பயிர் கவர்ன்மெண்டு தண்ணீரைக்கொண்டு செய்தால் அதற்கு நஞ்சைதீர்வை விதிக்கப்படும். அந்தப்பயிர் இரண்டாம் போகத்தில் இருந்தால், புஞ்சைநிலத்திற்கு உண்டான தீர்வை விதிக்கப்படும்.

5. தர்மத்துக்காக விடப்பட்ட ஒருபோக நஞ்சை நிலத்தில் இரண்டாம் போகம் பயிர்செய்தால், அதற்கு உண்டான தீர்வையை பயிர்செய்வோனிடமிருந்து வசூல் செய்யவேண்டும்.

6. தண்ணீரைக் கவலையால் பாய்ச்சிக்கொண்டால் அதற்கு, ஜில்லாவுக்குத் தக்கபடி தீர்வையில் கொஞ்சம் வஜாசெய்யப்படும்.

சாதாரணமாக அப்படி வஜாசெய்யாது விட்டால் குறைந்தபட்சம் ஏகர் 1-க்கு ரூபா 1. அல்லது கால்வாசி தண்ணீர்த்தீர்வை விதிக்க வேண்டும்.

---

## தண்ணீர்பாய்ச்சல் ஆதாரமில்லாத நஞ்சைநிலம். (B. S. O. 18)
## (*Unirrigable wetlands.*)

1. பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டார் சீர்படுத்துவதற்கு ஆலோசிக்காத பாழான ஏரிகளின் கீழ் 5 - வருஷகாலமாக நஞ்சை நிலமென்று தரமேற்பட்டிருக்கும் நிலங்களையும், எந்த ஜலாதாரத்திலே யிருந்தாவது தண்ணீர்பாயக்கூடாத நிலங்களையும், நில விஸ்தீரணத்திற்குத் தகுதியான புஞ்சைநிலத்திற்குக் கொடுத்துவிடவேண்டும். மேற்சொல்லியபடி பாழான ஏரிகளைமாத்திரம் சவர்ன்மெண்டார் இனி சீர்படுத்தித் தண்ணீர்த்தீர்வை போடுவதற்கும், எவனுக்காவது அந்த ஏரியை சீர்படுத்திக் கொடுப்பதற்கும் கவர்ன்மெண்டார் தங்களிடத்தில் ஸ்வதந்திரம் வைத்துக்கொள்ளவேண்டும்.

---

## எடுபட்ட ஏரிமுழுவடையிலிருக்கும் நிலம். (B. S. O. $\frac{18}{1}$).
## (*Disposal of tank-bed lands.*)

1. ஒரு ஏரியை எடுத்துவிட்டால் அதற்குள்ளிருக்கும் நிலத்தை ஆயக்கட்டுக்குக்கீழ்க் கொண்டுவந்து அரை ஏக்கர்களுக்கு அதிகப்படாத லாட்டாகச் செய்து ஏலம்போடவேண்டியது. அப்படி போடப்பட்ட நிலத்தின்பேரில் முதல்தர புஞ்சைத்தீர்வை போடவேண்டும்.

2. அப்படி எடுபட்ட ஏரியின் கீழ் நஞ்சை யினும்நிலங்கள் இருந்தால் அதன்மேல் கட்டவேண்டிய தீர்வையை புஞ்சைத்தீர்வையாக்கிக் கொள்ளவேண்டும். அல்லது, அந்தநிலத்தின் விஸ்தீரணத்திற்குத் தகுந்தபடி வேறு ஜலாதாரமுள்ள இடத்தில் நஞ்சை நிலத்திற்குப் பதிலாக மாற்றிக்கொள்ளவேண்டும்.

---

## ஹக்குசாசனம். (B. S. O. 19.)
## (*Title-Deed.*)

1. கவர்ன்மெண்டாரால் விற்கப்பட்ட புறம்போக்கு நிலத்துக்கும் தீர்வை வசூல்செய்வதற்கும் ஏற்பாடு செய்யவேண்டிய அக்

குசாசனம் ஏற்படுத்துவதில் அடியிற்கண்ட நிபந்தனைகளை அனுசரிக்கவேண்டும். கலெக்டர் இந்த சிட்டுகளைத் தயார்செய்வதில் ஒரு உத்தியோகஸ்தனை உத்தரவாதியாக நியமிக்கவேண்டும்.

2. அந்த சாசனத்தின் தலைப்பிலுள்ள இடத்தைக் கவர்ன்மெண்டு செகிரிடரி நிறப்பவேண்டும். கலெக்டருக்கு அதைப்பற்றி யாதொரு சம்பந்தமும் கிடையாது.

3. காப்பிகள் ஒரேமாதிரி யிருப்பதுமன்றி பிளானும் அப்படியே இருக்கவேண்டும்.

4. பத்திரத்திலேயே பிளான் எழுத இடமிருந்தால் எழுதிவிடலாம். இடமில்லாமற்போனல் விடுதியாகவும் எழுதி அதில்சேர்த்து வைக்கலாம். அப்படிப்பட்ட பிளான்களில் கலெக்டர் கையெழுத்து செய்யவேண்டும். அதன்கீழ் கவர்ன்மெண்டு செகிரிடரியும் தன் கை எழுத்திடுவார்.

5. போர்ட்டுக்கு அனுப்பப்படும் பிளான்களில் தேதிகண்டு இருக்கவேண்டும்.

6. (மிஸ்டர்) அல்லது (ம-ா-ா-ஸ்ரீ) என்கிறபதத்தை அதில் உபயோகிக்கக்கூடாது. பத்திரத்தில்கண்ட இருதரத்தாருடைய முழுப்பெயர், குடியிருப்பு, வேலை முதலியவைகளைக் கண்டிருக்கவேண்டும்.

7. பத்திரத்தில் இடம்விட்டிருந்தால் அவ்விடத்தில் ரூல்கள் இழுத்துவிடவேண்டும்.

8. விற்கப்பட்ட நிலத்தின் எல்லைகளைக் கண்டெழுதி யிருக்கவேண்டும்.

9. விற்கப்பட்ட நில விஸ்தீர்ணத்தை எழுத்தால் எழுதி யிருக்கவேண்டும்.

10. பத்திரத்தில் கண்ட பெயர்களையும், இடத்தையும், எழுத்துப்பிழையின்றி எழுதியிருக்கவேண்டும்.

11. பத்திரம் எழுதியானவுடன் ஷை பத்திரத்தைக் கலெக்டர் போர்டுமூலமாய் கவர்ன்மெண்டு செகிரிடரி கையெழுத்துக்கு அனுப்பவேண்டும்.

12. கவர்ன்மெண்டு கையெழுத்தாகி கலெக்டருக்குப் பத்திரம் வந்ததும் அப்பத்திரத்தை நிலம் வாங்கினவனது கையெழுத்தை வாங்கிக்கொண்டு நிலத்தைக் கொடுத்துவிடவேண்டும்.

13. ஒருசாக்ஷிபோதும். சாக்ஷிகையெழுத்து இடுகிறவன் பத்திரத்தில் தன் ஊர், பெயர் முதலியவற்றை எழுதவேண்டும்.

14. பத்திரத்தில் தப்பு இருக்கும்பக்ஷத்தில் கவரன்மெண்டு செக்ரிடரியே இனிஷியல்செய்யவேண்டுமல்லாமல் கலெக்டர் அதில் தன்னுடைய இனிஷியலைப் போடக்கூடாது.

15. ஒவ்வொரு பத்திரத்திற்கும் நம்பர் கொடுத்திருக்கவேண்டும். அப்படிப்பட்ட நம்பரை வருஷா வருஷம் புதிதாக துவக்கவேண்டும்.

16. கையெழுத்திடும் உத்தியோகஸ்தன் தன் கையெழுத்தில்லாமல் முத்திரை முதலியன உபயோகப்படுத்தக்கூடாது.

17. பதினாருவது பாராவில் கண்டிருக்கும் விஷயம் ரயித்துவாரி நிலங்களில் பட்டாவுக்கு உரித்தானதல்ல.

---

## சுயேச்சையாக பட்டாவை மாற்றுதல். (B. S. O. 20.)

## (*Rules for the Transfer of Registry of holdings.*)

1. இது அனேகவிதமாகச் செய்யப்படும். 1. சாஸ்வதமாகவும் 2. கொஞ்சகாலத்திற்கும்.

1. (*a*) ரிஜிஸ்டரில்கண்ட ஒருபட்டாதாரன் வேருெருவனுக்குத் தன் சுதந்தரத்தை மாற்றினால், இருவரும் அல்லது அவர்கள் ஏஜெண்டாவது, ஒரு ரிவினியூ உத்தியோகஸ்தனிடத்தில் நேராக அப்ளிகேஷன் கொடுக்க வேண்டும். அப்படி மாற்றிக்கொள்ளும் போது அவர்களுக்கு இஷ்டமிருக்கும் பக்ஷத்தில் கிராமகணக்கன், மணியகாரன் கையெழுத்துக்களையும் வாங்கி யனுப்பலாம். அப்படி கையெழுத்து இட்டிருந்தால் அதை ஒருசாக்ஷியாக எடுத்துக்கொள்ளப்படும். அப்படிகொடுத்த மனுவின்பேரில் கலெக்டராவது, அல்லது இதர ரிவினியூ உத்தியோகஸ்தராவது டிரான்ஸ்பருக்கு உத்தரவு கொடுத்துவிடலாம். இரண்டுபேரில்லாமல் ஒருவனே வந்து டிரான்ஸ்பர் செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டால், மற்ருெருவனிடத்தில் வக்காலத்து வாங்கி யனுப்பவேண்டும். உடனே கலெக்

டர் இதைப்பற்றி டிஸ்டிரிக்ட் கெஜட்டில் பிரசுரம் செய்வார். மூன்றுமர்தத்திற்குள் எதிரிடை வரர்விட்டால் பட்டாவை மாற்றிவிடலாம். எதிரிடைவந்தால் அதை விசாரித்தே செய்யவேண்டும்.

2. குத்தகை நிமித்தமாவது, குதுவைநிமித்தமாவது கொஞ்சகாலம் தனது நிலத்தை வேறொருவனுக்கு மாற்றிவைக்கும் பக்ஷத்தில் அதற்கு பட்டாவை மாற்றவேண்டியதில்லை. ஆனால், இருதாரத்தாரும் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் கலெக்டராவது, இதர உத்தியோகஸ்தனாவது மாற்றிவிடலாம். அப்படி மாற்றுதல்செய்ய அனுப்பும்மனுவில் கிராம உத்தியோகஸ்தன், கணக்கன் இவர்கள் கையெழுத்திடாமற் போனால் செய்யக்கூடாது.

## பலாத்காரமாகப் பட்டா மாற்றுதல்.

4. கோர்ட்டாருடைய முடிவான தீர்ப்பின்பேரிலாவது, ஏலத்திலெடுத்த அக்கின்பேரிலாவது டிரான்ஸபா செய்விப்பதற்கு அந்த கோர்ட்டாருடைய தீர்ப்பையும், விற்பனை சர்டிபிகேட்டையும், அந்த நிலம் வசப்படுத்தப்பட்டதற்கு அடையாளமாக கோர்ட்டாருடைய நடவடிக்கைக் காபியை தாக்கல்செய்த தன்பேரில் கலெக்டராவது இதர ரெவினியூ உத்தியோகஸ்தராவது பட்டாவை மாற்றிவிட உத்தரவு கொடுக்கலாம். அப்படி காப்பிகள் ஆஜர்செய்வது கஷ்டமாக இருக்கும்பக்ஷத்தில் 3-(1) (*a*) யில் கண்ட நடவடிக்கையை நடத்த வேண்டும். பட்டாவைமாத்திரம் வேறொருவன்பேரில் மாற்றவேண்டுமென்கிற கோர்ட்டு டிக்ரி பிறந்திருந்தால் அந்த டிக்ரி பிரகாரம் கலெக்டர் மாற்றிவிடலாம்.

5. இருதரத்தாரும் டிரான்ஸ்பருக்கு அப்ளிகேஷன் செய்துகொள்ளாதபக்ஷத்தில் அதை கிராமகர்ணம்கணக்கில் தாக்கல்செய்து மேலுத்தியோகஸ்தர்களுக்கு ஜமாபந்திக்கு பத்துதினத்திற்குமுன்பாக அனுப்பவேண்டும். உடனே தாசில்தார் அதுவிஷயத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் நபர்களுக்கு நோடீசு கொடுத்து விசாரித்து டிரான்ஸ்பர் செய்துவிடலாம்.

## வார்ஸுக்கு டிரான்ஸ்பர் செய்வது.

6. இதனடியில், ஒருவன் இறந்துபோவதனால் உண்டாகும் மாறுதல்களும், 7-வருஷகாலம் ஊரில் இல்லாததனால் உண்டாகும் மாறுதல்களும் சொல்லப்படும்.

ஒரு பட்டாதாரன் இறந்துவிட்டால் அடுத்த வார்சு இன்ஞனென்று நிச்சயிப்பதற்கு யாதொரு விவாதமும் இல்லாதிருந்தால் விசாரணையின்றியே அவன் இறந்தவுடனேயாவது, அல்லது, ஜமாபந்திகாலத்திலாவது டிரான்ஸ்பர் செய்துவிடலாம். ஒருவனைவிட அதிகபாத்தியஸ்தர்களிருந்தால், கலெக்டர் உடனே ஒருசம்மரிசூட்டில்கேஸை விசாரித்து அதில் ஏற்படுகிற பிரகாரம் தீர்ப்புசெய்து அந்த நபரின்பேரில் பட்டாவை மாற்ற தனக்கிஷ்டமிருக்கிறதென்று டிஸ்டிரிக்டு கெஜட்டில் மூன்றுமாத டயம் கொடுக்கவேண்டும். அதற்துள், மற்ற வார்சுதாரர்கள் சிவில் கோர்ட்டுக்கு தங்கள் ஹக்கை சாஸ்வதப்படுத்தும்படியாக கேஸ் கொண்டுபோயிருந்தால், அந்த கேஸ் பிளெயிண்ட் ஒன்று கலெக்டருக்கு முன் தாக்கல் செய்ததன்பேரில் அவர் பட்டாமாற்றுதலை கேஸ் முடிகிறவரையில் நிறுத்திவைக்கலாம். அப்படி தாக்கல் செய்யாவிட்டால் மூன்றுமாதகாலம் கழிந்தவுடன் பட்டாவை மாற்றிவிடலாம். டிஸ்டிரிக்ட் கெஜட்டில் பிரசுரம்செய்த நோடீசை ஆக்ஷேபம் செய்த ஒவ்வொருவனுக்கும் கொடுக்கவேண்டும். ஏக குடும்பமாயிருக்கும் குடும்பி இறந்தால் அவனுக்குப்பின் எவன் குடும்பத்துக்குத் தலைவனும் மானேஜராயும் இருக்கிறனோ அவன்பேரில் மாற்றிவிடலாம். வார்சாயிருப்பவர்கள் எல்லோருக்கும் நிலங்களில் ஹக்கு உண்டானல் கூட்டுப்பட்டாவாக மாற்றிவிடலாம்.

ஏழுவருஷகாலம் ஒருவன் ஊரிலில்லாதுபோய் அவன் உயிரோடிருக்கிறனென்று கண்டறிவது கஷ்டமாயிருக்கும் பக்ஷத்தில் அவன் இறந்தவனென்று மதிக்கப்பட்டு பட்டாவை மாற்றிவிடலாம். அப்படிப்பட்டவனுக்கு வார்சு இல்லாதுபோனல், எவன் சுவாதீனத்தில் நிலம் இருக்கிறதோ அவன்பேரில் மாற்றிவிடலாம்.

7. ஹக்கு சாஸனமல்லாது 12 - வருஷகாலம் கெவர்ன்மெண்டுக்குக் கட்டவேண்டிய தீர்வையைக்கட்டிவந்தால் 3. (1) (a) யில் கண்ட நோடீசைக்கொடுத்து அதற்கு ஒருவரும் எதிரிடைபேர்டாமலிருந்தால் பட்டாவை மாற்றிவிடலாம். இப்படி மாற்றிவிடுதல் ரெவினியூ உத்தியோகஸ்தன் தானேயாவது அல்லது அப்ளிகேஷன் பேரிலாவது செய்யலாம்.

பட்டா மாற்றுதலுக்கு அப்ளிகேஷன் செய்துகொள்ளவேண்டியது எவாளுக்கேன்பது.

8. கலெக்டர், டிவிஷனல் ஆபீஸர், தாசில்தார், பிர்க்கா டிப்டி தாசில்தார், தாலூக்ஸிரஸ்த்ததார், ஹெட் அகவுண்டாண்ட்டு, பிர்க்கா ரிவினியூ இனிஸ்பெக்டர், பிர்க்கா ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீஸர் இவர்களிடத்தில் பட்டாமாற்றுதலுக்கு அப்ளிகேஷன் கொடுத்துக்கொள்ளலாம். பட்டாதாரன் இறந்துபோனால் கிராமகர்ணம் இறந்தவனுக்கடுத்த வார்ஸுகளின் பெயரை தாசில்தாருக்கு உடனே தெரிவிக்கவேண்டும். கலெக்டர், டிவிஷனல் ஆபீஸர், தாசில்தார் இவர்கள் கடைசியாக பட்டாவை மாற்றும்படி உத்தரவு செய்யலாம். கலெக்டரும் டிவிஷனல் ஆபீசரும், தாசில்தார் அல்லது டிப்டி தாசில்தார் கொடுக்கும் ரிபோர்டின்பேரில் மாறுதலுக்கு உத்தரவளிக்கவேண்டும். டிப்டி தாசில்தாரும் ரெவினியூ இன்ஸ்பெக்டரும் கடைசியாக தங்கள் பிர்க்காவில் உண்டான பட்டாவை மாற்றிவிடலாம். ஆனால் ரெவினியூ இன்ஸ்பெக்டர் பட்டா மாற்றவேண்டுமென்று மனு கொடுத்த இரண்டுதரத்தாரும் நேரில் வந்து பட்டா மாற்றுதலுக்கு அப்ளிகேஷன் செய்துகொள்ளும் பட்டாக்களைமாத்திரம் மாற்ற அதிகாரமுண்டு.

9. ஒருபத்திரத்தையாவது அல்லது வேறு எவ்விதமான பத்திரத்தையாவதுரிஜிஸ்டர்செய்யக்கொண்டுவந்தகாலத்தில் அப்படிப்பட்ட பத்திரங்களை ரிஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தன் பட்டா மாற்றுதலுடன் டிரான்ஸ்பர் செய்யவேண்டுமா இல்லையாவென்பதை விசாரிக்கவேண்டும். அப்படிப் பட்டாவைமாற்ற இருவரும் சம்மதப்பட்டால் பத்திரம் ரிஜிஸ்டரானவுடனே பட்டாவை மாற்ற தாசில்தாருக்காவது, டிப்டி தாசில்தாருக்காவது ராஜினமா மற்றவன்பேரில் கொடுக்கும்படிச் செய்து அதை அவர் மேற்படி உத்தியோகஸ்தர்களுக்கு அனுப்பவேண்டும். தாசில்தாரும் டிப்டி தாசில்தாரும் அதை அங்கீகரித்து உடனே டிரான்ஸ்பருக்கு உத்தரவு கொடுத்துவிடலாம்.

10. மேற்கண்டவிதி சாஸ்வதமாக தீர்வை விதிககப்பட்டிருக்கிற நிலங்களுக்கும், இனும்களுக்கும், மரங்களுக்கும் உரித்தானது. சாஸ்வதமாய் தீர்வை விதிக்கப்பட்ட கிராம டிரான்ஸ்பரின் அப்ளிகேஷனைக் கலெக்டரிடம் அனுப்பவேண்டும்.

11. ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீஸர் முன்பாவது, ரெவினியூ ஆபீஸர் முன்பாவது கொடுத்த பட்டா ராஜினமா வேறொருவன்பேரில் பட்டா ஆவதற்குள் பட்டாதாரன் அதை ரத்து செய்துவிடலாம்.

12. ஷெ ரிரான்ஸ்பர் அப்ளிகேஷன்களின்பேரில் 1 - அணு ஸ்டாம்பு ஒட்டியிருக்கவேண்டும்.

13. பட்டாதாரர் பெயர் கண்டிருக்கும் ரிஜிஸ்டரில் அந்தந்த தேதிவாரியில் சரியான பட்டாதார் பெயரை எழுதி வைத்திருக்க வேண்டும்.

---

## பட்டாவில் சேர்ந்த நிலங்கள் விஷயத்தில் குடியானவனுக்கு உண்டாயிருக்கும் சுதந்தரம். (B. S. O. 24.)

## (*Rights and obligations under a Puttah.*)

1. பட்டாதாரன் தன்மேல் பட்டாவாகியிருக்கும் நிலங்கள் சர்க்கார் பாக்கிக்காக ஏலம்போடாதவரைக்கும் கோர்ட்டாருடைய அமுலினல் யாதொரு நடவடிக்கையும் நடத்தப்படாதிருக்கிறவரையில் கவர்ன்மெண்டார் பாக்கிக்கு உத்தரவாதியாகவும், நிலத்தின் சொந்தக்காரனுகவும் இருக்கிறான். கரம்பாய் விடப்பட்ட நிலங்களைப் பட்டாவினின்றும் தள்ளிவிடக்கூடாது.

2. ஒரு பட்டாதாரன் தன்னுடைய நிலத்தை முழுவதையுமாவது கொஞ்சத்தையாவது வேறொருவருக்குக் கொடுக்கவும் கிழ்குத்தகைக்குவிடவும், குதுவைவைக்கவும், விற்கவும், இனமாகக் கொடுத்துவிடவும், இன்னும் இதரமான மாறுதல்கள் செய்யவும் சுதந்தரமுள்ளவனு யிருக்கிறான்.

3. மேற்கண்ட டிரான்ஸ்பர்கள் பட்டாதாரன் ஊரில் அனேக வருஷ மில்லாதுபோனுலும் செய்யலாம்.

4. ஒரு பட்டாதாரன் தன்னுடையநிலம் விர்த்தியாவதற்காக கிணறுகளை வெட்டிக்கொள்ளலாம். அதற்கு கவர்ன்மெண்டாரிடம் தீர்வைதள்ளிக் கொடுக்கவேண்டுமென்று கேட்கக்கூடாது. அன்றியும், கவர்ன்மெண்டாரும் அதற்காகதீர்வை அதிகப்படுத்தக்கூடாது.

5. பட்டாதாரன் கவர்ன்மெண்டுக்குக் கட்டவேண்டிய தீர்வையை சாகுபடி செய்தாலும், சாகுபடி செய்யாவிட்டாலும் கட்டி

விடவேண்டும். அவனுக்கு ரிமிஷன் ரூல்ஸ்படி தீர்வைதள்ளி கொடுக்கப்படும்.

---

## ஜாயிண்டுபேட்டா, அல்லது கூட்டுப்பட்டா. (B. S. O. 25.)
## (*Joint Puttas.*)

1. கூட்டுப்பட்டாவிற் கண்டவார்சுகளில், ஒருவன் இறந்த நிமித்தம் பெயர் மாற்றப்படவேண்டிய விஷயத்தில் ஏகபட்டா பெற்றவன் இறந்தபொழுது செய்யவேண்டிய நடைடிக்கையைச் செய்யவேண்டும்.

---

2. கூட்டுப்பட்டாவிற் கண்டவர்களில் ஒருவன் தனது சுதந்தரத்தை மாற்றிக்கொள்ளவேண்டுமென்றால் மற்றவர்களுடைய சம்மதத்தை முன்னடி பெறவேண்டிய அவசியமில்லை. புதிய பட்டா அப்படிப்பட்ட மாற்றுதலுக்குக்கொடுக்கவேண்டுமென்றால் மற்றவர்களுடையசம்மதம் வேண்டும்.

3. கூட்டுப்பட்டாவில் கண்டபெயர்களை மாறுதல் செய்வதில் அவனவன் அனுபவிக்கும் விஸ்தீரணத்தைக் காணவேண்டியது அவஸ்யமில்லை.

4. ஜாயிண்டு பட்டாவில் கண்டநிலத்தை அனுபவிக்கிறவர்கள் அபேக்ஷித்தால் சப்ரசீது புஸ்தகங்கள் கொடுக்கலாம். சப்ரசீது புஸ்தகங்களில் கண்ட பதிவுகளை முக்கிய ரசீது புஸ்தகத்தில் பதிவுசெய்யவேண்டிய நிமித்தம் கிராம நவுக்கர்களிடம் ஆஜர்செய்யும்போது பதிவுசெய்யவேண்டும். சப்ரசீது புஸ்தகத்திலும் விஸ்தீரணத்தைக் காணவேண்டியது அவசியமில்லை.

---

## பட்டா கோடுத்தல். (B. S. O. 25.)
## (*Issue of Putta.*)

1. ரயத்துகள் வேண்டுமென்று கேட்டால் புதியபட்டா கொடுக்கவேண்டும். பட்டாநிலங்களில் மாறுதலில்லாமற்போனல் புதிய பட்டா கொடுக்கவேண்டிய அவஸ்யமில்லை. ஒவ்வொரு பட்டாவிலும் பட்டாவிலகண்ட நிலங்களினுடைய சங்கியைக் கண்டிருக்கவேண்டும்.

---

## ஜமாபந்தி. (B. S. O. 22.)

## (*Jamabandi.*)

1. ஜமாபந்தி என்னும் வருஷவாரி பயிசலை ஒவ்வொருதாலூகாவிலும் மூன்று ஸ்டேஷன்களில் குறையாமல் நடத்தவேண்டும். பயிசலாதியைப்பற்றி ரிபோர்ட்டுசெய்யும்போது இதை கலெக்டர் அனுஷ்டித்தாரா வென்பதையும் ரிபோர்ட்டு செய்யவேண்டும். மறுநாள் ஜமாபந்தியிலெடுக்கும் ஊர்கள் கணக்குகளின்பெயரை முதல் நாளே பயிரங்கமாகத் தெரிவிக்கவேண்டும்.

2. பசலிவருஷம் முடிவதற்குமுன் தாலூகா ஜமாபந்தி நடந்து, அதன்மேல் டிமாண்டுபட்டியும் 15 நாளைக்குள் தயார் செய்யவேண்டும்.

3. கலெக்டர் நேரில் ஒவ்வொருதாலூகாவின் கணக்குகளையும் ஐந்துவருஷத்திற் கொருதரம் ஜமாபந்தி செய்யவேண்டும்.

4. ஜமாபந்தியில் ரயித்துவாரி கிராமங்களின் கணக்குகளையும், சாஸ்வதமாக தீர்வை ஏற்பட்டிருக்கிற நிலங்களின் கணக்கையும், இனம், மைனர் இனாம் கிராமங்களின் கணக்கையும், சரிவரபார்த்து ஏற்பாடு செய்யவேண்டும்.

5. ஜமாபந்தியில் கிராமக்கணக்குகளையும் கூடவைத்துக்கொண்டு செய்யலாம்.

---

## ரிமிஷன் அல்லது முஜரா. (B. S. O. 23.)

## (*Remissions.*)

### I. சேடில்மேண்டான கிராமங்கள்.

1. நஞ்சை பட்டாநிலங்கள் ஜலக்குறைவு, அல்லது ஜல தாஸ்தியினால் சாகுபடி செய்திருந்த மாகூல் முற்றும் சேதமடைந்தாவது அப்படிப்பட்ட ஜலக்குறைவு அல்லது ஜலதாஸ்தி, சொந்தக்காரனுடைய அஜாக்கிரதையினாலாவது அல்லது வேறுகாரணத்தினாலாவது நேரிடாதிருக்கிற பக்ஷத்திலும், சாதாரணமாகச்செய்யவேண்டிய மாமூலான ரிபேர்வேலை செய்யாதிருப்பதனால் உண்டாகாதிருக்கிற பக்ஷத்திலும், அந்த நஞ்சை நிலத்தின் தீர்வையைப் பூராவாய் வஜா செய்யலாம்.

2. ரிமிஷன் கொடுப்பது ஒருவயல்முழுவதும் சாகுபடி செய்யாமலிருக்கிறபோதும், பூராவாக பலநஷ்டம் நேரிட்டபோதும், தவிர, பாகநிலத்தின்மேல் கொடுக்கப்படமாட்டாது.

3. முழுதும் சாவியாகப்போன நிலத்தின்மேலும் ரிமிஷன் கொடுக்கலாம். அப்படி கொடுப்பது நாலணாபலிதம் ஆகாதபோது தான்.

4. முஜரா பெறவேண்டுமென்கிற பட்டாதாரன் ரெவினியூ இன்ஸ்பெக்டருக்கு சரியானகாலத்தில் நோடீசுகொடுக்கவேண்டும்.

II. செடில்மெண்டு ஆகாத நிலங்கள்.

1. செடில்மெண்டு ஆனநிலத்தின் விஷயத்தில் அனுசரிக்க வேண்டிய விதியையே அனுசரிக்கவேண்டும்.

2. செடில்மெண்டு ஆகாத சில நிலங்களுக்கு நஷ்டம் நேரிட்டபோது நஷ்டம் நேரிட்ட அநேகநிலங்களின் சராசரி நஷ்டத்தைச் சீர்தூக்கிப்பார்த்து ரிமிஷன் கொடுக்கவேண்டும்.

III. நஞ்சை நிலத்தில் புஞ்சை பலிதமாகாவிட்டால் அதற்கு ரிமிஷன்.

அப்படிப் பலிதமாகாவிட்டால் புஞ்சைப்பயிருக்கு கிராமத்திலுள்ள உயர்ந்த தீர்வை விதிக்கப்படும். அப்படி விதிக்கப்பட்ட தீர்வையானது அதிகமாக இருக்கும் பக்ஷத்தில் பக்கப்புஞ்சை நிலத்துத்தீர்வை கலெக்டர் விதிக்கலாம்.

---

V. புஞ்சைநிலத்திற்குத் தண்ணீர்ப்பாய்ச்சல் இல்லாதிருந்தாலும் அதிகமாயிருந்தாலும் அதனால் பயிர் நாசமடைந்தால் அப்போது ரிமிஷன் கொடுக்கலாம்.

VI. ரிமிஷன் கொடுக்கப்பட்ட பணம் ரீபண்டு ரூல்ஸ்பிரகாரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

விதையின் கிரயத்தை ரிமிஷன் கொடுப்பதில் எடுத்துக்கொள்ளப்படாது. மாமூல் தரிசின்மீது ரிமிஷன் இல்லை.

காலாகாலத்து ரிமிஷன். (B. S. O. 23.)

1. சரியான காலத்தில் மழையில்லாது போனாலும், ஜலக்குறைவாயிருந்தாலும், சாகுபடி சரியாக ஆகாவிட்டாலும் போர்டார் சாங்ஷன் செய்தால் தீர்வையில் கொஞ்சம் ரிமிஷன் கொடுக்கலாம்.

அப்படி கொடுக்கும் ரிமிஷன் எல்லா நிலங்களின்பேரிலும் சராசரி ஒரே ஏற்பாட்டின்கீழ் கொடுக்கவேண்டும்.

3. 1. கலெக்டர், புஞ்சைநிலத்துக்கு ரிமிஷன் கொடுக்கலாமென்று போர்டாருக்குத் தெரிவித்து அவர்கள் உத்தரவின்பேரில் முஜரா கொடுக்கலாம்.

2. சாதாரணமாய் காணும் சாகுபடியில் காலேவீசம் கண்டால் அதற்கு முஜராகிடையாது. அதற்குக்குறைந்து கால்வாசி பலிதத்துக்குமேல் கண்டிருந்தால் கால்தீர்வைமுதல் அரைத்தீர்வை வரைக்கும் முஜராகொடுக்கலாம்.

அரிக்கால்வாசி முதல் கால்வாசிக்குள் பலிதமாயிருந்தால் அரை முதல் முக்கால்வாசி முஜரா தீர்வை கொடுக்கலாம்.

அரிக்காலுக்குக் குறைந்திருந்தால், முக்கால்தீர்வைமுதல் முழுத்தீர்வை வரையில் முஜரா செய்யலாம்.

---

## நிலங்களை சப்டிவிஷன் செய்வது. (B. S. O. 28.)
## *(Sub-Division of Survey Fields.)*

1. சப்டிவிஷன் செய்வது கீழ்க்கண்ட பிரகாரம் செய்யவேண்டும்

(1) சப்டிவிஷன் செய்வதை டிமார்க்கேஷன் கற்களைக்கொண்டு சரியாக எல்லையிட்டுச் செய்யவேண்டும்.

(2) கிராமக்கணக்குகளில் சப்டிவிஷன் செய்த நிலத்துக்கு வெவ்வேறு லெடர்கள் கொடுக்கவேண்டும்.

(3) சப்டிவிஷன் செய்தநிலங்களெல்லாம் ஒரேயிடத்தில் இருக்கவேண்டும்.

(4) சோடி ராஜிநாமா கொடுக்கவேண்டுமென்று சப்டிவிஷன் செய்தால், நஞ்சையாக இருந்தால் ஒரு ஏகர் நிலமாகவும், புஞ்சையாகவிருந்தால் இரண்டுஏகர் நிலமாகவும் இருக்கவேண்டும்.

ஜமாபந்தி ஆகிறவரைக்கும் சப்டிவிஷன் சாஸ்வதமாகாது. ஜமாபந்தியில் சப்டிவிஷன் அங்கீகரிக்கப்பட்டால் அதுமுதல் அதைத் தனி நெம்பர் நிலம்போலவே எண்ணவேண்டும்.

4

II. கிராமத்தில் செய்த சப்டிவிஷன்கள் எல்லாவற்றையும் கர்ணம் தன்னுடைய பீல்ட் மெஷர்மெண்டு புஸ்தகத்தில் கண்டு எழுதிவைக்கவேண்டும்.

---

## கவுல்கள். (B. S. O. 29.)

## (*Cowels.*)

1. மிதமான தீர்வையின்பேரில் பயிர்செய்வதற்குக் கௌல் கொடுப்பது எப்பொழுதாவது நேரிடும். நெருக்கமான சிறுகாடுநிலங்களையும், சேற்று நிலங்களையும், கோணிவிளைந்திருக்கிற நிலங்களையும் சீர்படுத்திச் சாகுபடிசெய்வதற்கே கௌலைகொடுப்பிக்கவேண்டும். காகதாளியை வெட்டி சாகுபடிசெய்ய ஐந்துவருஷத்திற்கு மேற்பட்டு இருபதுவருஷத்திற்குத் தீர்வையில்லாமல் ஒருநிலத்தைப்பயிரிடுவதற்காக கலெக்டர் ஒருவனுக்குக் கௌல்கொடுக்கலாம்.

2. வருஷாவருஷம் சீர்திருத்தப்படுகிற நிலத்தின் விஸ்தீர்ணத்தைக் கவுலில் கண்டிருக்கவேண்டும். கௌலில் கண்டிருக்கும் ஷரத்துப்படி நடவாவிட்டால் கவுலை ரத்துசெய்யப்படும். கவுலின் ஷரத்துகள் எல்லாவற்றையும் கவுல் எழுதிக்கொடுத்தவனை அனுசரிக்கச் செய்யவேண்டும்.

---

## தீர்வையுள்ள நிலத்திற்கு கைப்பற்றவேண்டியதற்காக செய்யவேண்டிய நடவடிக்கை.

## (*Grant of Lands for occupation subject to payment of assessment.*)

1. தீர்வைவிதித்துள்ளபூமியைக் கைப்பற்றவேண்டுமென்னும் ஒருவன் முதலில் தாசில்தாருக்கு விண்ணப்பஞ்செய்துகொண்டால் அவர் அந்தநிலத்தைத் தர்க்காஸ்துக்குக்கொடுக்கலாம்; அவர் அப்படி கொடுப்பதற்குக் கீழ்கண்ட விதிகளை அநுசரிக்க வேண்டும்.

### அப்ளிகேஷன் பேரில் தர்க்காஸ்து செய்யக்கூடாத நிலங்கள்.

1. பொதுப்பிரயோஜனத்திற்காக வைத்திருக்கப்பட்ட நிலத்தை கலெக்டர் உத்திரவின்றியில், தாசில்தாராவது இதர உத்தியோகஸ்தர்களாவது தர்காஸ்து அப்ளிகேஷனை பிடிக்கக்கூடாது. அப்படிப்பட்ட நிலங்கள் ரிஸர்வ் நிலங்களென்று ஸ்பமாஷிலும், கிராம அடங்கல் கணக்கிலும் கண்டிருக்க வேண்டும்.

2. ரிஸர்வ் பாரஸ்டுக்குள்ளிருக்கும் நிலங்கள் பைமாஷில் ரிஸர்வ் பாரஸ்டுக்குள் கண்டிருக்கிற நிலத்தை ரிவினியூ உத்தியோகஸ்தனுடைய உத்தரவன்னியில் பட்டாவின்கீழ் கொண்டுவரக்கூடாது.

3. பாரஸ்டு ரிஸர்வுக்குப் பக்கத்துநிலங்கள் பாரஸ்டுக்காக ரிஸர்வுகள் முற்றும் ஏற்படாத ஜில்லாக்களில் பாரஸ்டுக்குச் சமீபத்தில் 18-மாத காலமாக சாகுபடியின்கீழ் கொண்டுவராத நிலத்தை டிஸ்டிரிக்டு பாரஸ்டு ஆபீஸர் உத்தரவன்னியில் சாகுபடிக்குக் கொடுக்கக்கூடாது. 4. பெரியதோப்புகள் இருக்கும் நிலத்தையும், மரப்பட்டாவுடைய நிலத்தையும், ஒருவன் தர்காஸ்துசெய்தால் அதைத் தர்காஸ்தில் கொடுக்கக்கூடாது. 5. ரயில்வே ஸ்டேஷன்களுக்கு பக்கத்திலுள்ள நிலங்களை தர்க்காஸ்து கொடுக்கக்கூடாது. 7. வீடு கட்டும்படியான கற்களும், விலையுயர்ந்த லோகங்களுமுடைய நிலங்களை தர்க்காஸ்த்துக்குக் கொடுக்கக்கூடாது. 8. கவர்ன்மெண்டு கிஸ்திக்காக கைவிடப்பட்ட நிலங்களில் சொத்து இருந்தால் அதை தர்க்காஸ்துக்குக்கொடுக்கக்கூடாது. 9. கவர்ன்மெண்டு கிஸ்திக்காக ஏலம்போடப்பட்டு அதை ஏலத்தில் கவர்ன்மெண்டாரே எடுத்துக் கொண்ட நிலங்கள். 10. கவர்ன்மெண்டார் கம்பன்ஸேஷன் கொடுத்து பொதுப்பிரயோஜனத்துக்காக வாங்கியநிலங்கள். 11. ஏரி முழுவடை, லங்கைகள் அதாவது, சிறுதீவுகள். 12. நீலகிரிமலையிலுள்ள புறம்போக்கு ஸ்தலங்கள், 13. மிலிடெரிகன்டோன்மெண்டிலுள்ள நிலங்கள். 14. கவர்ன்மெண்டாரால் அதிகபணம் செலவழித்து செய்யப்பட்ட ஜலாதாரத்தின் கீழ் உள்ள ஸ்தலங்கள் ஆகிய இவற்றை தர்க்காஸ்த்துக்கு ஒருவருக்கும் விடப்படாது.

## தர்க்காஸ்து ரூல்கள்.

3. தீர்வைவிதித்திருக்கும் நிலங்களை தர்க்காஸ்துசெய்யவேண்டுமானால் நிலத்தின் விஸ்தீரணம் முதலியவற்றை விவரமாக வெழுதி எப்பொழுதாகிலும் கொடுக்கலாம். அதில் கண்ட நிலம் தரிசாகவும், கவர்ன்மெண்டுக்கு ஜோடிராஜிநாமா செய்த நிலமாகவும் இருக்க வேண்டும்.

4. தர்க்காஸ்துமனு, தாசில்தாரனிடத்திலாவது கிராம உத்தியோகஸ்தனிடத்திலாவது கொடுக்கலாம். தாசில்தார் அந்தமனுவை பைசல் செய்துவிடலாம்.

5. தாசில்தாரனுக்கு ஒருமனுகொடுத்துக்கொண்டால் அதை அவர் கிராம உத்தியோகஸ்தனுக்கு ரிபோர்ட்டுக்கு மாற்றிவிடவேண்டும். அதன்பேரில் கிராம உத்தியோகஸ்தன் அதை C. ரிஜிஸ்டரில் பதிந்துகொண்டு அதை ஊரில் பயிரங்கப்படுத்தி 15-நாள் வரைக்கும் ஊரில் வைத்திருந்து அந்த காலம் முடிவானதும் A. மிமோராண்டம் டூபிளிகேட்டில் தயார் செய்து மணியகாரனும், கணக்கனும் கையெழுத்து செய்து இரண்டுசாக்ஷிகளின் கையெழுத்தையும் வாங்கி தாசில்தாருக்கு அனுப்பவேண்டும். சாக்ஷிகையெழுத்துபோடுகிறவர்கள் பக்க நிலக்காரராயிருக்கவேண்டும். பக்க நிலக்காரர்கள் கையெழுத்துப் போடமாட்டேனென்றால் அதற்குக்காரணத்தை பாரம் A. ஒன்றில் கீழ் எழுதி அனுப்பவேண்டும்.

6. ஒரு சர்வே நிலத்தை சப் டிவிஷன்செய்து தர்க்காஸ்துக்குக் கொடுக்கலாம்.

7. கிராம உத்தியோகஸ்தனுடைய ரிபோர்ட்டில் யாதொரு ஆக்ஷேபமும் காணாமலிருந்தால், தர்க்காஸ்து செய்தவனுக்கு மஞ்சூர் செய்யலாம்.

8. இரண்டுமூன்றுபேர் தர்க்காஸ்து செய்தால் கீழ்க்கண்ட விதியை யனுசரிக்கவேண்டும்.

1. தர்க்காஸ்து செய்யப்பட்ட நிலங்களில் மரங்களிருந்தால் மரப்பட்டா ஒருவன்மேலிருக்கும்பக்ஷத்திலும் அந்த நிலத்தில் கிணறிருந்து அதன்ஜலத்தை ஒருவன் இரைத்துக்கொண்டிருக்கும் பக்ஷத்திலும் அப்படிப்பட்டவனுக்குக் கொடுக்கவேண்டும்.

2. சர்வே நிலத்தை முழுமையும் தர்க்காஸ்த்து செய்தவனுக்குக் கொடுக்கவேண்டும்.

3. மேற்சொன்ன காரணங்களில்லாமல் தர்க்காஸ்து செய்கிறவர்களுள் (*a*) பக்கநிலப்பட்டாதாரனுக்கும், (*b*) அல்லது முதல்கிராமபட்டாதாரனாகிய தர்க்காஸ்துதாரனுக்கும் (*c*) முதல் தர்க்காஸ்துதாரனுக்கும் கொடுக்கலாம்.

9. ஷை ரூல்களேயும் சிலவேளை நிராகரிக்கலாம்.

10. ஒரு நிலத்தில் ரோட்டுபோனால் அதற்குண்டாகிய 132 அடி அகலம் விட்விட்டு மிகுந்ததை தர்க்காஸ்துக்குக்கொடுக்கலாம்.

11. இரிகேஷன் வேலேக்கு கீழே இருக்கப்பட்ட நிலத்தை தர்க்காஸ்து செய்தால் 75-அடி விட்டுவிட்டு அதற்கு அப்புறமிருக்கிற நிலத்தை தர்க்காஸ்துக்குக் கொடுக்கலாம்.

12. தர்க்காஸ்து கேசின்மேல் ஆன உத்தரவை தாசில்தார் அந்த கேசில் சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் தெரிவிக்கவேண்டும்.

13. ஒரு தர்க்காஸ்தின் மனுவின்மேல் இன்னது செய்ய வேண்டுமென்று தாசில்தாரருக்காவது டிவிஷனல் ஆபீசருக்காவது தோன்ருவிட்டால் அந்த நிலத்தை ஏலத்தில் விட்டுவிடலாம். அப்படிப்பட்ட ஏலத்தை கலெக்டர் அங்கீகரிக்கவேண்டும்.

14. தாசில்தார் செய்யும் நடவடிக்கையின்மேல் 30-நாளேக்குள் டிவிஷனல் ஆபீசருக்கும் அதன்மேல் கலெக்டருக்கும், கலெக்டர் உத்தரவின்மேல் போர்டாரிடத்தும் அபீல்செய்துகொள்ளலாம். அப்படிப்பட்ட அபீல்செய்வது டிவிஷனல் ஆபீசர் உத்தரவுபிறந்ததும் கலெக்டரிடத்தும், கலெக்டரின் உத்தரவுபிறந்த 40-நாளேக்குள் போர்டாருக்கும் அபீல் செய்துகொள்ளலாம்.

15. அபீல் செய்துகொண்டால் அப்படிப்பட்ட அபீல்சேஸை விசாரிக்கும் உத்தியோகஸ்தன்கேசை தீரவிசாரியாமல் தள்ளிவிடக் கூடாது.

16. அபீல் பிடிக்கும்போது அந்தகேசில் உத்தரவு காபிகளே அனுப்பாவிட்டால் பிடிக்கக்கூடாது. இருதரத்தாரையும் வரவழைத்து கேசைவிசாரித்து பைசல் செய்யவேண்டும். கேசின்முடிவைப்பற்றிய உத்தரவை உத்தியோகஸ்தன் தானேயாவது தன்னுடைய குமஸ்தாவினுலாவது எழுதிவைக்கவேண்டும். அபீலின்மேல் உத்தரவான உத்தரவை கக்ஷிக்காரனுக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

17. தாசில்தாரர் தர்க்காஸ்து கேசுகள் தான்போகும் ஊர்களிலிருந்தால் அவ்வவ்விடங்களிலேயே பயிசல் செய்துவிடலாம்.

### தீர்வைவிழாத நிலங்கள் தர்க்காஸ்து.

தீர்வைவிழாத நிலங்கள் தர்க்காஸ்து செய்யவேண்டுமானுல் தாசில்தாரனுக்காவது, டிவிஷனல் ஆபீசருக்காவது ½-ரூபாய் ஸ்டாம்பு ஒட்டி மனுசெய்துகொள்ளவேண்டும். அதன்பேரில் அந்தநிலம்

தர்க்காஸ்துசெய்வதில் ஏதாவது கெடுதலை இல்லாதிருந்தால் அயனின்கீழ் கொண்டுவந்து தர்க்காஸ்து கொடுத்துவிடார்.

உத்தரவில்லாமல் தீர்வைவிழுந்தநிலத்தை சாகுபடிசெய்தல்.

அப்படிப்பட்ட நிலங்களின் விவரத்தை பிரதிமாதமும் தாசில்தாருக்குத் தெரியப்படுத்தவேண்டும். ஒருவன் உத்தரவின்றி சாகுபடிசெய்ததன்பேரில் அதற்கு உண்டான தீர்வையை கட்டிவிடுகிறேனென்று சொன்னால் அதை தார்க்காஸ்துக்குக் கொடுத்துவிடலாம், அப்படியில்லாவிட்டால் சிவாய் ஜமா விதிக்கப்படும்.

23. ஒரு தர்க்காஸ்துதாரன்மேல் ஒருநிலம் மஞ்சூரானால் அவன் அதற்குக்கட்டவேண்டிய தீர்வையை கட்டுகிறதற்கு ஆஜராயிருக்கவேண்டும். உத்தரவின்றி பயிரிட்டநிலம் தர்க்காஸ்தில் அவன்மேல் மஞ்சூரானால் அவன் 30 - நாளைக்குள் முழுத்தீர்வையும் கட்டவேண்டும். தார்க்காஸ்து பூமியில் மரங்களிருந்தால் மரத்தின் கிரயத்தைச் செலுத்திவிடவேண்டும். டிமார்க்கேஷன் ஆன புறம்போக்கு நிலத்தைத்தர்க்காஸ்து செய்தால் டிமார்க்கேஷனுக்கு நேரிட்ட செலவை கட்டவேண்டும்.

A. B. பாரங்கள் தயார்செய்யவேண்டிய நடவடிக்கைகளின் முறை.

24. A. B. பாரத்தில்கண்ட எல்லாகலத்தையும் சரியாக எழுதவேண்டும்.

25. A மிமோராண்டம் 5-வது கலத்தில் நஞ்சைபுஞ்சை என்பதை யெழுதவேண்டும். 12-வது கலத்தில் வழியையும், வரப்பையும், கால்வாயையும் சிறுகால்வாயையும் கண்டெழுதவேண்டும். 13-வது கலத்தில் அந்தநிலத்துக்கு அப்ளிகேஷன் செய்துகொண்ட எல்லா நபர்களின் பெயரையும் அல்லது எதிரிடை போட்டவர்களுடைய பெயரையும் காணவேண்டும். 1-முதல் 16-கலம்வரைக்கும் கிராம உத்தியோகஸ்தர்கள் நிரப்பி கையெழுத்திட்டு தேதிபோட்டு அப்ளிகேஷன்போட்ட 20 - நாளைக்குள் தாசில்தாருக்கு அனுப்பவேண்டும். 17-18-வது கலத்தில் தாசில்தார் பதிவுசெய்து கிராம உத்தியோகஸ்தர்களுக்கு அனுப்பியதன்மேல் 19 - வது கலத்தில் கிராம கர்ணம் பதிவுசெய்து தாசில்தார் உத்தரவை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். A. B. மிமோராண்டம் பயில்கள், C. ரிஜிஸ்

டர் கிராமத்தில் இருக்கவேண்டும். தாலூகா மானுயலில்கண்ட 4-வது ஸ்டேட்மெண்டு தாலூகாவில் இருக்கவேண்டும். ஜமாபந்தி காலத்தில் தாலூகா கணக்கையும், கிராமக்கணக்கையும் ஒத்திட்டு சரியாக இருக்கிறதாவென்று பார்த்து தாசில்தார் கையெழுத்து செய்யவேண்டும்.

---

## சோடிராஜிநாமா அல்லது சர்க்கார் ராஜிநாமா. (B. S. O. 31.)

## (*Relinquishment of Ryotwari holdings.*)

1. குடிகள் சோடிராஜிநாமா கொடுப்பதில் வேறொருவன் அதைப் பயிரிடும்படியான காலத்தில் எழுத்து மூலமாகக் கொடுக்க வேண்டும்.

2. நிலத்தை ராஜிநாமா கொடுக்கவேண்டியகாலம் அந்த டிஸ்ட்ரிக்டில் முதல்மழை பெய்வதை ஒத்துக்கொண்டிருக்கிறதினால் வெவ்வேறாக இருக்கும். அந்தந்த டிஸ்ட்ரிக்டுகளில் நிலத்தை சர்க்காருக்கு ராஜிநாமா கொடுக்கவேண்டியகாலம் அடியில்கண்ட பட்டிப்பிரகாரம் கொடுக்கவேண்டும்.

---

### டிஸ்ட்ரிக்டின் பெயர்.

| | டிஸ்ட்ரிக்டின் பெயர். | நிலம்விடவேண்டிய தேதி. |
|---|---|---|
| முதல் சர்க்கில். | தென் கன்னடம்<br>மலையாளம்<br>நீலகிரி | ஏப்ரல் ௴ 30௳ |
| இரண்டாவது சர்க்கில். | கெஞ்சம்<br>விசாகபட்டணம்<br>கோதாவரி<br>கிருஷ்ணா | மே ௴ 31௳ |
| மூன்றாவது சர்க்கில். | அநந்தபுரம்<br>பெல்லாரி<br>கர்னூல்<br>கடப்பை<br>நெல்லூர்<br>வட ஆர்க்காடு<br>சேலம்<br>கோயம்புத்தூர் | ஜூலை ௴ 15௳ |

| | | |
|---|---|---|
| நாலாவது சர்க்கில். | செங்கல்பட்டு<br>தென்னார்க்காடு<br>திருச்சினப்பள்ளி<br>தஞ்சாவூர்<br>மதுரை<br>திருநெல்வேலி | ஆகஸ்டுமீ 15வ. |

3. பட்டாதாரன் ராஜினமா கொடுக்கிறநிலம் வரப்போக அனுகூலமாக இருக்கவேண்டும். அதாவது மத்தியிலிருக்கும் புலங்கள் தவிர மற்ற புலங்களை அவனே வைத்துக்கொண்டிருக்கும்படி செய்யக்கூடாது.

4. சர்க்கார் ராஜினமா கொடுக்கிற நிலத்தை விவரமாக ஒரு கடுதாசியிற் கண்டு அதன்தீர்வையையும் விவரித்து மணியகாரன், கர்ணம் கையெழுத்தும் இட்டு கொடுக்கவேண்டும்.

5. சர்க்கார் ராஜினமா கொடுக்கிற நிலத்தின்மேல் பாக்கியிருக்கிறதென்று ராஜினமாவைத் தள்ளிவிடப்படாது. சர்க்கார்பாக்கிக்காக வேறுநிலத்தை ஜப்தி வசூல்செய்யலாம்.

7. ஒரு ஜாயிண்டு பட்டாவில் ஒருவன் ராஜினமாகொடுத்தால் மற்றவர்கள் சம்மதமின்றி பட்டா அங்கீகரிக்கப்படமாட்டாது.

---

### தீர்வைவிழாதநிலத்தை விற்பனைசெய்வது. (B. S. O. 32.)

### *(Sales of the assessed waste lands as freeholds.)*

தீர்வை விழாத புறம்போக்குநிலத்தை வரியில்லாமல் விடுவதற்குக் கீழ்க்கண்ட நிபந்தனைகளை அனுசரிக்கவேண்டும்.

1. கிராம நத்தத்தில் பூமியை இனமாகக்கொடுக்க கலெக்டருக்கு அதிகாரமுண்டு. மற்றவிஷயத்தில் கவர்ன்மெண்டார் உத்தரவுவேண்டும்.

2. மேற்கண்ட பிரகாரம் நிலத்தை தர்க்காஸ்து செய்யும்போது அதனுடைய விஸ்தீரணம், இருக்குமிடம் முதலியவற்றைக் கண்டு கலெக்டருக்கு எழுதிக்கொள்ளவேண்டும்.

3. சாதாரணமாக 500 ஏகராவுக்கு அதிகப்படாமல் இருக்கவேண்டும். பட்டணங்களிலும், கிராமங்களிலும், மலைப் பிராந்தியங்

களிலும், ரயில்வே ஸ்டேஷன்களிலும் 10-ஏகராவுக்குள் இருக்கவேண்டும்.

4. நிலம் ஒரு சதுரமாக இருக்கவேண்டும்.

5. அப்படிக் கேட்கப்பட்ட நிலம் சர்வே ஆகி எல்லை ஏற்படுகிறவரைக்கும் விடக்கூடாது.

6. கேட்கப்பட்ட நிலம் விலையுடையதா யிருந்தால் சர்வே செய்யவும், எல்லைக்கல் போடவும் பிடிக்கும் பணத்தில் தர்க்காஸ்துதாரரிடத்தில் வசூல்செய்யவேண்டும்.

7. 6-ல் கண்டதொகைக்கு டிமாண்டுபிறந்த 6-வாரத்துக்குள் பணத்தைக் கட்டாவிட்டால் அவனுடைய தர்க்காஸ்துபோய்விடும்.

8. சர்வேயானதும் ஷை நிலத்தை விற்பனைக்கு ஒருநாளில் கொண்டுவரவேண்டும்.

9. 3-மாதம்வரைக்கும் ஷை நிலத்தை ஏலம்போடப்போகிறதென்று கலெக்டர்ஆபீசிலும், தாலூகா கச்சேரியிலும், முனிசிப்கோர்ட்டிலும், போலீஸ் ஸ்டேஷனிலும் பிரசுரம் செய்யவேண்டும்.

11. இந்து ரூல்ஸ்பிரகாரம் தாக்கூஸ்த்து மனுவந்தவுடனே கலெக்டர் அந்தநிலத்துக்கு ஆக்ஷேபம்வருமென நினைத்தால் தர்க்காஸ்துதாரனுக்குத் தெரிவிக்கவேண்டியது. சர்வே முதலியவை தர்க்காஸ்துதாரன் செலவிலேயே நடத்தப்படும். அப்படி ஒரு நோடீசும் கொடாமலிருந்து நிலம்விற்பனைக்கு ஆக்ஷேபம் நேரிடும்பக்ஷத்தில் கவர்ன்மெண்டு செலவிலே சர்வேசெலவை கவர்ன்மெண்டு செலவில் எழுதவேண்டும்.

13. ஏலம் போடுவதில் முதல்விலை சொல்வதில் சர்வேமுதலியவை செய்யப்பிடித்த செலவும், மாக்கிரயமும் அடங்கியிருக்கும்.

14. ஏலம் போடுவதற்கு முன்பு யாரொருவரும் ஆக்ஷேபம் செய்யாதிருந்தால் அதை ஏலத்தில் உயர்ந்தவிலைக்கு விட்டுவிடப்படும்.

15. ஏலத்தில் நிலமெடுத்தவன் 100-க்கு 15 வீதம் உள்ள பணத்தை உடனே கட்டிவிடவேண்டும். மிகுந்தபணத்தை 30-நாளை

க்குள்ளாவது 3-வருஷத்திற்குள்ளாவது 100-க்கு ஆறுவட்டியுடன் சேர்த்து கட்டிவிடலாம்.

17. ஏலம் போடுவதற்குமுன்பு ஷை நிலத்திற்கு பாத்தியமுடைய சிலர் எதிரிடைபோட்டால் அதை விசாரித்து பயிசல்செய்கிறவரையில் ஏலத்தை நிறுத்திவைக்கவேண்டும்.

18. யாடு மேய்ப்பதற்கான ரிஜர்வ் நிலங்கள் விறகு முதலிய எரிகரும்புகள், கிராமநத்தத்திற்காக ரிஜர்வ் செய்யப்பட்டிருக்கிற நிலங்கள், உத்திபானவனங்கள் முதலியவைகளை சவர்ன்மெண்டு உத்தரவில்லாமல் விற்கக்கூடாது.

19. இந்த ரூல்ஸ்பிரகாரம் விற்கப்பட்ட நிலங்களுக்கு நிலவரி கிடையாது. மற்றவரிகள் எல்லாம் உண்டு.

23. இந்த ரூல்சுகள் தஞ்சாவூருக்கும், சென்னபட்டணத்துக்கும் பொருந்தாது.

---

### தீர்வைவிழுந்த நிலங்களை தீர்வையில்லாமல் விடுதல். (B. S. O. 34.)

### (*Disposal of assessed land not on assesment.*)

1. பட்டணங்களுக்குஅருகாமையில் தீர்வைவிழுந்தநிலங்களை வீடு கட்டுவதற்காக விற்பனைக்குக் கேட்டால் 1-ஏகராமுதல் 4-ஏக்ராவரைக்கும் விற்பனை செய்யலாம். அப்படிச்செய்வதில் ஆரம்பவிலை 2-வருஷத்திய தீர்வையா யிருக்கவேண்டும்.

---

### வீடுகட்டுவதற்காக நிலங்கொடுப்பது. (B. S. O. 37.)

### (*Disposal of Lands for Building purposes.*)

### கி ரா ம ந த் த ம்.

1. அடியில்கண்ட பிரகாரம் கிராமநத்தத்தை தர்க்காஸ்த்து செய்கிறவர்களுக்கு மஞ்சூர்செய்யலாம்.

| | | |
|---|---|---|
| 50 ரூபாமுதல் கட்டும் பட்டாதாரருக்கு | 10 | சென்டுகள். |
| இதரபட்டாதாரருக்கு | 5 | do |
| பட்டாவில்லாதவனுக்கு | 4 | do |

2. மேற்கண்ட பட்டிப்பிரகாரம் தாசில்தாரரும் டிப்டி தாசில்தாரரும் வீடுகட்டிக்கொள்வதற்கு நிலம் கொடுக்கலாம். பட்டியில் கண்டதைவிட அதிகநிலம் வேண்டுமானால் டிவிஷனல் ஆபீசர் உத்தரவுவேண்டும். வீடுகட்டிக்கொள்ள நிலத்திற்கு அப்ளிகேஷனை கிராம உத்தியோகஸ்தனிடத்தில் கொடுக்கலாம். அவன் தன்னுடையரிமார்க்குடன் தாசில்தாரருக்கு அனுப்பவேண்டும்.

3. கவரன்மெண்டு உத்தரவன்னியில் வீடுகட்டிக்கொண்டால், அப்படி கட்டிக்கொள்கிறவனை பிராசிகியூட் செய்வதும் அல்லது அந்த நிலத்திற்குண்டான தீர்வை விதித்தலும் செய்யப்படும்.

4. கிராமநத்தத்தில் பயிரிட்டால் அதற்கு அதிகதீர்வை விதிக்கப்படும். பட்டாகொடுக்கக்கூடாது.

5. கிராமநத்தம் அதிகமாகவிருந்து நாகதாளியால் மூடப்பட்டிருந்தால் கிராமத்துக்கு வேண்டிய நிலத்தை வைத்துக்கொண்டு மிகுதியை பட்டாவுக்குக் கொடுத்துவிடலாம்.

7. கிராமநத்தத்துக்கு அதிகமாக ஜனங்களிருந்து வீடுகட்டிக்கொள்ள வேண்டுமென்றால், கலெக்டர் வரிவிழுந்த நிலங்களை நத்தத்தில் மாற்றி வீடுகட்டிக்கொள்ள விடலாம்.

8. புதிதாக உண்டாகும் பட்டணங்களில் உள்ள கிராமநத்தத்தை குயிட்ரெண்டுக்காக விடவேண்டும். பயிரிடுவோர் அப்படிப்பட்ட பட்டணங்களுக்கு அருகாமையில் வீடுகட்டிக்கொள்ள வேண்டுமென்றால் வரிவிழுந்த நிலத்தை புறம்போக்குக்குமாற்றி வீடுகட்டிக்கொள்ள விடலாம்.

9. முனிசிபாலிடி நிலமிருந்தால் முனிசிபாலிடியாருடைய அபிப்பிராயத்தையும் பெறவேண்டும்.

---

## II. கிராமநத்தத்துக்கு வெளியிலுள்ள நிலங்கள்.

10. கிராமநத்தமல்லாத நிலத்தில் வீடுகட்டிக்கொண்டால், அதற்குண்டான தீர்வையே வசூல்செய்யப்படும். புதியபட்டணக

ளின் அருகாமையில் வீடுகட்டிக்கொண்டால் 2400 அடிகொண்ட ஒரு மனையொன்றுக்கு 8-அணு குயிட்ரெண்டு வசூல்செய்யப்படும்.

11. அப்படிப்பட்ட நிலம் அதிகவிலையுள்ளதாயிருந்தால் ஏலத்தில் போடப்படும்.

13. கண்டோன்மெண்டில் வீடுகளின்மேல் வசூலாகும் குயிட்ரெண்டை ரெவினியூவின்கீழ் கொண்டுவரப்படும்.

---

### ஜமீன்தார் எஸ்டேட்டுகளின் வார்சுகள். (B. S. O. 37.)

### (*Succession to Zemindari Estates*)

1. ஒரு ஜமீன்தார் இறந்ததன்பேரில் அதற்கு அநேகர் தங்களுக்குச்சேரவேண்டுமென்று வியாச்சியங்கொண்டுவந்தால் கலெக்டர் பிரவேசித்து கேசை விசாரித்து வம்சபரம்பரை முதலியவற்றையெடுத்து கவரன்மெண்டுக்கு அனுப்பவேண்டும். அதன்பேரில் இன்னுன் ஜமீன்தாரிக்கு உரித்தானவனென்பதை தீர்மானம் செய்யவேண்டும்.

---

## SECTION II.

## ரெவினியூ கலெக்ஷன்.

---

### ரேவினியூ சேலுத்தல். (B. S. O. 100.)

### (*Payment of Revenue.*)

ரெவினியூ சர்க்காருக்குச்செலுத்துவதை பொன்னுணயமாகவும் சர்க்கார் நோட்டாகவும் கட்டிவிடலாம். அன்றியும் ஒரு பட்டாதாரன் தான் கட்டவேண்டிய கிஸ்திக்காக கெவர்ன்மெண்டு கடன் பத்திரங்களை சர்க்கார் ட்ரெஷரியில் கட்டிவைத்து அதன் வட்டியைவாங்கிக் கட்டிக்கொள்ளும்படி கெவர்ன்மெண்டாரைக் கேட்டாலும் அவர்கள் அப்படியே செய்ய உடன்பட்டிருக்கிறார்கள்.

## ரயத்துவாரி நிலங்களின்மேல் கிஸ்திபந்தி.

### மாதவாரி கட்டவேண்டிய மொத்தம்.

| ஜில்லா. | நவம்பர். | டிசம்பர். | ஜனவரி. | பிப்ரவரி. | மார்ச்சு. | ஏப்ரல். | மே. | ஜூன். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அணா | அணா | அணா | அணா | அணா | அணா | அணா | அணா | அணா |
| செங்கல்பட்டு | 0 | 0 | 4 | 4 | 4 | 4 | 0 | 0 | 16 |
| வட ஆற்காடு, சந்திரகிரி, சித்தூர், குடியாத்தம், பலமநேரி, வாலாஜா | 0 | 4 | 4 | 4 | 4 | 0 | 0 | 0 | 16 |
| இதர தாலூகாக்கள் | 0 | 0 | 4 | 4 | 4 | 4 | 0 | 0 | 16 |
| தென்னாற்காடு | 0 | 0 | 4 | 4 | 4 | 4 | 0 | 0 | 16 |
| திருச்சினாப்பள்ளி | 0 | 4 | 4 | 4 | 4 | 0 | 0 | 0 | 16 |
| திருநெல்வேலி | 0 | 0 | 4 | 4 | 4 | 4 | 4 | 0 | 16 |
| கோயமுத்தூர் | 0 | 0 | 4 | 4 | 4 | 4 | 0 | 0 | 16 |
| சேலம் | 0 | 4 | 4 | 4 | 4 | 0 | 0 | 0 | 16 |
| மதுரை, பழனிதாலூகா, மலை கிராமங்கள் தவிர | 0 | 0 | 0 | 4 | 4 | 4 | 4 | 0 | 16 |
| மலைகிராமங்கள் | 0 | 0 | 0 | 8 | 0 | 8 | 0 | 0 | 16 |
| தஞ்சாவூர் நஞ்சை — கார் | 0 | 3 | 6 | 7 | 0 | 0 | 0 | 0 | 16 |
| தஞ்சாவூர் நஞ்சை — செம்பா | 0 | 0 | 0 | 2 | 4 | 6 | 4 | 0 | 16 |
| புஞ்சை அக்டோபர்மீ வரைக்கும் பாதிசாகுபடியானால் | 3 | 6 | 7 | 0 | 0 | 0 | 0 | 0 | 16 |
| தஞ்சாவூர், மற்றதற்கு | 0 | 0 | 0 | 2 | 3 | 5 | 4 | 2 | 16 |
| குத்துகுத்தகை கிராமங்கள் | 1 | 2 | 3 | 1 | 2 | 3 | 3 | 1 | 16 |

மேற்கண்ட பட்டிப்பிரகாரம் ஒவ்வொருஜில்லாவிலும் பட்டாதாரர்கள் தாங்கள் கட்டவேண்டிய கிஸ்தியை செலுத்தவேண்டும். 10-ம் தேதிக்குமேல் தீர்வையைக்கட்டத் தவறினால் டிமாண்டுகொடுக்கப்படும். ஒரு ரூபாய்க்குக் குறைந்ததீர்வையானால் ஒரேகிஸ்தியில் முழுத்தீர்வையையும் செலுத்திவிடவேண்டும். பட்டா தொகையை கிஸ்திப்பிரகாரம் பிரிப்பதில் பைசுகள் வந்தால் அச்சில்லரைகளைகடைசிமாதத்தில் வசூல் செய்யவேண்டும். கிஸ்திபந்தி இனம்

நிலங்களுக்கும் உரித்தானது. ஜமீன்தாரர்கள் கட்டும்பேகஷ்க்கு உரித்தானதல்ல. ஜமீன்தாரர் சன்னதில் கண்டபடி அவர்கள் சர்க்காருக்குச் சேரவேண்டிய பணத்தைக் கட்டவேண்டும்.

---

வருஷவாரி வசூல். (B. S. O 101.)

(*Current Collection.*)

ஒவ்வொருவருஷ ஆகிருக்குள்ளாக அவ்வருஷத்திய தீர்வையை கலெக்டர் தனது ஜில்லாவில் வசூல்செய்யவேண்டும். அப்படி பாக்கிவைத்தால் ஜனங்களுக்கு கஷ்டம். ஜமாபந்தியில் வருஷத்தின் பாக்கித் தணிக்கைசெய்து பணத்தை வசூல்செய்து வராதபணத்தை தள்ளிவிடுவதற்கு உத்தரவு பெற்றுக்கொள்ளவேண்டும்.

---

கிஸ்தியை தள்ளி வைத்தல். (B. S. O. 102.)

(*Postponement of Kists.*)

மழையில்லாத நிமித்தம் சாஸ்வதமாக செடில்மெண்டான கிராமத்தின் கிஸ்தியை தள்ளிவைக்கவேண்டுமானல் கலெக்டர் போர்ட்டாருடைய அநுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

---

பழ முதல் பாக்கி வஜா (B. S. O. 103.)

(*Remission of arrears.*)

பழ முதல்பாக்கியை வஜாசெய்கையில் கீழ்ப்பட்ட ரிவினியூ உத்தியோகஸ்தர்கள் ரயத்துகளிடம் பணம் சம்பாதித்துக்கொள்ளாதபடி பாக்கிதாரர்களுக்கு அவர்கள்பேரில் இருக்கும் பாக்கி தள்ளிவிடப்பட்டதென்று உசூரிலும் தாலூகாவிலும் பயிரங்கமாகத் தெரியப்படுத்தவேண்டும். லாண்டு ரெவினியூவை வஜாசெய்தால் செஸ்களும் வஜாசெய்யப்பட்டதாக நினைக்கப்படும்.

தீர்வை வசூல் செய்தல். (B. S. O. 105.)

கிராமங்களில் தீர்வை வசூல் செய்வது கிராமக்கணக்கனுடைய வேலையல்ல. மணியகாரனுடைய வேலையேயாம். பணம் கட்டினதற்கு ரசீதுகொடுப்பதில் பட்டாதாரன் கிராம கர்ணத்தின் கையெழுத்தும் இடவேண்டுமென்றால் அவன் செய்யவேண்டும்.

## 1864-வது ஞூ சென்னை II-வது ஆக்டின்படி நடத்தவேண்டிய நடவடிக்கை. (B. S. O. 106.)

(*General Procedure under Act. II. of 1864.*)

1. முதல் செக்ஷனில் கண்ட 'பூமியையுடையவன்' என்னும் பதம் துரைத்தனத்தாருக்குத் தீர்வையை கொடுத்துக்கொண்டு அவர்களுடைய நிலத்தை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் எல்லோரையும் சேர்க்கிறது. இவர்கள் 1802 ஞூ ஏற்பட்ட சட்டத்தில் பூஸ்ஸத்வாதிகாரி பெயரிடப்பட்ட வகுப்பினர்களாயிருந்தபோதிலும், அல்லது ரயத்வாரி பூமிகளையுடையவர்களாயிருந்தபோதிலும், துரைத்தனத்தாருக்கு கொடுக்கவேண்டிய தீர்வைகளை வசூல் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரே நிபந்தனைக்குட்படுவார்கள். பூமியையுடையவர்கள் பூமிக்காக கட்டும் பணத்தை ரெவினியூ என்று சொல்லப்படும். பூமியையுடையவர்களுக்கு குடிகள் செலுத்தும் பணத்தை ரென்ட் என்று சொல்லப்படும்.

2. 5 - 6 செக்ஷன்கள் சர்கார் பாக்கிக்காக பாக்கிதாரனுடைய அசையும்பொருள் அல்லது அசையாப்பொருள் அல்லது இரண்டையுமாவது விற்பனைசெய்து அதற்காக நேரிடும் செலவையும் சேர்த்து வசூல்செய்ய கலெக்டருக்காவது, அல்லது தாசில்தாருக்காவது அதிகாரமுண்டு. ரயத்தாரியானாலும் ஜமீன்தாரனானாலும் ஷை அமுலை நடத்தலாம். சன்னதின்கீழ் நிலம் வைத்திருப்பவனாயிருக்கும் பக்ஷத்தில் சன்னதில் கண்ட ஷரத்துப்படி பாக்கியை வசூல் செய்யவேண்டும். அப்படிப்பட்டவனுடைய அசையும்பொருளை முதலில் ஜப்திசெய்து அந்தப்பணம் வசூலாகாவிட்டால் பின்பு நிலத்தை ஜப்திசெய்யவேண்டும். கலெக்டர் ஜப்திசெய்வது அசையும்பொருள்களிலிருந்து பணம் வசூலாகுமென்றிருந்தால் குடியிருக்கும் வீட்டை ஜப்திசெய்யக்கூடாது. குடியானவனுடைய அசையும்பொருளை ஜப்திசெய்வதில் பயிரிடும் கருவிகளையும் ஒரு ஏர்மாடு விட்டுவிட்டு மற்றபொருளை ஜப்திசெய்யவேண்டும். பட்டாவில்லாமலும் உத்தரவின்றியும் சாகுபடி செய்யப்பட்ட நிலத்தீர்வையை வசூல் செய்வதிலும் ஷை நிபந்தனையை யனுசரிக்கவேண்டும். ரயத்து அனேக பட்டாக்களுக்குப் பாக்கிகட்ட வேண்டியிருந்தால் ஒவ்வொரு தட்வை ஜப்தி செய்யும்பொழுதும் ஒரு ஜதை எருதுகள் விட்டு மற்றதை ஜப்தி

செய்யவேண்டும். பட்டா அநேகர்பேரிலிருந்தால் ஒவ்வொருவருக்கும் ஒருஜதை உழவுமாடுகள் விட்டுவிடவேண்டும்

3. செக்ஷன் 7:--கவர்ன்மெண்டார் பாக்கிக்கு வருஷம் 1-க்கு 100-க்கு 6 ஆ வட்டி கொடுக்கவேண்டும். அது ஜமாபந்து பைசல் ஆகிறவரைக்கும் கிடையாது. ஜமீன்தார்கள் தங்கள் கீழ்குடிகளிடத்தில் வருஷம் 1-க்கு 100-க்கு 12 ஆ வட்டி வாங்கலாம்.

4. செக்ஷன் 8 21-இவை அசையும்பொருளையும் மறியல்செய்யும் அம்சங்களில் நடத்தவேண்டிய பத்ததிகளையும் தெரியப்படுத்துகின்றன. சாதாரணமாக சொத்து ஜப்திசெய்ய உத்தரவளிப்பவர் தாசில்தார்கள். ஜப்திசெய்கிறவன் டிமாண்டுநோட்டீசு கொண்டு பாக்கிதாரனுக்குக் கொடுக்கவேண்டியது. உடனே பாக்கியைச் செலுத்தாவிட்டால் சொத்தை ஜப்திசெய்யலாம். 11-17-வது செக்ஷன்களின் கடைசி உட்பிரிவுகளிலிருக்கும் அம்சங்களால் பயிர்களை மறியல் செய்யக்கூடாதென்கிற ஏற்பாடு தள்ளுபட்டது.

5. செக்ஷன் 22-24-ஜப்திசெய்த சொத்து விற்பனையைப் பற்றிச் சொல்லுகிறது. சொத்தை ஏலம்போடுகிறதற்கு 15 நாள் முன்பு விளம்பரம் செய்யவேண்டும். அப்படி ஏற்படுத்தப்பட்ட விலைக்கு முன்பாக எப்போதாவது தீர்வை பணத்தை செலவுடன் கட்டிவிட்டால் சொத்தை விடுதலைசெய்து விடலாம்.

6. செக்ஷன் 25-35-இவைகளில் பூமியை ஜப்திசெய்து விற்பனை செய்யவேண்டிய விஷயத்தில் நடத்தவேண்டிய நடவடிக்கையைப்பற்றிச் சொல்லுகிறது. பூமியை ஜப்திசெய்வதற்குமுன் பாக்கிதாரனுக்கு டிமாண்டுகொடுத்தும், அதன்மேல் அந்த டிமாண்டை பயிரங்கமாக ஒட்டியும் டிஸ்டிரிக்ட் கெஜட்டில் பிரசுரப்படுத்தவும் வேண்டும்.

7. 28-33-செக்ஷன்களில் ஜப்தியான சொத்து எவர்கள் பார்த்து வரவேண்டுமென்பதை கூறுகிறது. பூமி தீர்வைக்கு மறியல் செய்யப்பட்ட நிலங்களை கலெக்டர் தனக்குக் கீழ் வைத்துக் கொள்ளவேண்டியது அவசியமில்லை யென்பது போர்டாருடைய அபிப்பிராயம். அரிதானகொஞ்சம் அம்சங்களின் விஷயத்தில் மாத்திரம் கலெக்டர் அதை விசிதமாய் போர்டாருக்குத் தெரியப்படுத்தி

அவர்களுடைய உத்தரவை பெற்றுக்கொண்டு அதை தனது பார்வையின் கீழ் கலெக்டர் வைத்துக்கொள்ளலாம். சர்க்கார் பாக்கியை பெருக்கவைத்துக் கொண்டிருந்தமையால், அப்படிப்பட்ட எஸ்டேட்டுகளை அவற்றின் பாக்கி தீர்ந்தபிறகு சொந்தக்காரருக்கு மறுபடியும் சேர்க்கும்படியான கருத்துடன் கலெக்டர் வைத்திருக்கக் கூடாது. சர்க்கார் பாக்கியை வசூல்செய்யவேண்டிய பூமியை ஏலத்தில் போடுவது முதலிய நடவடிக்கையை நடத்தவேண்டும் ஜமீன் மீதாவது மிட்டாமீதாவது பாக்கியிருந்தால் தீர்வை பாக்கி பைசலாகிறவரைக்கும் அவர்கள் சொத்து மானேஜ்மெண்டு கவர்ன்மெண்டார் எடுத்துக்கொள்ளப்படாது.

8. செக்ஷன் 35-37-பயிரிடுங்குடிகளும், பூமிகளை கொதுவை வைத்தவர்களுக்கும் தீர்வை பாக்கிக்கு ஜப்திசெய்ததாகவும் ஏலம் போடப்போகிறதாகவுமிருக்கிற பூமியோடு தங்களுக்கு சம்மந்தமிருக்கிறதென்று வாதிக்கிற எவர்களுக்காகிலும், அப்படி பாக்கியைத் தீர்த்து அவைகளை விடுதலை செய்யத்தகுந்த சுவதந்தரத்தை உண்டு பண்ணுகிறது.

9. செக்ஷன் 36-46-நிலவிற்பனையைப்பற்றி கூறுகிறது. ஜமீன்தாரிகளை விற்பனை செய்வதில் தவிர மற்ற நிலங்களை விற்பனைசெய்ய போர்டாருடைய அனுமதியேவேண்டியதில்லை. ஜப்தி நோடீசு கொடுப்பதுடன் விற்பனை நோடீசுகொடுக்கவேண்டும். இந்த நோடீசு இங்கிலீஷிலாவது ஜில்லாபாஷையிலாவது ஒருமாதத்திற்கு முன்பு கொடுக்கவேண்டும். ஏலம்போடுங்காலத்தில் அந்த நோடீசை அங்கு வந்திருப்பவர்கள் எல்லோருங் கேட்கும்படி படிக்கவேண்டும். கலெக்டர் பூர்வீகமாகவிருக்கும் ஜமீன்தாரிகளை ஏலம்போடாத வழியை கூடியவரைக்கும் தேடவேண்டும். சாஸ்வதமாய் தீர்வைவிழுந்த ஸ்திதியை ஏலம் சிவிலியனாவது டிப்டிகலெக்டராவது போடவேண்டும். கொஞ்சபாக்கிக்காக சொல்பநில ஏலங்களை தாலூகா கச்சேரியில் தாசில்தார் போடலாம்.

10. ஷை ஏலத்தை ஸிவிலியன்களும் டிப்டிகலெக்டரும் ஸாஸ்வதப்படுத்தலாம். இப்படிப்பட்ட ஏலத்தைப்பற்றி கலெக்டரிடம் அபீல்செய்துகொண்டால் அதை அவர் மாற்ற இடமிருந்தால் மாற்றிவிடலாம்.

11. ஜமீன்தார்களுக்கும், அவர்கள்கீழ் இனும் கமீஷனரால் செடில்மெண்டு செய்யப்பட்ட இனும்தாரர்களுக்கும் ஒருபாத்தியதையும் கிடையாது. இனும்தாரர் செலுத்தவேண்டிய பாக்கியை இந்த ஆக்டின்பிரகாரம் வசூல்செய்யலாம்.

13. ஏலத்தில் பூமியை விலைக்குக்கேட்பதில் ஒரு நிபந்தனையும் கிடையாது.

14. ஏலம்போடுவது பாக்கிக்குத்தகுந்த ஒரு ரிஜிஸ்டர்நம்பர் உடைய வயலாகவேயிருக்கவேண்டுமேயொழிய பாதிநிலமாகவிருக்கக்கூடாது.

15. கலெக்டர் பாக்கிக்காக செக்கியூரடி வாங்கிக்கொண்டு ஏலத்தை நிறுத்திவைக்கலாம்.

16. எவனொருவன் சர்கார்பாக்கியை வேணுமென்று கொடாமலும், அப்படிக் கொடுக்கவேண்டியதை தள்ளிக்கொண்டு வருகிறானோ அவனை வாரண்டில் பிடிக்கலாம். அப்படி பிடிபட்டவனுக்கு ஜெயிலில் படிகட்டவேண்டும்.

17. தீர்வை பாக்கியாயிருக்கும் சாகுபடியை ஜப்திசெய்யாதிருந்தால் அதன் அறுவடையை தடங்கல்செய்யக்கூடாது.

18. ஜப்தி முதலியவற்றில் செலவாகும் பணத்தை ரெவினியூபாக்கியை வசூல்செய்வதுபோலவே வசூல் செய்யலாம்.

19. ரெவினியூ கட்டுகிறவர்களுக்கெல்லாம் கலெக்டராவது அவர் அனுமதி பெற்றவராவது ரசீது கொடுக்கலாம்.

20. ஒரு பட்டாவை அனேகர் அனுபவித்துவந்தால் அவ்வவர் கட்டும் தீர்வைக்கு ரசீதுகொடுத்து பட்டாரசீது புத்தகத்தில் பதிவுசெய்யலாம்.

21. ஜப்திநோடீஸை கலெக்டர் உத்தரவின்றி வேறுஜில்லாக்களுக்கு டிவிஷனல் ஆபீசர் அனுப்பக்கூடாது.

21. A. இந்த ஆக்டில் பிராசஸ் சர்வீசுக்கும் அதன்படி நடவடிக்கை செய்வதற்கும் கால அளவு நிர்ணயிக்காததனுல் போர்டார் அந்த காலஅளவை 20-நாள் என்று நியமித்திருக்கின்றனர்.

22. இந்த ஆக்டின் சமாச்சாரத்தை குடிகள் யாவருக்கும் எளிதில் தெரிந்துகொள்ளும்படியான ஏற்பாட்டை கலெக்டர் செய்யவேண்டும்.

---

## க - வது என்னுள்ள பாரம்.

### ௫-வது பிரகரணம்.—மறியலுத்தரவு.

சைதாப்பேட்டை தாலூக்காவில் க-வது பாகம் க-வது வகுப்பு ரிவினியு இன்ஸ்பெக்டராகிய வெங்கடராவுக்கு இதனடியிற் கண்ட கடன்காரன் செலுத்தவேண்டிய தீர்வைப்பாக்கிக்காக அவனுடைய சொத்தை மறியல்செய்கிறதற்கு அதிகாரங் கொடுக்கவேண்டியதாயிற்று.

| கிராமப்பெயரும் நம்பரும். | பாக்கிக்காரன் பெயர். | எந்தவருடத்திற்குத் தீர்வை கொடுக்கவேண்டியது. | தீர்வை மொத்தம். | | | எந்தக் கெடுவிலே பாக்கியானது. | மறியல்செய்கிறவனுக்குப் படி. | இந்தத் தேதிவரைக்கும் ஆனவட்டியும், அதின் பிரகாரமான ஷீதம் மொத்தமும். | மறியல்செய்தலும், அந்தப்பாக்கித்தொகையினுடைய பிரதிகொடுக்கத் தேதியும், மறியல் செய்யாத விஷயத்தில், அப்படிப் பட்ட கடனைத் தீர்க்கக் கெடு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. | அ. | பை | | | | |
| | | | | | | | | | |

தன்னுடைய ஆஸ்தி மறியல்செய்கிறதற்காக ஆன படிமொத்தமும், மற்றச் செலவுகளுங்கூட்டி முன்னடியாகவே தீர்மானஞ்செய்யாதவிஷயத்தில், மறியல் செய்யப்பட்ட ஆஸ்திகளை உடனே பஹிரங்கமாய் விற்பனைசெய்யப்படுமென்று கொடுக்கவேண்டிய கடன்காரனுக்கு இதனால் தெரியப்படுத்தப்படும்.

குறிப்பு.—மறியல்செய்கிற உத்தியோகஸ்தன் இந்த உத்தரவைக் கடன்காரனுக்குக் காண்பிக்கவேண்டியது. கொடுக்கவேண்டி

யிருந்த மொத்தத்தைக் கடன்காரன் உடனே தீர்மானஞ்செய்யாத விஷயத்தில், அவனுடைய சர ஆஸ்தியை மறியல்செய்து அந்த தேதியிலேயே இந்த உத்தரவினுடைய ஒருபிரதியின்பேரில் மறியல் செய்யப்பட்ட ஆஸ்தியினுடைய பட்டியையும், அது வைக்கப்படுமிடத்தையும் எழுதி அதை அவனுக்குக் கொடுக்கவேண்டியது. 1864-வருடத்து 2-வது சாஸனத்தின் 8-வது பிரகரணத்திலிருக்கிற 1-வது உட்பிரிவு.

தேதியும், இடமும். (ஒப்பம்) சுந்தரராவு, தாசில்தார்.

---

## உ-வது எண்ணுள்ள பாரம்.

### 9-வது சேக்ஷன் மறியல்செய்யப்பட்ட ஆஸ்தியினுடைய பட்டி.

பார்திபட்டென்கிற கிராமக் குடியானவனுகிய ராமனென்கிற கடன்காரன் செலுத்தவேண்டியிருந்த தீர்வை சேஷத்துக்காக அவனுடைய சர ஆஸ்தியை ரிவினியு இன்ஸ்பெக்டர் வெங்கடராவ் மறியல்செய்து அந்தத்தாலூக்கா தாசில்தாருக்கனுப்பிய மறியல் செய்யப்பட்ட சர ஆஸ்திப் பட்டி.

| வஸ்துக்களின்பெயர். | உத்தேச விலே. | | | கொடுக்கவேண்டிய தீர்வை சேஷமொத்தம். | மறியல்தேதியும், மறியல் பத்திரிகையினுடையபிரதி கொடுத்ததேதியும். |
|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | பை. | | |
| | | | | | |

தேதியும், இடமும், (ஒப்பம்) வெங்கடராவு.
1-வகுப்பு இன்ஸ்பெக்டர்.

## ௬-வது எண்ணுள்ள பாரம்.

### 22-வது சேக்ஷன். சர ஆஸ்தியை விற்பனைசெய்கிறதற்கான விளம்பரப் பத்திரிகை.

சைதாப்பேட்டை தாலூக்காவிற் சேர்ந்த பார்திபட்டுக் கிராமத்திலிருந்து தீர்வை கொடுக்காமல் தப்பித்துக்கொண்ட சி. ராமன் என்கிற பெயருள்ள ஒருவனுடைய இதனடியிற் சொல்லப்பட்ட ஆஸ்தி அவன் கொடுக்கவேண்டியிருந்த பூமித்தீர்வை சேஷங்களுக்காக மறியல் செய்யப்பட்டது. அந்தச் சேஷமும், அதின் வட்டியும், இதர செலவுகளுஞ் சேர்த்து முன்னடியாகவே தீர்மானஞ்செய்யாத விஷயத்தில், 1864௵ மேயீ 23௳ திங்கட்கிழமை அந்த கிராமத்திலேயே இருக்கும் வெங்கடராமன் வீட்டுக்கருகில் துரைத்தனத்தாரால் பஹிரங்கமா யேலம்போடப்பட்டு, அதுவிற்பனை செய்யப்படுமென்று இதனால் தெரியப்படுத்தப்பட்டது. இந்தவிற்பனை காலை 11 மணிக்கு ஆரம்பமாகும். மேலும் அந்த ஆஸ்தி அதிக விலை கூறுகிறவனுக்கு ரொக்கத்திற்கு நிறுத்தாமல் கொடுத்துவிடப்படும். அவற்றை வாங்குகிறவன் பணமுழுமையுங் கொடாமல் எதையுமெடுத்துப் போகக்கூடாது.

ஏலமெடுத்தவர் கிரயப்பணங் கொடுக்கத்தப்பினால், அதை மறுபடியும் ஏலம்போட்டு விற்று ஏதாகிலும் நஷ்டமுண்டானால் அதையும், மறுபடியும் விற்கிறதற்கான செலவுகளையும் அவனைக் கொடுக்கும்படியாய்ச் செய்வார்கள்.

கடன்காரன் வீட்டின்பேரிலாகிலும், அவனுடைய ஆஸ்தி மறியல் செய்யப்பட்டிருக்கு மிடத்தினுடைய மதிற்சுவரின்பேரிலாகிலும் இந்த விளம்பரப்பத்திரிகை 1864௵ மேயீ 15௳யில் கட்டப்பட்டது.

மறியல் செய்யப்பட்ட ஆஸ்தியின் பட்டி.

| | |
|---|---|
| தேதியும், இடமும்.<br>சைதாப்பேட்டை<br>௧௮௬௪௵ மேமீ ௧௫௳ | (ஒப்பம்) சுந்தரராவு,<br>தாசில்தார். |

குறிப்பு.—இந்த விளம்பரக்காகித மொட்டிய கடு-தினத்திற்குப்பிற்பாடு, ஆஸ்தியை விற்கவேண்டியது.

## ச-வது எண்ணுள்ள பாரம்.

### 25-வது செக்ஷன். பூமியை மறியல் செய்வதற்குமுன், கொடுக்கவேண்டியிருக்கிற கடன் பணத்துக்கு அனுப்பவேண்டிய அறிக்கைப் பத்திரிகை.

சைதாப்பேட்டை தாலூக்காவிற் சேர்ந்த பார்திபட்டென்கிற கிராமத்திலிருக்கிற ராமனென்று கூப்பிடப்படுபவனுடைய கடனைத் தீர்க்கவேண்டுமென்றெழுதினதற்கு விளம்பரப் பத்திரிகை.

13-வது எண்ணுள்ள பட்டாவையுடைய ஸ்ரீ 1237-வது பசலிக்கு ரூ 15-5-4 உள்ள மொத்தத் தீர்வைக்காகக் கடன்பட்டிருக்கதனால், அந்த மொத்தத்தைத் தீர்க்கச்சொல்லி சைதாப்பேட்டை தாலூக்கா தாசில்தாரனான நான் இதனால் கோரினேனென்றும், இந்த விளம்பரப்பத்திரிகையைக் கண்டதேதி முதற்கொண்டு 10-தினத்துக்குள்ளாக இந்த மொத்தத்தை நீ தீர்த்துவிடவேண்டியதென்றுந் தெரிந்துகொள்ளவேண்டியது.

சேவகன் படிக்காக ரூ-அணு இப்போது நீ கொடுக்கவேண்டியது.

(ஒப்பம்) சுந்தரராவு, தாசில்தார்.

குறிப்பு.—இந்தவிளம்பரப்பத்திரிகை கட்டுகிறதற்காக யாருக்கிது ஒப்பிக்கப்படுகிறதோ அவரிதன் பிரதியொன்றைக் கடன்காரனுக்காகிலும், அவர் சாதாரணமாயிருக்கும் வீட்டிலொரு பெரிய மனிதனுக்காகிலும், அவராலதிகாரம்பெற்றிருக்கிற காரணகர்த்தனுக்காகிலும் ஒப்புவிக்கவேண்டியது; அல்லது அவர் அப்போது குடியிருக்கிறதாய்த் தெரிகிற விடத்தினுடைய பஹிரங்கஸ்தலத்திலேயாகிலும் மறியல் செய்யப்போகிற பூமியிலே பஹிரங்கமான விடத்திலே யாகிலும் அதைக் கட்டவேண்டியது. இந்தப்படி நடப்பிக்கிறவனால் இந்த விளம்பரப்பத்திரிகையின்பேரி லிப்படி நடத்தியதென்று எழுதப்படவேண்டியது.

---

## ரு-வது எண்ணுள்ள பாரம்.

### 27-வது செக்ஷன்—அசைவாப்பொருளை மறியல்செய்கிறதற்குண்டாகிய விளம்பரப் பத்திரிகை.

சைதாப்பேட்டை தாலூகாவிற்சேர்ந்த பார்திபட்டென்கிற கிராமத்திலிருக்கிற ராமனென்கிறவனுடைய பூஸ்திதிகளை மறியல் செய்கிறதற்கான விளம்பரப்பத்திரிகை.

நீ கொடுக்கவேண்டியிருந்த ரூ. 15-5-4-தீர்க்கச்சொல்லி வழக்கப்பிரகாரம் எழுத்துமூலமா யுன்னைக் கேட்டிருந்தபோதிலும் அந்தத்தீர்வை சேஷத்தை நீ தீர்க்காமலும், அப்படி தீர்மானஞ்செய்யாததற்குக்காரணமாகிலுந் தெரிவிக்காம லிருந்தாயாகையால், உன்னுடைய பூஸ்திதிகள் இதனால் மறியலில் வைக்கப்படுமென்றும், 1864-ஞ அக்டோபர்மீ 15உ-க்குள்ளாக அந்தத் தீர்வை சேஷத்தை வட்டி முதல் இதர செலவுகள் சேர்த்துத் தீர்மானஞ் செய்யாதிருந்தால், உன்னுடைய பூஸ்திதிகள் விற்கப்படுமென்றுந் தெரிந்துகொள்ளவேண்டியது.

இடமும், தேதியும்- (ஒப்பம்) சுந்தரராவு, தாசில்தார்.

குறிப்பு:—அப்படி மறியல் செய்யப்பட்ட பூமியி லொரு பிரசித்தபாகத்திலிந்தவிளம்பரப்பத்திரிகை பொட்டவேண்டியது. இந்த மறியலைக்குறித்து அந்த பூமியி னருகேயே பகிரங்கமாய்க்கூட பிரசுரப்படுத்தி, ஜில்லா இராஜகீயப்பிரகடன பத்திரிகையிற்கூட விளம்பரஞ்செய்யவேண்டியது. 1864ஞ 2-வது சாஸனம், 27-வது பிரகரணம்.

---

## சு-வது எண்ணுள்ள பாரம்.

### 29-வது செக்ஷன்:—இதா சொத்தின் வியவஹார வஹித்தலை துரைத்தனத்தார் நடத்துவதைக்குறித்த விளம்பரப் பத்திரிகை.

சைதாப்பேட்டை தாலூக்காவிற் சேர்ந்த பார்திபட்டென்கிற கிராமத்தில், ராமனென்கிறவனுடைய பூஸ்திதி வியவஹார வஹித்தலின் விளம்பரப்பத்திரிகை.

1864ஞ ஜூலைமீ 5உ-யில் மறியல் செய்யப்பட்ட உன்னுடைய பூஸ்திதிகளை, 1864ஞ 2-வது சாஸனம், 28-வது பிரகரணப் பிரகாரம் துரைத்தனத்தாருடைய விசாரணையில் வைக்கப்பட்டதென்றும், அதற்குக் காரண கர்த்தனான வீராசாமி அதன் வியவஹாரத்தை நடத்துகிறதற்காக ஏற்படுத்தப்பட்டானென்றும் நீ தெரிந்துகொள்ளவேண்டயது.

இடம், தேதி. (ஒப்பம்) ஏ. பி., கலெக்டர்.

குறிப்பு:—இந்த விளம்பரப் பத்திரிகை கட்டுகிறதற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தன் ஒரு பிரதியை கடன்காரனுக்காகிலும், அவர் சாதாரணமாயிருக்கும் கிரகத்திலொரு பெரியவனுக்காகிலும், அவரால் அதிகாரம பெற்றிருக்கிற காரணகர்த்தனுக்காகிலும் ஒப்பிக்கவேண்டியது; அல்லது அவரப்போது குடியிருந்ததாய்த் தெரிந்த ஸ்தலத்தினுடைய பிரசித்தவிடத்திலாகிலும், மறியல் செய்யப்படும் பூமியிலே யெல்லாருக்கும் பஹிரங்கமான ஸ்தலத்திலே யாகிலும் அதை யொட்டவேண்டியது. அந்த பூஸ்திதியைச்சார்ந்த வியவஹாரத்தை நடத்த ஆரம்பித்தோமென்றும் அவ்விடத்திலேயே பஹிரங்கப்படுத்தி, ஜில்லா வர்த்தமானியிலும் பிரசுரஞ் செய்யவேண்டியது.

---

## எ-வது எண்ணுள்ள பாரம்.

### 36-வது செக்ஷன். பூமிகளை விற்பனை செய்கிறதற்கான விளம்பரப் பத்திரிகை.

பூமித்தீர்வைகொடுக்காமல் தப்பித்துக்கொண்ட கடன்காரனும் அவ்விடத்துக் குடியானவனும் இப்போது ரிஜிஸ்தர் புத்தகத்தில் பெயர்பதிப்பிக்கப்பட்ட பூஸ்திதியுடையவனுமாயிருந்தாலும், அவர் கொடுக்கவேண்டியிருந்த பூமித்தீர்வை கடனுக்காக மறியல் செய்யப்பட்ட அவருடைய பூமிகளிலிதன்கிழ் உதஹரிக்கப்பட்ட சிலவற்றில் அவருக்குள்ள பாத்தியதைகளை 1864௵ அக்டோபர்மீ 5௳ திங்கட்கிழமையதினம், மதிராசு ஜில்லாவிற்சேர்ந்த சைதாப்பேட்டை தாலூக்காவிலிருக்கும் பார்த்திபட்டென்கிற கிராமத்தில் பகிரங்கமாய் ஏலத்தில் விற்கப்படும். அப்படிப்பட்ட விற்பனை காலை 11-மணிக்கு ஆரம்பமாய் நிறுத்தாமல் அதிகமாய் விலைகூறுகிறவனுக்குக் கொடுத்துவிடப்படும்.

2. நடக்கிற பசலிக்கு எல்லாவற்றிற்காகிலும் சங்கதியைக்கொண்டு கொஞ்சத்திற்காகிலும் அந்தப்பூமிகளை வாங்குகிறவர் கொடுக்கத்தகுந்த நடக்கிறபசலி பூமித்தீர்வை இதனடியிற்கண்ட விவரமான பத்திரிகையிற் கண்டிருக்கிறபிரகாரம்———ரூபாயாக விருக்கின்றன.

3. வாங்குகிறவர்கள் விற்பனை காலத்தில், விக்ரய மொத்தத்தில், 100-க்கு 15-வீதம் துரைத்தனத்தாரிடத்தில் டேவணிக்கட்ட

வேண்டியது. விற்பனை நடந்த தினமுதற்கொண்டு 30-தினத்திற்குள்ளாக மற்ற மீதிப்பணத்தைக் கொடாதவிஷயத்தில், அந்த நிக்ஷிப்த திரவியத்தை (டேவணித்தொகையை) இழந்துவிடுவார்கள்.

4. அப்படி முதலில் நிக்ஷிப்தஞ் செய்யாமற்போனபோதிலும், மீதி விக்ரயபணத்தைக் கொடுக்காமற் போனபோதிலும், அந்தப் பூமிகளை மறுபடியும் ஏலம்போட்டு விற்று, அதற்காகும் செலவுகளையும், முதல் விக்ரயத்திற்குக் குறைகிற பணத்தையும், முதலில் வாங்கினவனிடத்தில் வரப்பெற்றுக்கொள்ளவேண்டியது.

5. ஏலத்தில் விலை கூறுகிறவர்கள் தங்களுக்காகவே விலை கூறுகிறதும், அல்லது காரணகர்த்தர்களாயிருந்து விலைகூறுகிறதும் சொல்லவேண்டுமென்று கேட்கலாம். அவர்களிதரானுடைய காரியகர்த்தர்களாயிருந்தால், அதற்காக அவர்களுடையஎசமான்களால் கையெழுத்துசெய்த அதிகாரப் பத்திரிகையை ஆஜர் செய்யும்படி கேட்கலாம். அப்படிச் செய்யார்களாகில் அவர்களுடைய விலைகூறுதலைத் தள்ளிவிடலாம்.

6. தீர்வை கொடுக்கவேண்டிய கடன்காரனாகிலும், அவனுடைய பக்ஷத்தில் யாராகிலும், அந்தப்பூமியில் தனக்குப் பாகமிருக்கிறதென்று வாதிக்கிறவனாகிலும், வட்டி, இதர செலவுகள் முதலானவற்றோடு சேர்ந்த அப்படிப்பட்ட தீர்வை சம்பந்தமான கடனுடைய மொத்தமெல்லாவற்றையும், விற்பனைசெய்கிறதற்கு நியமித்த தினதிற்கு முன்தினம் சூரியன் அஸ்தமாகிறதற்குமுன் கொண்டுவந்துசெலுத்தினால், அப்படிப்பட்ட விற்பனையை நிறுத்திவிடவேண்டியது.

7. அப்படிப்பட்ட ஆஸ்தியினுடைய விற்பனை கலெக்டரால் நிச்சயப்படுத்துகிறவரைக்கும் பூர்த்தியாகமாட்டாது.

8. வாங்கினவர்கள் பணஞ் செலுத்தியிருந்து அந்த விற்பனையைக கலெக்டர் நிச்சயப்படுத்தினவுடனே, ஆஸ்திக்காரருடைய ஆதீனமாக்கி விடப்படும். பிற்பாடு அந்தப்பூமிகளை வாங்கினவன் பெயர் பிரவேச புத்தகத்திலெழுதப்படும். பிற்பாடு அந்த விற்பனையைக் குறித்த ஏலசெர்டிபிகேட்டு ஒன்றில் கலெக்டர் தன் கையெழுத்தும், முத்திரையும் செய்து அவர்களுக்குக் கொடுப்பார்—அதன் விவரத

தைக்குறித்த தப்பிதத்திற்காகிலும், மதிப்புசெய்யப்பட்ட பரிமாணத்தைக் குறித்தாகிலும் துரைத்தனத்தார் உத்தாவாதிகளாகார்.

9. இந்த விற்பனையினால் தங்களுக்கு நஷ்டஞ் சம்பவித்ததென்று கக்ஷிக்காரர்கள் நினைத்தால், அப்படிப்பட்ட விற்பனை நடந்த பிற்பாடு முப்பது தினத்திற்குள்ளாகக் கலெக்டருக்குக் காகித மூலமாய் விஞ்ஞாபனஞ் செய்துகொள்ளலாம். ஆனால் அப்படிப்பட்ட விற்பனை கலெக்டர்செய்கிற கடைசி உத்தரவைக்கொண்டு பரிஷ்காரமாகும்.

| தாலூக்கா. | கிராமம். | தீர்வைகொடுக்காமல் தப்பித்துக்கொண்ட கடன்காரன் பெயர். | அப்படிப்பட்ட பூமி நஞ்சையும், புஞ்சையும், அல்லது தோட்டமும், அதில் கடன் காரனுடைய கட்டடமேதாகிலு மிருக்கிறதும், அதினுடைய விவரமும். | புலம். | | உத்தேசவிஸ்தீர்ணம். | | தீர்வை. | | | கடன் மொத்தம் போக வாங்கினவன் நடக்கிற பசலிக்காக கட்டவேண்டியமொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | எண். | பெயர். | | | ரூ. | அ. | பை. | |
| | | | | | | | | | | | |

இடம், சைதாப்பேட்டை.
தேதி, 1864வரு செப்டெம்பர்மீ 1வ.

குறிப்பு—இங்கிலீஷ் பாஷையிலேயும், தேசபாஷையிலேயு மிந்த விளம்பரப்பத்திரிகை யெழுதப்பட்டிருக்க வேண்டியது. கலெக்டருடைய காரியஸ்தானத்திலும், தாலூக்கா காரியஸ்தானத்திலும், மிகவும் சமீபத்திலிருக்கும் போலீசு ஸ்டேஷனிலும், அந்தப் பூமியிலொரு பஹிரங்கமான பாகத்திலும் அப்படிப்பட்ட விற்பனையைக் குறித்து எப்படியு மொரு மாதத்திற்காகிலும் இதை யொட்டிவைக்க வேண்டியது.

---

## அ-வது எண்ணுள்ள பாரம்.

### 38-வது பிரகரணம். விற்பனை அல்லது ஏலசேர்டிபிகேட்டைக் குறித்தது.

மதிராசு ஜில்லாவிற் சேர்ந்த சைதாப்பேட்டை தாலூக்காவிலிருக்குங் குண்ணத்தூர் கிராமக் குடியானவனுகிய பார்திபட்டு அனந்தாசாரி யென்கிற பெயருள்ளவர்——— தாலூக்கா தாசில்தாரனல் பஹிரங்கமாய் நடப்பித்த ஏலத்தில் அந்தக்கிராமத்திலிருக்கும் பூஸ்திதியுடையவனுகிய ராமனென்கிற பெயரையுடையவன் கொடுக்கவேண்டிய நிலத்தீர்வைக் கடன்களுக்காக விற்கப்பட்ட இதின்கீழ்க் கண்ட பூமியில் அவனுக்கு முன்னிருந்த சுதந்தரமெல்லாவற்றையும் வாங்கினதனுலும், விக்ரயப்பண மொத்தமாகும் ரூ 151-8-0 முழுமையும் கொடுத்துவிட்டபடியினுலும், அந்தப்பூமிகள் அனந்தாசாரி பெயரால் இன்றையதினம் பிரவேசபுத்தகத்தில் எழுதப்பட்டது. (ஆனபடியால் முன் பூமியையுடையவனுக்கு அந்தப் பூமியிலிருந்த எல்லாச் சுதந்தரங்களுக்கும், ஸ்திதிக்கும், இந்த அனந்தாசாரி காரண கர்த்தராஞுரென்று இதனுலறியவேண்டியது.) *

| தாலூக்காவும், கிராமமும். | அந்தப் பூமி நஞ்சையோ, புஞ்சையோ, தோட்டமோ, அல்லது ஏதாகிலும் கட்டடமிருந்தால், அதின் விவரணம். | புலங்களின் விவரங்கள். | | ஏக்கர்க் கணக்கு விஸ்தீர்ணம். | | | தீர்வை. | | | விக்ரயத் தொகை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண். | பெயர். | | | | ரூ. | அ. | பை. | |
| | | | | | | | | | | |

கலெக்டருடைய காரியஸ்தானம்.

சைதாப்பேட்டை, (ஒப்பம்) எ. பி. கலெக்டர்.

1864ஷ அக்டோபர்மீ

* இந்தக்கடைசியிற் கண்டிருக்கிற ஷரத்தானது புதிய ஸ்டாண்டிங் ஆர்டர் புத்தகத்திற் கண்டிருக்கவில்லை.

(பிரதி மாதமும் போர்டாருக்கு அனுப்பப்படும் ஒரு பத்திரிகை.)

## ௯ - வது எண்ணுள்ள பாரம். (புதியஸ்டாண்டிங் ஆர்டர் புக்கில்கண்டபடி).

38 - வது செக்ஷன் விக்ரயிக்கப்பட்ட பூமிகளுடைய ரிஜிஸ்தர்.

வது பசலிக்காக ஜில்லாவில், 1864 ௵ 2-வது ஆக்ட்டுப்படி நிலத்தீர்வைபாக்கிகளுக்காக விக்ரயஞ்செய்த பூஸ்திதிகளின் ரிஜிஸ்தர்.

| தாலூகாக்கள். | கிராமம். | பாக்கிதாரர்களுடைய பெயர்கள். | செலுத்தவேண்டிய பாக்கி. | எந்தபசலிகளுக்காக செலுத்தவேண்டியபாக்கி. | விக்கிரயிக்கப்பட்ட பூமிகளுடைய முக்கியமான சங்கதிகள். | | | | விற்பனை செய்ததில் வந்த மொத்தம். | வாங்கினவன் பெயர். | விற்றதேதி. | அதிகம் அல்லது குறைவு. | ஷரா. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஒவ்வொரு பட்டின நம்பர். | நிலத்தின்விவரமும் ஒவ்வொரு பட்டுக்குள்ளான புலத்தின நம்பரும். | விஸ்தீர்ணம். | தீர்வை. | | | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| | | | | | | | | | | | | | |

குறிப்பு:—நிலத்தின் சரியானவிலை கிடைக்காதபோது அதன் காரணத்தை ஷராகலத்தில் சொல்லவேண்டியது.

## க0-வது எண்ணுள்ள பாரம்.

### 39-வது சேக்ஷன் பூமி வாங்கினதற்காகச் செய்கிற விளம்பரப்பத்திரிகையைக் குறித்து.

மதிராசு ஜில்லாவிற்சேர்ந்த சைதாப்பேட்டை தாலூக்காவி லிருக்கும் குண்ணத்தூர் கிராம பார்த்திபட்டு அனந்தாசாரி இதன் கீழ்ச்சொல்லப்பட்ட கிராமத்தில் பூ. சுதந்தர முடையவனுன—— —பெயருள்ளவன் கொடுக்கவேண்டிய தீர்வைக் கடனுக்காக விற்கப் பட்ட கீழ்க்கண்ட பூமிகளைத் துரைத்தனத்தாருடைய ஏலத்தில், 1864ளு அக்டோபர்மீ 13யில் வாங்கிக் கிரயப்பணமாகும் ரூ 105-8-0 மொத்த முழுமையும் செலுத்தினபடியால், அவருடைய பெயரால் அவைகள் பிரவேச புத்தகத்தில் எழுதப்பட்டனவென் றெல்லாருக்குந் தெரிகிறதற்காகப் பகிரங்கமாய் இதனுல் பிரசுரப் படுத்த வேண்டியதாயிற்று. ஆகையால் மேற்சொல்லப்பட்ட பூமி களில் முன் பூமியை யுடையவனுக்கு இருந்த சுதந்தரங்களையும், ஸ்திதிகளையும் பார்த்திபட்டு அனந்தாசாரி யடைந்தாரென்று தெரிய வேண்டியது.

| தாலூக்காவும், கிராமமும். | பூமி நஞ்சையோ, புஞ்சையோ, அல்லது தோட்டமோ, அதின் விவரம். | புலங்களுடைய முக்கியசங்கதிகள். | | உத்தேசகவிஸ்தீரணம். | | தீர்வை. | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண். | பெயர். | | | ரூ. | அ. | பை. | |
| | | | | | | | | | |

தேதி. (ஒப்பம்) எ. பி., கலெக்டர்.

குறிப்பு.—விற்கப்பட்ட பூமியிருக்கிற கிராமத்திலும், தாலூக் காகச்சேரியிலும், கலெக்டர் காரியஸ்தானத்திலும், ஜில்லா கெஜெ

ட்டிலேயும் இந்த விளம்பரப் பத்திரிகையைப் பிரசுரஞ்செய்யவேண்டியது.

---

## கக-வது எண்ணுள்ள பாரம். (ஏ)

**48-49-வது சேக்ஷன்கள்.—மனப்பூர்வமாயும், அல்லது கபடமாயும் தீர்வைக்கடன்களைச் செலுத்தாதிருந்ததற்காகக் கிடங்கில் வைக்கிறதற்குப் பிடிக்க ஏற்பட்ட அதிகார பத்திரிகையினுடைய பத்ததி.**

.................................... கு

பூமித்தீர்வைசம்பந்தமான இவ்வளவு———மொத்தம்——— குடியானவனுகிய அவன் கொடுக்காமலிருந்ததற்காகவும், அதைச் செலுத்தாமல் தப்பித்துக்கொண்ட இவருக்காகிலும், இவருக்காகப் பிணை கொடுக்கப்பட்ட———குடியானவனுன———என்கிற பெயருள்ளவனுக்காகிலும், அல்லது இரண்டு பேருக்காகிலும் அசையும், அசையாப்பொருள்களைப் பகிரங்கமாய் விற்றதனுல் வரப்பெற்றுக்கொண்ட மொத்தம், மேற்சொல்லப்பட்ட கடனைத் தீர்க்கிறதற்குப் போதாததாலும், இந்தக் கடனுளியையும் இவருக்குப் பிணை கொடுத்தவனையும் மனப்பூர்வமா யிந்தக் கடன்களையும், அதற்கான செலவுகளையுஞ் சேர்த்துச் செலுத்தாமலிருந்தார்களாகில் (அல்லது கடன்கள், செலவு முதலானவைகள் சேர்த்துக் கொடுக்காமல்ஓடிப் போகவேண்டுமென்று கபடமானவர்களாயிருந்தார்களாகில்) இதன் கீழ்கையெழுத்துசெய்த அதிகாரி நம்புகிறதற்குத் தகுந்திருந்தும், இந்த———கடனுளியையாகிலும், இவருக்காகப் பிணைகொடுத்த இந்த———பெயருள்ளவனையாகிலும், அல்லது இரண்டுபேரையாகிலும் பிடித்து ஜில்லாவினுடைய ஜெயிலுக்கனுப்பி, ஜெயிலரிடத்தில் அவர்களை ஒப்புவிக்கவேண்டுமென்று இதனாலுனக்கு ஆக்கியாபிக்கப்பட்டது. இப்படிச் செய்கிறதற்காக இது உனக்கு வாரண்டாக விருக்கும்.

இடம்,

தேதி.

(ஒப்பம்) கலெக்டர்.

---

(ஏ) இதுகள் தாலூக்கா ரிவினியூ சேவகர்களால் கொடுக்கப்படும். (1865ளு மேமீ 5௳, இ. 908, கவ - உ.)

L. S.

## பட்டி.

| தீர்வை கொடாத கடனாளியுடையவாவது, அவனுக்குப் பிணைகொடுத்தவனுடையவாவது, இரண்டுபேருடைய வாவது பெயர்கள். | கொடுக்கவேண்டியிருந்த பூமி தீர்வைமொத்தம். | கொடுக்கவேண்டிய மொத்தம், எந்த தேதியில் செலுத்தவேண்டி யிருந்தது. |
|---|---|---|
| | | |

குறிப்பு.—தண்டிக்கப்பட்டவனோடுகிடங்கதிகாரியிடத்திலிந்த வாரண்டை ஒப்பிக்கவேண்டியது. அவரிந்த அதிகாரப் பத்திரிகையினுடைய பிரதி யொன்றைத்தான் வைத்துக்கொண்டு, முதற்பிரதியைத் தன் மேல்விசாரணைக் கர்த்தருக்கு உடனே அனுப்பவேண்டியது.

---

## ரசீது.

### 56-வது சேக்ஷன் ரசீது.

1246-வது பசலிக்கு வடஆர்க்காடு ஜில்லாவிற்சேர்ந்த காவேரிபாக்கம் தாலூக்காவில், தைபாக்கமென்கிற கிராமத்தில் சுப்பாரெட்டியென்கிற பூ-சுதந்தரக்காரனுக்குள்ள பூமிகளின்பேரில் அவர்கொடுக்கவேண்டியிருந்த தீர்வைக்காகச் செலுத்திய மொத்தங்கள் சேர்ந்தனவென்று ஒத்துக்கொண்டு அவருக்குக்கொடுத்த இரசீது.

| மாசமும், தேதியும். | எந்தபசலிக்கு. | பாபுகள். | மொத்தம். | நோட்டகார் கர்ணர்களுடைய கையெழுத்து. | பட்டாமணியக்காரருடைய கையெழுத்து. |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | | | | | |

சர்க்கார் பாக்கிக்காக விற்பனைசெய்வது. (B. S. O. 107.)

(*Conduct of Sales.*)

சர்க்கார் பாக்கிக்காக எவ்வித சொத்தை ஏலம் போட்டாலும் ஆக்ஷேபமில்லாமல் ஒரேதரமாய்ஏலம்போடவேண்டும். சச்சரவுகள் ஒன்றும் நேராதிருக்கும்படி ஏற்பாடுசெய்து கலெக்டர் ஏலம்போடவேண்டும். நோட்டீசில் கண்டபடி ஏலத்தை நிறுத்தி வைக்காமலும், காலதாமசம் செய்யாமலும் நோடீசில்கண்டதினமே ஏலம்போடும்படிச் செய்யவேண்டும். ஒரு லாட்டை ஒரேதடவையில் ஏலம் போடவேண்டும். அனேக லாட்டுகள் ஒரே ஏலத்தில் வந்தால் அவைகளை ஏலம்போடுவதில் நாள்பிடித்தாலும் ஏலத்தை நிறுத்திப் போடலாம்.

---

அப்புறப்படுத்திய நிலத்தை ரேவினியூ பாக்கிக்கு ஏலத்தில் போடுவது. (B. S. O. 108.)

(*Revenue Sale of alienated lands.*)

ஒரு பட்டாதாரன் தனது பட்டாவில் ஒரு பங்கு நிலத்தை வேறொருவன் வசம் ஒப்புவித்திருந்தாலும், அதன்பேரில் சர்க்

கார் பாக்கி இல்லாதிருந்தாலும், பாக்கிக்காக அப்படி அப்புறப்படுத்தியிருக்கும் நிலத்தை ஏலம் போடக்கூடாது. பட்டாதாரனுடைய சொந்த நிலங்களை முதலில் ஏலம்போட்டு அதின் சர்க்கார் பாக்கி வசூல் ஆகாமற்போனாலும், நிலத்தை வைத்திருக்கிறவனுடைய தப்பிதத்தால் ஷை பாக்கிவசூல் நின்றிருக்கிறதென்று தெரிந்தாலும் அந்த நிலத்தை ஏலம்போடலாம்.

---

### பூசுவதந்தரம் இன்னானுடையதென்று தெரியாதிருந்தால் அந்தகாலத்து நடவடிக்கை. (B. S. O. 109.)

### (*Doubtful ownership.*)

சர்க்கார் பாக்கிக்காக பணம் கட்டவேண்டியவனுடைய ஸ்தாவர ஜங்கம ரூபமான சொத்துகளின்பேரில், தன்னுடைய இஷ்டப்பிரகாரம் வியவகாரம் நடத்துவதற்குக்கலெக்டருக்கு அதிகாரமிருக்கிறது. அப்படிப்பட்ட பூமி யாருடையதாயிருந்தபோதிலும், விவாதத்திலிருந்தபோதிலும், அதன்பேரில் பாக்கி வசூலாகவேண்டியிருந்தால் அந்த பூமியை மறியல்செய்து ஏலம்போடலாம். சுயர்சாவினியோகார்ஹமாய்ச் செய்து கொள்ளப்பட்ட மானியங்களின்பேரில் குயிட்ரெண்ட் என்கிற நிலேபான ஸ்வல்ப தீர்வை பாக்கியாக விருந்தால் அப்படிப்பட்ட மானியதாரன் இன்னானென்று தெரியாதபக்ஷத்தில், அப்படிப்பட்ட தீர்வையை வசூல் செய்வதில் மேற்சொன்ன விதியையே யனுசரிக்கவேண்டியது.

---

### கேவர்ன்மேன்டாருக்காக ஏலத்தில் எடுப்பது. (B. S. O. 110.)

### (*Buying in for Government.*)

1. ஒரு ஏலத்தில் யாரும் நிலத்தைக்கேட்காதிருந்தால் அதை ஒருபேருக்குமாத்திரம் விலேக்கு எடுத்துக்கொண்டு சர்க்கார் கணக்கில் ஷை பாக்கியை வசூலாகாத கணக்கின்கீழ் எழுதிவிடவேண்டும். ஏலம்போடுகையில் வேணுமென்று கேட்காதிருக்கிறதாகத் தெரியவந்தால் சர்க்கார் தீர்வை மொத்தம் வரையில் ஏலம்போடுகிறவனே கேட்கலாம். கவர்ன்மெண்டுக்காக நிலம் ஏலத்தில் எடுத்தால் அதற்குச்சர்டிபிகேட்டு இந்தியாசெக்கிரடெரியின்பேரில்செய்யவேண்டும்.

3. கவர்ன்மென்டாருக்கு ஏலத்தில் நிலத்தை எடுத்தால் அப்படிப்பட்டநிலம் தர்க்காஸ்துச்குக் கொடுக்கவும் உத்தரவின்றி சாகுபடி செய்யவும் கூடாது. அதை கர்ணம் பிரத்தியேகமானகணக்கில் பதிவு செய்துகொள்ளவேண்டும். இந்த கணக்கில் இருக்கிறவரைக்கும் தர்க்காஸ்துக்கு கொடுக்கக்கூடாதென்பதை கிராம உத்தியோகஸ்தர்கள் தெரிந்திருக்க வேண்டியது. கட்டாகவாவது காலநிமித்தத்தினாலாவது ரெவினியூ ஏலத்தில் ஒருவரும் கேட்காதிருக்கிறார்களென்று தெரிந்தால், கொஞ்சகாலஞ் சென்றபிறகு தகுந்த விலைக்குப் போகுமென்று தோன்றினால் அதிக பயிரங்கமாய் ஏலம் போடவேண்டும். கலெக்டருக்கு ஷெ நிலம் உபயோகமில்லையென்று தோன்றினால் ஷெ பிரத்தியேக கணக்கிலிருந்து அதை எடுத்துவிட்டு சாதாரண புறம்போக்கின் கீழ்க்கொண்டுவரலாம். அப்பொழுது அதை தர்க்காஸ்து செய்யலாம். ஜமாபந்திகாலத்தில் இந்தகணக்கை சாக்கிரதையாகப்பார்த்து அதில் தள்ளிவிடும்படியான நிலங்களைத் தள்ளிவிடலாம். ஆனால் கலெக்டர் அப்படி தள்ளி விடப்பட்ட நிலத்தை மறுபடியும் சேர்க்கலாமென்றால் சேர்த்து விடலாம். அந்த ரிஜிஸ்டரில் இருக்கும் காலத்தில் யாராவது அந்த நிலத்தில் பிரவேசித்தால் அவருக்கு இஷ்டமான தீர்வை போடலாம். விலையில்லாத நிலத்தில் பிரவேசித்தால் முதல் வருஷதீர்வையை அபராத தீர்வையாக விதிக்கலாம். விலையுள்ள நிலமாக விருந்தால் அதிக அபராத தீர்வையை விதிக்கலாம்.

---

## பிராசஸ் கோடேப்பது. (B. S. O. 111.)

## (*Service of Process.*)

1. பிராசஸ்கள் கிராம உத்தியோகஸ்தர்களே அதில் கண்ட நபர்களுக்குச் சேர்ப்பதும், சொத்துக்களை ஜப்திசெய்வதும், செய்ய வேண்டும். இப்படி செய்வதற்கு அவர்களுக்கு ஒரு பீசும்கிடையாது.

2. இதற்காக கலெக்டருடைய அனுமதியின்பேரில் பாட்டா ஜவான்கள் ஏற்படுத்தலாம்.

3. அப்படி ஏற்பட்டவர்களுடைய சம்பளம் மாதம் 1-க்கு 7-ரூபாய்க்கு அதிகரிக்கக்கூடாது. இவர்களுக்குப் பிடிக்கும் செலவு

ஜப்திசெய்வதனல் வரும் வசூலிலிருந்து கொடுக்கவேண்டியது. இந்த ஜவான்களை ஒரு தாலூகாவினின்றும் மற்ருெருதாலூகாவிற்கு மாற்றலாம்.

4. கிராம உத்தியோகஸ்தர்கள்இல்லாமல் பாட்டா சேவகர்கள் எந்த சொத்தையும் ஜப்திசெய்யக்கூடாது.

5. பிராசஸ் கொடுப்பதற்கு 4-அணுவும், ஜப்திசெய்து ஏலம் போடுவதற்கு 8-அணுவும் படி. அப்படி பிராசஸ் பட்வாடா பண்ணுவதற்கு முன்பணத்தைச் செலுத்திவிட்டால் அதற்கு பீஸ்கிடையாது.

6. கலெக்டர் ஆபீசில் ஷை விஷயத்தில் வசூலானதையும் ஜவான்களுக்குக்கொடுத்த தொகையையும் கண்ட ஒருகணக்கு இருக்கும். செடில்மெண்டு ரிபோர்ட்டில் இவ்விஷயத்தில் வசூலான தொகையைக் காணவேண்டிய தவசியம்.

7. கெவர்ன்மெண்டு கிராம உத்தியோகஸ்தர் இல்லாத பூஸ்திதிகளுக்கு வசூலில் பிராசஸ் கொடுப்பவர்களைக்கொண்டு வசூல் செய்விக்கலாம்.

8. தாலூகாவில் எத்தனை பிராசஸ்கள் கொடுக்கப்பட்டதோ அதைக்கண்ட ஒரு ரிஜிஸ்டர் வைத்திருக்கவேண்டும்.

---

## சிவில் கோர்ட்டாருடைய தீர்ப்பையனுசரித்து விற்கப்படும் பூமியின்பேரில் பாக்கி வசூல். (B. S. O, 113.)

(*Government arrears on lands sold by Civil Courts.*)

கோர்ட்டாருடைய தீர்ப்பைக்கொண்டு விற்ற பூமியின் கிரயப் பணத்திலிருந்து சரக்கார் பாக்கியை வசூல் செய்வதற்காக யாதொரு பிரயத்தனமும் செய்யக்கூடாது. ரெவினியூ லாபிரகாரம் சொந்தக்காரன் இன்னுன் என்பதை கவனியாமல் நிலத்தின்பேரிலிருக்கும் பாக்கியை வசூல் செய்வதற்காக பிராசஸ் அனுப்பலாம். சிவில் கோர்ட்டாருடைய விற்பனையில் நிலத்தை யெடுக்கிறவன் அதன்மேல் இருக்கும் பாக்கியுடன் எடுக்கிருன். அப்படிப்பட்டவன் தாலூகாவிலிருந்து பாக்கி என்னவிருக்கிறதென்று அறிந்துகொள்ளலாம்.

### சிவில் கோர்ட்டாருடைய தீர்ப்பை யனுசரித்து மறியல் செய்யப்பட்ட பூமியின்பேரில் பாக்கி வசூல். (B. S. O. 114.)

(*Government arrears on lands attached by Civil Courts.*)

ஜட்ஜ்மெண்டு கொடுப்பதற்குமுன் கோர்ட்டார் மறியல் செய்திருந்தால் அதை ரெவினியூ பாக்கிக்காக ஜப்திசெய்யலாம். கலெக்டருக்கு சிவில் கோர்ட்டார் பிரவேசிக்கிறதற்குமுன் ஷை நிலத்தின் பேரில் என்ன சுவதந்தரம் இருந்ததோ அதே சுவதந்தரம் இருக்கிறது. கோர்ட்டார் விற்பனைசெய்வது நிலத்திலுள்ள ஒருவனுடைய ஹக்கைமாத்திரம் கலெக்டர் நிலத்தை விற்பனைசெய்கிறார்.

---

### சபாவணி சங்கதிகளைக்குறித்து தெரியப் படுத்துபவர்களுக்கு வெகுமதி. (B. S. O. 115.)

(*Rewards to informers.*)

சாகுபடி ஒளித்துவைத்த விஷயத்திலும் வருஷவாரி தீர்வை நிர்ணயத்தைச்சார்ந்த நிலத்தீர்வைக்குச் சம்பந்தப்படி எவ்விதவிஷயத்திலும் ஜமா பந்தி நடந்துகொண்டிருக்கும்போதும், நடப்பதற்குமுன்னும் நடந்தபின்பும், கணக்கர்கள் செய்த மோசத்தைத் தெரிவித்தால் அப்படிப்பட்டவர்களுக்கு நிலத்தின் தீர்வையில் 100-க்கு 50-க்கு மேற்படாத வெகுமதி கொடுக்கலாமென்று கலெக்டர் போர்டாருக்கு எழுதிக்கொள்ளலாம்.

### I. நிலவிருத்தி சம்பந்தமான கடன்களைக்குறித்த 1883ஹூத்திய 19-வது ஆக்ட் 10-வது பிரிவின்படி செய்யப்பட்டவிதிகள்.

(*Advances.*)

1. ஆலோசனைசபையிலுள்ள கவர்னர் ஜனரலவர்கள் அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாருக்கு அப்போதைக்கப்போது எவ்வளவெவ்வளவுதொகை ஏற்படுத்தியிருக்கிறார்களோ அந்த தொகையிலிருந்தாவது அப்படிப்பட்ட கடன் விஷயத்துக்காக வேறேவிதமாய் அவ்வவ்விடத்திய கவர்ன்மென்டார் பரத்திலிருக்கிற தொகையிலிருந்தாவது இந்த விதிகளின்படி கடன்கொடுக்கலாம்.

2. அடியிற்கண்ட தொகைகளுக்கு அதிகப்படாமல் கடன்வேணுமானால் அதற்காக அனுமதிகொடுக்க தாசில்தார்களுக்கும் டிவிஷனல் ஆபீசர்களுக்கும் கலெக்டர்களுக்கும் அதிகாரமுண்டு.

| | ரூபாய். |
|---|---|
| தாசில்தார்கள். | 250. |
| டிவிஷனல் ஆபீசர்கள். | 500. |
| கலெக்ட்டர்கள். | 1,000. |

1,000-ரூபாய்க்கு அதிகப்படும் கடன்தொகைகளுக்கு ரிவினியூ போர்டாரும் 5000-ரூபாய்க்கு அதிகப்படும் தொகைகளுக்கு அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாரும் அனுமதிகொடுக்கவேண்டியதாகும்.

3. தாசீல்தாருக்குள்ள அந்தஸ்துடையவராகவாவது அதற்கு உயர்ந்த அந்தஸ்துடையவராகவாவதிருக்கிற யாதொரு ரிவினியூ உத்தியோகஸ்தருக்கு கடனுக்காக விண்ணப்பம் செய்துகொள்ளலாம். மேலும் இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கிற A. நமூனாவிற்கண்ட விபரங்கள் அந்த விண்ணப்பத்திலடங்கியிருப்பதோடுங்கூட விண்ணப்பதாரன் அதில் கையெழுத்து செய்யவும்வேண்டியது. வாய்மொழியாக விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டால்யாருக்கு அந்தப்படி விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிறதாய் அந்த உத்தியோகஸ்தர் நிர்ணயிக்கப்பட்ட நமூனாவில் அதைப்பதிவித்து அதில் விண்ணப்பதாரனைக் கையெழுத்து போடுவிக்கவேண்டியது.

4. விண்ணப்பதாரன் நேரில்வந்து ஆஜராகவேணுமென்கிற அவசியமில்லை. ஆனால்நேரில்வந்து ஆஜராக அவனுக்கு இஷ்டமில்லாமலிருந்தால் அந்தப்படி செய்யவேண்டியதென்றாவது கிரமமாய் அதிகாரங்கொடுக்கப்பெற்ற ஏஜெண்டைத்தனக்காக ஆஜர்படுத்த இஷ்டமிருந்தால் அந்தப்படி செய்யவேண்டியதென்றாவது எப்போதாகிலும் அவனுக்கு உத்தரவுபண்ணலாம். அவன் அந்தப்படி செய்யத்தவறுகிறபட்சத்தில் விண்ணப்பத்தைத்தள்ளிப்போடலாம்.

5. விண்ணப்பத்தை வரப்பெற்றுக்கொள்ளுகிற உத்தியோகஸ்தருக்கு எதினிமித்தம் அது செய்துகொள்ளப்படுகிறதோ அந்தக் கடனுக்காக அனுமதிகொடுக்க அதிகாரமில்லாவிட்டால், அவர் அதில் காணவேண்டிய சகலவிவரங்களும் கண்டிருக்கிறதாவென்று பார்வையிட்டபிறகு, அந்தக் கடனைக்கொடுக்க அதிகாரம்பெற்றிருக்கிற எந்த உத்தியோகஸ்தருக்குத்தான் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தராயிருக்கிறாரோ அவருக்கு அதை அனுப்பவேண்டியது.

6. அந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளவேண்டியதென்று நம்புவதற்குப் பிரத்தியட்சமான காரணமிருக்கிறதாக டிஸ்திரிக்ட்டு கலெக்ட்டருக்காவது அதிகாரங்கொடுக்கப்பெற்ற மேற்கண்ட (இனிமேல் கலெக்ட்டரென்று சொல்லப்படும்) வேறே உத்தியோகஸ்தருக்காவது தோற்றினால் அவர் அதை விண்ணப்பங்களின் ரிஜிஸ்தரில் பதிவித்து அதைப்பற்றி பிரதேச விசாரணை பண்ணும்படி உத்தாவுசெய்யவேண்டியது. அந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாதென்று அவர் அபிப்பிராயப்பட்டால் அதை அவர் தீள்ளிவிடவேண்டியது.

7. சம்பந்தப்பட்ட கிராமத்தில்போய் விசாரணைசெய்யாமல் எவ்விதகடனையும் கொடுக்கக்கூடாது. உத்தேசிக்கப்பட்டகடன் 500 ரூபாய்க்கு அதிகப்படாமல் பிரதேச விசாரணையைத் தாசில்தார், அல்லது டிப்டி தாசில்தாருடைய அந்தஸ்துக்குக் குறைவுபடாதயாதொரு உத்தியோகஸ்தர் செய்யவேண்டியது. அந்தத்தொகைக்கு அதிகப்படாதபட்சத்தில் யாதொரு ரெவினியூ இன்ஸ்பெக்டரையாவது அதுபோன்ற அந்தஸ்துள்ள உத்தியோகஸ்தரையாவது வேலையில் அமர்த்திக்கொள்ளலாம். பிரதேச விசாரணைசெய்யும்படி கட்டளையிடப்பட்ட உத்தியோகஸ்தரானவர் உத்தேசிக்கப்பட்ட வேலையினால் பிரயோசனப்படப்போகிற நிலம் எவ்விடத்திலிருக்கிறதோ அந்த கிராமத்தில் எல்லாருக்கும் தெரியும்படியான ஓரிடத்திலே எதற்காக விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டதோ அந்தக்கடன் இப்படிப்பட்டதென்பதையும் விண்ணப்பத்தினால்கண்ட அமிசங்கள்சரிதானா அல்லவா என்பதையுங்குறித்து அந்த இடத்தில் இன்னதேதியிலே விசாரணைசெய்வதாய் தான் உத்தேசித்திருக்கிறதையும் சுருக்கமாக ஒரு நோட்டீசை அந்தப்படிதான் உத்தேசித்திருக்கிறதாய் விசாரணை தேதிக்குக்குறைந்தது ஒருவாரத்திற்குமுன்னதாக ஒட்டவேண்டியது. அந்த நோட்டீசை ஒட்டும்படி கட்டளையிடப்பட்ட நபர் அதைக்குறித்து தகுந்தபடி பிரசித்தம்செய்யப்பட்டதென்பதற்கு அடையாளமாக அந்த கிராம உத்தியோகஸ்தர்களுடைய கைபெழுத்து பெற்றுக்கொண்டபிறகு அதைப்பிறப்பித்த உத்தியோகஸ்தருக்கு அதன் நகல்பிரதியை அனுப்பிவிடவேண்டியது. நிலவிருத்தி கடன்களைக்குறித்த ஆக்ட் அல்லது விதிகளின்

படி நோட்டீசுகளைச் சேர்ப்பதற்காக யாதொரு கட்டணமும் வாங்கப்படமாட்டாது.

8. நோட்டீசின்படி நிர்ணயிக்கப்படுகிறதேதியிலாவது விசாரணை செய்வதை எந்தத்தேதியில் ஒத்திவைத்துக்கொள்ளுவதாய் பிந்திய நோட்டீசின்படி நிர்ணயிக்கப்படுகிறதோ அந்த தேதியிலாவது விசாரணையை நடத்தும்படியாக கட்டளையிடப்பட்ட உத்தியோகஸ்தரானவர் அந்த கிராமத்துக்குப்போய் இதுவிஷயத்தில் சம்பந்தப்பட்ட நபர்களையும் பிரதேச உத்தியோகஸ்தர்களையும் அவ்விடத்தில் பயிரிடுகிறவர்களுக்குள்ளே யோக்கியமானவர்களையும் சிலபேரையுங் கூட்டி மொத்தத்தில் ஜனங்களுக்காவது, யாதொரு நபருக்காவதுள்ளயாத்தியதைக்கு ஷை விருத்தியினால் கெடுதி நேரிடாதுபோலிருக்கிறதாவென்று எவ்வளவுமட்டில் நிச்சயமாய் அறிந்துகொள்ளக் கூடுமோ அவ்வளவுமட்டில் நிச்சயமாய் அறிந்துகொண்டு திருப்தியடைவதற்காக உத்தேசிக்கப்பட்டவேலை நடக்கப்போகிற இடத்தை பரிசோதித்துப்பார்க்கவேண்டியது. விண்ணப்பத்தில் கண்ட அம்சங்களில் ஒவ்வொன்றும் சரிதானா அல்லவாவென்று பரிசோதிப்பதோடுங்கூட அதை யார் பைசல் செய்வதாயிருக்கிறதோ அந்த உத்தியோகஸ்தர் சரியான தீர்மானத்திற்கு வருவதற்காக அவருக்கு அவசியமாய் வேண்டியிருக்கிற ஒவ்வொரு விஷயத்தையும் நிச்சயமாய் அறிந்துகொண்டு எழுதவேண்டியது. உத்தேசிக்கப்பட்ட வேலைக்குள்ள சகல ஆக்ஷேபங்களைக் குறித்தும் அப்படிப்பட்ட ஆக்ஷேபங்களைக் குறித்த சகல சாக்ஷியங்களைக் குறித்தும் அவர் முக்கியமாய் குறிப்பெடுத்துக்கொள்ளவேண்டியது. விசாரணை முடிவானதன்பேரில் அவர் A நமூனாவின் பின்பக்கத்திற்கண்ட நமூனாப்படி தன்னுடைய அபிப்பிராயத்தை எழுதி சிபார்சு பண்ணி அந்த கடிதாசிகளை, விசாரணைசெய்யும்படி யார் உத்தரவு செய்தாரோ அந்த உத்தியோகஸ்தருக்கு அனுப்ப வேண்டியது. யாருடைய சாக்ஷியம் முக்கியமானதாயிருக்கிறதோ அவர் ஆஜராகமாட்டேனென்று நிராகரித்தாலும் ஆஜராக அசட்டை பண்ணினாலும் சம்மன் பிறப்பிக்கலாம். 1869ஞு 3-வது சென்னபட்டணம் ஆக்டின்படி சம்மன் பிறப்பிக்க ஷை விசாரணை நடத்துகிற உத்தியோகஸ்தருக்கு அதிகாரமில்லாவிட்டால் சாக்ஷிகளை சம்ம

னனுப்பி வரவழைக்க அதிகாரம் கொடுக்கப்பெற்ற உத்தியோகஸ்த ருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்.

9. விண்ணப்பதாரன் நிலவிருத்திக்காகவே கடன் கேட்கிறுனு வென்பதையும் கடன்தீர்க்க அவனுக்கு சக்தி யிருக்கிறதா வென் பதையும் கொடுப்பதாக காட்டப்படுகிறஜாமீன் போதுமானதாவென் பதையும் நிச்சயமாய்த்தெரிந்துகொள்ளுவதற்காக அதிஜாக்கிரதை யாயிருக்கவேண்டியது.

எவன் தன்னுடைய நிலத்தை ஜாமீனுகக்கொடுக்க காட்டுகிறு னே அவன்தானு அந்த நிலத்திற்கு வாஸ்தவத்தில் சொந்தக்கார னென்பதை நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளும் பொருட்டும், அந்த நிலத்துக்குச் சிக்தச் செலவுகளில்லையாவென்றுவது அதன் பேரில் லாண்டு ரிவினியூபாக்கி வேறில்லையாவென்றுவது அதற்குமுன்பாக வே பெற்றுக் கொள்ளப்பட்ட கடனுக்கு கவர்ன்மெண்டாருக்கு அந்த நிலம் முன்னமே ஈடுகாட்டப்படவில்லை யென்றுவது நிச்சய மாய்தெரிந்துகொள்ளும் பொருட்டும் விருத்திசெய்யப்போகிற நிலத் திலும் அவரவர்களுக்குள்ள சுதந்தரங்களைப்பற்றி ஜாக்கிரதையாய் விசாரணை செய்யவேண்டியது. எவன் கடனுக்காக விண்ணப்பம் பண்ணிக்கொள்ளுகிறுனே அவன் பேரிலேயே விருத்திசெய்யப் படப்போகிற நிலத்தின் பட்டா யிருக்கவேண்டியது. குதுவை வைத்துக்கொள்ளுகிறவர்கள் நிலத்தின் சுவாதீனத்தைப் பெற்றிருந் தாலும் அவர்கள் செய்துகொள்ளும் விண்ணப்பங்களைச் சாதாரண மாய் ஏற்றுகொள்ளக்கூடாது மேல் ஜாமீனுகக்கொடுப்பதாய் கட் டப்படுகிற நிலவிஷயத்திலே ஜாமீன்தாரன் பேரிலே பட்டாயிருப்ப தோடுங்கூட அவன்தான் வாஸ்தவத்தில் சொந்தக்காரனு வென்ப தையும் அந்த நிலத்தில் அவனுக்குமாத்திரம் தனியே எவ்வளவு பாத்தியமிருக்கிறதோ அதற்கதிகமாக கூட்டுச் சொந்தக்காரர்களு டைய சம்மதியை எழுத்துமூலமாய் பெற்றுகொள்ளாமல் அந்த சொத்தின்மேல் பொறுப் பேற்படவில்லையா வென்பதையும் நிச்சய மாய்த் தெரிந்துகொள்ளுவதற்கு முயற்சிசெய்யவேண்டியது. விண் ணப்பதாரன் நிலத்தில் டிரான்சுபர் பண்ணத்தக்க பாத்தியமுடைய பாயக்காரியாயிருக்கிற பட்சத்தில் 14-முதல் 17-வரையிலுள்ள விதி களிற் கண்டபடி நடவடிக்கை நடத்தவேண்டியது. அப்படி டிரான்

சுபர் பண்ணத்தக்க பாத்தியம் அவனுக்கிராமலும் பாயக்காரி, நிலத்துக் குரியவனுகிய இவர்களுக்குள் யாருக்கு நிலத்தை விருத்தி செய்ய சுதந்தரமிருக்கிறதோ அதைக்குறித்துப் பொதுவில் யாதொரு உடன்படிக்கை ஏற்படாமலிருந்தால் நிலத்துக்குரியவன் சம்மதித்தாலன்றி மற்றபடி கடன் கொடுக்கப்படமாட்டாதென்று நிராகரிக்க வேண்டியது.

10. ஜாமீனுகக் கொடுப்பதாய் காட்டப்படுகிற சொத்தின் பொருமானம் எதற்காக விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிறதோ அந்தக் கடன் தொகைக்கு கால்பங்கு அதிகமாயிருந்தாலன்றிகடன் கொடுக்கப்படமாட்டாது.

11. செய்வதாகப் பிரயத்தனப்படுகிற வேலை 5,000-ரூபாய்க் கதிகமாய்ப் பிடிக்கத்தக்கதாயும் அதையே தொழிலாகக்கொண்டு அதில் பண்பட்டுத் தேர்ச்சியடைந்தவர்களே அதைச்செய்து முடிக்கத் தக்கதாயிருந்தால் அந்த வேலையைக்குறித்து சரியான நக்ஷாவையும் விவரத்தையும், மதிப்புக் கணக்கையும் பிரதேச விசாரணை செய்கிற உத்தியோகஸ்தருக்கு அனுப்பும்படி விண்ணப்பதாரனுக்கு உத்திரவுசெய்யலாம். அப்படிப்பட்ட நக்ஷா மதிப்புக் கணக்கு அல்லது விவரத்தை சவதரிக்க விண்ணப்பதாரனுக்கு முடியாவிட்டால் கலெக்டரானவர் அதற்காக பிடிக்கும் சிலவுக்கு எவ்வளவு போதுமானதென்று அவர் அபிப்பிராயப்படுகிருரோ அவ்வளவு தொகையை முதலில் அனுமத்தாய்க் கட்டிவைக்கும்படி அவனுக்கு உத்திரவு செய்தாவது அதைச் செலுத்துவதற்காக அவனிடத்திலிருந்து ஜாமீன் வாங்குவது அவருக்கு யுக்தமாகத்தோற்றினுல் அந்த பிரகாரம் ஜாமீன்கொடுக்கும்படி அவனுக்கு உத்திரவு செய்தாவது அவனுக்காக அதுகளைத் தயார் செய்விக்கலாம்.

12. பிரதேச விசாரணையைப் புனராலோசனை பண்ணியும் தனக்கவசியமாகத் தோற்றுகிற பின்னும் விசாரணை செய்தானபிற்பாடு கடன் கொடுக்கலாமென்று கலெக்டருக்கு திருப்தியானுல் அவர், கேட்கப்பட்ட தொகையையாவது அல்லது குறைந்த தொகையையாவது கொடுக்கலாமென்று தீர்மானம் ரிகார்டுசெய்த பிற்பாடு கடன் கொடுப்பதாக உடனே உத்திரவு பிறப்பிக்கவேண்டியது.

13. கடன்தொகை 1,000 ரூபாய்க்கதிகப்படாமல் அந்த ரிகார்டை ரிவினியூ போர்டாருக்கும் 4,000 ரூபாய்க்கதிகப்படாமல் அவர்கள்மூலமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாருக்கும் அனுப்பவேண்டியது. ரிவினியூபோர்ட்டாராவது பிரதேச கவர்ன்மெண்டாராவது அந்த ரிகார்டுகளைப் பார்வையிட்டதின்பேரில் அந்தக் கடன் விஷயமாய் உடனே அநுமதி கொடுக்கலாம். அல்லது கொடுப்பதில்லை யென்று நிராகரிக்கலாம். அல்லது தங்களுக்கு யுக்தமாகத்தோற்றினால் பின்னும் விசாரணை செய்யும்படியாய் உத்தரவுபண்ணலாம். கடன்கொடுக்கலாமென்று அனுமதிகொடுத்து பிறப்பித்த உத்தரவுகளைவரப் பெற்றுக்கொள்வதின்பேரில் கலெக்டர் கடன்கொடுப்பதற்காக உத்திரவு பிறப்பிக்கவேண்டியது.

14. விண்ணப்பதாரன் பாயக்காரியாயிருந்து விருத்திசெய்யப்படப்போகிற நிலத்தில் டிரான்சுபர் பண்ணத்தக்கதென்று சொல்லப்படுகிற யாதொரு பாத்தியதையை தான் பெற்றிருந்தால் அதையாவது வேறேயாதொரு ஜாமீனையாவது கடனுக்கு ஈடாகக்கொடுப்பதால் உத்தேசிக்கப்படுகிற பட்சத்தில் கலெக்டரானவர் அந்தவிண்ணப்பத்தைக்குறித்து நிலத்துக்குறியவனுக்கு நேரில் பிரத்தியேகமாய் நோட்டீசு சேர்ப்பிக்கவேண்டியது. அவனுக்கு நேரில் சேர்ப்பிப்பது சாத்தியமாயிராதபட்சத்தில் அதற்கு ஒரு பிரதியை கலெக்டராபீசிலும் அவன் வாசஞ்செய்கிற வீட்டிலும் எல்லாருக்கும் தெரியும்படியான ஓரிடத்திலே தேடவேண்டியது. எந்தடிஸ்டிரிக்டில் விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிறதோ அதில் அவன் வாசஞ்செய்யாவிட்டாலும் அவனுடைய வாசஸ்தலம் தெரியாவிட்டாலும் மேற்படி நிலத்தின் விஷயமாய் அதற்குரியவனுக்காக அவன் எவ்விடத்தில் ஏஜெண்டாகப்பிரவிர்த்திக்கிறுனே அந்த நபருக்கு அந்த நோட்டீசை சேர்ப்பிக்கவேண்டியது.

15. அப்படிப்பட்ட நோட்டீசை சேர்ந்ததென்று பூமிக்குரியனாவது அவனுடைய ஏஜெண்டாவது ஒப்புக்கொள்ளாவிட்டாலும் அதுசரியாய்சேர்ப்பிக்கப்பட்டதென்கிற சங்கதி கலெக்டருக்கு திருப்தியாகும்படி வேறேவிதமாய்ஸ்தாபிக்கப்படாவிட்டாலும் அதுசேர்ப்பிக்கப்பட்டதாக எண்ணப்படமாட்டாது. ஒருவனேயல்லாமல் பல பாகஸ்தர்களிலிருந்து அவர்களுக்காவது யாதொரு பாகஸ்தனாவது

வேறேநபராவது காரியநிர்வாகியாய்ப் பிரவர்த்திக்கிறயாதொருவிஷயத்திலே அவனுக்கு நோட்டீசு சேர்ப்பித்தால் அது பாகஸ்தர்களொவ்வொருவருக்கும் சேர்ப்பிக்கப்பட்டதாக எண்ணப்படும்.

16. எவ்வளவுதொகைக்காக விண்ணப்பம் செய்துக்கொள்ளப்பட்டதோ அந்தத்தொகை இவ்வளவென்பதையும் செய்யப்படப்போகிற இன்னமாதிரியானதென்பதையும் கடனுக்காக உத்தேசிக்கப்பட்ட ஜாமீன் இப்படிப்பட்டதென்பதையும் அந்த நோட்டீசில் காணவேண்டியது. மேலும் அப்படி கடன்கொடுப்பதைக்குறித்து பூமிக்குறியவன் ஆக்ஷேபனை ஏதாவதுசெய்ய விரும்புகிறபட்சத்தில் அவன் நோட்டீசுசேர்ந்தபிறகு ஒரு மாதத்திற்குள்ளாக அதைக் கலெக்டருக்கு எழுத்துமூலமாகத் தெரிவிக்கவேண்டியது என்று அந்த நோடீசைக்கொண்டே அவனுக்கு தெரிவிக்கவேண்டியது.

17. பூமிக்குரியவனாவது அவனுக்காக அவ்விடத்திலிருக்கிற ஏஜெண்டாவது காரிய நிர்வாகியாவது தன்னுடைய ஆக்ஷேபனைகளை அந்தப்படி தெரிவிக்காவிட்டாலும் அந்த ஆட்சேபனைகளைக் குறித்து யோசனை செய்தபிறகு கலெக்டர் விண்ணப்பதாரனுக்கு அவனுடைய விண்ணப்பத்தில் கண்ட நிலத்திலே டிரான்சுபர் பண்ணத்தக்க பாத்தியம் இருக்கிறதென்றும் அப்படிப்பட்ட பாத்தியதையின் பெறுமானத்தை தனியே யோசிக்கையிலாவது அவன் சவதரிக்கும் வேறே ஜாமீனோடு சேர்த்து யோசிக்கையிலாவது அது கடன் தொகைக்குப் போதுமானதென்றும் அபிப்பிராயப்பட்டாலும் அவர் அந்தகடனுக்காக அனுமதிகொடுக்கலாம். இல்லாவிட்டால் போர்ட்டார் அல்லது பிரதேச அதிகாரிகளுடைய அனுமதிக்காக அந்த விஷயத்தைக்குறித்த ரிகார்ட்டுகளை அனுப்பலாம்.

18. கடன் கொடுப்பதற்கான உத்திரவு இத்துடன் சேர்க்கப்பட்ட நமூனைப்படி இருக்கவேண்டியது. மேலும் அதில்கண்ட திட்டங்களின்னதென்று விண்ணப்பதாரன் அறிந்துகொண்டு அதுகளுக்கு அவன் சம்மதிக்கிறானென்பதற்கு அடையாளமாக அதில் அவன் கையெழுத்துசெய்யவேண்டியது. யாரை சவதரிக்கும்படியாய்விண்ணப்பதாரனுக்கு உத்திரவு செய்யப்படுகிறதோ அப்படிப்பட்ட ஜாமீன்தார்கள் (யாராவது) நபர் ஜாமீன்மாத்திரம் கொடுக்

கிறமாத்திரத்தில் அவர்கள் கையெழுத்து கொடுக்கவேண்டிய பத்திரம் அதற்குறிய நமூனப்படியிருக்கவேண்டியது. அசையாப்பொருளே மேல் ஜாமீனுக கொடுக்கவேண்டியதென்று உத்திரவுசெய்கிற பட்சத்தில் ஜாமீன்பத்திரம் D நமூனப்படி இருக்கவேண்டியது.

19. கடன்கொடுப்பதற்காக செய்கிற உத்திரவை கலெக்டருடைய ஆபீஸில் நிறுத்தி வைத்துக்கொள்ளவேண்டியது. அதற்கு ஒரு பிரதிமை விண்ணப்பதாரனுக்கு கொடுக்கவேண்டியது. யாதொருதாலுக்கா கஜானுவிலாவது டிஸ்டிரிக்ட் கஜானுவிலாவது கடன் தொகைகளேச் செலுத்தும்படி செய்தால் வேறே ஒரு பிரதிமை அப்படிப்பட்ட கஜானுவுக்கு அனுப்பவேண்டியது.

20. வருஷத்துக்கு நூற்றுக்கு ஆறேகால் விழுக்காடு கடன் தொகைகளுக்கு வட்டிவாங்கப்படும். குறைந்தவட்டிக்காவது வட்டி இல்லாமலேயாவது விசேஷமான விஷயங்களில் கடன் கொடுக்க வேண்டியதென்று கடன்கொடுக்க அதிகாரம்பெற்றவர்கள் அபிப்பிராயப்பட்டால் அவர்கள் தாங்கள் சிபார்சுபண்ணுவதற்குண்டான ஏதுக்களே விபரமாய்க்கண்டு ரிவினியூ போர்ட்டார்மூலமாய் பிரதேச கவர்ன்மெண்டார் உத்திரவு பெற்றுக்கொள்வதற்காக அப்படிப்பட்டவிஷயங்களேக்குறித்து ரிபோர்ட்செய்யவேண்டியது. விசேஷமான விஷயங்களில் குறைந்தவட்டிக்காவது வட்டியில்லமலேயாவது கடன்கொடுப்பதைக்குறித்து பிரதேச கவரன்மெண்டார்தமக்குயுத்தமாகத்தோற்றினல் அனுமதிக்கொடுக்கலாம்.

21. 1,000 ரூபாய்க்குமேற்படாத கடன்தொகைகளின் விஷயத்திலே கடன்வாங்கின இரண்டாம்வருஷ இறுதியிலும் 1,000 ரூபாய்க்கு மேற்படுகிற கடன்தொகைளின்விஷயத்திலே மூன்றும் வருஷ இறுதியிலும் சாதாரணமாய்க் கடனேச்செலுத்திவிடத் தொடங்கவேண்டும். ஆனல்கடன் எந்தவேலேக்காகக்கொடுக்கப்படுகிறதோ அந்த வேலேயினல் பலன்கிடைக்க இன்னும் நீடித்தகாலம் பிடிக்குமென்று, கடனுக்காக அனுமதிகொடுக்கிற அதிகாரி யாதொருவிசேஷமானவிஷயத்தில் அபிப்பிராயம் கொள்ளுவாராகில் கடன்வாங்கின தேதிக்கப்பால் முதல்வாயிதாத்தொகை செலுத்தப்படுவதற்காக நிர்ணயிக்கப்பட்டநாளே இன்னும் ஒற்றிவைக்கலாம். ஆனல் ஐந்துவருஷத்திற்கு ஜாஸ்தியாய் ஒற்றிவைக்கக்கூடாது. 1,000

ரூபாய்க்கு மேற்படாத கடன் தொகைகளுக்காகவும் 1,000 ரூபாய்க்குமேற்படுகிற கடன் தொகைகளுக்காகவும் இந்த விதியில் எவ்வளவு காலம் ஏற்படுத்தியிருக்கிறதோ இந்தகாலத்துக்குள்ளாகவே எந்த வேலைக்காக கடன் கொடுக்கப்படுகிறதோ அந்த வேலையினால் பலன் கிடைக்குமென்று கடனுக்காக அனுமதிகொடுக்கிற அதிகாரி மேற்கண்டமாதிரியாகவே அபிப்பிராயப்படுவாராகில் அவர் அதற்கேற்றபடியே காலவரையறையைக்குறைக்கலாம். ஆயினும் கடன் கொடுத்த தேதிமுதல் ஒவ்வொருவருஷ இறுதியில் அதற்கு ஏற்பாடாகி அசலோடுகூட சேர்க்கப்படும். விண்ணப்பதாரனுடைய அனுகூலத்தையும், அந்தந்தவிஷயத்தின் அவசியங்களையும், யோசித்து கலெக்டரானவர் இன்னகாலத்துக்குள்ளாக கடன்தொகைகள் செலுத்தப்படவேண்டியதென்பதைக் குறித்தும் இன்னின்னவாயிதாக்களில் இவ்வளவிவ்வளவுசெலுத்தப்பட வேண்டியதென்பதைக்குறித்தும் நிர்ணயம் ஏற்படுத்தவேண்டியது. ஆனால் எவ்வளவுகாலத்திற்குமேற்படக்கூடாதென்று அடியில்கண்டிருக்கிறதோ அதற்கும் மேற்பட்டு போகும்படியாக நிர்ணயம் ஏற்படுத்தக்கூடாது.

**இவ்வளவுக்கு மேற்படக்கூடாதென்பதைக் குறித்து.**

| | | | |
|---|---|---|---|
| | | | வருஷம் |
| 100 ரூ முதல் | 500 ரூ வரையில் | வாங்கப்படுகிற கடன் தொகைகளுக்கு | 10 |
| 500 ,, | 1,000 | ,, | 15 |
| 1,000 ,, | அதற்கு மேற்பட்டு | ,, | 20 |

கடனைத்தீர்ப்பதற்கான காலவரையறையை எந்த விசேஷமான விஷயத்திலாவது நீடிக்கலாமென்று சிபார்சு செய்யப்படுமாகில் அந்தப்படிசெய்வதற்குள்ள அவசியத்தைப்பற்றி தெளிவாக விவரித்து எழுதி பூர்த்தியாய் ஒரு ரிபோர்ட் அனுப்பி அதில் கவர்ன்மெண்டாரிடத்திலிருந்து அதற்கென்று பிரத்தியேகமாய் அனுமதிபெற்றுக்கொள்ளவேண்டும்.

100 ரூபாய்க்குக் குறைந்த தொகைகளாக கடன் கொடுக்கப்படமாட்டாது. ஆனால் கிணறுகளை ஏற்படுத்துவதற்காவது புதுப்பிப்பதற்காவது 100 ரூபாய்க்கு குறைந்த தொகையாகவும் கடன் கொடுக்கலாம், மேலும் அப்படிப்பட்டகடனை எதற்குள் செலுத்திவிடவேண்டுமோ அந்த காலவறையறையை இருவது ரூபாவரையில் வளர்த்திக்கொள்ளலாம். இந்தவிதிகளோடு சேர்க்கப்பட்டிருக்கிற

அட்டவணைகளின்படி வட்டியும் அசலும் சேர்த்து வருஷவாரிவர்த்தனை ரூபமாக விண்ணப்பதாரனுக்கு இஷ்டமிருந்தால் தொகையைச்செலுத்திவிடலாம். யாருக்கு கடன் கொடுத்திருக்கிறதோ அந்த நபர் கொடுப்பதற்காக செய்யப்பட்ட உத்திரவில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தேதிக்குமுன்பாகவே அந்தக்கடனையாவது சில பகுதிகளையாவது செலுத்திவிடலாம். பாக்கியாயிருக்கிற வட்டித்தவணைத் தொகைக்கும் அசலும்வட்டியும்சேர்ந்த எல்லாத்தவணைத்தொகைக்கும் நூற்றுக்கு ஆறேகால்விழுக்காடு தொடர்வட்டிபோட்டு வாங்கப்படும்.

22. செலுத்திவிடவேண்டிய சகல தொகைகளையும் விருத்திசெய்யப்போகிற நிலம் எவ்விடத்திலிருக்கிறதோ அந்த தாலூக்கா கஜானாவிலே சாதாரணமாய்ச் செலுத்திவிடவேண்டியது. ஆனால் கலெக்டர் தனக்கு யுக்தமாகத்தோற்றுகிற பட்சத்தில் டிஸ்டிரிக்டுக் குள்ளிருக்கிற வேறே யாதொரு கஜானாவிலே தொகையை செலுத்திவிட அனுமதிகொடுக்கலாம். இதுவிஷயத்தில் அப்போதைக்கப்போது பிரதேச கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கிற நமூனாப்படி தாசில்தார் கடனுக்குக்கொடுக்கப்படுகிற தொகைகளைப் பற்றியும் செலுத்திவிடப்படுகிற தொகைகளைப்பற்றியும் ஒரு ரிஜிஸ்டர் வைக்கவேண்டியது. கடன் பெற்றுகொள்ளுகிற நபர் அந்த வாயிதாத்தொகைகளை லாண்டு ரிவினியூவோடு சேர்த்து செலுத்துவதாய் கோருகிற பட்சத்தில் அதுகளை அந்தவருஷத்தில் பாக்கியாகிற லாண்டு ரிவினியூவின் கடைசி வாய்தாத்தொகையோடுகூட வசூல் செய்யலாம்.

23. பயிர் சாவியாய்ப்போனதென்றாவது வேறேவிசேஷமான உபத்திரவம் நேரிட்டதென்றாவது ருசுவாவதன்பேரில் கடனைச் சேர்ந்தவாயிதாத்தொகைகளையும் அதற்குவட்டியையும் வாங்காமல் நிறுத்திவைக்கலாம். அந்தவிஷயத்தைக் குறித்து கலெக்டர் ரிவினியூ போர்ட்டாருக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டியது. அவர்கள் இந்த விஷயத்தைப்பற்றித் தங்களுக்கு யுக்தமாகத் தோன்றுகிறபடி உத்திரவுசெய்ய வேண்டியது.

24. எதுகளுக்காக கடன் கொடுக்கப்பட்டதோ அந்தவேலைகள் நடந்துகொண்டிருக்கையிலே அதுகளைச்சரியாய் மேற்பார்வையிடுவதற்காகவும், கடன் எதற்காக கொடுக்கப்படுகிறதோ அந்த கா

ரியத்திற்காக அது சரியாய் உபயோகப்படுகிறதாவென்று நிச்சயமாய் அறிந்துகொண்டு அதற்கேற்ற பந்தோபஸ்து செய்வதற்காகவும் டிஸ்டிரிக்ட் கலெக்டர் பிரதேச கவர்ன்மெண்டாருடைய உத்திரவுகளுக்குட்பட்டு ஏற்பாடுபண்ணலாம்.

25. வேலைகளும் அதுகளுக்காகப் பிடிக்கும் சிலவுக்கணக்குகளும் டிஸ்டிரிக்ட் கலெக்டராவது இதுவிஷயத்தில் அதிகாரங்கொடுக்கப்பெற்ற வேறே நபராவது பார்க்கும்படியாய் வைக்கப்பட்டிருக்கவேண்டியது.

26. 5,000 ரூபாய்க்கு மேற்படுகிற கடன்தொகைகளின் விஷயத்தில் கடன் வாங்குகிற நபர் எவன் மேலதிகாரிகளின் அனுமதியின்பேரில் கலெக்டர் நிர்ணயிக்கிற யாதொரு நமூனைப்படி கணக்கு வைக்கவேண்டியது.

கடன் வாங்கிக்கொண்ட எந்த நபராவது அவனுக்கு என்னதிட்டங்களின்பேரில் அந்தக்கடன் கொடுக்கப்பட்டதோ அதுகளில் எதன்படிக்காகிலும் நடந்துகொள்ளத் தவறினனென்று டிஸ்டிரிக்ட்டு கலெக்டருக்கு எப்போதாவது திருப்தியானல் அவர்தான் என்னதீர்மானத்திற்கு வந்தாரோ அதற்குள்ள ஏதுக்களை எழுத்துமூலமாய் ரிகார்ட்டுபண்ணிய பிறகு மேலான ரிவினியூ அதிகாரிகளின் விசாரணைக்குட்பட்டு பாக்கியாதொருவட்டியையும் சிலவுகளையும் லாண்டு ரிவினியூ பாக்கியைப்போல அந்த நபரிடத்தி லிருந்தாவது அவனுடைய எந்த ஜாமீன்தாரனிடத்தி லிருந்தாவது உடனே வசூல்செய்யத்தொடங்கலாம்.

27. எதுகளுக்காக மொத்தமாய் இவ்வளவென்று கடன்கொடுக்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட சகல வேலைகளையும் அந்த கடன் கொடுப்பதற்காக செய்யப்பட்ட உத்திரவில் மேற்படிவேலைகள் என்றைக்கு முடியவேண்டியதென்று கட்டளையிட்டிருக்கிறதோ அந்ததேதிக்கு பிற்பாடு கூடுமான சீக்கிரத்தில் பார்வையிட்டு ரிபோர்ட்டு செய்யவேண்டியது. எதுகளுக்காக வாயிதாக்களாக கடன் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட சகல வேலைகளையும் முதல் வாய்தாத்தொகை எப்போது கொடுக்கப்படுகிறதோ அதற்கு பிற்பாடு ஒவ்வொரு வாய்தாவிலும் தொகை கொடுப்பதற்கு முன்பாக பார்வையிட்டு ரிபோர்ட்டு பண்ணவேண்டியது.

28. நீர் வரண்டுபோவதற்குள்ளாக தக்க டிஸ்டிரிக்ட்டுகளிலாவது அதுகளிலே எவ்விடத்திலாவது விசேஷமாய் அனுகூலமான ஷரத்துகளின்பேரில் நீர்ப்பாய்ச்சல் சம்பந்தியாகிய கிணறுகள் முழுகும் பொருட்டு கடன் கொடுப்பதற்காக பிரத்தியேகமாய் விதிகள்செய்து அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

மேற்கண்ட ரூல்சுகளை கிராமக்குடிகள் நன்றாகத் தெரிந்துகொள்ளும்படியான ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

II. விவசாயத்தி னிமித்தமும் விருத்திசெய்வது நிமித்தமும் குதிரைவாங்க கெவர்ன்மெண்டார் கடன்கொடுக்கலாம். குதிரைகளைக்கொண்டு பயிர்செய்தால் அதற்கு ஷை ரூல்ஸ்பிரகாரம் கடன் கொடுக்கலாம். விருத்திசெய்யவேண்டிய நிமித்தம் கடன் கொடுத்தால் அதற்கும் ஷை கண்ட நிபந்தனைகளை பொருத்தமானவைாக்கும் பொருத்தம் செய்யவேண்டும். போர்ட்டாருடைய சாங்ஷன் பெற்ற ஷை கடனை கொடுக்கவேண்டும்.

---

### 1831-வது வருஷத்திய 6-வது சட்டப்பிரகாரம் நடத்தவேண்டிய அமுல். (B. S. O. 178.)

### (*Regulation VI of 1831.*)

1. சாஸ்வதமாக தீர்வையேற்பட்ட கிராமங்கள்தவிர இதர கிராமங்கள் எல்லாவற்றிலுமுள்ள கிராம கணக்குகளுக்கும், மணியகாரர்களுக்கும் இந்தசட்டம் பொருந்தியது.

2. இந்தசட்டம் நெடுநாளாகவரும் பரம்பரையைப்பற்றி ஏற்பட்டிருக்கும் வழக்கத்தை சாஸ்வதப்படுத்துகிறது தவிர வேறு புதிய ஏற்பாடுகள் ஒன்றும் செய்கிறதில்லை.

3. கிராம முனிசிபுகளையும் மணியகாரர்களையும் ஏற்படுத்துவதில் கலெக்டர் சரியானவர்களைப் பார்த்து ஏற்படுத்தவேண்டும். அப்படி ஏற்படுத்துவதில் 1. பரம்பரை ஹக்கு. 2. கிராமத்தில் குடியிருப்பு. 3. கிராமத்தில் நிலம் உடைத்தாயிருத்தல், 4. கிராமத்தாரிடத்தில் ஒரு மரியாதை புடைத்தல். இவ்வகளை யுடையவரைப்பார்த்து ஏற்பாடுசெய்யவேண்டும்.

4. ஷை சட்டப்பிரகாரம் உத்தியோகஸ்தர்கள் தப்பிதம்செய்தால் அவர்களை கலெக்டர் அலுவலினின்றும் தள்ளிவிடலாம். அப்படி தள்ளிவிடுவதில் நல்லகாரணங்களிருக்கவேண்டும்.

5. ஷை கிராமவேலைகளைச் செய்வதற்காக கொடுக்கும் திரவியத்தை அனேகர் பங்கிட்டுக்கொள்ளக்கூடாது. அந்த வேலையைச் செய்கிறவர்கள் மாத்திரம் பெற்றுக்கொள்ள ஏற்பாடுசெய்யவேண்டியது.

6. இந்த சட்டப்பிரகாரம் கொண்டுவரப்படும் கேசுகள் சிவிலின் கீழ்வரும். ஆகையால் ஷை கேசுகளுக்கு நடத்தவேண்டிய நடவடிக்கை யாவற்றையும் நடத்தவேண்டியது. சம்மன்பண்ணி சம்மனுக்கு ஆஜராகத்தப்பினல் இந்தியன் பினல்கோட் 172-174 வது செக்ஷன்களில் சொல்லியிருக்கும் குற்றத்திற்கு உட்படுவான்.

7. சரியான விசாரணையின்பேரில் ஏற்பாடாயிருக்கும் ஊர் கிராம உத்தியோகத்தை யடைய கேசுகொண்டுவந்தால் அதை கலெக்டர் பிடிக்கக்கூடாது.

8. ஒருவன் மூன்றுவருடமாக வேலைபார்த்துவந்த தன்மேல் அவனுக்கு சரியான ஹக்கு இல்லையென்று அவனைத் தள்ளிவிடக் கூடாது. ஷை வேலைக்கு அவனை நியமிக்கும்போது உனக்கு உடையவன் மைனராய் இருந்தாலும் அந்தவேலையை அடைய கேசுகொண்டுபோகக்கூடாது. வேலைகாலியானல் உடனே அவன் கேசு கொண்டுபோகலாம்.

10. கிராமஊழியம் செய்வதனல்வரும் பணத்தை பங்கிட்டுக் கொள்வது நியாயத்திற்கு விரோதமானது. இப்படி பணம் சேர வேண்டுமென்று ஒருவன் கேசுகொண்டுவந்தால் அதைப் பிடிக்கக் கூடாது.

11. கிராம உத்தியோகஸ்தர்களை நியமிப்பதில் கீழ்கண்ட நிபந்தனைகளை யனுசரிக்கவேண்டும்.

(1) ஷை வேலைக்கு நியமனம் செய்வதில் முதலில் கவனிக்க வேண்டிய விஷயம் ஷை வேலைக்கு நியமனமாகிறவன் அந்தவேலை பரிக்க சக்த்தியுள்ளவனு என்பது. அப்படிப் பார்ப்பதில் சந்ததிவார்ஸ் முறைமையை கவனிக்காதும் விடலாம். அதனுல் சந்ததியைச் சேர்ந்த பெண் வார்சுக்கு ஷை வேலைக்கு ஹக்குகிடையாது என்

பது ஏற்படுகின்றது. ஆனால் வார்சாக ஒரு பிள்ளையில்லா விதவை வந்தால், அவள்பிள்ளை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள கோர்ட்டாரிடம் அனுமதிபெற்றால், அதன்பேரில் அவள்வளப்பு எடுத்துக்கொள்ள போதுமான கால அளவை அவளுக்குக் கொடுக்கவேண்டும்.

(2) நியாயப்பிரகாரம் வேலைக்கு வார்சு மைனராகவிருந்தால் அவன்பேரில் ஷெ வேலை ரிஜிஸ்டராகவேண்டும், அதன்மேல்கலெக்டர் அந்தவேலையைப் பார்த்துவர ஒரு குமஸ்த்தா ஏற்படுத்தவேண்டும். அப்படி குமஸ்தா ஏற்படுத்துவதில் மைனர் இஷ்டப்பட்டவனையும், அவன் ஏற்படுத்தலாமென்று சொல்கிறவனையும், ஏற்படுத்தலாம். சந்ததியில் எழுதப்படிக்கத் தெரியாதவன் ஒருவரும் இல்லாவிட்டால் இஷ்டமானவர்களை கலெக்டர் குமஸ்தாவாக நியமிக்கலாம். ஒருவனை குமஸ்தாவாக ஏற்படுத்திவிட்டால் அவனை எடுத்துவிடவேண்டுமென்று இஸ்முதாரன் கேட்டால் அப்படி தள்ளக்கூடாது. அப்படி ஏற்படுத்திய குமஸ்தா மைனருக்கு கணக்குகளில் சிட்சை சொல்லி வரவேண்டும்.

(3) வார்சுதாரனுக் கிருக்கும் குறைவு நீங்கியபோதும், தனக்குப்பதிலாக தன்னுடையவார்சை கணக்குவேலைக்கு ஏற்படுத்தலாமென்று மனுசெய்துகொண்டபோதும், உடனே குமஸ்தாவை நீக்கிவிடலாம். ஆனால் வில்லேஜ் முன்சீப்புகள் ஏற்படுத்துவதில் கொஞ்சம் வயது சென்றவனாகயிருப்பவனை ஏற்படுத்தவேண்டும்.

(4) கிராம உத்தியோகஸ்தர்கள் ஒரு குற்றத்துக்காக தள்ளப்படும் விஷயத்தில் அவனது வார்ஸு ஷெ குற்றத்தில் சம்மந்தப்பட்டவனாய் இல்லாதவனாயிருந்தபோதிலும், அவனை. இசுமுதாரனாகச் செய்து அவனுக்குப் பதிலாக ஒரு குமஸ்தாவை மேற்படுத்தவேண்டியது. இப்படிப்பட்ட விஷயத்தில் குமஸ்தா ஏற்படுத்துவது கால அளவை கலெக்டர் நியமிக்கவேண்டியது.

(5) ஒருவன் இரண்டு ஊர்களுக்கு இசுமுதாரனாகவிருந்தால் இரண்டு ஊர் வேலைகளையும் அவன்மேல் ரிஜிஸ்டர் செய்யவேண்டும். அப்படிப்பட்டவன் இரண்டு கிராமவேலையையும் பார்ப்பது கஷ்டமாய் இருக்குமானால் தகுந்தவனைப்பார்த்து தனது வேலையை ஒரு ஊரில் பார்த்து வரும்படியாக குமஸ்தாவாக வேற்படுத்திக்கொள்ளலாம்.

15. கிராம உத்தியோகஸ்தன் கெவர்ன்மெண்டில் வேலையையாவது, வேறு இதரவேலையையாவது பார்த்துவரலாம். அப்படிப் பார்த்துவருங்காலத்தில் தனக்குப்பதிலாக ஒரு குமஸ்தா கிராமவேலையைப்பார்த்துவர ஒரு குமஸ்தாவை ஏற்படுத்தவேண்டியது. அப்படி பதிலாக வேலைபார்த்துவர ஒரு கிராம உத்தியோகஸ்தன் பதிலியை ஏற்படுத்தினால் அவனுக்கு அவ்வேலைக்கு சேரவேண்டிய முழுசம்பளத்தையும் கொடுத்துவரவேண்டும்.

16. இனும் கிராமங்களுடைய இனுந்தாரர்களுக்கு தங்கள் கிராம உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்திக்கொள்ள ஷை சட்டப்பிரகாரம் அதிகாரம் இல்லை.

---

## SECTION III.

## இனுமும் அதைச்சார்ந்த விஷயமும்.

*(Inam and connected questions.)*

### இனும் செடில்மேண்டுக்காக புதிதாக ஏற்பட்ட விதிகள் (B. S.O. 116.)

*(New Inam Settlement rules.)*

கீழ்க்கண்ட நிபந்தனைகளை செடில்மெண்டு ஆகாத இனும்களை செடில்மெண்டு செய்வதில் கலெக்டர்கள் அனுசரிக்கவேண்டிய விதிகள்.

I. தானசாசனம் ஏற்படாதிருந்தாலும், இல்லாமலிருந்தாலும், 50 வருஷாமய் இடைவிடாமல் மான்யமாய் அனுபவித்துக்கொண்டிருந்ததாக ஏற்பட்ட ஒருமான்ய நிலம் எவ்விதமாயிப் பிறந்ததானுலும் செல்லத்தகுந்த சுவதந்தரம் உள்ளதாய் எண்ணப்படும்.

2. எந்தமான்யத்துக்காவது செல்லத்தகுந்ததான சாசனமாவது இல்லாமற்போனுல், இங்கிலீஷ் துரைத்தனத்தின் ஆரம்பகாலத்தில் ஏற்பட்ட கணக்குகளிலாவது ஸாஸ்வதமான கணக்குகளிலாவது 1802-ஞு 31-வது சட்டப்படிக்கு ஏற்பட்ட ரிஜிஸ்டரிலாவது முதல் சர்வே கணக்கிலாவது 50 வருஷத்திற்குமுன் ஏற்பட்ட எந்த கணக்குகளிலாவது அந்த மான்யம் எழுதப்பட்டிருந்தால் அந்த சங்கதியையே 50 வருஷமாக அனுபவித்து வந்ததற்கு திருஷ்டாந்தமாக எண்ணப்படும்.

3. 50 வருஷங்களுக்குள் கவர்ன்மெண்டுக்குச் சேர்ந்த பழய ஜமீன்தாரி, பாளயப்பட்டு, ஜாகீர் இவைகளில் மானியம் இருந்து அப்படிப்பட்ட ஜமீன்தாரி முதலானவர்களுக்கு ஸாஸ்வத கணக்குகளாவது அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்ட மற்ற எவ்விதமான கணக்குகளாவது இல்லாமற்போனால் அந்த மானிய விஷயமாய் திருஷ்டாந்தம் அகப்படாத பக்ஷத்தில் ஷை ஜமீன்தாரி முதலானவைகள் கவர்ன்மெண்டுக்குச் சேர்க்கப்பட்டது முதல் அந்த மானியம் அனுபவத்தில் இருந்ததாகத் திருஷ்டாந்தப் படுத்தினாலும், மானியத்தின் நெடுங்கால அனுபவத்தை ரூபிக்க கால அளவு அதிகமாக இருந்தாலும் கணக்குகள் தென்படாமற் போனதாலும், அசாத்தியமாக இருப்பதாக நம்பத்தகுந்த ஹேதுக்களைக் காண்பித்தாலும், அப்படிப்பட்ட மானியத்திற்கு சுதந்தரமுண்டாயிருப்பதாக எண்ணப்படும். 50-வருஷ பூர்ணனுபவத்தை ரூபிக்கவும் பிரதி சங்கதியிலும் இந்நிபந்தனையை அனுசரிக்கவேண்டும்.

II. மேற்சொல்லியபடி மானியங்களுக்குண்டான ஸ்வதந்தரம் ஏற்பட்ட பின்பு இதனடியில் கண்ட எல்லா மானியங்களையும் அவ்வவற்றின் ஸ்வபாவப்படிக்கு பரிஷ்காரம் செய்யவேண்டும்.

A. தேவஸ்தானங்கள் தர்மசத்திரங்கள் முதலானவைகளுக்கும் அவற்றுள் வேலைசெய்யும் ஊழியக்காரர்களுக்கும் கொடுக்கப்பட்ட மானியங்கள்.

B. சுயார்த்தமாக அல்லது சம்ரக்ஷணார்த்தமாகவும் கொடுக்கப்பட்ட மானியங்கள்.

C. இப்பொழுது நடத்தப்படாமலும், அவசியமின்றியும் இருக்கும் ரெவினியூ போலீஸ் விஷயமான சேவகங்களுக்காக முன்துரைத்தனத்தாரால் கொடுக்கப்பட்டமானியங்கள்.

D. கிராம ஊழிய மானியங்கள்.

1. இப்போது நடக்கிற ரெவினியூபோலீஸ் சேவகங்களுக்காக கிராம ஊழியக்காரர் அனுபவிக்கிற மானியங்கள்.

2. கிராமத்தாருக்குச் செய்யப்பட்ட ஊழியங்களுக்காக தச்சன், கருமான், நாவிதன் முதலியவர்கள் அனுபவித்துவரும் மானியங்கள்.

III. மதசம்மந்தமானதும், தர்ம சம்பந்தமானதுமுமானதேவஸ்தானங்கள், மசூதிகள், வித்தியாசாலைகள், சத்திரங்கள், பொதுக் கட்டடங்கள் இவைகளுடைய சம்ரக்ஷணைக்காக கொடுக்கப்பட்ட மானியங்கள், இவைகளின் ஊழியஞ்செய்பவர்களுக்குக் கொடுக்கப்பட்டமானியங்கள், அப்படிப்பட்ட தேவஸ்தான முதலானவற்றின் பெயரால் ரிஜிஸ்தராயிருந்தாலும், அவைகளில் ஊழியஞ்செய்யப்பட்டவர்களின்பேரில் ரிஜிஸ்டராயிருந்தாலும், இப்போது எவர்கள் பேரால் நடந்துவருகிறதோ அவர்கள் பேரிலும், அவர்கள் வார்சுகளின்பேரில் நடப்பிக்கப்படும். ஆனால், தேவஸ்தானம் முதலியவைகளை நல்லஸ்திதியில் வைத்துக்கொண்டு மானிய நியமங்கள்படி செய்துவருகிறவரையில் கவர்ன்மெண்டார் அம்மானியங்களின் ஜோலிக்கு வரமாட்டார்கள். ஏரி, கால்வாய் இவைகளைக் கட்டுவதற்கும், செவ்வைப்படுத்துவதற்கும் கொடுக்கப்பட்ட மானியங்கள் அந்த மானியங்களுடைய நியமப்பிரகாரம் நடந்துகொண்டு அப்படிப்பட்ட ஏரி, கால்வாய் முதலியவைகளை நல்ல ஸ்திதியில் வைத்துக்கொண்டிருக்கிறவரையில் கவர்ன்மெண்டார் பிரவேசிக்கக்கூடாது.

IV. மானியம் ஸ்வார்த்தமாகவாவது சம்ரக்ஷணார்த்தமாகவாவது கொடுக்கப்பட்டிருந்தால் அதைச் சேர்ந்த உடன்படிக்கைப்படி அதை ஸ்திரப்படுத்தவேண்டும். இப்போது மான்யதாரன், முதல் மான்யதாரனுடைய வார்ஸானும், ரிஜிஸ்டரில் எழுதப்பட்டவனுடைய சந்ததியானாலும் அதற்குத்தகுந்தபடிதான் விக்கிரயங்களால் அந்தமான்யம் இப்போதைய அனுபவதாரனுக்கு சித்தித்திருக்கும் பக்ஷத்தில் அதற்குத் தகுந்தபடி அந்த மான்யங்களை எதேச்சாவி நியோகஞ் செய்வதற்கு ஏற்பட்ட நிபந்தனைகளை இதனடியில் எழுதப்பட்டிருக்கின்றது.

V. தற்கால அனுபவதாரன் முதல் பிரதிக்கிராஹியினுடைய சந்ததிதாரனானாலும், ஆதியில் ரிஜிஸ்டரானவனுடைய சந்ததிதாரனானாலும், அந்த மானியம் அவனுக்கு வம்சபரம்பரையாய் வரும். அப்படி வருவதில் இப்போதைய நிபந்தனைகளுக்குக் கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அர்த்தத்துக்கு உட்பட்டிருக்கவேண்டியது. அஃதாவது;—

முதலாவது:—பின்னிட்டு வருகிற அதிகாரிகளும் அவிபக்த சஹோதராளுமாத்திரம் ஸ்வத்வத்துக்கு உரியவர்களாவார்.

இரண்டாவது:—இப்படிப்பட்ட ஸ்வத்துவாரஹாள் இல்லாமற்போனல் மான்யம் கவர்ன்மெண்டுக்குச் சேர்க்கப்படும்.

மூன்ருவது:—மான்யங்களைத் தான் விக்கிரியங்களுக்கு உட்படுத்தக்கூடாது.

நான்காவது:—அவிபந்த சஹோதரன், ஞாதி, இவர்களுடைய குடும்பத்தி லிருந்து செய்துக்கொள்ளப்பட்ட ஸ்வீகாரந் தவிர, மற்ற ஸ்வீகாரத்தை ஒத்துக்கொள்ளக் கூடாது.

2. மான்யங்களுக்குண்டான இப்படிப்பட்ட நிபந்தனைகளை நிவர்த்திசெய்து அவைகளை தான் விக்கிரயதத்து மூலமாயாவது மற்றெந்த விதமாயாவது உபயோகப்படுத்திக்கொள்வதற்கு முழு அதிகாரத்துடன் ஸ்வதந்தரமுள்ளவனுகச் செய்துகொள்ள மானியதாரனுக்கு இடம்கொடுக்கப்படும். ஆகிலும் பிரதிமான்ய சங்கதியில் முறையாகக் கெவர்ன்மெண்டாருக்குச் சேரும் ஸ்வதந்திரத்தின் மதிப்புக்குத் தகுந்ததாக இதனடியில் நிச்சயிக்கப்பட்டிருக்கிற வகுப்புகளின்படிக்குப் பிரதிவருஷம் குயிட்ரெண்டு கொடுத்துவருவதற்குச் சம்மதிக்கிறபக்ஷத்திலேயே மான்யதாரனுக்கு அப்படிப்பட்ட ஸ்வதந்தர முண்டாகும்.

3. இப்போது மான்யதாரனுக்கு வம்சத்தை விருத்திசெய்யவும், மான்யத்துக்குப் பின்னிட்ட ஸ்வத்வாதிகாரியாவதற்கும் தகுந்த ஸ்திரீகளாவது புருஷாளாவது பின்னிட்டதிகாரிகளாக விருந்தாலும் அப்படிப்பட்ட மான்யதாரன் பால்யனுயிருந்தால் அவனுக்கு மேற்சொல்லிய பின்னிட்டு அதிகாரிகள் உண்டாவார்கள் என்பதற்கு இடமிருந்தாலும் இப்படிப்பட்ட விஷயத்தில் கவர்ன்மெண்டாருக்கும் சேரும் ஸ்வத்வம் வெகுகாலத்திற்குப் பிறகாவது சித்திக்காதாகையால அந்த மான்யத்துக்கு அப்போதைய தீர்வையிலும் மதிப்பில் ஏற்படும் தீர்வையிலும், அரைக்கால் பங்குக்குச் சமான தீர்வையைக் கொடுக்க ஒத்துக்கொள்ளுகிறபக்ஷத்தில் அதை விதிக்கவேண்டும். மான்யத்துக்கு தீர்வையேற்படாதிருந்தால் மற்ற கிராமங்களின் தீர்வையை யனுசரித்து தீர்வை ஏற்படுத்தவேண்டும்.

4. மான்யதாரனுக்கு வார்ஸுகளில்லாமல் விர்த்தாப்பியனானாலும், பிள்ளைபிறவா சொத்திருந்தாலும், சந்ததியில்லாத பெண்சாதி, சந்தானமில்லாத விதவை, விதவையான குமார்த்தி இப்படிப்பட்ட வார்சுகள்மாத்திரம் இருந்தால், இதுவிஷயத்தில் கவர்ன்மெண்டாருக்கு சுவதந்தரம் மேல் சொல்லிபதைவிட அதிகமாயிருக்கிறதினாலே காற்பங்கு தீர்வை வாங்கிக்கொள்ளவேண்டும்.

5. மானியதாரனுக்கு வார்சுகளில்லாதிருந்தாலும் சந்தானமில்லாத விதவையைப்போல விர்த்திசெய்ய யோகியதையில்லாதிருந்தாலும், மான்யதாரன் இறந்தபிறகு மானியம் போய்விடுமென்றிருந்தால் அணாதீர்வை வாங்கவேண்டும்.

VI. மேற்சொல்லியபடி நிச்சயிக்கப்பட்ட மானிய தீர்வைகளை உடனே அங்கீகரித்தால் ஷெ தீர்வை விதிக்கப்படும். இல்லாவிட்டால் வேணுமென்றபோது ஷெ தீர்வை விதிக்கப்பட மாட்டாது. இப்பொழுது ஒருவிதவை ஒத்துக்கொண்டு தன்னுடைய மரணகாலத்தில் கவர்ன்மெண்டார் அடையும் சுதந்தரத்தை கொடுக்கவேண்டுமென்று கேட்டால் கொடுக்கப்படமாட்டாது. எந்த மான்யதாரன் விஷயத்திலாவது அவனுடைய சந்ததி விருத்தியாகுமென்கிற காரணத்தை யனுசரித்து குறைந்த தீர்வை வாங்கிக்கொள்வதற்கு ஒத்துக்கொள்ளப்பட்டதோ அந்த மானியதாரனுடைய சந்ததி விருத்தியாகாதென்று தோன்றியதன்பேரில் அப்படிப்பட்ட குறைந்த தீர்வையை உடனே அவனிடத்தில் வாங்கிக்கொள்ளக்கூடாது. இப்படிப்பட்ட விஷயங்களில் முன்னதாய் பிரத்தியேகமான விசாரணை செய்வதற்கு தேவையான காலஅளவை அனுசரித்து தீர்வையை உயர்த்துவதற்கு அவசியமாகும்.

VII. இப்பொழுது மானியத்தை அனுபவிக்கிறவன் முதல் மானியதாரனுடைய வாவது, மானியம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டவனுடைய வாவது சந்ததியில் சேராதவனாயிருந்தாலும், யாரால் அவனுக்கு பாத்யதை உண்டாயிற்றோ அவர்களுக்காவது ஸ்வீகாரம் அடைந்த ஏதுக்களை அனுசரித்து சித்ததனாலாவது, தானவிக்கிரய முதலியவற்றாலாவது ஸ்வாதீனத்துக்கு வந்து அனுபவித்துவருகிற விஷயத்தில் அவனுடைய பாத்யதை சட்டப்படி பலஹீனமானதால் அதை கவர்ன்மெண்டார் நிலத்துடன் சேர்த்துகொள்வது நியாய

மா யிருந்தபோதிலும் 5-வது ரூல்பிரகாரம் உள்ள பாத்யதையை கொடுக்கலாம். அப்படிக் கொடுக்குந்தருணத்தில் அவனதை நிராகரிக்கக்கூடாது. 5-வது நிபந்தனையில் 2-5 உட்பிரிவில் சொல்லியிருக்கிற அந்த நிலத்தீர்வையில் அரைக்கால் முதல் அரைவரைக்கும் மானியதாரனுடைய பின்னிட்ட அதிகாரத்தை அனுசரித்து தீர்வை ஏற்படுத்தலாம். இப்படிச்செய்வதனால் அந்த மானியதாரனுக்கும், பாத்யஸ்தர்களுக்கும் அந்த மான்யத்தை ஸ்வதந்தர சொத்தாக சாஸ்வதமாக அனுபவிக்கும் பாத்யதை சித்திக்கும். ஆனால் அப்படி விதிக்கப்பட்ட ஸ்வல்ப தீர்வையை கவர்ன்மெண்டாருக்குக் கட்டி வரவேண்டும்.

VIII. சில ஜில்லாக்களில் மானிய நிலங்களுக்குக் கிரமமான தீர்வை ஏற்படாததனால் முன்னே ஜில்லாவில் தரம் ஏற்படுத்தின காலத்தில் ஏற்பட்ட குயிற்றெண்டை ஸ்திரமாக ஏற்படுத்தவேண்டும். ஆகையால் இனும் கமிஷனர், கலெக்டரவர்களுடனும், போர்டாருடனும் யோசித்து பிரதி மானியத்தினுடைய வருஷவாரி சாகுபடியை அனுசரித்து ஏற்படுத்தாமல், ஏக்ரா ஒன்றுக்கு புஞ்சை நிலத்துக்கு இவ்வளவு என்றும், நஞ்சைநிலத்திற்கு இவ்வளவு என்றும் குயிற்றென்டு ஏற்படுத்த இனும் கமிஷனருக்கு அதிகாரமுண்டு. அதப்படி ஏற்படுத்தும் தீர்வையானது ஒரேவிதமாயும், நஞ்சை புஞ்சை நிலங்களுக்குத் தகுந்தபடியாயும் கவரண்மெண்டு நிலங்களுக்கு ஏற்பட்டிருப்பதுபோல் சராசரி சாகுபடியை அனுசரித்து ஏற்படுத்தவேண்டும். 2. அந்த குயிற்றென்டு ஆனது புஞ்சை நிலத்திற்கு இரண்டணாவிற்குக் குறையாமலும், நஞ்சை நிலத்திற்குக் குறையாலும் இருக்கவேண்டும். 3. மானியத்தின் பூர்த்தியான தீர்வையை அனுசரித்து குயிற்ரெண்டு ஏற்படுத்துகிற பக்ஷத்தில் அந்தத் தீர்வை 1-ரூபாய்க்கு குறைவாகவிருந்தால் இரண்டணாவிற்குக் குறையாத தரமாகவும், 1—5 ரூபாவரைக்கு மிருந்தால் 4-அணா தரமாகவும், 5—10 ரூபாவரைக்கு மிருந்தால் 8—அணா தரமாகவும், 10-ரூபாய்க்கு அதிகமாயிருக்தால் ஒரு ரூபா தரமாகவும் குயிற்ரென்டு ஏற்படுத்தவேண்டும்.

IX. ஒவ்வொரு மான்யத்துக்கும் மேற்சொன்ன பிரகாரம் குயிற்றெண்டு ஏற்படுத்தப்பட்டு அந்தப்படி மானியம் சுதந்தர

மாகச் செய்யப்பட்டபிறகு அந்த மானியத்தின் 20-வருஷ குயிட் ரெண்டை உடனேயாவது முன்பாவது கட்டிவிடுகிறபக்ஷத்தில் ஷை குயிட்ரென்டின் நிர்ப்பந்தத்தை நீக்கிக்கொள்வதற்கு மானிய தாரனுக்கு இஷ்டமிருந்தால் அவ்விதம் செய்துகொள்ளலாம்.

X. இறந்துபோன மானியதாரன் விஷயத்தில் விசாரணையி லிருக்கிற மானிய விஷயங்களை நடத்தும் கிரமம்.

1. இறந்துபோனவனுக்குச் சரியான பின்னிட்டதிகாரியா வது, அவிபக்த ஞாதியாவது இருந்தால் அப்பேற்பட்டவர்களுக்கு மானியத்தை ஸ்திரப்படுத்தப்படும். மானியதாரன் முதல் மானிய தாரனுடைய வம்ஸஸ்தனயிருந்தால் 5-வது நிபந்தனையில் 2-5-வது உட்பிரிவுவரைக்கும் சொல்லியிருக்கப்பட்ட நிபந்தனைகளை அநு சரித்தும், தானவிக்ரய மூலமாகக் கிடைத்திருந்தால் 7-வது நிபந் தனை பிரகாரமும் மானியத்தை சுதந்தரமுள்ளதாய் ஏற்பாடுசெய் யப்படும். 2. இறந்துபோன மானியதாரனுக்கு ஸ்வத்வாதிகாரி விபக்த ஞாதியாகவாவது மற்று எந்த பந்துவாகவாவது இந்து லா பிரகாரம் வார்ஸாக இருந்தால் இப்பொழுது ஸ்திரப்பட்டிருக்கிற நிபந்தனைகள் பிரகாரம் அவர்களுக்கு சாதாரணமாய் இனும் கொடு க்கப்படாமலிருந்தாலும், அப்படிப்பட்டவர்கள் சம்மதித்தாலும், சம்மதிக்காமற்போனலும் 7-வது நிபந்தனைபிரகாரம் சொற்ப தீர் வைவிதித்து அவனுக்கு மானியத்தைக் கொடுக்கப்படும். 3. இறந் தவனுக்கு வார்சுகளில்லாமற்போனல் பூர்த்தியான தீர்வை ஏற்படுத் தப்படும்.

XI. இறந்துபோனவர்களுடைய மானியங்கள் கவரன்மெண் டாருடைய உத்திரவுப்படிக்கு இப்போதைய அனுபவதாரனுக்கு ஜீவதசைவரையில் விட்டிருக்கும் பக்ஷத்தில் 5-வது உட்பிரிவில் சொல்லியிருக்கிற பிரகாரம் அரைப்பங்கு தீர்வையைக்கொடுத்து அந்த மானியங்களை ஸ்வதந்திரபாத்தியதை செய்துகொள்வதற்கு இஷ்டமிருந்தால் செய்யலாம். 2. கால நிர்ணயமல்லாமல் மானி யத்தை விட்டிருக்கும் பக்ஷத்தில் மானியதாரன் இறந்தபின்பு ஒரு நிவேதனபத்திரிகை தேவையாயிருந்தாலும், 5-வது, அல்லது 7-வது நிபந்தனைப்பிரகாரம் தீர்மானம் செய்யவேண்டும்.

XII. மேற்சொன்ன நிபந்தனைப்படி ஏற்படுத்தப்படும் குயிட்ரெண்டு மானியதாரனுக்கு அதிக ஸ்வதந்தரத்தை யுண்டாக்குவதற்குப் பரிவர்த்தனையா யேற்படுத்தப்பட்டதால் முன்னே ஏற்பட்டிருக்கிற பாடிகை அல்லது ஜோடியுடன் இந்தத் தீர்வையைக்கூட ஏற்படுத்தலாம். இந்த புதுத்தீர்வை மானியதாரனுடைய சுவதந்தரத்துக்குத் தகுந்ததாயிருக்கிறதேயல்லாமல் பூர்த்தியான தீர்வையை அனுசரித்து ஏற்படுத்தப்படாமல் அந்தத் தீர்வையில் வழக்கமான ஜோடி அல்லது பாடிகையைத்தள்ளிமிகுந்ததை மானியதாரன் அடைவான். நிகரமான லாபமாயிருப்பதனாலே அந்த லாபத்தை அனுசரித்து தீர்வை யேற்படுத்தவேண்டும்.

XIII. குயிட்ரெண்டு, பாடிகை இந்த இரண்டு மொத்தங்களுக்கு 20-மடங்கு தீர்வையை ஒரேதரமாகக் கட்டினால் அவ்விரண்டும் நிவிர்த்திசெய்யப்படும்.

XIV. 50-வருஷங்களுக்குள் பிறந்த மானியங்கள் கீழ்க்கண்டபிரகாரம் பிரிக்கப்பட்டிருக்கின்றன. 1. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்ட மானியம் 2. கவர்ன்மெண்டு உத்தரவில்லாமல் கீழ் ரெவினியூ உத்தியோகஸ்தர்களால் இஜாராதார் முதலானவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மானியங்கள். 3. ஜமீன்தார்கள், பாளையக்காரர்கள் இவர்களால் கொடுக்கப்பட்டு, அப்பேர்ப்பட்ட ஜமீன் அல்லது பாளையம் கவர்ன்மெண்டாருக்குச் சேர்ந்தவுடனே சேரவேண்டிய மானியங்கள்,

XV. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருடைய விவரமான உத்தரவுகளின்பேரில் கொடுக்கப்பட்ட மானியங்கள் விஷயத்தில் அதற்காகக் கொடுக்கப்பட்ட சாசனங்களிலாவது அதனிமித்தம் நடந்திருந்த விவகாரங்களிலாவது கண்டிருந்த நிபந்தனைகளின் பிரகாரம் நடத்தப்படும். 2. ஒரு தலைமுறைக்காவது, அதிக தலைமுறைக்காவது கொடுக்கப்பட்ட மானியங்கள் விஷயத்தில் ஷை நிபந்தனையில் கண்டபடிக்கு அந்தந்த மானியதாரன் அவனவனுடைய சந்ததிக்குத் தகுந்ததாக குயிட்ரெண்டு கொடுக்க ஒப்புக்கொண்டு தன்னுடைய மானியத்தை ஸ்வதந்தர பாத்தியதை செய்துகொள்ளும் விஷயத்தில் தவிர அந்தமானியங்களுடைய கெடுவு முடிந்தவுடனே பூர்த்தியான தீர்

வை ஏற்படுத்தப்படும். 3, சாஸ்வதமாகவும், வம்சபரம்பரையாகவும் கொடுக்கப்பட்ட மானியங்கள் விஷயத்தில் எவை தேவாலயங்கள், சத்திரங்கள் முதலானவைகளுக்குக் கொடுக்கப்பட்டதனல் அதற்குத் தகுந்ததாகவும், ஜீவனார்த்தம் கொடுக்கப்பட்டால் அதற்குத் தகுந்ததாகவும் 3-4-5-7 நிபந்தனையின்படி தீர்மானிக்கலாகும்.

XVI. கவர்ன்மெண்டு அதிகாரமில்லாமல் தாழ்ந்த ரெவினியூ உத்தியோகஸ்தர்கள் அக்கிரமமாய் கொடுத்த மானியங்கள் மோசத்தினல் அடைந்ததாகத்தெரியவந்தால் அந்த மானியத்தின்மேல் பூரா வான தீர்வை விதிக்கப்படும். தற்கால மானியதாரன் அந்தமோசத்தில் சம்பந்தமில்லாதவனுயிருந்தால் தயாவிஷயமாக முழுத்தீர்வையில் மூன்றில் இரண்டுபங்குதீர்வை ஏற்படுத்தி சாஸ்வதமாக இனம் ஏற்படுத்திக்கொள்ளலாம். மோசமில்லாமல் மான்யம் அடையப் பட்டிருந்தால் நெடுங்கால அனுபவத்தை அனுசரித்து 5-வது நிபந்தனையில் சொல்லியபிரகாரம் $\frac{1}{2}$-பங்கு தீர்வைக்கு குயிட்ரெண்டு ஏற்படுத்தி அது ஸ்வதந்தரபாத்யதையாய் சாஸ்வதமாகச் செய்யப் படும்.

XVII. ஜமீன்தாரர் பாளையக்காரர் முதலானவர்களால் கொடுக்கப்பட்ட மானியங்கள் 1802 வருஷத்திய 25 - வது சட்டம் 12 - வது செக்ஷனுக்கு விரோதமாக இருப்பதனல் செல்லாது. அவை கவர்ன்மெண்டாருடைய அறிக்கைக்கு வந்தபோதெல்லாம் சாதாரணமாக கவரன்மெண்டு நிலத்தில் சேர்த்துக்கொள்ளப்படும். ஆகையால் கவர்ன்மெண்டாருடைய உத்தரவின்றி தாழ்ந்த உத்தியோகஸ்தர்களால் கொடுக்கப்பட்ட மானியங்கள் விஷயத்தில் நடத்துகிற அமுலே நடத்தப்படும்.

XVIII. இப்பொழுது செய்யப்படாமலும் அவசியமில்லாமலும் இருக்கிற ரெவினியூபேரில் சேவகங்களுக்காக முன் துரைத்தனத்தாரால் கொடுக்கப்பட்ட மானியங்கள் இரண்டு வகுப்புகளாக இருக்கின்றன. 1-வது பிரிட்டிஷ் துரைத்தனம் வந்தபின்பு அச்சேவகங்கள் அவசியமல்லாததால் அந்தமானியத்திற்குப் பதிலாக ரொக்கமாகவாவது நிலமாகவாவது ஜீவனம் உண்டாக்கினவை. 2. எப்பொழுதாவது செய்யப்படுவதாயும் கவர்ன்மெண்டாருக்கு

உபயோகமில்லாததாயு மிருக்கிற சேவகங்களுக்காக சாஸ்வதமாகக் கொடுத்திருக்கும் மானியங்கள்.

XIX. தேஸ்முக், தேஸ்பண்டியம் முதலான சேவகங்களைப் போன்றவைகளுக்குக் கொடுக்கப்பட்ட முதல்வகுப்பு இனும்விஷயத்தில் ஜீவனார்த்தமாயிருக்கிறதே தவிர சேவகங்களுக்காக இல்லை. ஆகையால் கவர்ன்மெண்டாருடைய விவரமான உத்தரவுகளிலாவது தேசாசாரத்தினலாவது வம்சபாரம்பரியமாய் அனுபவிக்கிற நியமமுள்ளதா யிருந்தால், 5-வது நிபந்தனையின்படி தீர்மானம்செய்யவேண்டும். ஒருதலைமுறைக்கு மாத்திரம் நிர்ணயித்திருந்தபக்ஷத்தில் அதற்கு அனுகூலமாகத் தீர்மானிக்கவேண்டும்.

XX. இரண்டாவது வகுப்பு மானிய விஷயத்தில் அனுபவமுள்ளவர்களுக்கு ஸ்திரப்படுத்தலாகும். ஜீவனார்த்தமான மான்ய சங்கதியில் நிச்சயித்த உயர்ந்த தீர்வைக்கு அதிகப்படாத ஸ்வல்ப தீர்வை அந்தமான்யங்களுக்குக் கொடுத்துவரவேண்டும். மேற்கண்ட தீர்வை ஏற்படுத்துவது சேவகங்கள் நின்றுவிட்டகாரணங்களை யனுசரித்தும், கவர்ன்மெண்டாருக்குச் சேரும்பாத்யதையை அனுசரித்ததாகவும் இருக்கிறது. அந்த சொல்பதீர்வையின் வகுப்பும் பரிவர்த்தனை செய்யும்விதமும் சேவகத்தின் சுபாவத்தை யனுசரித்து அனுசரிக்கவேண்டும். 2. சொல்பதீர்வை இதுவரையில் ஏற்பட்டிருக்கும் பக்ஷத்தில் இப்போது ஏற்படுத்தும் அதிகதீர்வை 12-வது நிபந்தனையை அனுசரித்து இருக்கவேண்டும்.

---

## கிராம ஊழியங்கள்.

XXI. முதலாவது, இப்போதைக்கு அவஸ்யமான ரெவினியூ போலீஸ் சேவகங்களுக்காக அனுபவித்துவருகிறமானியங்கள் அந்த அதிகாரஸ்தனுக்கு ஸ்திரப்படுத்தப்படும். செட்டில்மெண்டுக்குக் கீழ்வந்த கிராமஊழிய இனும்களின்பேரில் 10-அணு தீர்வை விதிக்கப்படும். அப்படி தீர்வை விதிப்பதில் கீழ்க்கண்டதீர்வையை அனுசரிக்கவேண்டும். 1. ஜோடியுடன் குபிட்ரெண்டைச் சேர்த்தால் இனுமுக்கு சாதாரணமாக விதிக்கப்படும் முக்கால்தீர்வைக்கு அதிகப்பட்டால், முக்கால்தீர்வைக்கு அதிகப்பட்ட தீர்வையை வஜா செய்யப்படும். 2. ஜோடிமாத்திரம் முக்கால்தீர்வைக்கே அதிகமாக

வும், சம்மாகவும் இருக்கிறபக்ஷத்தில் ஜோடி மாத்திரம் வசூல்செய் யப்படும். 3. ஜோடி முழுத்தீர்வைக்கு அதிகமாக இருக்கிற பக்ஷத் தில் ரயித்துவாரிநிலங்களைப்போல் பட்டா பெறுவதற்கு இஷ்டமிரு ந்தால் பெறலாம்.

XXII. இரண்டாவது கிராமஸ்தர்களுக்கு தச்சன், கருமான் முதலியவர்கள் செய்யும் ஊழியங்களுக்காக அனுபவத்திலிருக்கிற மானியங்கள் வம்ச பாரம்பரியமாய் அனுபவிக்கத்தக்கதாக எண் ணப்படும். எந்த சேவகங்களுக்காக அந்தமானியங்கள் ஸ்திரப்படுத் தப்பட்டனவோ அவைகளை எப்போதும் நடத்தத்தக்க உடன்படிக் கையின்பேரில் கொடுக்கப்படும்.

XXIII. ஜமின்தாரிகளிலும் ப்ரொப்ரைடரி நிலங்களிலும் இ ருக்கின்றதும், சாஸ்வித பேஷ்கஷ் நிர்ணயித்தகாலத்தில் சேராத தும், 1802ஸுஷத்திய 25-ம் சட்டம் 4-வது செக்ஷன்படிக்கு கவர் ன்மெண்டாருக்கு பாத்யதை உண்டாக்கத்தக்க மான்யங்களைக் குறி த்து இப்போது விஜாரணைசெய்து பரிஷ்கரிக்கலாகும். கவர்ன்மெண் டு தாலூகாக்களிலுள்ள மானியங்களைத் தீர்மானிப்பதற்குச்சொல்லி ய பிரகாரம் கமிஷனர் பரிஷ்கரிக்கலாம். ஷை சட்டத்தின் 12-வது செக்ஷனுக்கு விரோதமாய் சாஸ்வதமான ஏற்பாட்டிற்குப் பிற்பாடு ப்ரொப்ரைடர்களால் கொடுக்கப்பட்ட மானியங்களைக்குறித்து இப் போது எவ்விதமான ஏற்பாடும் செய்யப்படாதே தவிர, அந்தஸ்திதி கள் கவர்ன்மெண்டாருக்கு இனிமேல் சேருங்காலத்தில் அதைப் பற்றி விசாரிக்கப்படும்.

XXIV. எவ்வளவும் தீர்வையில்லாமலாவது சொற்பதீர்வை யாவது இருக்கிற சுரோத்திரியங்கள், அக்கிரகாரங்கள், பூர்த்தியான மானியங்கள் என்று எண்ணப்படும். இவைகளை சொற்பமானியங் களைக்குறித்து சொல்லப்பட்டிருக்கிற நிபந்தனைபிரகாரம் தீர்மானிக் கவேண்டும்.

XXV. மானியம் யாரால் ரிஜிஸ்டராயிருக்கிறதோ அவனுட னுவது, ரிஜிஸ்டராயிருந்தால் மானியத்தை யனுபவிக்கிற குடும் படுத்தலைவ னிப்போதிய வழக்கப்படிக்கு கவர்ன்மெண்டாருக்குஉத் தரவாதியா யிருக்கிறபடியினலே அவனுடனுவது தீர்மானமுடைய

லாகும். ஆனால் இவ்விதமாகக் குடும்பத்தலைவனுடன் தீர்மானத்தை முடிவுசெய்துகொண்டு ஏற்படுகிற சொல்பதீர்வையைச் செலுத்திக்கொண்டு வேறே நிர்ப்பந்தங்களில்லாமல் உடன்படிக்கைகளுக்குட்பட்டு நடக்க சம்மதியுள்ள குடும்பத்திலெவராவது அந்த மானியங்களை உட்பங்குக்காரராக அனுபவிப்பதை இந்த நிபந்தனை தடுக்கமாட்டாது.

XXVI. சரியான வார்சுகளில்லாமற் போவதினால் பூர்த்தியாய் விடப்பட்ட மானிய சங்கதிகளிலேயும், அப்படிப்பட்ட வார்சுகளிருந்தும் அந்த மானியங்களைக்குறித்து அபியோகஞ் செய்துகொள்ளாத சங்கதிகளிலேயும் ரிஜிஸ்டர் அனுபவதாரனுக்கு அறிக்கை யனுப்பியும் அவன் வராமலும் தன்னுடைய பாத்தியதையை ரூபிக்காமலிருக்கிற விஷயத்திலும் அப்படிப்பட்ட மானியங்கள் முதலில் அந்த சில்லாகலெக்டரால் மறியலில் வைக்கப்படும். மறியலில் வைப்பதற்கு அறிக்கை கொடுத்தமுதல் ஒருவருஷ தவணைமுடிந்தவுடன் 1802-ஆு 31-வது சட்டத்தினால் கலெக்டருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை யனுசரித்து அந்த மானியங்களுக்குப் பூர்த்தியான தீர்வை ஏற்படுத்தப்படும்.

XXVII. கவர்ன்மெண்டு கணக்குகளில் கண்டிருக்கிறதைவிட மானியம் அதிகமாகவிருந்து அது ஐம்பது வருஷகாலம் அனுபவத்திலிருக்கிறதாகத் தெரியவந்தால் அது மானியத்தைச் சார்ந்ததாகவே எண்ணப்படும். ஐம்பது வருஷத்துக்குக்குறைந்த அனுபவமாகவிருந்தால் அந்தந்த விஷயத்துக்குத் தகுந்ததாகப் பூர்த்தியான தீர்வையில் மூன்றிலிரண்டுபாகத்துக் கதிகப்படாத தீர்வையை அந்த அதிகமானபூமிக்கு நிச்சயிக்கப்படும். அந்த அதிகத்திற்கு நிலைமையான அனுபவதாரனுடைய மோசம் காரணமாயிருந்தால் அதற்குப் பூர்த்தியான தீர்வைவிதிக்கலாகும்.

XXVIII. மேற்சொல்லிய நியந்தனைகளை அனுசரித்து ஒருவிசை சுவதந்தர பாத்தியதையாகச் செய்யப்பட்ட மானியங்களுக்கு நிச்சயித்த சுலபதீர்வையைக் கிரமமாய் வரப்பற்றிக்கொள்ள எவ்வளவு பிரவேசிக்கலாமோ அதைவிட அதிகமாய்க் கெவர்ன்மெண்டார் அந்த மானியவிஷயத்தில் பிரவேசிக்க நிமித்தமிருக்காது. இருபதுவருஷ சுலப தீர்வைக்குச் சமமான மொத்தத்தை ஒரேவிசை

யாய்ச் செலுத்திப்போடுவதினுல் ஷ சொற்பத்தீர்வையை நீக்கிக் கொள்ள மானியதாரன் ஸ்வதந்தரனுயிருக்கிறுன்.

XXIX. வருஷவாரி சுலபதீர்வை கொடுப்பதினுலாவது, இருபது வருஷங்களுடைய சொற்பதீர்வையை ஒருவிசையாகக் கொடுத்ததினுலாவது மேற்சொல்லியபடிக்கு ஸ்வதந்தர பாத்தியதையாய் செய்யப்பட்ட மானியங்களுக்குண்டான பாத்தியதை விஷயத்தைக் குறித்தும், வார்சாகிற விஷயத்தைக்குறித்தும் எவ்வித சச்சரவுகளர்வது சம்பவித்தால் அவைகளெல்லாம் மற்றவிதமான சொத்துக்களைப்போலவே சாதாரணமான நியாயஸ்தானங்களுடைய அதிகாரத்துக்குட்படும். மானியங்களை தனது இஷ்டப்படிக்குக் கொதுவை வைக்கவாவது, விக்கிரயஞ்செய்யவாவது, மற்றெவ்விதமாயாவது, இதராளுடைய ஸ்வாதீனப்படுத்தவாவது அனுபவதாரன் சுவேச்சாதிகாரியாகின்றுன். அந்த மானியங்கள் சுவல்பதீர்வையை நிவர்த்தி செய்துகொள்ளாத மானியங்களாயிருந்தால் சுவல்பதீர்வையைச் செலுத்தவேண்டியது.

XXX· மேற்சொல்லிய நிபந்தனைகளின்படிக்கு நடத்தப்பட்ட விசாரணையின்பேரில் பாத்தியதை ஸ்திரப்படுத்தப்பட்ட மானியங்களுக்கு உடனே அதிகாரிகளுக்கு சாஸனங்கள் கொடுக்கப்படும் இந்த சாசனங்களில் அவர்களுக்கு மானியத்தை யனுபவித்ததற்காக இப்போதைய நியமப்படிக் குண்டாயிருக்கிற ஸ்வபாவத்தையும் அதைச் சுதந்தரஸ்வத்துவமாகச் செய்துகொள்ள நிச்சயிக்கப்பட்ட பத்ததியும் உதகரிக்கப்படும்.

---

## இனும் கமிஷனரால் சேடில்மேண்டான இனும்களின் விஷயத்தில் கலேக்டர் வேலை. (B. O. S. 117.)

1. இனும் கமிஷனரால் செடில்மெண்டான இனும்களில் கலெக்டர் பிரவேசிக்கக்கூடாது. ரயித்வாரி நிலங்களுக்குரிய பாத்யதைகளெல்லாம் இதற்கு முரியன.

2. மதசம்பந்தமான ஊழியங்களுக்காகவும், நீர்ப்பாய்ச்சல் வேலைக்காகவும், பொதுஜனப் பிரயோசுத்துக்காகவும் கொடுக்கப்பட்ட இனும்கள் அப்படிப்பட்ட ஊழியம் நின்றுபோனுல் கலெக்டர் இனுமை ரத்துசெய்துவிடலாம். ஊழியம் நடக்காமல் நின்ற

போதும் எதற்கு மானியம் கொடுக்கப்பட்டதோ அது எடுபட்ட போதும், அப்படிப்பட்ட கேசுகளை போர்டாருக்கனுப்பவேண்டும். கொஞ்சகாலமாக அந்த வேலை நிறுத்தப்பட்டிருந்தால் வேலைநிறுத்தினவனுக்கு நோடீசுகொடுத்து வேலைசெய்கிறுனு இல்லையாவென்று பார்க்கவேண்டும். 12-வருஷமாக பாழாய்க்கிடந்தும் கேட்காமலுமிருக்கிற கோயிலுக்சாக விடப்பட்ட இனும் நிலங்களின்மேல் போர்டு சாங்ஷனுடன் முழுத்தீர்வை விதிக்கலாம். தசபந்தம்இனும்தாரர்கள் அவர்கள் செய்யவேண்டிய வேலையைச் செய்யாதிருந்தாலும் அவ்வேலையைச் சரிவர பார்க்காதிருந்தாலும் முழுத்தீர்வை விதிக்கப்படும்.

4. ஜீவனுர்த்தமாக கொடுக்கப்பட்ட இனும்விஷயத்தில் டயிடில்டீடில்கண்ட ஷரத்துகளை அனுசரித்து கலெக்டர் அமுல்நடத்தவேண்டும். ஒரு இனும் ஒரு தலைமுறைக்காவது இரண்டு தலைமுறைக்காவது கொடுத்திருந்தால் அந்தகால அளவைமுடிந்த பின்பு பூரா தீர்வைபோடவேண்டும்.

5. கிராம ஊழிய இனும்கள் விஷயத்தில் 1831-ஞு்த்திய 6-வது சட்டப்பிரகாரம் அமுல் நடத்தப்படும்.

6. சுதந்தரத்துடன் கொடுக்கப்பட்ட இனும்களுக்குள்ள தீர்வை வசூல் செய்வதில் ரயத்துவாரி நிலங்களின்மேல் நடத்தவேண்டிய அமுல்களை நடத்தவேண்டும். சாதாரண இனும் விஷயத்தில் அது பொருந்தாது.

---

7. புதிய செடில்மெண்டுப் பிரகாரம் இனும் கமிஷனர் ஒரு இனும் தாரனுக்கு ஒரு அக்குசாசனம் கொடுத்தால் அதை இனும் தாரன் அங்கீகரிக்கமாட்டேனென்றுல சாசனத்தை இனும் கமிஷனருக்கு அனுப்புவதுடன் பூரா தீர்வை விதிக்கப்படும்.

8. சாசனம் கொடுப்பதற்குமுன்பு ஒரு இனும்தாரன் இறந்துபோய்விட்டால் அந்த சாசனத்தை ரெவினியூ ஆபீசில் வைத்திருக்கவேண்டும். அதன்மேல் கலெக்டர் அந்த பூஸ்திதிக்குத் தகுந்த வார்சுதாரன் இன்னுனென்பதையறிந்து அவனுக்குக் கொடுக்கவேண்டும்.

9. கிராம ஊழிய இனங்கள்பேரில் போடுகிற புதிய குயிட் ரெண்டை கிராம ஊழிய பண்டுக்குச்சேர்க்கப்படும்.

10. சர்க்கார் தீர்வைக்காக சர்க்காரார் வசத்தில் எடுத்த நிலங்களை ரயித்துவாரி நிலங்களுடன் சேர்த்துவிடப்படும்.

வார்சுமுறைமை. (B. S. O. 118.)

(*Succession.*)

இரண்டு அல்லது மூன்று தலைமுறைக்குக் கொடுக்கப்பட்ட இனம்களில் எவனுக்கு இனம் கொடுக்கப்பட்டதோ அவன் முதல் தலைமுறையாகவும், அவனுக்குப் பின்னால்வருபவனை இரண்டாந் தலைமுறையாக எண்ணவேண்டும். இரண்டாந்தலைமுறையில் சந்ததியில்லாமல் இறந்துவிட்டால் அதனுடன் இனம் போய்விட்டதாக எண்ணவேண்டும்.

இனம்களை சப்டிவிஷன் செய்வது. (B. S. O. 119.)

(*Subdivision of Inams.*)

ஒரு மானியத்தை சப்டிவிஷன் செய்துகொள்ள வேணுமென்றால் அந்த மானியத்துக்குடைய பாத்தியஸ்தர்களெல்லாம் ஒன்று சேர்ந்து இவ்வாறு சப்டிவிஷன் செய்யவேண்டுமென்பதையும், அதற்குக் கட்டவேண்டிய தீர்வை இன்னான் கட்டவேண்டுமென்பதையும், ஒற்றுமையுடன் ஷை நடவடிக்கைகளை நடத்துகிறார்கள் என்றும் கண்டு ஒரு முத்திரைக்கடுதாசியில் எழுதி ரிஜிஸ்டர்செய்து கலெக்டரிடத்தில் கொடுக்கவேண்டும். அதன்பேரில் அதற்குவேண்டிய வேலைகளெல்லாம் செய்து சப்டிவிஷன் செய்யவேண்டும். கலெக்டர் ஷை மனுவை அங்கீகரித்துக்கொண்ட உத்தரவை தாலூக்கா அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

கீழ்க்குத்தகை முதலியன. (B. S. O. 121.)

(*Sublet.*)

ரிஜிஸ்டர் மான்யதாரன் கவர்ன்மெண்டாருடைய ஸ்வதந்தரத்துக்கு விரோதம் ஹானிவரவொட்டாமல் விற்கவும், வேறு எவ்விதமான மாறுதல்கள் செய்யவும் அவனுக்கு அதிகாரமுண்டு. அதை கலெக்டர் டிரான்ஸ்பர் செய்து ரிஜிஸ்டர் செய்யலாம்.

12

## ராஜாங்க காரியங்களுக்காக எடுத்துக்கொண்ட மானியங்களுக்கு கம்பன்ஸேஷன் கொடுத்தல். (B. S. O. 122.)

*(Compensation for Inams taken for Government purposes.)*

இவைகள் மானியதாரனுடைய சக்திக்கு மிஞ்சியிருக்கிற காரணங்களினுல் சம்பவிக்கும் நஷ்டம் கவர்ன்மெண்டாருடைய காரியத்தினுல் நஷ்டம் என வழக்குகளுக்கு உண்டான ஆதாரங்களை இரண்டு பகுப்பாகப் பிரிக்கப்படும்.

1. மானியதாரனுடைய சக்திக்கு மிஞ்சின காரணங்களாடல் உண்டான நஷ்டம். இதில் மான்யத்தின் சுபாவமே அதை நடத்த ஆலோசனையுள்ளதாய் இருக்கிறது. மான்யம் துரைத்தனத்தாருக்குச் செய்கிற ஊழியத்துக்காகக் கொடுக்கப்பட்டிருந்தால் அதாவது தச்சன், கருமான் முதலியவர்களுடைய மானியங்கள்தவிர மற்றவர்களுடைய மானியங்களையாவது தேவஸ்தான மானியங்களிலிருந்து பிரத்தியேகப்பட்ட ஒரு சத்திரமானியமாவது இவைகளில் ஷை காரணத்தால் நஷ்டம் சம்பவித்திருக்கிறதென்றும், இனி அம்மானியத்தில் வரும் வருமானம் போதாதென்றும் நிச்சயப்பட்டால் அதற்கு கம்பன்ஸேஷன் கொடுக்கலாம். இதற்குப்பதிலாக கொடுக்கப்பட்ட மாறுதல் நிலசம்பந்தமாகவும், சொல்ப தீர்வையை முறைத்ததாகவும் இருக்கும். முதல்சங்கதியில் நஷ்டத்துக்கு பதிலாக மதிப்புள்ள பூமியை ஏற்படுத்திக் கொள்வதற்காகவாவது, அதிகவிலை யுயர்ந்த நிலத்தை வித்தியாசமான தீர்வையைக்கட்டி எடுத்துக்கொள்ளவாவது மறுதிரவியம் கொடுத்து நில சப்டிவிஷன் செய்வதை சாத்தியமானவரைக்கும் நிவிர்த்திசெய்யவேண்டியது. காம்புநிலம் கொடுக்கப்பட்டால் அவஸ்யமான இடத்தில் ஸ்வல்பதீர்வையை நிர்ணயித்து ஒரு ஏகராவுக்குக் குறைவில்லாமல் கொடுக்கவேண்டியது. இனம் கெவர்ன்மெண்டாருக்குச் செய்யப்படுகிற ஊழியத்துக்காகக் கொடுக்கப்படாமலிருந்தால் கம்பன்சேஷன் மனு தள்ளிவிடப்படும்.

2. கவர்ன்மெண்டு காரியங்களால் சம்பவித்த நஷ்டம். இதை B. S. O. 111-வது பிரகாரம் தீர்ப்பு செய்யப்படும்.

## தண்ணீர்தீர்வை. (B. S. O. 123.)
## (*Water rate.*)

மான்யதாரனுடைய இனும் சாசனத்தில் காட்டப்பட்ட நஞ்சைநிலத்தில் பயிரிடுகிற ஒருபோகத்துக்கு ஜலத்தை பாய்ச்சிக்கொண்டால் அதற்குத் தண்ணீர் தீர்வை கிடையாது. அந்த நஞ்சைநிலம் இருபோக நஞ்சைநிலமாயிருந்தால் இருபோகத்துக்கும் தண்ணீர்தீர்வை கிடையாது. ஆகிலும், ரிஜிஸ்டர் செய்யப்பட்ட புஞ்சைநிலம் கவர்ன்மெண்டு தண்ணீர்பாய்கிற வேலைகளினால் நஞ்சை நிலமாக மாற்றப்பட்டபோது மானியத்தின் நஞ்சைசாகுபடி நிலத்தினுடைய தண்ணீர்தீர்வையை விதிக்கப்படும். எவ்வித விசேஷமான தீர்வையில்லாமலே மானியதாரனுடைய உபயோகத்துக்காக தண்ணீர்பாய்ச்ச லாதாரத்தை விர்த்திசெய்ய கவர்ன்மெண்டார் எடுத்துக்கொள்ள மாட்டார்கள். ஆனால் தண்ணீர் பாய்கிற வேலைகளுக்காக செய்யப்பட்ட ரிபேரினால் முன்தண்ணீருடைய வசதியை பூர்த்தியாயாவது கொஞ்சமாயாவது மறுபடியும் உண்டுபண்ணினால் அதற்கு வேறுதீர்வை கிடையாது.

## அதிக அல்லது மிச்சநிலங்களின் விஷயத்தில் நடத்தவேண்டிய நடவடிக்கை. (B. S. O. 124.)
## (*Excess Measurement.*)

சில்லரைமானியங்களில் அதிகமாக விஸ்தீரணம் காணப்பட்டால் அவற்றைப் பின்வருமாறு பரிஷ்கரிக்கவேண்டும்.

2. மானிய சாசனத்தில் ஏகரா கணக்குப்படி எழுதப்பட்ட நிலம் சுதேச அளவைக்கொண்டு செய்யப்பட்டது.

3. அளவான பிறகு தேசபரிமாணத்தை ஏகராவாக மாற்றுவதற்கு ஆசாரத்திலிருக்கிற ஸ்தல அளவுப்படிக்கு போதாததாய் காணப்பட்டால் முதன் முதல் அளந்தபோது சம்பவித்தபிசகை திருத்துவதற்காக 100-க்கு 10-வீதம் தீர்வையில்லாமலே சேர்த்து ஸ்தலசம்பந்தமானபரிமாணத்தில் ஏற்பட்டிருக்கும் மானியநில விஸ்தீரணத்தை ஏக்கராக்களாகமாற்றி கட்டிக்கொடுக்கவேண்டியது.

6. அதிக நிலத்தின் விஸ்தீரணத்தைச் சரியாக விஸ்தீர்ணிப்பது கஷ்டமாயிருக்குமாதலால் அதற்குப் பட்டா கொடுக்கக்கூ

டாது. அப்படிப்பட்ட அதிகநிலத்தின்பேரில் வரவேண்டிய தீர்வை மொத்தத்தீர்வையுடன் சேர்க்கவேண்டும்.

மானியங்களை விட்டுவிடவேண்டியது. (B. S. O. 125.)

(*Relinquishments.*)

பட்டாநிலங்களை விட்டுவிடுவது எந்தநிபந்தனைகளை அனுசரித்து அங்கீகரிக்கப்படுகிறதோ அந்த நிபந்தனைகளையே அனுசரித்து மானிய சுவதந்தரிய பத்திரிகை கொடுத்தபிறகு ஜோடிராஜினுமா கொடுக்கிறதை கலெகடர் அங்கீகரிக்கலாம்.

2. ஒரு இனும் பத்திரிகையினால் கண்ட சப்டிவிஷன் செய்த மானியங்களைத் தனித்தனியாகவும் அங்கீகரிக்கலாம்.

3. ஜோடி ராஜினுமா கொடுத்த நிலத்துக்கு உள்ளதீர்வையின் மொத்ததீர்வையில் சராசரியாயிருக்கவேண்டும்.

5. இனும்தாரன் இன்னுனென்பதை ஸ்திரப்படுத்த கஷ்டமாயிருக்கிற விஷயத்தில் அப்படிப்பட்ட மானிபங்களை ஜோடிராஜினுமா கொடுத்தால் அதனை அங்கீகரிக்கப்படமாட்டாது.

விற்பனை. (B. S. O. 127.)

(*Sale.*)

ஒரு இனும்தாரன் கட்டவேண்டிய தீர்வையை கட்டாதிருந்தால் அதற்குப் போதுமான அளவு விஸ்தீர்ணநிலத்தை விற்கவேண்டும். அதை விற்பனைசெய்வதில் இனும் நிலமென்றே விற்பனை செய்யவேண்டும். விற்பனையில் ஒருவரும் கேளாவிடில் அதை கெவர்ன்மெண்டார் எடுத்துக்கொண்டு ரயத்துவாரி நிலத்துடன் சேர்த்து விடவேண்டும்.

---

## SECTION IV.
## MISCELLANEOUS.
## பொது விஷயங்கள்.

சுதேசிகளுக்கு தர்ம சத்திரங்கள் (B. S. O. 137.)

(*Native choultries.*)

சாதாரண மனிதர்களால் கட்டப்படும் சத்திரங்களுக்கு புறம்போக்கு நிலங்களை மஞ்சூருசெய்வதில் கீழ்க்கண்ட நிபந்தனைகளை அனுசரிக்கவேண்டும்.

1. ஒருசத்திரத்தைக் கட்டுவதற்கு முன்பு அதைக்கட்டுவிப்போன் போர்டாருடைய அனுமதியைப் பெறுமற்போனால் அதற்கு நிலம் தானமாகக் கொடுக்கக்கூடாது.

2. அப்படிக் கட்டும்படியான சத்திரத்தில் எல்லாமதஸ்தர்களும் தங்க இடமிருக்கவேண்டும். பிராமணர்களும், சூத்திரர்களும் தங்குவதற்கு ஒரு கட்டடமும், இதரமதஸ்தர்கள் தங்குவதற்கு ஒரு கட்டடமும் இருக்கவேண்டும்.

3. மேற்சொன்ன சத்திரங்களுடைய ஆதரணைக்காக வருஷத்திற்கு 60-ரூபாய்க்கு மேற்பட்ட கரம்பு நிலத்தை எந்தவிஷயத்திலும் கொடுக்கக்கூடாது.

4. ஒரு ரோட்டில் கட்டப்பட்டிருக்கும் இரண்டு சத்திரங்கள் ஒன்றுக்கொன்று 10-மயில் தூரத்தில் இருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் கரம்புநிலம் தானமாகக் கொடுக்கப்படும். ஆகிலும் சில விசேஷ காரணங்களைப்பற்றி கலெக்டருக்குத் தோன்றினால் கொஞ்சதூரங்களில் சத்திரங்கட்ட உத்தரவுகொடுக்கலாம்.

5. சத்திரம் சரியாக இருக்கிறதென்பதையும், வழிப்போக்கர்களுக்கு சரியான சவுக்கியம் செய்வதற்கு வேண்டிய வேலைக்காரர்களை ஏற்படுத்தியிருக்கிறதென்பதையும் கலெக்டர் அடிக்கடி விசாரணை செய்யவேண்டும்.

6. ஒரு சத்திரம் மேற்கூறிய நிபந்தனைகளுக்கு உட்படாவிட்டால் அதற்குரிய நில தானத்தை ரத்துசெய்துவிடலாம்.

சத்திரத்தை ஒருவனே தனது சொந்த பிரயோசனத்துக்காக வைத்துக்கொள்ளக்கூடாது. சத்திரம் பொதுஜனப் பிரயோசனத்துக்கென்றே கட்டப்பட்டதென்று கொள்ளவேண்டும்.

---

## COURT OF WARDS.

## கோர்ட் ஆப் வார்ட்ஸ்.

### நிலத்தீர்வை விதிப்பதும் வசூல்செய்வதும். (B. S. O. 210.)

### (*Assessment and Collections.*)

1. சில வருடங்களுக்கு கோர்ட்ஆப்வார்ட்ஸாரிடத்தில் ஒரு மைனருடைய நிலம் தங்கியிருக்குமென்று தெரிந்தால் ரயத்வாரி

நிலங்களின் மேல் வரிமுதலியவைகள் விதித்து அவைகளை வசூல் செய்யும் நிபந்தனைகளையே யனுசரிக்கவேண்டும். வருஷங்களுக்கு குத்தகைக்குவிடும் வழக்கத்தை கூடியமட்டில் எடுத்துவிடுவதற்கு ஏற்பாடுசெய்யவேண்டும்.

2. கோர்ட்டாருடைய ஆதீனத்தின் கீழ்வந்தபின் உண்டான தீர்வை பாக்கிக்காக நிலங்களை விற்கக்கூடாது. மானேஜ்மெண்டை சரியானவனிடம் ஒப்புவைக்கும்போது இதற்குமுன் உண்டான பாக்கிகளையெல்லாம் தள்ளிவிட வேண்டியதாயிருப்பதால் கவர்ன் மெண்டுக்குச் சேரவேண்டிய தீர்வையை வசூல்செய்ய கலெக்ட்டர் தன்னாலியன்றமட்டும் முயலவேண்டியது.

3. கோர்டாரிடம்நிலம்வந்ததும் நிலமுடையவனுக்கும் குடித்தனக்காரருக்கும் உடைய சம்பந்தம் கலெக்ட்டருக்கும் குடிகளுக்கும் உண்டாய்விடுகிறது.

## தீர்வைவஜா. (B. S. O. 211.)

## (*Remissions.*)

கலெக்டர் போர்ட்டாருடைய உத்தரவைப்பெருமலும் சதாரணமாய் சம்ஸ்தானத்தில் ஆதாரத்தின் கீழ்வரும் வஜாவைத்தவிர வேறு எவ்வித தீர்வை வஜாவும் கொடுக்கக்கூடாது. காலமழையில்லாதுபோய் பஞ்சம் உண்டாகும் காலத்தில் கோர்ட்டாருடைய அனுமதியைக்கொண்டு ரிலீப்வேலைகள் செய்யலாம்.

## பவுண்டு பண்டு. (B. S. O. 96.)

## (*Pound-Funds.*)

1. கிராமப் பவுண்டுகளிலிருந்துவரும் பவுண்டு பணங்களை விவசாயவேலைக்காக செலவிடவேண்டும்.

கீழ்க்கண்ட பிரகாரம் பவுண்டு தீர்வை வசூல் செய்யப்படும்.

| | |
|---|---|
| யானை ... ... ... | 2—0—0 |
| ஒட்டகம், அல்லது எருமை ... ... | 0—8—0 |
| குதிரை, கோவேறுகழுதை, பசு, எருதுமுதலியன | 0—4—0 |
| கன்று, கழுதை, பன்றி ... ... ... | 0—2—0 |
| ஆடுவகையருக்கள். ... ... ... | 0—1—0 |

பவுண்டில் அடைக்கப்படும் மாடு முதலிய மிருகங்களுக்குதீனி, தண்ணீர் முதலியன இடுவது பவுண்டு கீபருடையவேலை. அதற் குண்டாகும் செலவை மாட்டு சொந்தக்காரனிடமிருந்து வசூல் செய்யப்படும்.

5. மாட்டுக்குச் சொந்தக்காரன் வராவிட்டால் அதை மாஜிஸ் திரேட்டின் உத்தரவின்மேல் ஏலத்தில்விடப்படும். அப்படிக்கேலம் போட்டு வந்தபணத்தில் செலவுபோக மிகுந்த பணத்தை 3-மாதம் டிபாசிட்டில் வைத்து அதற்குள் பணத்துக்குடையவன் வாராவிட் டால் பூவுண்டு பண்டுக்கு சேர்த்துவிடப்படும்.

7. சாதாரணமாக பவுண்டு கீபர்களுக்கு பேர்பாதி பவுண்டு வசூல்தரப்படும். அப்படிக்கொடுக்கும் பணத்தின்தொகை மாதம் ஒன்றுக்கு 5-ரூபாய்க்கு அதிகரிக்கக் கூடாது. ஒரு ரூபாய்க்கு குறைந்து வசூலானால் அந்த தொகை முழுவதையும் பவுண்டுகீபர் எடுத்துக்கொள்ளலாம். ஒன்றுக்குமேல் இரண்டுரூபாய்க்குள் வசூ லானாலும் அதில் ஒருரூபாய் பவுண்டுகீபர் எடுத்துக்கொள்ளலாம். இருநூறுமுதல் 400-ரூபாய்வரைக்கும் வருஷவாரி வசூலாகும் பவு ண்டுகளுக்கு பவுண்டுகீபராயிருப்பவர்களுக்கு ரூபாய் 6 சம்பளம் கொடுக்கலாம் 400-ரூபாய்க்குமேல் வசூலானால் 7-ரூபாய் சம்பளம் கொடுக்கப்படும்.

## ஜனனமரண ரிஜிஸ்திரேஷன். (B. S. O. 194.)

## *(Birth and Death Registration.)*

மானுஷ ஜனன மரணத்துக்குரிய விருத்தாந்த கணக்குகள் வைக்கப்பட வேண்டியதாய் 1865வூ த்தில் ஏற்பாடுசெய்து இது வரையில் ஆசாரத்தின்கீழ் இருப்பதால், அபூர்த்தியாயும் அபத்தமா யும் தயார் செய்தனுப்புங் கணக்குகளைப்பற்றி கிராம உத்தியோகஸ் தர்கள் சொல்லும் முகாந்தரங்களை ஏற்றுக்கொள்ளப்பட மாட் டாது. ஜமாபந்திகாலத்தில் பட்டாமாற்றிக்கொள்ள வந்திருப்பவர் களை கலெக்டரும், டிவிஷனலாபீசரும் ஷை கணக்கில் கண்டிருப் பது சரியாவென்று அறிவதற்கு, வாக்குமூலம் வாங்கலாம். இப்படி கிராமஸ்தர்களுடன் நேரே சம்பாஷணைசெய்தால் அதனால் ஷை கணக்கு சரியாக்வைக்கப்பட்டு வருமென்பதற்கு ஒரு சந்தேகமு மில்லை. வேலைத் தொந்திரவினால் அபத்தமான கணக்குகளைத் தயார்

செய்து மோசநிலைக்குள்ளான விஷயங்களைப்பற்றி கண்சாய்ப்பாயும் விட்டுவிடக்கூடாது. வரவர சரியான கணக்குகளை வைக்கும்படியான விருத்தியைச் செய்துவரவேண்டும்.

2. ஜனனமரண கணக்குகளை சரியாகவைக்கவேண்டும் என்று கலெக்டர் ஜமீன்தாரர்களுக்குத் தெரிவித்து அவர்கள் தங்கள் கரணங்களைக்கொண்டு சரியானகணக்கு வைக்கும்படிச் செய்யவேண்டும்.

3. வாந்திபேதியிலுண்டாகும் மரணங்களுக்காகப் பிரதிதினம் வரப்பட்ட கலராரிபோர்ட்டுகளின் விஷயங்களில் போலீசாருடைய கணக்கு கிராமவாரி மரண ரிடர்ன்களைத் தணிக்கைசெய்ய உதவுமானதால் அவர்களுடைய சகாயத்தினால் அடிக்கடி அனுகூலமுண்டாகக்கூடும்.

தேவாலயங்களில் உற்சவம். (B. S. O. 194. A.)

(*Festivals.*)

எந்த ஊரிலாவதுள்ள தேவாலயத்தில் திருவிழா நாளன்று 10,000 அல்லது அதிகசங்கியை ஜனங்கள் கூடுமென்றிருந்தால் அப்படிப்பட்ட தினம் இன்னதென்று அதற்கு பதினன்குதினங்களுக்கு முன்கலெக்டர் சானிடெரிகமீஷனருக்கும், ஜில்லா சானிடெரி ஆபீசருக்கும் கலெக்டர் தெரிவிக்கவேண்டும்.

அம்மைகுத்துதல். (B. S. O. 203.)

(*Vaccination.*)

அம்மைகுத்தும் இலாகாவால் தர்மார்த்தமாக செய்யும் வேலையாக அம்மைகுத்துவதை ஜெனங்களுக்குள் ஆசாரத்தில் கொண்டுவருவதற்கு தகுந்த எப்பாடுகளை கலெக்டர் செய்யவேண்டியது. சர்கூட்டில் போகையில் ஒருரெவினியூ உத்தியோகஸ்தன் தன்னுடன் ஒரு வைத்திய இலாகாவைச் சேர்ந்தவனை அழைத்துக்கொண்டு போய் தான் செல்லும் ஊர்களுள் உள்ள ஜெனங்களுக்கு அம்மைகுத்தும்படிச்செய்யவேண்டும்.

2. ஒருவாக்ஸினேடர் ஊர்களுக்குவந்தால் அந்த ஊர்க்கிராம முனிசிபு அவனுடன் கூடவிருந்து அவன் அவ்வூரில் செய்யும் வேலையைப்பற்றி தாசில்தாரன் முகாந்தரமாய் டிப்டி இன்ஸ்பெக்டர்ஆப் வாக்ஸினேஷனுக்கு ஒரு ஸ்டேட்மெண்டு அனுப்பவேண்டும்.

## வெள்ளத்தைப்பற்றி தந்தி செய்யவேண்டியது. (B. S. O. 197.)

## (*Occurrence of floods to be telegraphed.*)

பெரிய நதிகளில் வெள்ளம் வருவதனால் உண்டாகும் நஷ்டத்தை வெள்ளம் வருவதற்குக் கொஞ்ச காலத்திற்கு முன்பு தெரிந்தால் அதைத்தடுக்கலாம். மேல் ஜில்லாக்களிலுள்ள ஆறுகளில் வெள்ளம் வருவதை அறிந்த ஜில்லா கலெக்டர் கீழ்ஜில்லாவிலுள்ள கலெக்டருக்கு தந்திமூலமாய் தெரிவிக்கவேண்டும்.

## தொத்து வியாதிகள் நேரிடும்போது செய்யவேண்டியவை. (B. S. O. 195.)

## (*Outbreak of Epidemic diseases.*)

1. ஒரு கிராமத்தில் வாந்திபேதி, அம்மை முதலிய தொத்து வியாதி நேரிட்டால் அதைப்பற்றி, தாசில்தார் அல்லது டிப்டி தாசில்தாருக்கு கிராம மணியமாவது, அவனில்லாதபக்ஷத்தில் கிராமகர்ணமாவது உடனே தெரிவிக்கவேண்டும்.

2. ஷை விஷயத்தை தாசில்தார், அல்லது டிப்டி தாசில்தார் மெடிகல் டிபார்ட்டுமெண்டு கீழ் உத்தியோகஸ்தனுக்கும், ஜில்லா கலெக்டருக்கும், டிஸ்டிரிக்ட் மெடிகல் ஆபீசருக்கும், தாலூகா போர்ட்டு பிரஸிடெண்டுக்கும் தெரிவிக்கவேண்டும். அம்மை பிரபலமாயிருக்கும்போது வாக்ஸினேஷன் டிப்டி இன்ஸ்பெக்டருக்கும், ஸர்க்கில் வாக்ஸினேடருக்கும் தெரிவிக்கவேண்டும்.

3. தாசில்தாராவது, டிப்டி தாசில்தாராவது ஷை சமாசாரத்தை அறிந்தவுடன் அந்த இடத்திற்கு உடனே தானுகப்போயாவது, அல்லது ரெவினியூ இன்ஸ்பெக்டரை யனுப்பியாவது தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும்.

5 மேலே கூறிய நிபந்தனைப்படி சென்ற உத்தியோகஸ்தர்கள் மெடிகல் ஆபீசர் வருகிறவரையில் அவ்விடத்திருந்து அவர் வந்தபிறகு தங்கள் வேலைக்குப் போய்விடலாம்.

6. ஷை சமாசாரத்தைத்தெரிவிப்பதில் கிராம மணியக்காரர்களுக்கும், ரெவினியூ உத்தியோகஸ்தர்களுக்கும் நேரிட்டசெலவை தாலூகா போர்டார் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

## தண்டுகளுக்கு வழிப்பிரயாணத்துக்கு வண்டி முதலானவைகளைச் சம்பாதித்துக் கொடுத்தல். (B. S. O. 204.)

### (*Carriage of troops.*)

இராணுவ உத்தியோகஸ்தர்களும், அதைச்சார்ந்த கமிஸேரி ஏட் டிபார்ட்டுமெண்டு உத்தியோகஸ்தர்களும் அவர்களுக்கு வேண்டிய பண்டி முதலிய சாமக்கிரியைகளை சம்பாதிக்கக்கூடாத விஷயத்தில் கலெக்டர் அவைகளை சம்பாதித்துக்கொடுக்கவேண்டியது. தண்டுகள் புறப்படும் விஷயத்தைப்பற்றி அந்த தண்டின் தளகர்த்தர்கள் சிவில் அதிகாரிகளுக்கு முன்னதாகத் தெரிவித்தால் அவர்கள் தண்டுக்குவேண்டிய வண்டிமுதலியவைகளைச் சம்பாதித்துக்கொடுப்பார்கள். கலெக்டர் தன்னால் கூடியமட்டும் பண்டிகளை குத்தகைக்கே வைத்துக் கொடுக்கவேண்டும். மிகவும் அவசரமாயிருந்தா லொழிய கலெக்டர் பலாத்காரமாக அமைத்துவைக்கக்கூடாது. பலாத்காரமாய் அமைத்து வைக்கும் விஷயத்தில் கீழ்க்கண்ட விதிகளை அனுசரிக்கவேண்டும்.

1. தண்டுகள் சில்லா மூலமாகப் போகும் விஷயத்தில் அந்த சில்லா கலெக்டருக்கு பண்டிகள் வைத்துக்கொடுப்பது முக்கியமான அலுவலாக யிருக்கிறபடியினால் அவர்களுடைய சில்லாவில் வாடைகைகளுக்கு அகப்படும் வண்டிகளின் கணக்கைத்தயார்செய்து வைத்திருக்கவேண்டும்.

2. சாதாரணமாய் ஒருவன் கூலிக்கு வைத்துக்கொண்டிருக்கும் வண்டி தண்டுபோகும்போது முக்கியமாக வேண்டியிருக்கும் பக்ஷத்தில் அதைக்கூலிக்கு அமைத்துக்கொள்ளலாம். இப்படி பலாத்காரமாக வேலையை நிறைவேற்றுவதில் ஜனங்களுக்குக் கஷ்டத்தை உண்டுபண்ணக்கூடாது.

3. ஒருதண்டின்தலைவன் இத்தனை வண்டிகள் வேண்டுமென்று தெரிவித்ததன்மேல் குடிகளின் வண்டிகளை யமைத்து அவைகளைக் கச்சேரிக்குக் கொண்டுவரச்செய்து அதை இரண்டுநாளைக்கு முன்னமே அவர்களுக்கு ஒப்புவித்து விடவேண்டியது.

4. வண்டிகள்வந்து சேர்ந்ததும் கலெக்டர் மிலிடெரி உத்தியோகஸ்தனுக்குத் தெரிவிக்கவேண்டும்.

5. அவர்கள்வந்து வண்டிகளை ஒப்புக்கொண்டதும் வேண்டா மென்று தள்ளிவிட்டவண்டிகளைப் போகும்படிச் செய்துவிடலாம்.

6. வண்டிகளுக்குக் கொடுக்கும் கூலியை கலெக்டர் தற்கால தானியம் வைக்கோல் விலையைக்கண்டு தீர்மானிக்கவேண்டும். சாதாரண ஜனங்கள் கொடுக்கும் கூலியைப் பார்க்கிலும் கவர்ன்மெண்டார் கூலி அதிகமாயிருக்கும்.

7. பண்டியொன்றுக்கு 100-மயிலுக்கு உட்பட்ட தூரமாயிருந்தால் 10-மயிலுக்கு 8-அணாவீதமும், அதற்குமேற்பட்ட தூரமாக விருந்தால் 12-அணா வீதமாகவும் கலெக்டர் தன்னுடைய பொக்கிஷத்திலிருந்து முன்பணம் கொடுக்கலாம். மேலும் கலெக்டர் பண்டிகளின் மேஸ்திரிகளுக்குக் கொடுக்க 10-மயிலுக்கு 1-அணா வீதம், ஒவ்வொருபண்டிக்காரனிடத்திலும் பிடித்துக்கொள்ளவேண்டியது. கலெக்டர் யுக்தப்பிரகாரம் அந்தப்பண்டிகளின் மேஸ்திரிக்கு முன்பணம் கொஞ்சம் கொடுத்து அவன் தண்டுக் கதிகாரியிடத்திலிருந்து பண்டிக்காரர்கள் நியமித்த இடத்திற்போய்ச் சேர்ந்தவர்கள் என்றும் குத்தகை யுடன்படிக்கையை நிறைவேற்றினார்களென்றும் பத்திரங்கள் கொண்டுவந்தபிறகு மிகுதிப்பணத்தைக் கொடுக்கவேண்டும்.

8. 15-மயில் அல்லது அதற்கு மேற்பட்ட தூரத்திலிருந்து பண்டிகளைக் கொண்டுவந்தால் பண்டி 1-க்கு 15-மைலுக்கு 4-அணா வீதம் படி கொடுக்கவேண்டியது. அன்றியும் அந்தப்பிரகாரமே தன்னுடைய கச்சேரியில் நிறுத்திவைக்கிறபக்ஷத்தில் எத்தனைநாள் நிறுத்திவைக்கப்படுகிறதோ அத்தனை நாளுக்கும் படி கொடுத்துவரவேண்டியது. கலெக்டர் அனுவசியமாய் வண்டிகளை நிறுத்திவைக்கக் கூடாது. ஒருவேளை நிறுத்திவைக்கிறதற்கு அவசியமிருந்தால் நிறுத்திவைக்கப்பட்ட நாளைக்கெல்லாம் பாடா கொடுத்துவரவேண்டியது. இந்தப்படியும், தூரத்திலிருந்து கொண்டுவந்த வண்டிகளுக்குக் கொடுத்திருக்கும படியும் கவர்ன்மெண்டார் கணக்கில் பதிய வைத்திருக்கவேண்டும்.

9. வண்டிகள் சம்பாதிப்பது கஷ்டமாயிருக்கும் பக்ஷத்தில் இதர டிபார்ட்மெண்டார் வைத்திருக்கும் வண்டிகளை கட்டாயப்படுத்தித் தாங்கள் அமைத்துக்கொள்ளலாம்;

## வழியிலே தண்டுக்கு சாமக்கிரியைகளைச் சேகரித்துக்கொடுக்கும் விஷயம். (B. S. O. 205).

### *(Supplies to Troops on their way.)*

தண்டுகளின் அதிகாரி ஆங்கிலோதேசத்தானுனாலும் அல்லது இந்து தேசத்தானுனாலும் அவருடைய அதிகாரத்தின் கீழிருக்கிற எல்லா சயினியத்துக்கும் சாமக்கிரியைகளைச் சேகரித்துக் கொடுக்கும் விஷயத்தில் சிவில்முதலான அதிகாரிகளுக்கு முன்னதாக விளம்பரம் அனுப்பவேண்டும். ஆனால் அப்படிப்பட்ட விளம்பரம் 12 பேருக்கு அதிகமான சுதேச சயினியம் செல்லும்போது அனுப்பப்படமாட்டாது.

2. 12 பேர் அல்லது அதற்கு அதிகப்பட்ட சைனியம் வழியில் நான்குநாளைக்கு ஒருதரம் தங்கலாம். அதைக்கொண்டு எந்தெந்த தேதியில் எந்தெந்த விடத்தில் இறங்கவேண்டுமோ அந்தசங்கதி அதிகாரஸ்தர்களுக்குத் தெரிவிக்கவேண்டியது. 12 பேருக்குக் குறைவாயிருக்கிற சேனைகள் நாளொன்றுக்கு 10 மையில வீதம் போய் 7-நாளைக் கொருதரம் தங்கவேண்டும்.

3. மதுராஸ் பிரஸிடென்ஸியின் எல்லைக்குள் தண்டுபோகும்போது சாமக்கிரியைகள் சேகரம் செய்யவேண்டிய விஷயத்தில் கெவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கும் விதிகளை அனுசரிக்கவேண்டும். 1. ஒரு ஜில்லாவழியாய்ச் சேனைப் பிரயாணமாய்ப் போகிறதென்று கோர்டர் மாஸ்டர் ஜனரலிடத்தி லிருந்தாவது தளகர்த்தனிடத்தி லிருந்தாவது சேதிவந்தவுடன் கலெக்டர் தண்டுபோகிற வழியிலிருக்கப்பட்ட தாலுகாவின் தாசில்தாருக்கு வருகிற தண்டு இத்தனை என்றும் அதில் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் இத்தனை பேர் என்றும், தண்டோடுகூடிய ஜனங்கள் இத்தனைபேரென்றும், இன்ன தாலூகாவில் இன்னின்னவிடத்தில், இன்னின்ன தேதியில் வந்து தங்குவார்களென்றும் தெரியப்படுத்த வேண்டியது. 2. தாசில்தார்கள் கலெக்டருடைய உத்தரவு பிரகாரம் தேவையான சாமான்களை வாங்குகிறதற்கு உடனே உசூரிலிருந்து பணம் வரவழைத்துக் கொள்ள வேண்டியது. 3. தாசில்தார்கள் டிப்டி தாசில்தாரையாவது அல்லது டிவிஷன் ரெவினியூ இனிஸ்பெக்டரையாவது விவேக

முள்ள இரண்டுசேவகர்களைச் சகாயமாகக் கொண்டு தண்டுகள் இற ங்குகின்ற ஒவ்வொரு யிடத்திலேயும் நியமிக்கப்பட்ட தேதியில் வஸ்துக்களைச் சித்தமாய் வாங்கிவைத்திருக்கிறதற்கு உத்தரவு செய் யவேண்டியது. 4. சாத்தியமான சாமான்களை யெல்லாம் சமீபத் தில் வாரம் ஒருதரம் கூடுகிற சந்தையிலே வாங்கவேண்டியது. தேவையான சாமான்கள் அகப்படாத பக்ஷத்தில் இதராளிடத்தில் அவர்களுடைய சம்மதியின்பேரில் வாங்கவேண்டியது. எந்த கார ணத்தினாலும் வரிபோட்டு சாமான்களைச் சேகரிக்கக்கூடாது. 5. சாமான்களைச் சந்தையில் வாங்கினாலும், கிராமத்தில் வாங்கினா லும் பணம் உடனேகொடுத்து பிரவேசபத்திரிகை வாங்கிக்கொள்ள வேண்டியது. அச்சீட்டுகளைச் சாமான்வாங்கின விவரமான பட்டி யோடு உகூருக்கு உறுதிச்சீட்டுகளாக அனுப்பவேண்டியது. 6. வஸ் துக்களை வாங்கின நிமித்தமாய் பணத்தை கிராமத்து பெரிய குடி யானவனிடத்திலாவது கணக்கனிடத்திலாவது வஸ்துக்களை விற்ற சொந்தக்காரனிடத்தில் சேர்ப்பிக்கக் கொடுக்கக்கூடாது. வஸ்து வைவிற்ற சொந்தக்காரனிடத்திலேயே பணத்தைக் கொடுத்துவிட வேண்டும். 7. ஒரு தண்டானது ஒரு ஜில்லாவின் வழியாகச் செல் லும்போது அதனோடுகூட அந்தந்த தாசில்தார்கள் அல்லது இதர உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய எல்லையில் அனுகூலித்தால் போகும்படி திட்டஞ் செய்யவேண்டியது. அது வரைக்கும் சித்த மான சாமான்கள் போதாதபக்ஷத்தில் இந்த உத்தியோகஸ்தர்கள் உடனே சேகரம்செய்து கொடுக்கவேண்டியது. 8. கூலியாட்கள், பானைகள், சட்டைகள், கூடாரமுளைகள் முதலான சாமான்கள் வி லையில்லாமல் கொடுக்கக்கூடாது. 9. கூலியாட்கள் வேண்டியபக்ஷ த்தில் தாசில்தார் அமர்த்திக்கொடுக்கலாம்.

4. வழியில் கூலிகள் இறப்பது, விட்டோடிப்போவது, கால் நடைகளுக்கு அபாயம் நேரிடுவது இவ்வகைய அகஸ்மீக ஸம்பவங் கள் நேரிட்டாலொழிய மற்ற எப்பொழுதும், மத்தியில் இருக்கப் பட்ட கிராமங்களில் கூலிகள், வண்டிகள், கால்நடைகள் சம்பாதித் துக் கொடுக்கும்படி கேட்கக்கூடாது. அப்படிப்பட்ட தருணம் நே ரிடும்போது தண்டுக்கு அதிகாரி அதுசங்கதியை கலெக்டருக்குத் தெரிவித்து அவருடைய உத்தரவின்பேரில் கூடவருகின்ற ரெவி

னியூ உத்தியோகஸ்தன் மூலமாய் சமீபத்திலிருக்கிற கிராமத்து மேட்டுக்குடியை வரவழைத்து அவன்மூலமாக வேண்டியசாமானைப் பெறவேண்டும்.

---

## டிஸ்ட்ரிக்ட்டு ஆபீசர்களுக்கு சர்க்கூட்டிலிருக்கும்போது சாமான்களைச் சேகரித்துக் கொடுத்தல். (B. S. O. 209. *a*.)

(*Supplies to District officers when on circuit.*)

ஒரு கலெக்டர் டிவிஷனல் ஆபீஸர் முதலினோர்கள் கிராமங்களில் தங்குங்காலத்தில் அந்தந்த கிராமத்து மணியகாரர்கள் அவரவர்களுக்கு வேண்டிய சாமக்கிரியைகளைச் சேகரித்துக்கொடுக்க வேண்டும். அதற்குப் பிடிக்கும் தொகையை உத்தியோகஸ்தர்கள் கொடுத்துவிடவேண்டும். கலெக்டர் ஒரு கிராமத்தில் சிலநாள் தங்க வேண்டுமென்றிருந்தால் அந்த கிராம மணியகாரனுக்கு தாசில்தார் மூலமாக இன்னதேதியில் இன்ன இடத்தில்தான் இறங்குவாரென்றும், அப்பொழுது அவன் ஆஜராக இருக்கவேண்டுமென்றும் தாகீது அனுப்பவேண்டும். அவன் அவ்விடத்தில்சென்று ஆஜராகவிருந்து கலெக்டர் வந்ததும் அவருக்கு வேண்டிய சாமான்கள் இன்னின்ன வென்பதை அவரது வேலைக்காரர் மூலமாகத் தெரிந்து கொண்டு சேகரித்துக் கொடுக்கவேண்டும். அதற்குப் பிடிக்கும் பட்டுபடியான செலவை வேலைக்காரரிடம் பெறவேண்டும். அவர்கள் கொடேனென்று சொன்னால அதை உடனே கலெக்டருக்குத் தெரிவிக்கவேண்டும். கலெக்டர் தனக்குக் கீழிருக்கும் வேலைக்காரர்கள், சேவகர்கள் ஊர்க்குடிகளிடமிருந்து வெகுமதிகள் வாங்காமலிருக்கும்படியாயும், தனக்கு வேண்டும்படியான சாமான்களை தன் பேர்சொல்லி விலைகொடுக்காமல் வாங்கிக்கொள்ளக்கூடாமலுமிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். வேலைக்காரர்கள் வாங்கும் சாமானுக்கு அவர்கள் கைப்பட எழுதிய ஜாப்தாவிருக்கவேண்டும். அதைக்கொண்டு மணியகாரன் பில்செய்யவேண்டும். அதன்பேரில் கலெக்டர் அவர்களுக்கு பணம் பட்டுவாடா செய்யவேண்டும்.

---

MADRAS.

# ACT No. II OF 1864

சென்னபட்டணம்.

## 1864௵த்து 2 - வது ஆக்டு.

### சென்னபட்டணத்தைச் சேர்ந்த ராச்சியத்தில் சர்க்கார் தீர்வை பாக்கியை வசூல் செய்வதற்காக உண்டாயிருக்கிற சட்டங்களை ஒன்றுய்ச்சேர்ப்பதற்கான ஆக்டு.

சர்க்கார் தீர்வையை வசூல் செய்வதைக்குறித்த சட்டங்களைச் சீர்ப்படுத்தி ஒன்றுய்ச்சேர்ப்பது தகுதியாயிருக்கிறபடியால் இதனுல் விதிக்கப்படுகிறதென்னவென்றால்:—

1. இந்த ஆக்ட்டில் பிரயோகமாயிருக்கிற பூமிக்குடையவனென்னும் வார்த்தையானது எப்படிப்பட்டவனென்று அர்த்தஞ் செய்துகொள்ளப்படுமென்றல்,—

மில்கதிஸ்தி மீரார்சன்னதின்படி அனுபவிக்கிற சகலமானவர்களும் மற்றெல்லா ஜமீன்தார்களும், சுரோத்திரியம்தார்களும், ஜாகீர்தார்களும், இனும்தார்களும், சர்க்காரிடத்தில் பூமிபேரிசு குத்தகை செய்துகொள்ளுகிற சகலமானவர்களுமென்றும்; ரயித்துவாரி திட்டப்படிக்காவது சர்க்காருக்கு நேராய்த் தீர்வை செலுத்தும்படியான வேறே எவ்விதமாகவாவது பூமியை அனுபவிக்கிற எல்லோருமென்றும்அர்த்தமாகும். நிலத்தின்பேரில் பாக்கியாயிருக்கிற சர்க்கார் தீர்வை என்பது. இந்த ஆக்ட்டில் சொல்லியிருக்கிற காரியங்களின்பொருட்டு, பாய்ச்சலுக்காக சேகரிக்கப்பட்ட தண்ணீரைக்குறித்து செலுத்தப்படத்தக்கவரி இறை முதலானதுகளென்றும் அர்த்தமாகும்.

2. நிலமும், அதின்பேரிலிருக்கிற கட்டடங்களும், அதிலுண்டாகிற மாசூலும் சர்க்கார் தீர்வைக்கு ஈடாக எண்ணப்படும்,

3. பூமிக்குடையவனுகிய பிரதிமனிதனும் தன்னிலத்துக்கு பாக்கியாயிருக்கிற தீர்வையை கிஸ்திபந்திப் பிரகாரமாவது வேறே யாதொரு உடன்படிக்கைப் பிரகாரமாவது வாயிதா ஆய்விடுகிற தேதியிலாகிலும் அதற்கு முன்னிட்டாகிலும் கலெக்டரிடத்திலாவது

அதை வாங்கிக்கொள்ளும்படி அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தரிடத்திலாவது செலுத்தவேண்டியது; அப்படி தேதி நிஷ்கரிஷை செய்யப்படாதிருந்தால், ஊர்வழக்கப்படிக்கு அந்தத்தீர்வையைச் செலுத்தவேண்டியவாயிதா ஆய்ப்போவதற்குள் செலுத்தவேண்டியது: ஆனால் மில்கதிஸ்திமீரார் சன்னதின்படிக்காவது அப்படிப்பட்ட வேறே யாதொரு சாசனத்தின்படிக்காவது பூமியனுபவிக்கப்படுகிற விஷயத்தில் தவிர மற்ற விஷயங்களிலே அந்தந்த கிஸ்தி அல்லது வாயிதாத்தொகையையும், அந்தந்த தொகை செலுத்தப்படவேண்டிய தேதிகளேயும் டிஸ்திரிக்டு கெஜட்டில் பிரசித்தஞ்செய்வித்து அப்போதைக்கப்போது நிச்சயிக்கவும் மாற்றவும் ரிவினியூபோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு.

4. யாதொரு கிஸ்திமுழுமையுமாவது அதில் எவ்வளவாவது மேற்சொல்லியபடி செலுத்தப்படாதிருந்தால் அப்படி செலுத்தப்படாதிருக்கிற தொகையானது தீர்வைபாக்கி என்று எண்ணப்படும்.

5. சர்க்கார்தீர்வை பாக்கியிருந்தால், அந்தபாக்கிதாரனுடைய ஸ்தாவரஜங்கம சொத்துக்களே ஏலத்தில்விற்றாவது, இதில் பின்னால் சொல்லியிருக்கிறபடி பாக்கிதாரனேக் காவலில் வைத்தாவது, அந்த பாக்கியையும் அதற்கு வட்டியையும் நடவடிக்கை நடத்துவதற்குண்டான செலவுகளேயும் வசூல் செய்யத்தொடங்குவதற்கு கலெக்டருக்காகிலும், வசூல் செய்யும்படி கலெக்டரால் அதிகாரங்கொடுக்கப்பெற்ற வேறே யாதொரு அதிகாரிக்காகிலும் அதிகாரமுண்டு.

6. பாக்கிதாரன் மில்கதிஸ்திமீரார் சன்னதின்படிக்காவது அப்படிப்பட்ட வேறே யாதொரு சாசனத்தின்படிக்காவது அனுபவித்துக்கொண்டிருந்தால், அந்த சன்னதிலுள்ள ஷரத்துகளின்படி பாக்கியை வசூல் செய்யலாகும். மற்ற பாக்கிதாரர்களின் விஷயத்தில் கலெக்டராவது-பாக்கியை வசூல் செய்யும்படி கலெக்டரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற வேறே யாதொரு அதிகாரியாவது-தனக்கு யுக்தமாகத்தோற்றுகிறபடி அந்த பாக்கிதாரனுடைய அசையும் பொருளேயாகிலும் அசையாப்பொருளேயாகிலும் அவ்விரண்டையுமாகிலும் ஏலத்தில் விற்று அந்த பாக்கியை வசூல் செய்யத்தொடங்கலாம்.

7. சர்க்கார் தீர்வை பாக்கிக்கு-வருஷ மொன்றுக்கு நூற்றுக்கு ஆறுவிழுக்காடு வட்டிபோடப்படும்.

8. சர்க்கார் தீர்வைக்காக அசையும் பொருளை ஜப்திசெய்து ஏலத்தில் விற்கிறபட்சத்தில் அடியில் கண்டிருக்கிற நிபந்தனைகளின்படி நடப்பிக்கவேண்டும்.

முதலாவது. கலெக்ட்டராவது, தண்டல் பத்திரிகை கொடுக்கும்படி கலெக்ட்டரால் நேமிக்கப்படுகிற வேறேயாதொரு அதிகாரியாவது தண்டல் பத்திரிகையெழுதி, அதில் பாக்கிதாரனுடைய பேரையும், எதற்காக ஜப்திக்கு உத்தரவு பிறப்பிக்கப்படுமோ அந்த பாக்கித்தொகையையும், அந்த பாக்கிக்கு வாயிதா ஆய்விட்ட தேதியையுங்கண்டு, தன்னுடைய பேரால் கையெழுத்துப்போட்டு, ஜப்திசெய்யப்போகிற மனிதனுக்குக் கொடுக்கவேண்டியது. ஜப்திசெய்யப்போகிறவன் அந்த தண்டல்பத்திரிகையைக்காட்டி 52-வது பிரிவின்படி அந்த பாக்கியும் தனக்குச்சேரவேண்டிய படிச்செலவும் உடனே செலுத்தப்படாவிட்டால், அந்தப் பத்திரிகையை ஜப்தி செய்வதற்கு தனக்கு அதிகாரபத்திரமாக வைத்துக்கொண்டு சொத்தை ஜப்திசெய்கிற தேதியில் அந்த பத்திரிகைக்கு நகலெழுதி, அந்த நகலின்மேல் ஜப்திசெய்யப்படுகிற சொத்தின் விவரத்தையும், அந்த சொத்து வைத்துவைக்கப்படுகிற இடத்தையும் கண்டெழுதி அந்த பாக்கிதாரனுக்குக் கொடுக்கவேண்டியது.

இரண்டாவது. அந்த பாக்கிதொகையும் அதற்கு வட்டியும் படிச்செலவும் ஜப்திசெலவும் ஏலத்திற்கு முன்னமே செலுத்தப்படாவிட்டால், ஜப்திசெய்யப்பட்ட சொத்து உடனே ஏலத்தில் விற்கப்படுமென்றும் அந்த பத்திரிகையில் எழுதவேண்டியது.

மூன்றாவது. பாக்கிதாரன் ஆஜரில்லாவிட்டால் அந்த பத்திரிகையின் நகலை அதின்மேலெழுதப்பட்ட ஜப்திசொத்தின் ஜாபிதா வகையரா சகிதமாய் ஜப்திசெய்ததேதிமுதல் மூன்றுநாளைக்குள்ளாக அந்த பாக்கிதாரன் வழக்கமாய் வாசஞ்செய்கிற இடத்திலாவது சொத்து ஜப்திசெய்யப்படுகிற இடத்திலாவது ஒட்டவேண்டியது, அல்லது கொடுத்துவிட்டு வரவேண்டியது.

9. தண்டல்பத்திரிகையின் ஷரத்துகளின்படி பாக்கித்தொகை செலுத்தப்படாவிட்டாலும், கலெக்ட்டருக்காவது அவரால் நேமிக்

கப்பட்ட வேறேயாதொரு அதிகாரிக்காவது திருப்திகரமாய் அந்தத் தொகை சேரும்படியானவகை செய்யப்படாவிட்டாலும், சேரவேண்டியபாக்கித்தொகை அதற்குவட்டி படிச்செலவு, ஜப்திசெலவு இதுகளுக்காக ஜப்திசொத்தை ஏலத்தில் விற்கும்பொருட்டு, அந்த சொத்தின் ஜாபிதாவை 1839ஸ்லத்து 7-வது ஆக்டின்படி ஜப்தி சொத்தை விற்பதற்கு அதிகாரம்பெற்று சமீபத்திலிருக்கிற சர்க்கார் உத்தியோகஸ்தனுக்கு ஜப்திதாரன் அனுப்பவேண்டியது.

10. பாக்கிதாரனானவன் தன்னுடையசொத்து ஜப்திசெய்யப்பட்டபின்பு ஏலத்திற்கு நிச்சயிக்கப்பட்ட தினத்திற்கு முன்னதாக, பாக்கிபணத்தையும் வட்டியையும் படிச்செலவையும் ஜப்திக்குப்பிடித்த அவசியமானசெலவுகளேயும் கட்டுகிறதாகப் பணங்கொண்டுவந்தால், உடனே அந்தப்பணத்தை ஜப்திதாரன் வாங்கிக்கொண்டு தட்சணம் ஜப்தி விடுதலேசெய்யவேண்டியது.

11. ஜப்திதாரனானவன் பாக்கிதாரனுடைய நிலத்திலுண்டாகிய பயிர்களேயாவது, பறிக்காமலிருக்கிற பலன்களேயாவது ஜப்தி செய்தால், அறுக்கத்தகுந்த அல்லது பறிக்கத்தகுந்த காலத்தில் அதுகளே அவன் விற்பனேசெய்விக்கலாம்; அல்லது தனக்கு யுக்தமாகத் தோற்றினல், தகுந்தகாலத்தில் அதுகளே அறுத்து அல்லது பறித்து, விற்பனேயாகிறவரையில் தகுந்தஇடத்தில் சேர்ப்பிக்கலாம். இவ்விதமாக அறுத்துப்பறித்துச் சேர்த்துவைத்தால், அதற்காகப் பிடிக்கிறசெலவை சொந்தக்காரன் அந்தசொத்தை மீட்டுக்கொள்ளுகிறபட்சத்தில், அவன் கொடுக்கவேண்டியது; அந்தசொத்து விற்பனேசெய்யப்படுகிற பட்சத்தில் விற்றபணத்திலே அந்தசெலவு எடுத்துக்கொள்ளப்படும். யாதொரு ரயித்தினுடைய பயிராவது பலனாவது விற்பனேசெய்யப்பட்டால், அவன் அந்தப்பயிர் அல்லது பலனுக்குண்டாகிய கிரயத்தை அது உற்பத்தியான நிலத்திற்காக அப்போதாகிலும் பின்பாகிலும் தான் கொடுக்கவேண்டிய குத்தகைத் தொகையிலேகழித்துக்கொள்ளலாம். மேலும் சர்க்கார்தீர்வை பாக்கிக்காக யாதொரு ரயித்தினுடைய மாசூல் ஜப்திசெய்யப்பட்டால், அவன் அந்தபாக்கியைச் செலுத்திவிட்டு, அந்தப்பணத்தை அப்போதாகிலும் பின்பாகிலும் தான்கொடுக்கவேண்டிய குத்தகைத் தொகையிலே மேற்சொல்லியவிதமாய்க் கழித்துக்கொள்ளலாம்.

12. ஜப்திதாரனானவன் ஜப்திசெய்யப்பட்ட எருதுமுதலிய பிராணிகளிடத்தில் வேலைவாங்கவுங்கூடாது; ஜப்திசெய்யப்பட்ட சரக்கு அல்லது சாமான்களைக் கையாளவுங்கூடாது; ஜப்திகாரன் ஆடுமாடுமுதலிய பிராணிகளுக்கு வேண்டிய தீனிபோடவேண்டியது. அதற்காகப் பிடிக்கிறசெலவை சொந்தக்காரன் அந்தசொத்தை மீட்டுக்கொள்ளுகிறபட்சத்தில், அவன் கொடுக்கவேண்டியது; அந்தசொத்து விற்பனைசெய்யப்படுகிறபட்சத்தில் விற்றபணத்திலே அந்த செலவு எடுத்துக்கொள்ளப்படும்.

13. ஜப்திசெய்யப்பட்ட சொத்தானது வேண்டிய முன்ஜாக்கிரதையோடு தகுந்த பத்திரஞ் செய்யப்படாமையினாலாவது, அதினிடத்தில் அக்கிரமமாய் வேலைவாங்கினதினாலாவது, அதை உபயோகப்படுத்தினதினாலாவது களவுபோனாலும், போக்கடித்தாலும், சேதமானாலும், யாருடைய அஜாக்கிரதை அல்லது செய்கையினாலே அப்படி நேரிட்டதோ அந்த உத்தியோகஸ்தனிடத்திலே கலெக்டரானவர் சுருக்கமான நடவடிக்கையினாலே அந்தநஷ்டம் அல்லது சேதத்தொகையை வசூல்செய்யலாகும். அப்படி வசூலாகிறதொகையை நஷ்டமடைந்தவனுக்குக் கொடுக்கவேண்டும்.

14. ஜப்திசெய்யப்படுகிற சொத்தானது பாக்கி தொகைக்கு அதிகப்படாமல், கூடியவரையிலே சுமாராக பாக்கித்தொகை எவ்வளவோ அவ்வளவிருக்கவேண்டியது.

15. சூரிய உதயத்திற்குப்பின்பு சூரிய அஸ்தமானத்திற்குள் ஜப்திசெய்யவேணுமேயல்லாமல், வேறே எந்தகாலத்திலாவது ஜப்தி செய்யக்கூடாது.

16. பாக்கிக்காகச் செய்யப்படுகிற ஜப்திக்குள்ளாகாதபடிக்கு பாக்கிதாரன் மோசடியாய் சொத்தைக் கொண்டுபோய்விட்டால், அது ருஜுவானதின்மேல், தகுந்த அதிகாரமுடைய யாதொருசீவில் கோர்ட்டார் சுருக்கவகையாய் அந்தசொத்தை ஜப்திகாரனிடத்தில் ஒப்பிக்கும்படிச் செய்யவேண்டியது. மேலும் பாக்கிதாரன் இந்தியன் பினல்கோடின் 424-வது பிரிவில் சொல்லியிருக்கிற தெண்டனைகளுக் குள்ளாவான்.

17. பாக்கிதாரனாகவாவது அவனுக்கு உத்தரவாதியாகவாவதிராத வேறே எவனாகிலும் ஜப்திசெய்யப்பட்ட சொத்துக்கு தா

வாசெய்தும், ஜப்திதாரன் அந்தசொத்தை விற்பனைசெய்வித்தால், எதற்காக அந்தசொத்து விற்பனைசெய்யப்படுகிறதோ அந்த சர்க்கார் பாக்கிக்காக அந்தசொத்து பொறுப்பானதென்று ஜப்திதாரன் ருஜூவுசெய்யமாட்டாமல், தகுந்த அதிகாரமுடைய யாதொரு சீவில் கோர்ட்டில் மேற்படிதாவா ருஜூவாவதின்பேரில், அந்தந்த சங்கதிக்குத்தக்கபடி தாவாதாரன் அந்தசொத்தின் பூராவிலேயை வட்டி-செலவு-நஷ்டம் இதுகளுடனே ஜப்திதாரனிடத்தில் வசூல் செய்துகொள்ளலாம். ஆனால், பாக்கிதாரனுடைய ஸ்வாதீனத்திலுள்ள நிலத்திலிருக்கிற பயிராவது பறிக்கப்பட்ட பலன்களாவது ஜப்திசெய்யப்பட்டால், அதுகள் விற்பனையாவது கொதுவையாவது பின்னை எதிவாவது முன்னமேதானே செய்யப்பட்டிருக்கிறதென்கிற ஆதாரத்தின்பேரில் அதுகளைக்குறித்து வேறே தாவாசெய்யப்பட்டபோதிலும், அந்த தாவா, அந்தபயிர் அல்லது பலன் எந்தநிலத்தில் உற்பத்தியாச்சுதோ அந்தநிலத்திற்காக பாக்கியாயிருக்கிற சர்க்கார் தீர்வை முன்னதாய்ச் சேரவேணுமென்பதற்குத் தடங்கலாகமாட்டாது.

18. ஜப்திசெய்யப்பட்டிருக்கிற சொத்தை பலவந்தமாயாவது மறைவாகவாவது எவனாகிலும் எடுத்துக்கொண்டு போய்விட்டதாக தகுந்த அதிகாரமுடைய யாதொரு சீவில்கோர்ட்டாருக்குத் திருப்திகரமாய் ருஜூவானால், அந்தக்கோர்ட்டார் சுருக்கவகையாய் அந்த சொத்தை ஜப்திதாரனிடத்தில் ஒப்பிக்கும்படி செய்யலாம். மேலும் அப்படி குற்றஞ்செய்தவன் இந்தியன் பினல்கோடில் விதித்திருக்கிற தெண்டனைகளுக் குள்ளாவான்.

19. யாதொருலாயம், மாட்டுக்கொட்டாய், களஞ்சியம், கிடங்கு, வெளிப்புறத்து வீடுமுதலான கட்டடங்களிலே வைத்திருக்கிற பாக்கிதாரனுடையசொத்தை ஜப்திசெய்யும்பொருட்டு பலாத்காரமாய்த் திறந்துகொண்டுபோகவும், வெளிக்கதவு திறந்திருக்கிற யாதொரு குடியிருப்பு வீட்டில்நுழையவும் ஜப்திதாரனுக்கு அதிகாரமுண்டு. மேலும் மேற்சொல்லியபடி ஜப்திசெய்வதற்காக அந்தக்குடியிருப்பு வீட்டிலுள்ள யாதொரு அறையின்கதவையும் திறந்துகொண்டு நுழையலாம்; ஆனால் இதில் பின்னால் சொல்லியிருக்கிறபடிதவிர அந்தக் குடியிருப்புவீட்டில் ஸ்திரீகள் வாசஞ்செய்வ

தற்கு உரித்தான அந்தப்புரத்தை அந்த ஜப்திதாரன் உடைத்துத் திறப்பதாவது நுழைவதாவது தகாது.

20. வெளிக்கதவு மூடியிருக்கும்படியான யாதொருகுடியிருப்பு வீட்டிற்குள்ளாவது, ஸ்திரீகள் வாசஞ்செய்வதற்கு உரித்தாக விடப்பட்டு தேசவழக்கப்படி அந்தப்புரமாக எண்ணப்பட்ட யாதொரு அறைக்குள்ளாவது பாக்கிதாரனுடைய சொத்துவைக்கப்பட்டிருப்பதாய் ஜப்திதாரனுக்கு நினைக்க முகாந்தரமிருந்தால் அந்த ஜப்திதாரன் சமீபத்திலிருக்கிற போலீசுட்டாணாவின் தலைவனுக்கு அந்த சங்கதியைத் தெரியப்படுத்தவேண்டியது. அதற்குமேல், அந்தட்டாணாதலைவன் ஒரு போலீசுசேவகனை அவ்விடத்திற்கு அனுப்பவேண்டியது; ஜப்திதாரன் அவனைக் கூடவைத்துக்கொண்டு, அந்தவீட்டினுள் அந்தப்புரம்தவிர வேறேயாதொரு அறையின் கதவைத்திறப்பதுபோலவே அந்தவீட்டின் வெளிக்கதவை பலாத்காரமாய்த்திறக்கலாம். மேலும் ஜப்திதாரன் அந்தபோலீசுசேவகனைக் கூடவைத்துக்கொண்டு, அந்தப் புரத்திலிருக்கிற ஸ்திரீகளை அப்புறம்போகும்படி கிரமமாய் அறிக்கைசெய்து, (தேசவழக்கப்படி பயிரங்கத்தில்வரக்கூடாத மேலான ஸ்திரீகளாயிருந்தால்) அவர்கள் தகுந்தபடி அப்புறம்போவதற்கு என்னவகைசெய்யவேணுமோ அதைச் செய்தபின்பு அந்த அந்தப்புரத்திலிருக்கிற பாக்கிதாரனுடையசொத்தை ஜப்திசெய்யும்பொருட்டு அந்த அறைகளுக்குள் நுழையலாம். ஆனால் அவ்விடத்திலே பாக்கிதாரனுடையசொத்து அகப்பட்டால், அதை உடனே வெளியில் எடுத்துக்கொண்டு வந்துவிட்டு, அந்த அறைகளை அந்த அந்தப்புரத்து ஸ்திரீகளுக்கு பரிஷ்காரமாய் விட்டுவிடவேண்டியது.

21. மனிதர்கள் இந்த ஆக்ட்டிலுள்ள நிபந்தனைகளுக்கு விரோதமாய் ஸ்திரீகளுடைய அறைகளுக்குள் நுழைந்தாலும், குடியிருப்பு வீடுகளின் வெளிக்கதவை பலாத்காரமாய்த்திறந்தாலும், அப்படிப்பட்டவர்கள் மாஜிஸ்திரேட்டுக்கு முன் குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்படுவதின்பேரில் 500-ரூபாய் வரையில் போடப்பட்ட அபராதத்திற்குள்ளாவார்கள், அல்லது ஆறுமாசத்திற்கதிகப்படாமல் இருவகைக்காவலிலெதிலாகிலும் வைக்கப்படுவார்கள்.

22. ஜப்திசெய்யப்பட்ட சொத்தை எலம்போடுவதற்கு 1839-வருத்து 7-வது ஆக்ட்டின்படி அதிகாரம்பெற்ற சர்க்கார் உத்தியோகஸ்தரானவர் - விற்கப்படும்சொத்துக்கு ஒருஜாபிதா எழுதி அதையும், ஜப்திசெய்யப்பட்ட சொத்து இன்ன இடத்தில் இன்ன தேதியில் இத்தனைமணிக்கு எலம்போடப்படுமென்று ஒரு இஸ்தியார்நாமாவையும், பாக்கிதாரனுடைய வீட்டுவெளிக்கதவில் ஒட்டுவிக்கவேண்டியதுமல்லாமல், எந்த நிலத்திற்காக பாக்கியேற்பட்டதோ அந்த நிலமிருக்கிற கிராமத்திலும், மற்ற எங்கெங்க இடத்தில் அந்த எலத்தைக்குறித்துத் தகுந்தபடி பிரசித்தஞ்செய்யவேணுமென்று கலெகட்டராவது அதற்காக அவரால் அதிகாரங்கொடுக்கப்பெற்ற வேறே உத்தியோகஸ்தராவது நினைக்கிருரோ அவ்விடங்களிலும் தண்டோரா போடுவிக்கவும்வேண்டியது. மேற்சொல்லிய படி இஸ்தியார்நாமா ஒட்டப்பட்ட தேதி முதல் பதினைந்துநாள் சென்றபின்பே யல்லாமல் அதற்குள்ளாக எலம்போடப்படாது

23. நேமிக்கப்பட்டகாலத்திலே மேற்படி உத்தியோகஸ்தருக்கு யுக்தமாகத்தோற்றுகிறபடி சொத்தானது ஒரேகூருகவாவது பல கூறுகளாகப்பிரிக்கப்பட்டாவது, எலத்தில் கடைசியாய் உயர்ந்தவிலைக்குக் கேட்கிறவனுக்கு விற்றுபோடப்படும். அந்த சொத்து பாக்கிப்பணத்துக்கு ஜாஸ்தியாய் விற்பனையானல், அந்த ஜாஸ்தி பணத்திலே ஜப்தி-எலம்-முதலானதுகளுக்குப் பிடித்த செலவுகளையும் வட்டியையும் தள்ளிக்கொண்டு மிகுதியை அந்த பாக்கிதாரனுக்குக் கொடுத்துவிடவேண்டியது.

24. சொத்து விற்பனைசெய்யப்பட்ட காலத்திலாவது, விற்பனைசெய்விக்கிற உத்தியோகஸ்தர் நியமிக்கிற காலத்திற்குள்ளாவது அந்த சொத்தைவாங்கினவன் ரொக்கப்பணஞ்செலுத்தவேண்டியது; அப்படி அவன் பணமுழுதும் செலுத்துகிறவரையிலே அந்தசொத்தில் எவ்வளவையாவது அவனை எடுத்துக்கொண்டு போகவொட்டக் கூடாது. விலைக்குவாங்கினவன் கிரயப்பணத்தைச் செலுத்தாவிட்டால், அந்தசொத்து மறுபடி எலம்போடப்படும்; அப்படிச்செய்வதினலே ஏதாவது நஷ்டமுண்டானல் அதுவும், மறுபடி எலம்போடுவதற்குப் பிடிக்கிறசெலவும், முன்னே எலத்திலெடுத்துப் பணங்கட்டாமற் போனவனிடத்தில் வசூல்செய்யப்படும். அந்தசொத்து

முதல் ஏலத்தைவிட இரண்டாவது ஏலத்தில் அதிக விலைக்குவிற்ருல், அந்த அதிகப் பணமானது எவன்பொருட்டு மேற்படி முதல் ஏலம்போடப்பட்டதோ அவனுக்குச் சேரவேண்டியது.

25. கலெக்டராவது, ஜப்திபண்ணும்படி அவரால் அதிகாரங்கொடுக்கப்பெற்ற வேறே உத்தியோகஸ்தராவது பாக்கிதாரனுடைய நிலத்தையாகிலும் அதின்பேரிலிருக்கிற கட்டடத்தையாகிலும் ஜப்திசெய்யத்தொடங்குவதற்கு முன்னமே, அவர் தண்டல் பத்திரிகை தயார்செய்து, அதில் பாக்கித்தொகையையும், எதற்காக பாக்கி சேரவேண்டியிருக்கிறதோ அந்த பூஸ்திதி அல்லது நிலத்தையும் பாக்கிதாரனுடைய பேரையும், தண்டல்பத்திரிகையைக் கொண்டுபோய்க் கொடுக்கிறவனுக்குச் சேரவேண்டிய படிச்செலவையும், எதின்பேரில் பாக்கியிருக்கிறதோ அந்த நிலத்துக்கும் பணம்செலுத்தப்படவேண்டிய இடத்திற்குமிருக்கிற தூரத்தையோசித்து அதற்குத்தக்கபடி பணஞ்செலுத்துவதற்காக நிச்சயிக்கப்படுகிறகாலத்தையும் கண்டெழுதி, அதை பாக்கிதாரனுக்குச் சேர்ப்பிக்கவேண்டியது. அந்த தண்டல்பத்திரிகையைச் சேர்ப்பிக்கிறவித மெப்படிக்கென்ருல், அந்த பாக்கிதாரனிடத்திலாவது, அவன் வழக்கமாய் வாசஞ்செய்கிற இடத்தில் அவனுடைய குடும்பத்தைச்சேர்ந்த யாதொருவயதுவந்த ஆண்பிள்ளையினிடத்திலாவது, அவனுடைய அதிகாரம்பெற்ற ஏசெண்டினிடத்திலாவது ஒருபிரதியை ஒப்பிக்கவேண்டியது, அல்லது அவன் கடைசியில் வாசஞ்செய்ததாகத் தெரியவருகிற இடத்திலாவது, ஜப்திசெய்யப்போகிற நிலமிருக்கிற இடத்திலாவது எல்லாருக்குந்தெரியும்படி ஒரு நகலை ஒட்டவேண்டியது.

26. தண்டல் பத்திரிகையின் ஷரத்துகளின்படி பாக்கித்தொகை செலுத்தப்படாவிட்டாலும், கலெக்டருக்காவது அவரால் நேமிக்கப்பட்ட வேறேயாதொரு அதிகாரிக்காவது திருப்திகரமாய் அந்தத்தொகை சேரும்படியானவகை செய்யப்படாவிட்டாலும், அவர் பாக்கிதாரனுடைய நிலத்தை அடியில் கண்டிருக்கிறவிதமாய் ஜப்திசெய்து ஏலத்தில் விற்று அந்தபாக்கியை வசூல்செய்யத் தொடங்கவேண்டியது.

27. நிலமிருக்கிற இடத்திலே எல்லாருக்குந் தெரியும்படி இஸ்தியார்ஒட்டி ஜப்திசெய்யவேண்டியது. பாக்கியும் அதற்கு வட்டியும்

செலவுகளும் இன்னதேதிக்குள் செலுத்தப்படாவிட்டால்அந்த நில மானது சட்டப்படி ஏலத்தில் விற்றுப்போடப்படுமென்று அந்த இஸ்தியாரில் கண்டெழுதவேண்டியது. ஜப்தியை நிலத்தினிடத்தில் பிரசித்தஞ்செய்யவேண்டியது மல்லாமல் ஜில்லாகெஜட்டிலும் பிர சித்தஞ் செய்யவேண்டியது.

28. பாக்கிதாரனுடைய நிலத்தை ஜப்திசெய்கையிலாகிலும், அது ஜப்தியிலிருக்கையி லெப்போதாகிலும், அந்த நிலத்தைச்சேர்ந்த காரியங்களை நடத்திவர கலெக்டருக்கு அதிகாரமுண்டு. அப்படிசெய்கிறபட்சத்தில், அவர் அப்படி நடத்திவருவதற்காக தகுந்த சிப்பந்திகள் சகிதமாய் ஒரு ஏஜெண்டை நேமித்து, இன்னபடி நடந்துகொள்ள வேண்டியதென்று கண்டெழுதி தன்னுடைய முத்திரையுங் கையெழுத்தும்போட்டு அந்த ஏஜெண்டுக்கு ஒரு நேமனபத்திரிகை கொடுக்கவேண்டியது; அப்படிகாரியம் நடத்திவருவதற்காகப் பிடிக்கிற செலவுகள் அந்தசொத்தின் வரும்படியிலிருந்துசெலவழிக்கப்படும்; ஆனால சொத்தானது மிகவும் சொற்பமாயிருந்து, அதின் வரும்படியிலிருந்து ஏஜெண்டுக்கு சம்பளம் கொடுக்கக்கூடாமையாயிருந்தால், கலெக்டர் நேமிக்கிற ரிவினியூ உத்தியோகஸ்தன் ஏஜெண்டுகளைக்குறித்து இதில் சொல்லியிருக்கிற எல்லா நிபந்தனைகளுக்கும் உட்பட்டிருக்கவேண்டியது.

29. அப்படி அந்த சொத்தைச்சேர்ந்த காரியங்களை நடத்திவரப்போகிறதைக்குறித்து பாக்கிதாரனுக்கு 25-வது பிரிவில் சொல்லியிருக்கிறவிதமாய் உடனே நோட்டீசு கொடுக்கவேண்டியது மல்லாமல் அதை அந்த நிலத்தினிடத்தில் பிரசித்தஞ்செய்து ஜில்லா கெஜட்டிலும் பிரசித்தஞ்செய்யவேண்டியது.

30. 28 வது பிரிவின்படி ஏஜெண்டானவர் காரியங்களை நடத்திவருகையில், அந்த பாக்கிதாரனுக்கும் அவனிடத்தில் குத்தகை செய்துகொண்டிருக்கிறவர்களுக்கும் ஏற்பட்டிருக்கிற உடன்படிக்கைகளின் பிரகாரமாவது, அப்படி உடன்படிக்கைக ளேற்பட்டிராவிட்டால் நடந்துவருகிற வழக்கப்படிக்காவது அந்த சொத்தைக் குறித்து அதுவரையில் பாக்கியாயும் இனி வரவேண்டியதாயு மிருக்கிற குத்தகைத்தொகைகளையும் வரும்படிகளையும் அந்த ஏஜெண்டு வசூல் செய்து, வரவுசெலவுகளுக்குக்கணக்கெழுதி, அந்தக்கணக்கை

யும் மீதிப்பணத்தையும் கலெக்ட்டரிடத்திற்காவது கலெக்டரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தரிடத்திற்காவது மாதாந்தரமாகிலும் கேட்கப்படும்போதாகிலும் அனுப்பிவிடவேண்டியது. மேற்படி பாக்கிதாரன் தகுந்தகாலங்களிலே அந்த கணக்குகளைப்பார்வையிடலாம். கட்டணம் ஒன்றுங்கொடாமலே தன்னுடைய சொந்த செலவில் அதுகளுக்கு நகல்கள் எழுதிக்கொள்ளலாம்.

31. மேற்படி பாககிதாரனுக்காவது அவனுடைய சொத்துக்காவது கெடுதியுண்டாகும்படி ஏஜெண்டினால் சட்டத்துக்குவிரோதமாய் யாதொரு அநியாயஞ்செய்யப்பட்டால் அதைக்குறித்து அந்த ஏஜெண்டின்பேரில் அந்த பாக்கிதாரன் வியாச்சியமாவது தொடரலாம், பிரியாதாவது செய்யலாம்; உட்கடை பாத்தியத்தினாலே அனுபவிக்கிற ரயித்துகள் முதலானவர்களெல்லோரும் பாக்கிதாரனால் யாதொரு அநியாயஞ்செய்யப்பட்டால் அதைக்குறித்து நியாயந்தேடிக்கொள்ளுவதுபோலவே ஏஜெண்டினால் செய்யப்படுகிற அநியாயத்திற்கும் நியாயந்தேடிக்கொள்ளலாம்.

32. பூமிக்குடையவனுக்கும் அவனுடைய ரயித்துகளுக்கும் பிறந்திருக்கிற உடன்படிக்கைகளிலே இதில் பின்னால் கண்டிருப்பவைகள் தவிர மற்றெல்லா உடன்படிக்கைகளின்படிக்கும் கலெக்ட்டரானவர் ஜப்தீகாலத்தில் நடத்திவரவேண்டியது; ஆனால், ஜப்தியை பிரயோஜனப்படவொட்டாமல் கெடுக்கவேணுமென்றாவது ஆலசியப்படுத்தவேணுமென்றாவது கெட்ட எண்ணத்தோடு சேர்ந்து செய்யப்பட்ட அவ்விதமான சகல உடன்படிக்கைகளும் தொழிற்சாலைகள் அல்லது கட்டடங்கள் கட்டும்பொருட்டாவது கரம்பு நிலத்தை சாகுபடி பண்ணும்பொருட்டாவது விடப்படாமல், வழக்கமான தீர்வையைப்பார்க்கிலும் குறைந்த வீதத்திற்கு விடப்பட்டிருக்கிற நிலத்தின் குத்தகைச்சீட்டுகளும், ஜப்திக்குப்பின்பு செய்யப்பட்ட சகல உடன்படிக்கைகளும் ரத்தாகுமென்று கலெக்ட்டர் பிரசித்தஞ்செய்வாராகில், அப்படிப்பட்டதுகள் அவர்பேரில் தொடருவதற்குச் சம்பந்தமற்று ரத்தாய்விடும்; ஆயினும் அப்படிப்பட்ட உடன்படிக்கையில் சம்பந்தமுள்ளவர்கள் தங்களுடைய சுதந்தரங்கதை ஸ்தாபித்துக்கொள்ளுவதற்கு சாதாரணமான நியாயஸ்தலங்களிலே கலெக்ட்டர்பேரில் வியாச்சியங்கொண்டுவர பாத்தியமுடை

யவர்களாவார்கள்; அப்படிப்பட்ட நிலத்தின்பேரில் கொதுவை முதலிய எவ்விதமான செலவுகளிருந்தபோதிலும் அதுகளையெல் லாம் நிறுத்திப்போட்டு முன்னமே சர்க்கார் தீர்வை செலுத்தப் படும்.

33. செலுத்தவேண்டிய கெடுவாய்ப்போயிருக்கிற குத்தகைத் தொகையைக்குறித்தாவது வரும்படியைக்குறித்தாவது பூமிக்குடை யவனிடத்திலாவது அவனுக்காகவாவது அவனுடைய குத்தகைதா ரன் சொத்தைச்சேர்ந்த காரியங்கள் நடத்திவரப்படுமென்று மேற் சொல்லிய படி பிரசித்தஞ்செய்யப்படுவதற்கு முன்னமே பணஞ்செ லுத்தியிருந்தால், அதை கலெக்ட்டர் ஒப்புக்கொள்ளவேண்டியது; அப்படி பிரசித்தஞ் செய்யப்பட்ட பின்பாவது செலுத்தவேண்டிய கெடுவாவதற்கு முன்னமேயாவது செலுத்தப்பட்ட பணமானது கலெக்ட்டரால் ஒப்புக்கொள்ளப்படத்தக்க தல்லாமையினாலே, முன்னமே அதை யார் செலுத்தினார்களோ அவர்களுக்கு இஷ்ட மிருந்தால், சாதாரணமான கோர்ட்டுகளில் பாக்கிதாரன்பேரில் வியாச்சியந் தொடரலாமென்று உத்தரவு செய்துவிட்டு, அவர்களி டத்திலிருந்து தொகை முழுமையும் குத்தகை தொகை பாக்கியைப் போலவே வசூல் செய்ய கலெக்டருக்கு அதிகாரமுண்டு.

34. ஜப்தி சொத்திலிருந்து வந்த பணத்திலே ஜப்திசெலவும் சொத்து விசாரணை செலவும் செலுத்தப்பட்டபின்பு மற்றதை தீர் வை பாக்கிக்கும், வருஷமொன்றுக்கு நூற்றுக்கு ஆறுவிழுக்காடு அதின்பேரில கூடுகிற வட்டிக்கும் செல்லாக பாக்கிதாரன் பேரால் வரவுவைத்துக்கொண்டே வந்து, இவ்விதமாய் தீர்வை பாக்கி முழு மையும் வட்டியும் ஜப்தி செலவும் சொத்து விசாரணை செலவும் தீர் ந்துபோன உடனே ஜப்தி விடுதலை செய்யப்பட்டு, ஜப்தியி லிருந்த வரையி லுண்டான சகல வரவு செலவுகளுக்கும் பூர்த்தியாய்க் கண க்குக் கொடுக்கப்படும்.

35 ஜப்தி செய்யப்பட்டாவது ஜப்தி செய்யப்படப்போகிற தாசவாவதிருக்கிற நிலத்தில் பாத்தியமுடையவ னெவனுகிலும் தீர் வை பாக்கியையும் வட்டியையும் மற்று முண்டான செலவுகளையும் செலுத்தி அந்த நிலத்தை ஜப்தியிலிருந்து நிவர்த்திசெய்து கொள்ள லாம்; அப்படி நிவர்த்தி செய்துகொள்ளுவதற்காக யாதொரு ரயித்

து பணஞ்செலுத்தினல் அந்தப்பணத்தை அவன் பாக்கிதாரனுக்கு அப்போதாகிலும் பின்பாகிலுங் கொடுக்கவேண்டியதாயிருக்கிற குத்தகைத்தொகையிலே கழித்துக்கொள்ளலாம்; அந்த சொத்தின்பேரில் கொதுவையாகவாவது வேறே எவ்விதமாகவாவது பணங்கொடுத்திருக்கிறவன் மேற்படி தொகையைச்செலுத்தினல் அது அவனுக்கு மேற்படி பாக்கிதாரன் அந்த நிலத்தின்பேரில் கொடுக்கவேண்டிய கடனுகும்; அப்படியானபோதிலும், மற்ற கடன்களைப்போலவே பணஞ்செலுத்தப்பட்ட தேதிவரிசைப்படி அவனுக்குச் செலுத்தப்படும்.

36. இந்த ஆக்டின்படி அசையாப்பொருளை விற்கையில அனுசரிக்கவேண்டிய விதிக ளென்னவென்றுல்:—

முதலாவது பயிரங்கமான ஏலத்தில் உயர்ந்த விலைக்குக் கேட்கிறவனுக்கு விற்கப்படும். அந்த சொத்து இருக்கிற ஜில்லாவின் கலெக்ட்டராவது அவரால் நேமிக்கப்பட்ட வேறேயதிகாரியாவது ஏலத்திற்கு காலத்தையும் இடத்தையும் நிச்சயிக்கவேண்டியது. அந்தக்காலமானது பசலிவருஷம் முடிவதற்கு முன்னிட்டாவது பின்னிட்டாவதிருக்கலாம்.

இரண்டாவது. ஏலம்போடுவதற்கு முன்னமே கலெக்ட்டராவது அதற்காக அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தராவது-பாக்கிதாரனுடையபேரையும், நிலத்தின் இருப்பிடத்தையும் அளவையும் அதின்பேரில் கட்டியிருக்கிற அவனுடைய கட்டடங்களின் நிலைமையையும் விஸ்தீர்ணத்தையும், அந்த நில மொத்திற்காவது துண்டுதுண்டாகவாவது போடப்பட்டிருக்கிற தீர்வைத்தொகையையும், நடக்கிற பசலியின் மீதிகாலத்திற்கு சர்க்கார் தீர்வை பாக்கி இவ்வளவென்பதையும், இன்னகாலத்தில் இன்ன இடத்திலே இன்ன ஷரத்துகளின்படி ஏலம்போடப்படுமென்பதையும் கண்டெழுதி இங்கிலீஷிலும் அந்த ஜில்லாவில் வழங்குகிறபாஷையிலும் இஸ்தியார்பிறப்பித்து, அதை-ஏலம்போடுவதற்கு அதவா ஒருமாசத்திற்குமுன்னமே கலெக்ட்டர் கச்சேரியிலும் தாலூகா கச்சேரியிலும் சமீபத்திலிருக்கிற டாணவிலும் அந்தநிலத்தில் எல்லாருக்குந் தெரியும்படியான இடத்திலும் ஒட்டவேண்டியது.

மூன்றுவது, நிலங்களை ஏலத்திலெடுக்கிறவன் அந்தக் கிரயத் தொகையில் நூற்றுக்கு பதினைந்து விழுக்காடு கலெக்ட்டரிடத்தி லாகிலும் அவரால் நேமிக்கப்படுகிற வேறே உத்தியோகஸ்தரிடத்தி லாகிலும் ஏலத்திலெடுக்குங்காலத்தில் டேவணிகட்டவேண்டியது. கிரயத்தொகையில் மற்றபணத்தை முப்பதுநாளைக்குள் அவன் செலுத்தாவிட்டால், அந்த ட்டேவணிப்பணத்தை இழந்துவிடுவான்.

நாலாவது. ஏலத்திலெடுக்கிறவன் மேற்சொல்லியபடி ட்டேவணி சட்டாவிட்டாலும் கட்டமாட்டேனென்றாலும், டேவணி கட்டினபோதிலும் மற்றக்கிரயப்பணத்தைச் செலுத்தாவிட்டாலும், அந்தசொத்தை மறுபடிஏலம்போட்டு, அதினாலுண்டாகிறசெலவையும் நஷடத்தையும் சர்க்கார்தீர்வைபாக்கியை வசூல்செய்கிறவிதமாகவே முன்னே ஏலத்தில் எடுத்தவனிடத்தில் வசூல்செய்யலாகும். அந்தநிலம் முதல் ஏலத்தைவிட இரண்டாவது ஏலத்தில் அதிக விலைக்குவிற்றால் அந்த அதிகப்பணமானது எவன்பொருட்டு மேற்படி முதல் ஏலம்போடப்பட்டதோ அவனுக்குச் சேரவேண்டியது.

ஐந்தாவது. ஏலத்தில் விலைகேட்கிறவர்களெல்லோரையும் தங்கள் சொந்தத்திற்கு விலைகேட்கிறார்களோ அல்லது ஏஜெண்டுகளாக விலைகேட்கிறார்களோ அதைச் சொல்லும்படிகேட்டு, ஏஜெண்டுகளாயிருந்தால் முதலாளிகளுடைய கையெழுத்துப்பட அதிகார பத்திரத்தைக் கொண்டுவந்து கொடுக்கச்சொல்லலாம். கேட்கப்பட்டபடி அவர்கள் செய்யாவிட்டால், அவர்கள் ஏலத்தில் விலைகேட்பதை தள்ளுபடி செய்யலாம்.

37. பாக்கிதாரனாவது, அவனுக்காகக் காரியங்களை நடத்துகிறவனாவது நிலத்தில் பாத்தியமுடையவனெவனாவது, தீர்வைபாக்கி முழுமையையும் அதற்கு வட்டியையும் பாக்கியைத் தண்டல்செய்வதற்கும் சொத்தை ஜப்திசெய்வதற்கும் அதை விசாரணைசெய்வதற்கும் ஏலம்போடுவதற்குவேண்டிய பிரயத்தனங்களைச் செய்வதற்கும் பிடிக்கிற சகலசெலவுகளையும் கொண்டுவந்து கட்டினால் ஏலம்போடுவது நிறுத்திவிடப்படும். ஆனால் அப்படி பணங்கட்டுகிறவர்கள் ஏலத்திற்கு நிச்சயித்திருக்கிற தினத்திற்குமுன்னாள் சூரிய அஸ்தமானத்திற்குள் கட்டவேணும். அப்படி யாதொரு ரயித்தாவது அந்த சொத்தின்பேரில் கொதுவையாகவாகிலும் வேறே எவ்

விதமாகவாகிலும் பணங்கொடுத்திருக்கிறவனுவது கட்டினுல் அந்தத்தொகையை 35-வது பிரிவில் சொல்லியிருக்கிறவிதமாய் வசூல் செய்துகொள்ளலாம்.

38. எவன்பெயரால் நிலங்கள் ஏலத்தில் எடுக்கப்படுகிறதோ அவன் பெயருக்கு அதுகளை ரிஜிஸ்தர்செய்து, கலெக்ட்டருடைய கையெழுத்தும் முத்திரையும் போட்டு அவனுக்கு ஏல விக்கிரயச் சீட்டு கொடுக்கப்படும். அந்த சீட்டானது அந்தவிக்கிரயத்தை எந்தக்கோர்ட்டில் ஸ்தாபிக்கவேணுமோ அந்தக்கோர்ட்டுகளிலும் நீதிஸ்தலங்களிலும் அப்படி ஏலத்தில்கொண்டது உண்மையென்பதற்கு உறுதியானசாட்சியமாகும். அந்த ஏலவிக்கிரயச்சீட்டு யாரிடத்தில் கொண்டுவந்து காட்டப்படுகிறதோ அந்த அதிகாரியானவர் அதிலுள்ள கலெக்டர்கையெழுத்தாவது முத்திரையாவது உண்மையானதோ அல்லவோவென்று அனுமானித்தாலொழிய, அதைக் குறித்து ருஜு கொடுக்கப்படவேணுமென்பதில்லை.

39. நிலங்கள் ஏலத்தில் கொள்ளப்பட்டால், கலெக்ட்டராவது கலெக்ட்டரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தராவது கிரயத்துக்குக் கொண்டவனுடைய பெயரையும், கொண்டதேதியையும், மேற்படிநிலங்களில் முன்னுடையவனுக்கு உண்டாயிருந்த சகலசுதந்தரங்களும் பாத்தியதையும் சட்டப்படி ஏலக் கிரயக்காரனுக் குண்டென்பதையும், ஏலம் போடப்பட்ட நிலங்களிலிருக்கிற கிராமங்களிலும், தாலூக்கா கச்சேரியிலும், அந்தஜில்லா உஜூர் கச்சேரியிலும், ஜில்லாகெஜட்டிலும் பிரசித்தஞ் செய்யவேண்டியது.

40. அப்படி பிரசித்தஞ் செய்யப்பட்டிருந்தும், நிலத்தை நியாயமாய் ஏலத்தில் கொண்டவன் அதை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ள வொட்டாமல் தடுக்கப்படுவானுகில் தகுந்த அதிகாரமுடைய யாதொரு கோர்ட்டாரிடத்தில் மனுவுசெய்துகொண்டு 38-வது பிரிவில் சொல்லியிருக்கிற ஏலவிக்கிரயச்சீட்டைக் காட்டுவதின்பேரில், அந்தக் கோர்ட்டார் அந்தநிலம் கிரயக்காரனுக்கு சித்திக்கும்படி கோர்ட்டுதீர்ப்பாயிருந்தாலெப்படியோ அவ்விதமாகவே அவனுக்கு அதை ஸ்வாதீனப்படுத்தும்பொருட்டு தகுந்தகட்டளை பிறப்பிக்கவேண்டியது.

41. பாக்கிதாரன் தன்னுடைய ரயித்துகளிடத்தில் செய்து கொண்டிருக்கிற சகல உடன்படிக்கைகளையும், அவர்கள் அவனுக்குச் செலுத்தியிருக்கிற சகலதொகைகளையும், அப்படிப்பட்டதை என்னதிட்டங்களின்படி எவ்வளவுமட்டில் ஒப்புக்கொள்ளவேணுமென்று இந்த ஆக்ட்டு 32-வது 33-வது பிரிவுகளில் சொல்லியிருக்கிறதோ அந்தப்படியே ஏலக்கிரயக்காரன் ஒப்புக்கொள்ள வேண்டியது.

42. சர்க்கார் தீர்வைபாக்கிக்காக ஏலம்போடும்படியான நிலங்களின்பேரில் கொதுவை முதலியசிக்குகள் என்ன இருந்தபோதிலும் நிமித்தமில்லாமல் அதுகள் ஏலத்தில்விற்கப்படும். விற்றபணத்திலே - தீர்வைபாக்கியும் வட்டியும் ஜப்திசெலவும் ஏலச்செலவும் அந்த பாக்கியைக் குறித்துண்டான மற்ற செலவுகளும் செலுத்தப்பட்டபின்பு மிகுதி ஏதாவதிருந்தால் அதை - பாக்கிதாரனுக்குக் கொடுக்கக்கூடாதென்று தகுந்த அதிகாரமுடைய யாதொரு கோர்ட்டு கட்டளையினால் தடுக்கப்பட்டாலொழிய அவனுக்குக் கொடுத்துவிடலாகும்.

43. ஏலம் போடப்படுமோகில், அன்றையவரையில் பாக்கிதாரனுக்கு அவனுடைய ரயித்துகள் கொடுக்கவேண்டியதாயிருக்கிற குத்தகைத்தொகை பாக்கியை அவன் மேற்படி ஏலத்திற்கு முன்னமே வசூல் பண்ணுவதற்குச் செய்யும்படியான ஜப்திதவிர வேறே யாதொரு நடவடிக்கையை அந்த ஏலத்திற்குப்பின்பு நடத்தி வசூல் செய்துகொள்ளலாம்.

44. சர்க்கார் தீர்வைபாக்கிக்காக பாக்கிதாரனுடைய நிலமுழுமையையுமாகிலும் அதில் எவ்வளவையாகிலும் விற்பதற்கு கலெக்டருக்காவது அதற்காக அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தருக்காவது அதிகாரமுண்டு. ஆனால், அந்தநிலத்திலே - தீர்வைபாக்கியையும் அதற்குவட்டியையும் ஜப்திசெலவையும் விசாரணைசெய்வதற்கும் ஏலம் போடுவதற்குமுண்டான செலவுகளையும் செலுத்துவதற்கு எவ்வளவுபோதுமோ அதைவிட அதிகபாக சாத்தியமானமட்டில் விற்கக்கூடாது.

45. மில்கதிஸ்திமிரார் சன்னதின்படிக்காவது மொத்தமாகத் தீர்வை செலுத்திக்கொண்டாவது அனுபவிக்கப்படுகிற யாதொரு

பூஸ்திதியின் ஓர் பாகமாத்திரம் ஏலத்தில் விற்கப்பட்டால், அந்த பாகத்திற்குத் தீர்வை இவ்வளவென்று கலெக்ட்டரானவர் ஏலத்திற்கு முன்னமே நிச்சயிக்கவேண்டியது: எப்படிக்கென்றால்:—

பூஸ்திதி முழுமைக்குமுண்டான சர்க்கார் தீர்வை மொத்தத்தை அந்த ஸ்திதிமுழுமையும் என்ன விலையாயிருக்கிறதோ அதற்குத்தீர்வை வீதமாக வைத்துக்கொண்டு, அந்த வீதப்படிக்கு அந்த பூஸ்திதி பிரிக்கப்படுகிற அந்தந்தபாகத்திற்கு ஏற்படுகிற கிரயத்தின்பேரில் அந்தந்தபாகத்திற்கு சர்க்கார்தீர்வை இவ்வளவென்று நிச்சயிக்கவேண்டியது.

மேற்சொல்லியபடி நிச்சயிக்கும்பொருட்டு கலெக்டரானவர் பாகிக்கவேண்டிய அந்த நிலங்களில் உற்பத்தியான உடைவாரம் கண்டுமுதலையும் அந்த நிலங்களைச்சேர்ந்த காரியங்களை நடத்துவதற்குண்டான செலவுகளையுங் குறித்து கணக்குகளைக் கொடுக்கும்படி பூமிக்குடையவர்களுக்கும் கிராம கணக்குப்பிள்ளைகளுக்கும் உத்தரவுசெய்ய அதிகாரமுடையவராவார். அப்படி கேட்கும்போது அந்த பூமிக்குடையவர்களும் கணக்கப்பிள்ளைகளும் அப்போது நடக்கிறவருஷத்திற்கு முன்னிட்ட மூன்றுவருஷங்களின் கணக்குகளுக்குக் குறையாமல் அந்தக்கணக்குகளைக் கொடுக்கவேண்டியது. பாகிக்கப்பட்ட நிலங்களுக்குத் தீர்வை நிச்சயிக்க வொட்டாமல் தடுக்கும்பொருட்டு பூமிக்குடையவன் கணக்கு கொடுக்கமாட்டேனென்றாலும், அக்கிரமமாய் ஆலசியஞ்செய்தாலும், கலெக்ட்டரானவர் அந்தபூஸ்திதி முழுமையையும் ஏலம் போட்டுவிடலாம்.

46. மில்கதிஸ்திமீரார் சன்னதின்படிக்காவது வேறே எதின்படிக்காவது அநுபவிக்கப்பட்டு, மொத்தமாகத் தீர்வைசெலுத்தப்படுகிற பூஸ்திதியைப்பிரித்த பாகங்களின்பேரில் கலெக்ட்டரால் போடப்படுகிற சாஸ்விதமான தீர்வைத்தொகையானது ரிவினியூ போர்டாரால் எழுத்துமூலமாய்ப் பிறப்பிக்கப்படுகிற உத்தரவினாலே ஊர்ஜிதஞ்செய்யப்படுகிறவரையில் ஸ்திரமாகமாட்டாது.

47. பாக்கிதாரன் ஜாமீன்கொடுக்கிறதாயிருந்தால் கலெக்ட்டராவது அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தராவது அதை வாங்கிக்கொண்டு, தான் நிச்சயிக்கிறகாலம்வரையிலே தான் ஏற்படுத்துகிற திட்டங்களின்படி பாக்கிதாரனுடைய சொத்தை

ஏலம்போடாமல் நிறுத்திவைக்கலாம். அந்ததிட்டங்களின்படி நடக்கத் தவறிப்போனால், அந்த கலெக்ட்டராவது உத்தியோகஸ்தராவது சொத்தை ஏலம்போட்டு, அந்த பாக்கிதாரன்பேரிலாவது அவனுடைய ஜாமீன்தாரன்பேரிலாவது இருவர்பேரிலுமாவது தொடரலாம்.

48. மேற்சொல்லியபடி வட்டியுள்பட சர்க்கார்தீர்வைபாக்கிக்கும் மற்றசெலவுகளுக்கும் பாக்கிதாரன் அல்லது அவனுடைய சாமீன்தாரன் சொத்தை விற்றபணம் போதாமலிருந்து, பாக்கிதாரனுகிலும் அவனுடைய ஜாமீன்தாரனுகிலும் வேணுமென்று பாக்கியைக்கட்டாமலிருக்கிற தாகவாவது, பணங்கட்டாமல் மோசஞ்செய்யும்பொருட்டு யாதொரு சூதானகாரியஞ் செய்ததாகவாவது நம்புவதற்கு கலெக்ட்டருக்குத்தகுந்தமுகாந்தரமிருந்தால், அவர் இதில் பின்னுல சொல்லியிருக்கிறபடி ஸ்திரீஜாதிதவிர புருஷனுயிருக்கிற பாக்கிதாரனையாகிலும் அவனுடைய ஜாமீன்தாரனையாகிலும்பிடித்து சிறைச்சாலேயில் வைப்பிக்கலாம். ஆனுல் சர்க்கார் தீர்வைபாக்கிக்காக இரண்டுவருஷத்திற்கதிகமாய் ஒருவனையும் சிறைச்சாலேயில் வைக்கக்கூடாது. அந்தபாக்கி 500-ரூபாய்க்கு மேற்படாவிட்டால் ஆறுமாசத்திற்கதிகமாயும், 50-ரூபாய்க்கு மேற்படாவிட்டால், மூன்றுமாசத்திற் கதிகமாயும் சிறைச்சாலேயில் வைக்கக்கூடாது. மேலும் மேற்சொல்லியகிரமப்படி காவலில்வைத்தபோதிலும் அந்த பாக்கிதாரனுவது அவனுடைய சாமீன்தாரனுவது சர்க்காருக்குக் கொடுக்கவேண்டியபாக்கி செத்துப்போகமாட்டாது.

49. ஸ்திரீகள்தவிர, புருஷனுகிய பாக்கிதாரனையாவது அவனுடைய ஜாமீன்தாரனையாவது அவ்விருவரையுமாவது மறியல்செய்வதற்கு கலெக்ட்டர் வாரண்டுபிறப்பித்து, அதில் அப்படி பிடிக்கப்பட வேண்டியவர்களுடைய பேர்களேயும், சர்க்கார்தீர்வை பாக்கித்தொகையையும், செலுத்தவேண்டிய கெடுவானதேதியையும் கண்டெழுதி, தன்கையெழுத்தும் முத்திரையும் போடவேண்டியது. பின்பு அந்தவாரண்டை நிறைவேற்றும்படி அது யாரிடத்தில் ஒப்பிக்கப்படுகிறதோ அந்த உத்தியோகஸ்தன் பாக்கிதாரனையாவது அவனுடைய ஜாமீன்தாரனையாவது அவ்விருவரையுமாவது மறியல்செய்து, டிஸ்திரிக்ட்டுஜெயிலுக்கு இட்டுக்கொண்டுபோய், அந்தவாரண்

டை ஜெயிலரிடத்தில் ஒப்பிக்கவேண்டியது. அப்படிப்பட்ட கைதிகளை ஜெயிலில்வைத்துக்கொள்ள அந்தஜெயிலருக்கு அதிகாரமுண்டாக்குவதற்கு அந்தவாரண்டேபோதும். அந்தஜெயிலர் அந்தவாரண்டுக்கு நகலை தன்னிடத்தில் வைத்துக்கொண்டு அசலை அந்த ஜெயில் விசாரணை அதிகாரியினிடத்திற்கு உடனே அனுப்பிவிட வேண்டும்.

50. சர்க்கார்தீர்வை பாக்கிதாரர்கள் விஷயமாய் இந்த ஆக்ட்டில் சொல்லியிருக்கிற சகல நடவடிக்கைகளையும் அவர்களுடைய ஜாமீன்தாரர்கள் பேரில் நடத்தலாம்; அப்படிப்பட்ட நடவடிக்கைகளை முதலாளியின்பேரில் நடத்துகிற காலத்தில்தானே யாவது அதற்கு முன்னிட்டாவது பின்னிட்டாவது ஜாமீன்தாரன்பேரில் நடத்துவதற்கு கலெக்ட்டருக்காகிலும் அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தருக்காகிலும் அதிகாரமுண்டு. ஆயினும் பாக்கித்தொகை வட்டிமுதலான செலவுகளும் சேர்ந்த மொத்தத்தைவிட அதிகமாக இருவரிடத்திலும் வசூல்செய்யக்கூடாது.

51. தானியமாக சர்க்காருக்கு நிலத்தீர்வை செலுத்தப்படத்தக்கதாயிருந்தால், கலெக்ட்டருக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி பூமிக்குடையவன் தகுந்த ஜாமீன் கொடாதபட்சத்தில், தானியத்தைப் பங்கிட்டு சர்க்காருக்குச்சேரவேண்டிய பாகத்தைப் பிரத்தியேகமாய் வைக்கிறவரையில் நிலத்திலிருந்து மாசூலையெடுத்துக்கொண்டுபோகவொட்டாமல் தடுப்பதற்கு கலெக்ட்டருக்காகிலும் அவரால் அதிகாரங்கொடுக்கப்பெற்ற வேறே உத்தியோகஸ்தருக்காகிலும் அதிகாரமுண்டு,

52. சர்க்காருக்குச் சேரவேண்டிய நிலத்தீர்வைதவிர மற்ற சகலதீர்வை பாக்கிகளையும் சாகுபடி அல்லது தீர்வைசம்பந்தமான காரியங்களுக்காக சர்க்காரால் கொடுக்கப்பட்ட சகலதக்காவிகளையும், ரிவினியூ அல்லது போலீசு அலுவல்களிலிருக்கிற கிராம ஊழியக்காரர்களுக்கு அல்லது அவர்களுக்காக எவனுவது கொடுக்கவேண்டிய மேரை முதலானதுகளையும், சட்டப்படி நிலத்துக்குப்போட்டிருக்கிற சகல வரி இறைகளையும் வேறேவிதமாய் வசூல்செய்யும்படி இதுவரையிலாவது இனிமேலாவது பிரத்தியேகமாய் நிபந்தனை

யேற்பட்டிராத பட்சத்தில், இந்த ஆக்ட்டிலுள்ள நிபந்தனைகளின் படி நிலத்தீர்வை பாக்கியைப்போலவே வசூல்செய்யலாம்.

53. இந்தஆக்ட்டின்படி நோட்டீசு வாரண்டுமுதலானதுகளைக் கொண்டுபோய்க் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டவர்களுக்கு கவர்ன்மெண்டாருடைய அனுமதியின்பேரில் ரிவினியூ போர்ட்டாரால் அப்போதைக்கப்போது நிச்சயிக்கப்பட்டு டிஸ்திரிக்ட்டு கெஜட்டில் பிரசித்தஞ்செய்யப்படுகிற வீதப்பிரகாரம்படி கொடுக்கப்படும்.

54. மேற்படி பிரிவில் கண்டிருக்கிற படிச்செலவும் இந்த ஆக்ட்டின்படி ஏற்படுகிற வட்டிமுதலிய சகலசெலவுகளும் தீர்வை பாக்கியைப்போலவே பாக்கிதாரனிடத்திலும் அவனுடைய ஜாமீன் தாரர்களிடத்திலும் வசூல்செய்யத் தக்கதாகும்.

55 ஜப்திசெய்தாவது கைப்பற்றியாவதிருக்கிற சொத்தை ஏலம்போடும்படி முன்னே உத்தரவுசெய்யப்பட்டிருந்து, அந்தஏலத்தை நிறுத்தும்படி பின்புஉத்தரவுசெய்யப்பட்டபோதிலும், சொத்தை ஜப்திசெய்தது அல்லது கைப்பற்றினதைக்குறித்து நேரிட்டசெலவுகளை அந்த ஏலம் நிறைவேறியிருந்தாற் போலவே அந்த சொத்துக் குடையவன் செலுத்தவேண்டும். அவனதை செலுத்தாவிட்டால், எவ்விதமான நடவடிக்கைகள் நடத்தி தீர்வைபாக்கி வசூல்செய்யப் படுமோ அவ்விதமாகவே அது வசூல் செய்யப்படத்தக்கதாகும்.

56. சர்க்கார் தீர்வைசெலுத்துகிற பிரதிமனிதனும், அதற்காக கலெக்டரினாலாவது அவரால நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தனாலாவது கையெழுத்து செய்துகொடுக்கப்படுகிற ரசீதை பெற்றுக்கொள்ளத் தக்கவனாவான். அந்த ரசீதிலே அப்படிசெலுத்துகிறவனுடைய பேரையும் அது இன்னத்துக்காகச் செலுத்தப்பட்டதென்பதையும் கண்டெழுதவேண்டும். நிலத்தீர்வை விஷயத்தில் எந்தநிலத்திற்குத் தீர்வை செலுத்தப்படுகிறதோ அந்தநிலத்தின் விவரத்தையும் அந்தநிலத்தைக்குறித்து ஜமாபந்திகணக்கில் தாக்கலாயிருக்கிறவர்களுடைய பேர்களையும் கண்டெழுதவேண்டியது.

57. பாக்கிதாரனாவது அவனுடைய ஜாமீன்தாரனாவது எந்த டிஸ்திரிக்ட்டுக்குள் அவன் தீர்வைசெலுத்தவேண்டியதோ அந்தடிஸ்திரிக்ட்டில் செலுத்தாமல் பாக்கிவைத்துக்கொண்டு அதற்குவெளி

யில் வாசஞ்செய்தாலும் அவ்விடத்திலே அவனுக்கு சொத்து இருந்தாலும் அப்படி எந்த டிஸ்திரிகட்டில் பாக்கியாயிருக்கிறதோ அவ்விடத்திய கலெக்ட்டர் மனுவு எழுதிக்கொள்ளுவதின்பேரில், மேற்படியான் எவ்விடத்தில் வாசஞ்செய்கிறுனே அல்லது அவனுக்கு சொத்து இருக்கிறதோ அந்த டிஸ்திரிக்ட்டின் கலெக்ட்டரானவர் தன்னுடைய டிஸ்திரிக்ட்டில் அப்படி பாக்கிவைத்துக்கொள்ளப்பட்டாற்போலவே சகலவிஷயங்களிலும் அந்த பாக்கிதாரன்பேரிலும் அவனுடைய ஜாமீன்தாரன்பேரிலும் அவர்களுடைய சொத்தின்பேரிலும் நடவடிக்கை நடத்தலாம். கலெக்ட்டரானவர் அப்படி தான் எழுதுகிற பிரதிமனுவிலும் கையெழுத்துசெய்து முத்திரைபோடவேண்டும். அந்த மனுவை அனுசரித்து நடத்துகிற கலெக்ட்டர் பேரிலாவது, அவருடைய அதிகாரத்துக்குள்ளாக நடத்துகிற யாவரொருவர்பேரிலாவது நடத்தப்படுகிற சகல விவகாரங்களிலும் அந்த பாக்கித் தொகையைக்குறித்தும் பாக்கிதாரன் இன்னுரென்பதைக் குறித்தும் அந்த மனுவே போதுமான ருஜுவாகக் கொள்ளப்படும். அந்த மனுவெழுதிக்கொள்ளுகிற கலெக்ட்டருடைய முத்திரையாவது கையெழுத்தாவது உத்தியோகப் பெயராவது எதார்த்தமானதாக இருக்கமாட்டாதென்று அனுமானிப்பதற்கு கோர்ட்டாருக்கு முகாந்தரமிருந்தாலொழிய அதுகள் எதார்த்தமான தென்பதைக்குறித்து ருஜுவேண்டுவதில்லை. ஆனால், யாவனொருவன் அந்த மனுவெழுதிக்கொண்ட கலெக்ட்டர்பேரில் தன்னுடைய சுயஜில்லாவிலே வியாச்சியந் தொடருவதற்கு இதிலுள்ள எந்த நிபந்தனையினலும் தடங்கலொன்றுமில்லை.

58. சர்க்காருக்குச் செலுத்தப்படத்தக்க பூமிதீர்வை வீதத்தைக்குறித்தாவது பிரிக்கப்பட்ட பூஸ்திதியின் பாகங்களின்பேரில் இதுவரையில் நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிற அல்லது இனி நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிற அல்லது இனி நிஷ்கரிஷை செய்யப்படும் தீர்வைத்தொகையைக்குறித்தாவது உண்டாகிற யாதொரு ஆட்சேபத்தை யோசனைசெய்ய வாகிலும் தீர்மானிக்க வாகிலும் எந்த சிவில்கோர்ட்டாருக்கும் அதிகாரமில்லை.

59. இந்த ஆக்ட்டின்படி நடத்தப்பட்ட யாதொரு நடவடிக்கையினலே அநியாயமடைந்தவர்கள் இதில் முன்னமே சொல்லியி

ருக்கிறபடிக்குத்தவிர சிவில்கோர்ட்டுகளில் நியாயந்தேடிக்கொள்ளுவதற்கு இந்த ஆக்ட்டிலுள்ள எந்த நிபந்தனையினாலும் தடங்கலுண்டாகமாட்டாது. ஆனால் அவர்கள் அந்த வியாச்சியமூலம் பிறந்த கால முதற்கொண்டு ஆறுமாசத்திற்குள் அதைக்குறித்து வியாச்சியந் தொடரவேணுமேயல்லாமல், அந்தகெடுவிற்கு மேற்பட்டுத் தொடர்ந்தால் அப்படிப்பட்ட வியாச்சியத்தை சிவில்கோர்ட்டார் பிடிக்கக்கூடாது.

60. இந்த ஆக்ட்டின்படி செய்யப்பட்ட அல்லது செய்ததாகச் சொல்லப்பட்ட யாதொரு காரியத்தினாலே அநியாயமடைந்தவன யாதொரு கலெக்ட்டர்பேரில் கொண்டுவருகிற வியாச்சியமானது அந்த கலெக்ட்டர் டிஸ்திரிக்ட்டைவிட்டுப் போய்விட்டதினாலே அற்றுப்போகமாட்டாது. ஆனால் அவருக்குப் பின்வருகிறவர்பேரில் அந்த வியாச்சியந் தொடரப்பட்டாற்போலவே அந்தப் பின்வருகிறவர்பேரிலே அந்தவியாச்சியம் நடத்தப்படும். முன்னிருந்த கலெக்ட்டரினாலே இந்த ஆக்ட்டின்படி செய்யப்பட்ட அல்லது அவர்செய்ததாகச் சொல்லப்பட்ட யாதொரு காரியத்தைக்குறித்து உத்தியோக முறைமையிலே அவருக்குப்பின்வருகிற கலெக்ட்டர் பேரில் இதற்குமுந்தியபிரிவில் கண்டிருக்கிற வாயிதாவிற்குள் வியாச்சியங்கொண்டுவரலாம்; ஆனால், அவர் தனக்கு முன்னிருந்தவரால் உத்தியோகமுறைமையில் செய்யப்பட்ட யாதொரு காரியத்திற்கு அவரே உத்தரவாதஞ் செய்யவேணுமென்பதில்லை.

61. இந்த ஆக்டின்படி சொத்தை ஏலத்தில் விற்பதற்கு - 1822ஹு த்து 5-வது சட்டம் சம்பந்தப்படமாட்டாது.

62. இந்த ஆக்டின்படி வசூல்செய்யப்படத்தக்க சர்க்கார்தீர்வை பாக்கியைக்குறித்து - 1802ஹுத்து - 28-வது சட்டமும், 1803ஹுத்து - 1-வது 2-வது சட்டங்களும் செல்லமாட்டாது.

63. மைனர்கள் முதலான அசமர்த்தாளாகிய பூமிக்குடையவர்களின் நிலங்களை ஏலத்தில் விற்பதைக்குறித்து - 1804ஹுத்து 5-வது சட்டத்திலும், 1831ஹுத்து - 10-வது சட்டத்திலுமுள்ள நிபந்தனைகள் சென்றுவருவதற்கு இந்த ஆக்டிலுள்ள எந்த நிபந்தனையினாலும் தடங்கலொன்றுமில்லை.

64. சென்னபட்டணத்து சட்ட புஸ்தகத்திலுள்ள-1802ஹூ த்து 2-வது சட்டம் 12-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி சென்ன பட்டணத்து ராஜதானியின் சரகத்துக்குள் நிலத்திற்கு சர்க்கார்தீர்வையை வசூல்செய்வதற்கு இந்த ஆக்டிலுள்ள எந்த நிபந்தனையும் சம்பந்தப்படமாட்டாது.

65. அடியில் கண்டிருக்கிற சட்டங்கள் - வேறே ஆக்ட்டுகளையும் சட்டங்களையுமாவது வேறே ஆக்ட்டுகளின் பாகங்களையும் சட்டங்களின் பாகங்களையுமாவது ரத்துசெய்கிறமட்டிலும் இந்த ஆக்ட்டு வழங்கத் தொடங்குவதற்குமுன்னமே நடந்திருக்கிற நடவடிக்கைகள் அல்லது சங்கதிகளுக்குச் சம்பந்தப்படுகிறமட்டிலுந் தவிர இதனால் ரத்துசெய்யப்படுகின்றது:—

1802ஹூத்து - 26-வது சட்டம்—பீடிகையும் - 2-வது - 3-வது பிரிவுகளும் தவிர முழுவதும்.

1802ஹூத்து - 27 - வது - சட்டம்.
1830ஹூத்து - 3 - வது - சட்டம்.
1832ஹூத்து - 6 - வது - சட்டம்.
1858ஹூத்து - 39 - வது - ஆக்ட்டு.

66. இந்த ஆக்ட்டானது இவ்விடத்திய கவரன்மெண்டார் நிச்சயித்து சர்க்கார் கெஜட்டில் பிரசித்தஞ்செய்விக்கிற தேதிமுதற்கொண்டு வழங்கிவரவேண்டியது.

---

## சென்னப்பட்டணம் 1865-ம்ஹூத்து 8-வது ஆக்ட்.

### குத்தகைத்தொகையை வசூல்செய்வதைக்குறித்து நடத்தவேண்டிய நடவடிக்கைகளை விவரித்துச்சொல்லுகிற சட்டங்களைச் சீர்ப்படுத்தி ஒன்றுய்ச்சேர்ப்பதற்கான ஆக்ட்.

பூமிக்குடையவர்களைக்குறித்தும் அவர்களுடைய ரயித்துகளைக்குறித்தும் செய்யப்பட்டிருக்கிற பல சட்டங்களைத் தெளிவாக்கி ஒன்ருய்ச்சேர்ப்பதும், குத்தகைத்தொகையை வசூல்செய்வதைக்குறித்து எங்கும் ஒரேவிதமான நடவடிக்கைநடத்தும்படி நிபந்தனையேற்படுத்துவதும் ஆவசியகமாயிருக்கிறபடியால், இதனுல் விதிக்கப்படுகிற தென்னவென்ருல் :—

1. பூமிக்குடையவர்களென்னும் வார்த்தையானது இந்த ஆக்ட்டில் பிரயோகமாயிருக்கிற இடங்களிலே யாராரென்று அர்த்தஞ் செய்துகொள்ளப்படுமென்றால்:—

மில்கதிஸ்திமீரார்சன்னதின்படி அனுபவிக்கிற சகலமானவர்களும், மற்றெல்லா ஜமீன்தார்களும், சுரோத்திரியம்தார்களும், ஜாகீர்தார்களும், இனும்தார்களும், இவர்களிடத்திலே பூமிகுத்தகைசெய்துகொள்ளுகிற சகலமானவர்களும் சர்க்காரிடத்தில் பூமிபேரிஜ் குத்தகை செய்துகொள்ளுகிறவர்களுமென்றும்;

ரயித்துவார் திட்டப்படிக்காவது சர்க்காருக்கு நேராய் பூமி தீர்வை செலுத்தும்படியான வேறே எவ்விதமாகவாவது பூமியை அனுபவிக்கிறவர்களெல்லோரும் ரிஜிஸ்தர்செய்யப்பட்டிருக்கிற மற்ற காணியாட்சிக்காரர்களெல்லோருமென்றும் அர்த்தமாகும்.

ரயித்தென்னும் வார்த்தையானது இந்த ஆக்ட்டில் சொல்லியிருக்கிற காரியங்களின்பொருட்டு, பூமிக்குடையவனுக்கு குத்தகைத்தொகை செலுத்த உடன்பட்டிருக்கிற சகலமானவர்களென்றும் அர்த்தமாகும்.

கலெக்ட்டரென்னும் வார்த்தையானது-கலெக்ட்டருக்குண்டாகிய அதிகாரங்களைச் செலுத்தும்படி அப்போதைக்கப்போது நேமிக்கப்படுகிற பிரதி அதிகாரி என்று அர்த்தமாவதாக எண்ணப்படும். முன்பின் தொடர்ச்சியினாலே விரோதமொன்றுமில்லாவிட்டால் ஆண்பால் சொற்களைப் பெண்பாலிலும் கொள்ளவேண்டியது. ஒருமைச்சொற்களைப் பன்மையிலுங் கொள்ளவேண்டியது.

2. குத்தகை பாக்கியைக்குறித்து இதில் பின்னால் சொல்லியிருக்கிறவிதமாய், கண்டிருக்கிற திட்டப்படி ரயித்துகள்பேரில் தொடருவதற்கு பூமிக்குடையவர்கள் அதிகாரமுடையவர்களாவார்கள்: ஆனால், இந்த ஆக்டின்படி யாதொரு ரயித்தின்பேரில் நடவடிக்கை நடத்தவேணுமாகில், குத்தைகைத்தொகை செலுத்தவேண்டிய கெடுவான காலமுதற்கொண்டு ஒரு வருஷத்திற்குள் நடத்தவேண்டும்.

3. ஜமீன்தார்களும், ஜாகீதர்களும், சுரோத்திரியதார்களும், இனும்தார்களும் இவர்களிடத்திலே பூமி குத்தகைச் செய்துகொள்ளுகிறவர்களும், சர்க்காரிடத்தில் பூமிபேரிஜா குத்தகை செய்துகொ

ள்ளுகிறவர்களும் தங்கள் ரயித்துகளோடு எழுத்துமூலமாய் உடன்படிக்கைகள் செய்துகொள்ளவேணும். பூமிக்குடையவர்கள் கொடுக்கிற உடன்படிக்கையானது பட்டாவென்றும், ரயித்து கொடுக்கிற உடன்படிக்கையானது முச்சலிக்காவென்றும் சொல்லப்படும்.

4. குத்தகை உடன்படிக்கைசெய்துகொள்ளுகிற உபயத்திராளுடைய பெயர்களையும், நிலமிருக்கிற இடத்தின் விவரத்தையும், அந்த நிலத்தின் அளவையும், பணமாகவோ தானியமாகவோ அல்லது நடந்தேறிவருகிற வழக்கப்படிக்காவது சட்டப்படிக்காவது கொடுக்கவேண்டிய மேனாமுதலான செலவுகள் உள்பட கண்டுமுதலில் வாரமாகவோ செலுத்தும்படியான குத்தகைத்தொகை இவ்வளவென்பதையும், அது இப்படிப்பட்ட தென்பதையும், இன்னின்னகாலத்தில் இவ்வளவிவ்வளவு செலுத்தப்படுமென்பதையும், குத்தகைத்தேதியையும், உபயத்திராள் உடன்படுகிற மற்றெல்லா விசேஷமான ஷரத்துகளையும் பட்டாவில் கண்டெழுதவேண்டியது. பூமிக்குடையவர்கள் தங்களிஷ்டப்படி பட்டாவுக்கு எதிரிடையாகவாவது, பட்டாவிலுள்ள ஷரத்துகளின்படி அனுபவித்துக்கொள்ளுகிறதாக மாத்திரம் கண்டெழுதியாவது முச்சிலிக்கா வாங்கிக்கொள்ளலாம்.

5. 3-வது பிரிவில் கண்டிருக்கிற பூமிக்குடையவர்கள் - உத்தாவுசெய்யப்பட்டிருப்பதுதவிர வேறே யாதொரு வரியிறையை எந்த பெயர் வைத்தாவது எந்த சாக்கிட்டுக்கொண்டாவது தங்கள் ரயித்துகளுக்குப் போடக்கூடாது. யாதொரு ரயித்தினிடத்திலே அவனுடைய பட்டாவில்கண்டிருக்கிற குத்தகைத்தொகை அல்லது உத்தரவான வேறே யாதொரு செலவுதவிர அதிகமா யெவ்வளவு பணமாவது வாங்கப்பட்டால், அவன் அதற்கு இரட்டிப்புத்தொகையை செலவுடனேகூட கலெக்ட்டரிடத்திலே சம்மேரி வியாச்சியந் தொடர்ந்து வரப்பற்றிக்கொள்ள பாத்தியஸ்தனுவான். இந்தப் பிரிவின்பிரகாரம் வதிலுக்கு வாங்கிக்கொள்ளும்படி தீர்மானஞ்செய்யப்பட்டபோதிலும், கிரமமான குத்தகைத்தொகையையும் வாங்கலாமென்று உத்தரவாயிருக்கிற செலவுகளையும்விட அதிகமாக அப்படி பணம்வாங்குகிறவன் சட்டப்பிரகாரம் அபராதம் வாங்குவதைக்குறி

த்து யாதொரு அபராதம் அல்லது தெண்டனைக்குள் ளாவானென்ப தற்கு இதினாலே தடங்கலொன்றுமில்லை.

6. குத்தகை செய்துகொள்ளப்படுகிற நிலங்கள் எந்த கிராமத்திலிருக்கிறதோ அந்த கிராமக்கணக்கப்பிள்ளை பட்டாக்களிலும் முச்சிலிக்காக்களிலும் கிரமமாய்க் கையெழுத்துப்பண்ணி, அதுகளைப் பதிவுசெய்துகொள்ளவேண்டியது.

7. மேற்சொல்லியபடி பட்டாக்களும் முச்சிலிக்காக்களும் ஒருவருக்கொருவர் கொடுத்திராவிட்டாலும், உடன்படிக்கைப்பிரகாரம் நடப்பித்துக்கொள்ள எத்தனப்படுகிறவன் பட்டாவையாவது முச்சிலிக்காவையாவது வாங்கிக்கொள்ளவேண்டியவனாயிருந்த மற்றொருவனுக்கு அதைக்காட்டி வாங்கிக்கொள்ளச் சொல்லியிருந்தானென்று ருஜுவுசெய்யப்படாவிட்டாலும், பட்டாவும் முச்சிலிக்காவும் வேண்டியதில்லையென்று உபயத்திராளும் சம்மதித்துத் தள்ளுபடிசெய்திராவிட்டாலும், குத்தகைஷரத்துகளை நிறைவேற்றுவிக்கும்படி கொண்டுவரப்பட்ட வியாச்சியமாவது நடத்தப்பட்ட விவகார நடவடிக்கைகளாவது அங்கீகரிக்கப்படாது. அப்படிகாட்டி வாங்கிக்கொள்ளச் சொல்லியிருந்ததை நோட்டீசு கொடுப்பதைக்குறித்து 39-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி நோட்டீசு கொடுத்திருந்து அதைக்கொண்டு பூர்த்தியாய் ருஜுவுசெய்யவேணும். ஆனால் அப்படிப்பட்ட நோட்டீசுகளின் பிரதிகளைக் கலெக்ட்டருக்கு அனுப்ப வேணுமென்பதில்லை.

8. மூன்றாம்பிரிவில் கண்டிருக்கிற பூமிக்குடையவர்களில் யாராவது - தன்னுடைய ரயித்துக்குக் கொடுக்கவேண்டிய பட்டாவை, அந்த ரயித்து கேட்டபின்பு மூன்றுமாதம்வரையில் கொடாதிருப்பாராகில், அந்த ரயித்து கலெக்ட்டரிடத்திலே சம்மேரி வியாச்சியம் தாக்கல் செய்யலாம்; அந்த அதிகாரி அந்த சங்கதியை விசாரணைசெய்து, கிரமமான பட்டா கொடுக்கும்படி உத்தரவு பண்ணி நேரிட்டதாக ருஜுவுசெய்யப்படுகிற செலவையும் நஷ்டத்தையும் அந்த ரயத்துக்குக் கொடுக்கும்படி தீர்ப்புச் செய்யவேண்டியது.

9. மூன்றாம்பிரிவில் கண்டிருக்கிற பூமிக்குடையவர்கள் கொடுக்கத்தக்க பட்டாவை வாங்கிக்கொள்ளச்சொல்லி கேட்டபின்பு

ஒருமாதவரையிலே அதை வாங்கிக்கொள்ளுகிறதுமில்லே, வதிலுக்கு முச்சிலிக்கா கொடுக்கிறதுமில்லேயென்று யாதொரு ரயித்து மறுத்தால், பட்டா வாங்கிக்கொள்ளும்படி செய்யச்சொல்லி கலெக்ட்டரிடத்திலே சம்மேரி வியாச்சியந்தொடர அந்த பூமிக்குடையவர்களுக்கு பாத்தியதையுண்டு.

10. முந்தியபிரிவில் கண்டிருக்கிற வியாச்சியங்களிலே கலெக்ட்டரானவர் - எவன்பேரில வியாச்சியந் தொடரப்பட்டதோ அவன் பட்டா வாங்கிக்கொண்டு முச்சிலிக்கா கொடுக்கவேண்டியதாவென்று முன்னே விசாரணைசெய்து, அது ருஜுவாகாவிட்டால், செலவுடனேகூட வியாச்சியத்தைத் தள்ளிப்போட வேண்டியது. அந்த விஷயத்தை வாதி ருஜுப்படுத்தினுல், கொடுக்கக்காட்டிய பட்டா கிரமமானதுதானுவென்று கலெக்ட்டர் விசாரணைசெய்து, கிரமமானதாகத் தோற்றினுல், பிரதிவாதி அந்த பட்டாவை வாங்கிக்கொண்டு அதை அனுசரித்து முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கும்படிக்கும் முன்னமே மறுத்ததினுலே நஷ்டம் நேரிட்டிருந்தால் அதைக்கட்டிக் கொடுக்கும்படிக்கும் தீர்ப்புசெய்யவேண்டியது. அந்தப் பட்டா கிரமமானதல்லவென்று தோற்றினுல் கலெக்ட்டரானவர் அடுத்த பிரிவில் சொல்லியிருக்கிறவிதமாய் இன்னவிதமான பட்டா கொடுக்கவேணுமென்று தீர்மானித்து, பின்பு பிரதிவாதி அந்த பட்டாவை வாங்கிக்கொண்டு அதற்கு ஒத்திருக்கும்படியாய் முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கும்படி தீர்ப்புசெய்யவேண்டியது. கலெக்ட்டருடைய தீர்ப்புதேதிமுதல் பத்துநாளேக்குள் பிரதிவாதியானவன் மேற்சொல்லியபடி கலெக்ட்டரால் அங்கிகரிக்கப்பட்ட அல்லது திருத்தப்பட்ட பட்டாவை வாங்கிக்கொள்ளாமலும் அந்த பட்டாவின் ஷரத்துப்படி முச்சிலிக்கா எழுதிக்கொடாமலுமிருந்தால், வாதி மனுவுசெய்துகொண்டு அப்படி பிரதிவாதி தவறிப்போனதைக்குறித்து ருஜுவுசெய்வதின்பேரில், கலெக்ட்டரானவர் பிரதிவாதியினுடைய ஸ்வாதீனத்திலிருந்து நிலத்தை விடுவிக்கும்படி உத்தரவு செய்யவேண்டியது.

11. குத்தகைத்தொகை வீதத்தைக் குறித்துண்டாகிய விவாதங்களேப்பற்றி கலெக்ட்டரிடத்திற்குக் கொண்டுவரப்படுகிற வியா

ச்சியங்களை 8, 9, 10 - வது பிரிவுகளின்படி தீர்மானஞ் செய்வதில் அனுசரிக்கவேண்டிய விதிகள் என்னவென்றால்:—

1 - வது.—குத்தகைத் தொகையைக்குறித்து வெளிப்படையாகவாவது குறிப்பாகவாவது உண்டாயிருக்கிற சகல உடன்படிக்கைகளையும் நிறைவேற்றவேண்டியது.

2 - வது.—1859-ம் ஹு ஜனவரி மீ 1வ க்கு முன்னிட்டு பிரிட்டிஷ் கவரன்மெண்டாரால் ஜரீப்செய்யப்பட்டு புலங்களுக்கு ரொக்கத்தீர்வை ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஜில்லாக்களிலாவது கிராமங்களிலாவது, குத்தகைத் தொகையைக்குறித்து வெளிப்படையாகவாவது குறிப்பாகவாவது உடன்படிக்கை ஏற்பட்டிராவிட்டால், அந்த ரொக்கத்தீர்வையையே சரியான குத்தகைத்தொகையாக வைத்துக்கொள்ளவேண்டியது.

3 - வது.—வெளிப்படையாகவாவது குறிப்பாகவாவது பூமிக்குடையவனுக்கும் ரயித்துக்கும் உடன்படிக்கை உண்டாகாதிருந்து, புலங்களுக்கு மேற்சொல்லியபடி ரொக்கத்தீர்வையும் ஏற்பட்டிராவிட்டால், அவ்விடத்திய வழக்கப்படிக்கு குத்தகைத்தொகை விதத்தை நிச்சயிக்கவேண்டியது. அவ்விடத்திய வழக்கமின்னதென்று பரிஷ்காரமாய் நிச்சயிக்கக்கூடாவிட்டால், அப்போது சுற்றுப்பக்கத்திலிருக்கிற அவ்விதமான அந்த தரத்து நிலங்களுக்கு ஏற்பட்டிருக்கிற அல்லது செலுத்தப்பட்ட விதப்படிக்கு நிச்சயிக்கவேண்டியது. ஆனால் அப்படி நிச்சயிக்கப்பட்ட விதமானது உபயத்திராளில் யாருக்காகிலும்சம்மதமில்லாவிட்டால், அப்படிப்பட்டவர் சர்க்கார் அல்லது பூமிக்குடையவனும் பயிரிடுகிறவனும் மாசூலைப் பங்கிட்டுக்கொள்ளுவதைக்குறித்து கிராமத்தில் ஏற்பட்டிருக்கிற விதமாகிய வாரப்படிக்கு அந்த குத்தகைத்தொகையை தானியமாகக் கொடுக்கச்சொல்லி கேட்கலாம். வாரமின்னதென்று நிச்சயிக்கக்கூடாவிட்டால், கலெக்ட்டரானவர் பயிரிட்டவனுடைய கிருஷியினலாவது செலவினலாவது உண்டாகாமல் வேறேவிதமாய் மாசூல் கண்டு முதலிலாவது நிலவளத்திலாவது எவ்வளவாகிலும் விருத்தியுண்டாயிருக்கிறதாவென்று நிச்சயித்துக்கொண்டபின்பு தனக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி அந்த விதத்தைக்குறித்துத் தீர்மானஞ் செய்யவேண்டியது.

4-வது.—அநாதிகாம்பு நிலவிஷயத்திலும், உடன்படிக்கை தவறிப்போவதினாலாவது இஷ்டமில்லாமையினாலாவது சாகுபடிசெய்யாமல் விட்டுவிடப்பட்ட நிலங்கள் விஷயத்திலும் பூமிக்குடையவர்கள் குத்தகைத் தொகையைக்குறித்து தங்களிஷ்டப்படி ஷரத்துகளேற்படுத்தலாம். ஆனால் சட்டப்படிக்காவது சட்ட ஆசாரத்தைப்போல் நடந்தேறிவருகிற வழக்கத்தைப்பற்றியாவது அப்படிப்பட்ட காம்பு அல்லது சாகுபடிசெய்யப்படாத நிலங்களில் எவனுக்காகிலும் எந்த வகுப்பாருக்காகிலும் உண்டாயிருக்கிற உரித்தான சுதந்தரங்களுக்கு இந்தநிபந்தனையினாலே பாதகமொன்று முண்டாகமாட்டாது.

மேலும், மேற்கண்ட பூமிக்குடையவனெவனாவது தன்னுடைய சொந்த செலவிலாகிலும் சர்க்கார் செலவிலாகிலும் ஜல ஆசான் முதலிய விருத்திகளுண்டுபண்ணி, அதினாலே நிலங்களைப் பின்னும் சிரேஷ்டப்படுத்தியிருந்து, அதற்காக சர்க்கார்தீர்வையும் முன்னிருந்ததைவிட அவனுக்கு அதிகமாகப் போடப்பட்டிருப்பதைப்பற்றி அந்த பூமிக்குடையவன் கலெக்ட்டருடைய அனுமதிபெற்றுக்கொண்டு, அந்த நிலங்களுக்கு குத்தகைத்தொகையை அதிகப்படுத்துவதற்கு இதிலுள்ள எந்த நிபந்தனையினாலும் தடங்கலுண்டாகமாட்டாது. மேலும், அப்படிப்பட்ட யாதொரு பூமிக்குடையவன்-அந்த நிலங்களுக்காவது சுற்றுப்பக்கத்திலிருக்கிற அவ்விதமான அந்தரத்து நிலங்களுக்காவது செலுத்தப்படத்தக்க குத்தகைத் தொகையைவிட குறைவான குத்தகைத்தொகைக்கு பட்டா கொடுத்திருந்தபோதிலும், குடியிருப்பு வீடுகள் - தொழிற்சாலைகள் முதலிய நிலையான கட்டடங்கள் கட்டிக்கொள்ளும்பொருட்டாவது, காம்புநிலத்தைத்திருத்தி சாகுபடிசெய்யும்பொருட்டாவது, அதில் யாதொரு நிலையான சீர்ப்பாடுசெய்யும்பொருட்டாவது அந்தப்பட்டா கொடுக்கப்பட்டிருந்து, எந்த ஷரத்துகளின்பேரில் அப்படி குறைந்த குத்தகைத்தொகைக்கு விடப்பட்டதோ அந்த ஷரத்துகளின்படி உறுதியாய் ரயித்தும் நிறைவேற்றியிருந்தாலொழிய, அந்த பூமிக்குடையவனுக்குப் பின்வருகிற பாத்தியஸ்தன் அந்த பட்டாவின்பிரகாரம் உடன்படவேணு மென்பதில்லை.

12. மூன்றும்பிரிவில் கண்டிருக்கிற பூமிக்குடையவர்கள் யாதொரு சீவில்கோர்ட்டு டிக்கிரியின்பேரிலாவது இந்த ஆக்ட்டு 10-அல்லது 41-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படிக்காவது ரயித்துகளிடத்திலிருந்து நிலங்களை மறுபடி பிடுங்கிக்கொள்ளலாமேதவிர வேறேவிதமாய் பிடுங்கிக்கொள்ள அதிகாரமுடையவர்களல்ல. அப்படி தகுந்த அதிகாரமில்லாமல் பிடுங்கிக்கொள்ளப்பட்டால், அந்த ரயித்துகள் அந்த நிலங்களை மறுபடி தங்கள் ஸ்வாதீனஞ்செய்வித்து நஷ்டத்தையும் வாங்கிக்கொடுக்கும்படி கலெக்டரிடத்திலே சம்மேரி வியாச்சியங் கொண்டுவரலாம். ஆனால், ரயித்துகள் நிலத்தை விட்டுவிடுகிறதாக அறிக்கைப்பத்திரிகையெழுதி சாட்சிகள் முன்னிலையில் அதில் கையெழுத்துப் போட்டுக்கொடுத்து பசலீ கடைசியிலாவது, விட்டுவிடப்படுகிற நிலங்களை ஒப்பித்துக்கொள்ள பூமிக்குடையவனுக்கு இஷ்டமிருந்தால் வேறே எந்தகாலத்திலாவது நிலங்களை விட்டுவிட சுதந்தரமுடையவர்களாவார்கள்.

13. ரயித்துவார் திட்டப்படிக்காவது சர்க்காருக்கு நேராய் பூமி கிஸ்திசெலுத்தும்படியான வேறே எவ்விதமாகவாவது பூமியை அனுபவிக்கிறவர்களெல்லோரும், ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிற மற்ற காணியாட்சிக்காரர்களெல்லோரும், தங்களுக்கு செலுத்தப்படத்தக்க குத்தகைத்தொகையைக் கண்டெழுதி தங்கள் ரயித்துகளிடத்திலே குத்தகைச்சீட்டாவது உடன்படிக்கையாவது வாங்கியிருந்தால் மாத்திரம் இந்த ஆக்ட்டின்படி குத்தகைத்தொகையை வசூல்செய்யத் தொடங்கலாமேயல்லாமல், இல்லாவிட்டால் வசூல் செய்யக்கூடாது.

14. எழுத்துமூலமாய்ப் பிறந்திருக்கிற யாதொரு உடன்படிக்கைப்பிரகாரமாவது தேசவழக்கப்படிக்காவது எப்போது செலுத்தப்படவேண்டியதோ அந்தக்காலத்தில் குத்தகைத்தொகை செலுத்தப்படாதிருந்தால், அப்படி செலுத்தப்படாதிருக்கிற தொகையானது குத்தகை நிலுவைபாக்கியென்று எண்ணப்படும். பூமிக்குடையவர்கள் தங்களுடைய ரயித்துகள் கொடுக்கவேண்டிய குத்தகை பாக்கித்தொகையை வசூல்செய்வதற்காக அவர்களுடைய மாசூலையும் அசையும்பொருளையும் தங்களுடைய உத்தரவாதத்தின்பேரில் ஜப்தி செய்ய அதிகாரமுடையவர்களாவார்கள்.

15. குத்தகை பாக்கிக்காக அசையும்பொருளை ஜப்திசெய்து விற்கையில் அனுசரிக்கவேண்டிய நிபந்தனைகளென்னவென்றால்,—

1-வது.—பூமிக்குடையவனாவது அவனுடைய அதிகாரம்பெற்ற ஏஜெண்டாவது ரயித்தினுடைய பெயரையும், எதற்காக ஜப்தி செய்யப்படுமோ அந்த பாக்கித்தொகையையும், பாக்கிசெலுத்த வேண்டிய கெடுவானதேதியையும் கண்டெழுதி, தன்பேரால் கையெழுத்துப்போட்டு ஒரு தண்டல்பத்திரிகையை ரயித்தினுடைய சொத்தை ஜப்திசெய்ய நேமிக்கப்பட்டவனுக்குக் கொடுக்கவேண்டியது - ஜப்திசெய்யப்போகிறவன் அந்த தண்டல்பத்திரிகையைக்காட்டி, அந்த பாக்கி உடனே செலுத்தப்படாவிட்டாலும், தனக்கு சம்மதமாகும்படி அந்த பாக்கியைச் சரிப்படுத்துவதற்கு யாதொரு ஏற்பாடு செய்யப்படாவிட்டாலும், அந்தப் பத்திரிகையை ஜப்திசெய்வதற்கு தனக்கு அதிகாரபத்திரமாக வைத்துக்கொண்டு, சொத்தை ஜப்திசெய்கிறதினத்தில் அந்தப் பத்திரிகைக்கு நகலெழுதி, ஜப்திசெய்யப்பட்ட சொத்தின் விவரத்தையும், அது இன்ன இடத்தில் வைத்திருக்கப்படுமென்பதையும், அந்த பாக்கித்தொகையும் அதற்கு வட்டியும் ஜப்திசெலவும் சீக்கிரத்தில் செலுத்தப்படாவிட்டால் அந்தசொத்து கிரமப்படி ஏலத்தில் விற்கப்படுமென்று அறிக்கையையும், அதின்பேரில் கண்டெழுதி அந்த ரயித்துக்குக் கொடுக்கவேண்டியது.

2-வது.—ரயித்து ஆஜரில்லாவிட்டால், அவன் வழக்கமாய் வாசஞ்செய்கிற இடத்திலாவது சொத்து ஜப்திசெய்யப்படுகிற இடத்திலாவது, அந்த ஜப்திதினத்தில் மேற்சொல்லியபடி சொத்து விவர முதலானதை மேலே எழுதி அந்தபத்திரிகைக்கு நகலை ஒட்டவேண்டியது, அல்லது ஒப்பிக்கவேண்டியது.

16. ஜப்திசெய்கிறவன்-ஜப்திசெய்யப்பட்ட சொத்தின் விவரத்தையும், பாக்கிதாரனுடைய பெயரையும், பாக்கித் தொகையையும், ஜப்தி தேதியையும், நோட்டீசில் கண்டெழுதி, அதை பத்து நாளைக்குள் கலெக்டரிடத்திற்காவது, அதை வாங்கிக்கொள்ளும்படி கலெக்டரால் நேமிக்கப்பட்ட உத்தியோகஸ்தரிடத்திற்காவது அனுப்பவேண்டியது. அந்த நோட்டீசு வரப்பற்றிக்கொள்ளப்பட்ட தேதியை அதின்பேரிலெழுதி, கலெக்டராவது மேற்படி உத்தியோ

கஸ்தராவது-அவசியமானுல் அந்தபாக்கியையும் அதற்கு வட்டியையும் ஜப்திசெலவையும செலுத்துவதற்காக அந்த சொத்தை விலைமதித்து அறுதியாய் விற்றுப்போடும்படி, 1839-ம்வருஷத்து 7-வது ஆக்ட்டுப்பிரகாரம் ஜப்திசெய்யப்பட்ட சொத்தை ஏலத்தில் விற்பதற்கு அதிகாரம்பெற்றவராய் சமீபத்திலிருக்கிற சர்க்கார் உத்தியோகஸ்தனுக்கு அதற்கு நகலை அனுப்பவேண்டியது. விலைமதிக்கும்படி மேற்படி சர்க்கார் உத்தியோகஸ்தனுல் நேமிக்கப்படுகிறவர்கள் அந்த விலைமதிப்பு விவரங்களையெழுதி கையெழுத்துப்பண்ணவேண்டியதுமல்லாமல் மேற்படி உத்தியோகஸ்தனுங் கையெழுத்துப் பண்ணவேண்டியது.

17. இந்த ஆக்ட்டை சாக்கிட்டுக்கொண்டு ஜப்திதாரர்களால் யாதொரு முக்கியமான அக்கிரமம்செய்யப்பட்டால், அதை-ஜப்தி சொத்தை ஏலத்தில் விற்பதற்கு அதிகாரம்பெற்றவர்கள் கலெக்டர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டியதுமல்லாமல், அப்படிப் பட்டவிஷயத்தில் கலெக்ட்டருடைய உத்தரவுவருகிறவரையிலே அந்த ஏலத்தை நிறுத்திவைக்க அதிகாரமுடையவர்களாவார்கள். ஜப்திதாரன் 15-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி தண்டல்பத்திரிகையையும் ஜப்திசொத்து ஜாபிதாவையும் ரயித்துக்குக் கொடுக்கவில்லையென்றுவது, அந்த ஜப்தியைக்குறித்து கலெக்ட்டருக்காகிலும் அதற்காக கலெக்ட்டரால் நேமிக்கப்பட்ட உத்தியோகஸ்தருக்காகிலும் விதிப்படி தெரியப்படுத்தவில்லையென்றுவது, மேற்படி உத்தியோகஸ்தன் மூலமாயாகிலும் வேறே எவ்விதமாயாகிலும்கலெக்ட்டருக்குத்தெரியவந்தால், அந்த ஜப்திசொத்தை சொந்தக்காரனுக்கு மறுபடியும்கொடுத்துவிடும்படி கலெக்ட்டர் உத்தரவுசெய்யலாகும், குத்தகைத்தொகை பாக்கியை வசூல்செய்வதற்கு இந்த ஆக்ட்டின்படி ஜப்திதாரனை வேறே யாதொரு நடவடிக்கை நடத்தவொட்டக் கூடாது; ரயித்தானவன் தனக்குநேரிடுகிற யாதொருநஷ்டம் அல்லது சேதத்தைக்குறித்து கலெக்ட்டரிடத்திலே சம்மேரிவியாச்சியங் கொண்டுவரலாம்.

18. ஜப்திசெய்யப்பட்ட தேதிமுதல் முப்பதுநாளைக்குள் அதைக்குறிதது கலெக்ட்டரிடத்திலே ரயித்து சம்மேரிவியாச்சியங் தாக்கல்செய்யாவிட்டாலும், வியாச்சியங் தாக்கல்செய்யப்பட்டிருந்து

அவனுக்குவிரோதமாய்த் தீர்ப்புசெய்யப்பட்டாலும, ஜப்திசொத்தை ஏலத்தில் விற்கும்படி, 1839-ம்ஹூத்து 7-வது ஆக்ட்டினுல் அதிகாரம்பெற்ற சர்க்கார் உத்தியோகஸ்தருக்கு உத்தரவுபிறப்பிக்கவேணுமென்று பதினைந்துநாளைக்குள் ஜப்திதாரன் கலெக்ட்டருக்கு மனுவுசெய்துகொள்ளவேண்டியது; அந்த உத்தியோகஸ்தர் அந்த உத்தரவை வரப்பற்றிக்கொண்டபின்பு,ஏலம்போடப்படும் சொத்தையும் இன்னகாலத்தில் இன்ன இடத்திலே ஏலம்போடுவதற்கு நிச்சயித்திருக்கிறதென்பதையும் கண்டெழுதி அந்த கிராமத்தில் எல்லாருக்கும தெரியும்படியான இடத்திலே இஸ்தியார் ஒட்டவேண்டியது. மேலும ஏலம்போட எத்தனித்திருப்பதை அவா எதின்பேரில் பாக்கிசேர்ந்திருக்கிறதோ அந்த நிலங்களிலிருக்கிற கிராமத்தில தண்டோராபோட்டு பிரசித்தம்செய்விக்கவேண்டும். ஏலத்திற்கு நாள் நிச்சயிக்கையில், இஸ்தியார் தேதிமுதல் ஏழுநாளைக்குக்குறையாமலும், ஜப்திதேதிமுதல் முப்பதுநாளைக்குக்குறையாமலும் நாள்களைத்தள்ளி நிச்சயிக்கவேண்டியது.

19. குத்தகைத்தொகை பாக்கிக்காக ஜப்திசெய்ய அதிகாரம் பெற்றவர்கள் - அமைவுகெடாதிருக்கும்படி செய்வதற்கு வேண்டிய சகாயம்பண்ணும்படி சமீபத்திலிருக்கிற ட்டாணுவிலுள்ள அதிகாரியைக் கேட்டுக்கொள்ளலாம்: அந்த அதிகாரி அந்த ஜப்திகாலத்தில் ஆஜரிருக்கும்படி ஒருவன் அல்லது பலபோலீசுசேவகர்களை அனுப்பவேண்டியது; அந்தசேவகர்கள் யாரையாவது எதிர்க்கவொட்டாமலும் அமைவைகெடுக்கவொட்டாமலும் காத்துக்கொண்டிருந்து, அவர்களை சாட்சியாகக்கோரினுல் அப்போது சாட்சிசொல்லக் கூடுமானதாயிருக்கும்படி ஜப்திதாரனுல் நடத்தப்படுகிற காரியங்களையெல்லாம் மிகவும் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டியது.

20. ஜப்திசெய்யப்பட்ட சொத்து ஜப்திதாரனுடைய வசத்திலிருக்கையில், அதை பத்திரமாய்க் காப்பாற்றுவதற்கு அவன் வேண்டிய பந்தோபஸ்துசெய்யாமையினுலே அந்தசொத்து திருட்டுப்போனுலும், காணுமற்போனுலும், சேதப்பட்டாலும், அழிந்துபோனுலும், அதற்காக சொந்தக்காரனுக்கு அவன் உத்தரவாதம்பண்ணவேணும்; கலெக்டரிடத்திலே சம்மேரி வியாச்சியங்கொண்டுவந்து

அந்த நஷ்டம் அல்லது சேதம் ருஜுவுசெய்யப்பட்டால் அந்தப்படியே உத்தாவாதம்பண்ணும்படி தீர்ப்புசெய்ய கலெக்டருக்கு அதிகாரமுண்டு.

21. பாக்கிதாரனுடைய நிலத்தில் அறுவடையாகாமலிருக்கிற மாசூலையாவது உற்பத்தியையாவது ஜப்திசெய்கிறவன் அறுப்புக்குத் தகுதியான காலத்தில் அதுகளை விற்பிக்கலாம், அல்லது தனக்கிஷ்டமிருந்தால், தகுந்தகாலத்தில் அறுவடைசெய்வித்து விற்பனையாகிறவரையில் தகுந்த இடத்திலே சேர்த்துவைக்கலாம். அப்படி அறுத்துச் சேர்த்துவைக்கிறதாயிருந்தால், அப்படி செய்வதற்காகப் பிடிக்கிறசெலவை சொந்தக்காரனானவன் தன்னுடைய சொத்தை மீட்டுக்கொள்ளுகையில் செலுத்தவேண்டியது, இல்லாவிட்டால் விற்பனைசெய்யப்படுகையில் விற்றபணத்திலே அந்தசெலவு எடுத்துக்கொள்ளப்படும்.

22. பாக்கிதாரனானவன் தன்னுடைய சொத்து ஜப்திசெய்யப்பட்டபின்பு, ஏலத்திற்கு நிச்சயிக்கப்பட்ட தினத்திற்கு முன்னதாக பாக்கிபணத்தையும் வட்டியையும் படிச்செலவையும் ஜப்திக்குப்பிடித்த அவசியமான செலவுகளையும் கட்டுகிறதாகப் பணங்கொண்டுவந்தால் உடனே அந்தப் பணத்தை ஜப்திதாரன் வாங்கிக்கொண்டு, தட்சணம் ஜப்தி விடுதலைசெய்யவேண்டியது.

23. ஜப்திதாரனானவன் - ஜப்திசெய்யப்பட்ட எருதுமுதலிய பிராணிகளிடத்தில் வேலைவாங்கவுங்கூடாது, ஜப்திசெய்யப்பட்ட சரக்கு அல்லது சாமான்களைக் கையாளவுங்கூடாது; ஜப்திதாரன் ஆடுமாடு முதலிய பிராணிகளுக்கு வேண்டிய தீனி போடவேண்டியது, அதற்காகப் பிடிக்கிறசெலவை சொந்தக்காரன் அந்தசொத்தை மீட்டுக்கொள்ளுகிறபட்சத்தில் அவன் கொடுக்கவேண்டியது; அந்தசொத்து விற்பனை செய்யப்படுகிறபட்சத்தில் விற்றபணத்திலே அந்தசெலவு எடுத்துக்கொள்ளப்படும்.

24. ஜப்திசெய்யப்படுகிற சொத்தானது பாக்கித் தொகைக்கு அதிகப்படாமல், கூடியவரையிலே சுமாராக பாக்கித்தொகை யெவ்வளவோ அவ்வளவிருக்கவேண்டியது.

25. சூரிய உதயத்திற்குப்பின்பு சூரிய அஸ்தமானத்திற்குள் ஜப்திசெய்யவேணுமேயல்லாமல், வேறே எந்தகாலத்திலாவது ஜப்தி செய்யக்கூடாது.

26. பாக்கிக்காகச் செய்யப்படுகிற ஜப்திக்குள்ளாகாதபடிக்கு பாக்கிதாரன் மோசடியாய் சொத்தைக் கொண்டுபோய்விட்டால், அது ருஜுவானதின்மேல், தகுந்த அதிகாரமுடைய யாதொரு சிவில்கோர்ட்டார் சுருக்கவகையாய் அந்தசொத்தை ஜப்திதாரனிடத்தில் ஒப்பிக்கும்படி செய்யவேண்டியது. மேலும் பாக்கிதாரன் இந்தியன் பினல்கோடின் 424-வது பிரிவில் சொல்லியிருக்கிற தெண்டனைகளுக் குள்ளாவான்.

27. ஜப்திசெய்யப்பட்டிருக்கிற சொத்தை பலவந்தமாயாவது மறைவாகவாவது எவனாகிலும் எடுத்துக்கொண்டுபோய்விட்டதாக தகுந்த அதிகாரமுடைய யாதொரு சிவில்கோர்ட்டாருக்குத் திருப்திகரமாய் ருஜுவானால், அந்தக்கோர்ட்டார் சுருக்கவகையாய் அந்த சொத்தை ஜப்திதாரனிடத்தில் ஒப்பிக்கும்படி செய்யலாம். மேலும் அப்படி குற்றஞ்செய்தவன் இந்தியன் பினல்கோடில் விதித்திருக்கிற தெண்டனைகளுக்குள்ளாவான்.

28. யாதொரு லாயம், மாட்டுக்கொட்டாய், களஞ்சியம், கிடங்கு, வெளிப்புறத்துவீடு முதலான கட்டடங்களிலே வைத்திருக்கிற பாக்கிதாரனுடைய சொத்தை ஜப்திசெய்யும்பொருட்டு பலாத்காரமாய்த் திறந்துகொண்டுபோகவும், வெளிக்கதவு திறந்திருக்கிற யாதொரு குடியிருப்பு வீட்டில் நுழையவும் ஜப்திதாரனுக்கு அதிகாரமுண்டு: மேலும் மேற்சொல்லியபடி ஜப்திசெய்வதற்காக அந்தக் குடியிருப்புவீட்டிலுள்ள யாதொரு அறையின் கதவையும் திறந்துகொண்டு நுழையலாம்; ஆனால் இதில் பின்னால் சொல்லியிருக்கிறபடிதவிர, அந்தக் குடியிருப்புவீட்டில் ஸ்திரீகள் வாசஞ்செய்வதற்கு உரித்தான அந்தப்புரத்தை அந்த ஜப்திதாரன் உடைத்துத் திறப்பதாவது நுழைவதாவதுதகாது.

29. வெளிக்கதவு மூடியிருக்கும்படியான யாதொரு குடியிருப்பு வீட்டிற்குள்ளாவது, ஸ்திரீகள் வாசஞ்செய்வதற்கு உரித்தாக விடப்பட்டுதேசவழக்கப்படி அந்தப்புரமாக எண்ணப்பட்ட யாதொ

ரு அறைக்குள்ளாவது பாக்கிதாரனுடைய சொத்துவைக்கப்பட்டிருப்பதாய் ஜப்திதாரனுக்கு நினைக்க முகாந்தரமிருந்தால், அந்த ஜப்திதாரன் சமீபத்திலிருக்கிற போலீசு டாணாவின் தலைவனுக்கு அந்த சங்கதியைத் தெரியப்படுத்தவேண்டியது. அதற்குமேல் அந்த டாணா தலைவன் ஒருபோலீசு சேவகனை அவ்விடத்திற்கு அனுப்பவேண்டியது; ஜப்திதாரன் அவனைக் கூடவைத்துக்கொண்டு, அந்த வீட்டினுள் அந்தப்புரம்தவிர வேறே யாதொரு அறையின்கதவைத் திறப்பதுபோலவே அந்தவீட்டின் வெளிக்கதவை பலாத்காரமாய்த் திறக்கலாம். மேலும் ஜப்திதாரன் அந்த போலீசுசேவகனைக் கூட வைத்துக்கொண்டு, அந்தப்புறத்திலிருக்கிற ஸ்திரீகளை அப்புறம் போகும்படி கிரமமாய் அறிக்கைசெய்து, (தேசவழக்கப்படி பயிரங்கத்தில் வரக்கூடாத மேலான ஸ்திரீகளாயிருந்தால்,) அவர்கள் தகுந்தபடி அப்புறம்போவதற்கு என்னவகைசெய்யவேணுமோ அதைச்செய்தபின்பு, அந்த அந்தப்புரத்திலிருக்கிற பாக்கிதாரனுடைய சொத்தை ஜப்திசெய்யும்பொருட்டு அந்தஅறைகளுக்குள் நுழையலாம்; ஆனால் அவ்விடத்திலே பாக்கிதாரனுடையசொத்து அகப்பட்டால், அதை உடனே வெளியில் எடுத்துக்கொண்டுவந்துவிட்டு, அந்த அறைகளை அந்த அந்தப்புரத்து ஸ்திரீகளுக்குப் பரிஷ்காரமாய் விட்டுவிடவேண்டியது.

30. மனிதர்கள் இந்த ஆக்ட்டிலுள்ள நிபந்தனைகளுக்கு விரோதமாய் ஸ்திரீகளுடைய அறைகளுக்குள் நுழைந்தாலும் குடியிருப்புவீடுகளின் வெளிக்கதவை பலாத்காரமாய் திறந்தாலும், அப்படிப்பட்டவர்கள் மாஜிஸ்திரேட்டுக்குமுன் குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்படுவதின் பேரில் 500 ரூபாய்வரையில் போடப்பட்ட அபராதத்திற் குள்ளாவார்கள், அல்லது ஆறுமாசத்திற்கதிகப்படாமல் இருவகைக்காவலிலெதிலாகிலும் வைக்கப்படுவார்கள்.

31. ஜப்திசெய்தாவது கைப்பற்றியாவதிருக்கிற சொத்தை ஏலம்போடும்படி முன்னே உத்தரவுசெய்யப்பட்டிருந்து, அந்த ஏலத்தை நிறுத்தும்படி பின்பு உத்தரவுசெய்யப்பட்டபோதிலும், சொத்தை ஜப்திசெய்தது அல்லது கைப்பற்றினதைக்குறித்து நேரிட்ட செலவுகளை அந்த ஏலம் நிறைவேறியிருந்தாற்போலவே அந்த சொத்துக்குடையவன் செலுத்தவேண்டும்; அவனதை செலுத்தா

விட்டால், எவ்விதமான நடவடிக்கைகள் நடத்தி அசல் பாக்கிவசூல் செய்யப்படுமோ அவ்விதமாகவே அது வசூல்செயயப்படத் தக்க தாகும்.

32. பாக்கிதாரனுடைய ஸ்வாதீனத்திலிருக்கச்சே நிலத்தி லுள்ள பயிராவது அறுவடையான மாசூலாவது ஜப்திசெய்யப்பட் டால், அந்தப் பயிர் அல்லது மாசூல் தனக்கு முந்தி விற்பனைசெய் யப்பட்டிருக்கிறது அல்லது தன்னிடத்தில் கொதுவைவைக்கப்பட் டிருக்கிறதென்கிற ஏதுவைப்பற்றியாவது வேறே எந்த ஏதுவைப் பற்றியாவது வேறொருவன் அதற்கு தாவாசெய்தபோதிலும், அந்தப் பயிர் அல்லது மாசூல் உற்பத்தியான நிலத்துக்கு பாக்கியாயிருக்கிற குத்தகைத்தொகை முன்னதாய்ச் சேரவேணுமென்பதற்குத் தடங்க லொன்றுமில்லை, ஆனால் ஏலம்போடுவதற்கு நிச்சயிக்கப்பட்ட தின த்திற்குள்ளாக கலெக்டரிடத்திலாகிலும் அவரால் நேமிக்கப்பட் ட வேறே உத்தியோகஸ்தரிடத்திலாகிலும் வேறொருவன் ஆஜராகி, ஜப்தியிலிருக்கிற மற்ற அசையும்பொருள்களில் எதிலாவது தனக்கு சுதந்தரம் அல்லது பாத்தியமிருக்கிறதாகத் தெரிவித்துக்கொண்டா ல், கலெக்டரானவர் உடனே விசாரணைசெய்வித்து தகுந்த முகாந் தாமிருந்தால சொத்தை ஏலத்தில்போடாமல் நிறுத்திவைக்கலாம். கலெக்டரானவர் அந்த தாவாவைக்குறித்துத தீர்மானஞ்செய்து, யுக்தமாகத்தோற்றுகிறபடி அந்த தாவாதாரனுக்கும் ஜப்திதாரனுக் கும் உத்தரவு பிறப்பிக்கவேண்டும். தாவாதாரன்தன்னுடைய சுத ந்தரத்தை ஸ்தாபிக்காவிட்டால் சொத்தை ஏலம்போடும்படி உத் தரவுசெய்யப்படும். இந்தப் பிரிவின்படி கலெக்டரால் செய்யப்படு கிற உத்தரவின்பேரில் அப்பீல்கூடாது. ஆனால் யாருக்கு விரோ தமாய் அந்த உத்தரவு கொடுக்கப்படுகிறதோ அவன் தன்னுடைய சுதந்தரத்தை ஸ்தாபித்துக்கொள்ள சிவில்கோர்ட்டில் வியாச்சி யங் கொண்டுவரலாம்; ஆயினும் சொத்தை ஏலம் போட்டுவிடும் படி கலெக்ட்டர் உத்தரவுசெய்திருந்தால், அந்தசொத்தை வரப் பற்றுவதற்கு வியாச்சியங்கொண்டுவராமல் அந்தசொத்து எவனல் ஏலம்போடும்படி செய்யப்பட்டதோ அவன்பேரில் நஷ்டத்திற்கு வியாச்சியங் கொண்டுவரவேண்டும்.

33. ஜப்திசெய்யப்பட்ட சொத்தை ஏலம்போடுவதற்கு அதி காரமுடைய சர்க்கார் உத்தியோகஸ்தன் தனக்கு யுக்தமாகத்தோற்

றுகிறபடி அந்த சொத்தை ஒரேமொத்தமாகவாவது பல கூறுகளாகவாவது ஏலத்திற்கு நேமிக்கப்பட்டகாலத்தில் ஏலம்கூறி, உயர்ந்த விலைக்குக் கேட்கிறவனுக்கு விற்றுப்போடலாகும் அந்தசொத்தில் எவ்வளவையாகிலும் விற்றபணமானது பாக்கிக்கும் வட்டிக்கும் ஜப்தி ஏலச்செலவுகளுக்கும் போதுமானதாயிருந்தால், மீதிசொத்துக்கு உடனே ஜப்திவிடுதலைசெய்யப்படும். ஏலத்தில்போட்டசொத்து பாக்கியைவிட அதிக தொகைக்குவிற்றால், அந்த அதிகபணத்திலே ஜப்தி ஏலம்முதலான செலவுகளையும், வட்டியையும், ஏலம்போட்டதற்காக நூற்றுக்கு ஆறேகால்விழுக்காடு கமீஷனையும் தள்ளிக்கொண்டு மிகுதியை பாக்கிதாரனுக்குக் கொடுத்துவிட வேண்டியது. மேற்படி கமீஷன்பணத்தை சர்க்கார்வரவில சேர்த்துவிடவேண்டும்.

34. சொத்தைஜப்திசெய்து ஏலம்போடுவித்ததற்குப் பிடித்த செலவுகளைக்குறித்து ஜப்திதாரன் கொடுக்கிற கணக்கை பிரதிவிஷயத்திலும் மேறபடிசர்க்கார் உத்தியோகஸ்தன் பரிசோதித்து, எவ்வளவாவது அக்கிரமமானதாகத் தனக்குத்தோற்றினால் அந்தமட்டில் தள்ளிப்போடலாகும். ஜப்திதாரனுக்காவது ஜப்திசெய்யப்பட்டசொத்துக்குடையவனுக்காவது மேற்படி உத்தியோகஸ்தனுடைய தீர்மானம் சம்மதப்படாவிட்டால், அவர்களில் யாராவது கலெக்ட்டருக்கு மனுவுசெய்துகொள்வதின்பேரில், அவர் சொத்து ஜப்திக்கும் ஏலத்திற்குமுண்டான செலவுகளிவ்வளவென்று தீர்மானிப்பதற்கு இதனால் அதிகாரமுடையவராவார். அப்படி கலெக்ட்டர் செய்கிற உத்தரவே முடிவானதாகும்.

35. சொத்து விற்பனைசெய்யப்பட்ட காலத்திலாவது, விற்பனைசெய்விக்கிற உத்தியோகஸ்தர் நேமிக்கிற காலத்திற்குள்ளாவது, அந்த சொத்தை வாங்கினவன் ரொக்கப்பணம் செலுத்தவேண்டியது. அப்படி அவன் பணமுழுதும் செலுத்துகிறவரையிலே அந்த சொத்தில் எவ்வளவையாவது அவனை எடுத்துக்கொண்டு போகவொட்டக்கூடாது. விலைக்குவாங்கினவன் கிரயப்பணத்தைச் செலுத்தாவிட்டால், ஏலம்போடப்படும். அப்படிச்செய்வதினாலே ஏதாவது நஷ்டமுண்டானால் அதுவும், மறுபடி ஏலம்போடுவதற்குப் பிடிக்கிற செலவும் முன்னே ஏலத்தில் எடுத்து பணங் கட்டாமற்போனவன்பேரில் கலெக்ட்டரிடத்திலே சம்மேரி வியாச்சியந்தொ

டார்ந்து அவனிடத்தில் வசூல்செய்யப்படும். அந்தசொத்து முதல் ஏலத்தைவிட இரண்டாவது ஏலத்தில் அதிகவிலைக்குவிற்முல், அந்த அதிகப்பணமானது எவன்பொருட்டு மேற்படி முதல் ஏலம்போடப்பட்டதோ அவனுக்குச் சேரவேண்டியது. ஏலத்தில் வாங்கினவன் கிரயப்பணமுழுமையும் செலுத்திவிட்டால் அவனுல் இன்ன தேதியில் ஏலத்தில்வாங்கப்பட்ட இன்னசொத்துக்கு இவ்வளவுபணஞ் செலுத்தப்பட்டதென்று கண்டெழுதி அவனுக்கு ஏலம்போட்ட உத்தியோகஸ்தன் சர்ட்டிபிகேட்டு கொடுக்கவேண்டியது.

36. இந்த ஆக்ட்டின்படி அசையும்பொருளை ஏலத்தில் விற்பதைக்குறித்து இஸ்தியார்போடுவதிலாவது ஏலம்போடுவதிலாவது யாதொரு அக்கிரமம் நடந்தபோதிலும் அதினுலே அந்த ஏலம் ரத்தாகமாட்டாது. ஆனுல் அந்த அக்கிரமத்திலே நஷ்டமடைகிறவனாவது அந்த நஷ்டத்திற்குப் பணம் வசூல்செய்வதற்காக கலெக்ட்டரிடத்திலே சம்மேரிவியாச்சியங் கொண்டுவரலாம்.

37. இந்த ஆக்ட்டின்படிக்குண்டான பாக்கிக்கு மாசம் ஒன்றுக்கு நூற்றுக்கு ஒன்றுவிழுக்காடு வட்டிசேர்க்கப்படும்.

38. 3-வது பிரிவில் கண்டிருக்கிற பூமிக்குடையவர்களில் யாருக்காகிலும் சேரவேண்டிய பாக்கியானது அந்தந்த பசலிக்குள் செலுத்தப்படாவிட்டால், எதின்பேரில் பாக்கிநிற்கிறதோ அந்த நிலத்தில் பாக்கிதாரனுக்கு வெளிப்படையான உடன்படிக்கைப்பிரகாரமாவது ஊர்வழக்கப்படிக்காவது விற்கும்படியான சுதந்தரமிருக்கிறபட்சத்தில், அந்தபாக்கியையும், நிர்னயமாயிருக்கிற வீதப்படி அதற்கு வட்டியையும், ஜப்திசெய்யப்பட்டிருந்தால் அதற்குண்டான செலவையும் வரப்பற்றுவதற்காக அப்படிப்பட்ட சுதந்தரத்தைவிற்றுப்போட மேற்படி பூமிக்குடையவருக்கு அதிகாரமுண்டு.

39. யாருக்கு பாக்கிசேரவேண்டியதோ அவன் இதற்குமுந்திய பிரிவினுலுண்டாகிய அதிகாரத்தின்படி நடத்த எத்தனிப்பானுகில், அவன் அப்படி விற்றுப்போட எத்தனிப்பதைக்குறித்து நோட்டீசு எழுதி அதிலே பாக்கித்தொகையையும் வட்டியையும், செலவு ஏதாவதிருந்தால் அதையும், நோட்டீசு கொடுக்கப்படுகிற தேதி முதற்கொண்டு ஒரு மாசத்திற்குள் பாக்கிதாரன் அந்த தொகை

யைச் செலுத்தாவிட்டால் அந்த நிலத்தில் அவனுக்குண்டாகிய சுதந்தரம் விற்றுப்போடப்படுமென்பதையும் கண்டு பாக்கிதாரனுக்குக் கொடுக்கவேண்டியது. அப்படி கொடுக்கப்படுகிற நோட்டீசுக்கு ஒருபிரதியை பாக்கிதாரனிடத்திலாவது அவன் வழக்கமாய் வாசஞ் செய்கிற இடத்திலே அவனுடைய குடும்பத்தைச்சேர்ந்த வயது வந்த யாதொரு ஆண்பிள்ளையினிடத்திலாவது அவனுடைய அதிகாரம்பெற்ற ஏஜெண்டினிடத்திலாவது சேர்ப்பிக்கவேண்டியது. அப்படி சேர்ப்பிக்கக்கூடாவிட்டால் அவன் கடைசியாய் வாசஞ் செய்ததாகத் தெரியவருகிற ஸ்தலத்திலாகிலும், அந்த நோட்டீசு சம்பந்தமான நிலத்திலாகிலும் எல்லாருக்குந் தெரியும்படியான இடத்திலே ஓட்டவேண்டியது. மேலும் வேறொரு பிரதியை இன்ன தேதியில் இன்னவிதமாய் நோட்டீசு சேர்ப்பிக்கப் பட்டதென்று மேலே எழுதி கலெக்டருக்கு அனுப்பவேண்டியது.

40. பாக்கிதாரனுக்காவது மேற்சொல்லியபடிக்காவது நோட்டீசு சேர்ப்பிக்கப்பட்ட தேதிமுதல் ஒருமாசத்திற்குள் அதைக்குறித்து கலெக்டரிடத்திற்கு சம்மேரிவியாச்சியங் கொண்டுவரப்படாவிட்டாலும், அப்படி வியாச்சியங் கொண்டுவரப்பட்டிருந்தும், அந்த பாக்கிதாரன்பேரில் தீர்ப்புசெய்யப்பட்டாலும், அந்தபாக்கி யாருக்குச்சேரவேண்டியதோ அவன் அப்படி ஏலம்போடப் பிரயத்தினஞ் செய்வதற்கு அதிகாரமுடையவனுவான். அந்த ஏலமானது குத்தகைத்தொகை பாக்கிக்காக ஜப்திசெய்யப்பட்ட அசையும்பொருளை ஏலம்போடுவதைக்குறித்துச் சொல்லியிருக்கிற விதிகளின்படி நடத்தப்படும்.

41. அந்தந்த பசலி கடைசியில் யாதொருரயித்து பாக்கிவைத்துக்கொண்டால், அதற்காக அந்தநிலத்தில் போதுமானசொத்து ஜப்தியிலகப்படாமலும், விற்கும்படியான சுதந்தரம் ரயித்துக்கு நிலத்திலில்லாமலு மிருக்கிறபட்சத்தில், அந்தநிலத்தில் பிரவேசித்து அதை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளுவதற்கு வாரண்டுகொடுக்கும்படி பூமிக்குடையவனுவது அவனுடைய அதிகாரம்பெற்ற ஏஜெண்டாவது கலெக்டருக்கு மனுவுசெய்துக்கொள்ளலாம். வாரண்டு கொடுக்கும்படி மனுவுசெய்துகொள்ளுகிறவன் பாக்கிதாரனுடைய பேரையும், நிலத்தின் விவரத்தையும் அளவையும், பாக்கித்தொகை

யையும் வட்டியையும் ஜப்திசெலவு ஏதாவதிருந்தால் அதையும், செலுத்தவேண்டிய கெடுவானதேதியையும், நிலத்திலே போதமான சொத்து ஜப்தியிலகப்படவுமில்லை விற்கும்படியான சுதந்தரமும் அதிலே ரயித்துக்கில்லை என்கிற உறுதிமொழியையுங் கண்டெழுதி விவரப்பத்திரிகைக் கொடுப்பதின்பேரில், அப்படி வாரண்டுகொடுக்கப்படும். அந்த விவரப்பத்திரிகையை வாரண்டுபிறப்பிக்கிற கச்சேரியில் தாக்கல் செய்துகொள்ளலாகும்.

42. பாக்கிதாரனுடைய பேரையும், பாக்கித்தொகை முழுமையையும், நிலத்தின் விவரத்தையும் அளவையும் அந்தவாரண்டில் கண்டெழுதவேண்டியது மல்லாமல், பதினைந்துநாளைக்குள் பணஞ் செலுத்தாவிட்டால் பாக்கிதாரன் அதின் ஸ்வாதீனத்திலிருந்து நீக்கிவிடப்படுவானென்றும் எழுதவேண்டியது.

43. அந்தவாரண்டை போலீசு உத்தியோகஸ்தனொருவனிடத்தில் ஒப்பிக்கவேண்டியது; அதை அவன் இந்த ஆக்ட்டு 39-வது பிரிவில் சொல்லியிருக்கிறவிதமாய் சேர்ப்பிக்கவேண்டும். அப்படி சேர்ப்பிக்கப்பட்டபின்பு பதினைந்துநாளைக்குள் சலெக்ட்டரிடத்திலே அப்பீல்செய்யப்படாவிட்டாலும், அப்பீல்செய்யப்பட்டிருந்தும் பாக்கிதாரன்பேரில் தீர்ப்புசெய்யப்பட்டாலும், வாரண்டில் கண்டிருக்கிறதொகை செலுத்தப்படாதிருக்கிறபட்சத்தில், அந்தபோலீசு உத்தியோகஸ்தன் வாரண்டுகேட்டு வாங்கினவனுக்கு ஸ்வாதீனப்படுத்தவேண்டியது.

44. அப்படி ஸ்வாதீனமானபின்பு அதை ரத்துபண்ணும்படி ஒருமாசத்திற்குள் தகுந்த சீவில்கோர்ட்டிலே வியாச்சியந்தொடரப்பட்டு, அனுகூலமான தீர்ப்பு பெற்றுக்கொள்ளப்படாவிட்டால், பூமிக்குடையவனுக்கும் அந்த பாக்கிதாரனுக்கும் உண்டாயிருக்கிற குத்தகை சம்பந்தம் பரிஷ்காரமாய் அற்றுப்போகும்.

45. பாக்கிதாரனுடைய அசையும்பொருளை ஜப்திசெய்து விற்றுவது, நிலத்திலவனுக்குண்டாகிய சுதந்தரத்தை விற்றுவது பாக்கியைச் சரிப்படுத்திக்கொள்ளக்கூடாமையானல், பாக்கிதாரனைப்பிடித்துக் காவலில் வைப்பதற்கு வாரண்டு கொடுக்கும்படி பூமிக்குடையவனுகிலும் அவனுடைய அதிகாரம்பெற்ற ஏஜெண்டாகிலும் கலெக்ட்டருக்கு மனுவுசெய்துகொள்ளலாம். இந்த ஆக்ட்டு 41 - வது

பிரிவில் சொல்லியிருக்கிறபடி விவரப்பத்திரிகை கொடுக்கப்படுவ தின்பேரில், பாக்கிதாரனாவது அவனுடைய ஜாமீன்தாரனாவது வேணுமென்று பாக்கி செலுத்தாமலிருக்கிறானென்றாகிலும் பணங்கொடாமல் தப்பித்துக்கொள்ளும்பொருட்டு மோசடியான காரியஞ்செய்திருக்கிறானென்றாகிலும் நம்புவதற்குக் கலெக்டருக்கு முகாந்தரமிருக்கிறபட்சத்தில் அப்படியே வாரண்டு கொடுக்கப்படும்.

46. பாக்கிதாரனுடைய பேரையும், எதின்பேரில் பாக்கி சேர்ந்திருக்கிறதோ அந்த நிலத்தின் விவரத்தையும் அளவையும், பாக்கித்தொகையையும் வட்டியையும், ஜப்திசெலவு ஏதாவதிருந்தால் அதையும், பாக்கிசெலுத்தவேண்டிய கெடுவானதேதியையும் அந்த வாரண்டில் கண்டெழுதவேண்டியதுமல்லாமல், 24-மணி நேரத்திற்குள் அந்தத்தொகையைச் செலுத்தாவிட்டால் பாக்கிதாரன் ஜெயிலில் வைக்கப்படுவானென்றும் எழுதவேண்டியது.

47. வாரண்டு பிறப்பித்த அதிகாரியினிடத்திற்குத் தன்னை இட்டுக்கொண்டு போகும்படி பாக்கிதாரன் கேட்டுக்கொண்டால், அவனை அப்படியே இட்டுக்கொண்டுபோகவேண்டியது, அந்த அதிகாரியினிடத்திலே அவன்தான் சுத்தமாய் பாக்கியில்லையென்றாவது பாக்கித்தொகை அவ்வளவில்லையென்றாவது, அந்த பாக்கியைத் தான் கொடுக்கவேண்டியதில்லையென்றாவது சொல்லுவானாகில், அந்த அதிகாரி உடனே அந்த சங்கதியை விசாரிக்கத்தொடங்கி, அழைக்கும்போது ஆஜராகிறதாகவும், மேற்சொல்லியபடி இல்லையென்று மறுத்ததினாலுண்டாகிய செலவைக்குறித்தும் ஜாமீன் கொடுக்கப்படுவதின்பேரில், தீர்ப்பாகிறவரையில் அந்த வாரண்டை நிறைவேற்றாமல் நிறுத்திவைக்கவேண்டியது; ஆனால் வாரண்டுபெற்றுக்கொள்ளுவதற்காகக் கொடுக்கப்பட்ட விவரப்பத்திரிகை எதார்த்தமானதல்லவென்று நினைப்பதற்கு ஏதுவிருந்தால், ஜாமீன் கேட்காமலே வாரண்டை நிறுத்திவைக்கலாம்.

48. பாக்கித்தொகை எவ்வளவிருந்தபோதிலும் பாக்கிதாரனெவனையும் இரண்டு வருஷத்திற் கதிகமாய் சிறைச்சாலையில் வைக்கக்கூடாது, அந்த பாக்கி ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாவிட்டால், ஆறுமாசத்திற்கதிகமாயும், ஐம்பது ரூபாய்க்கு மேற்படாவிட்டால் மூன்று மாசத்திற் கதிகமாயும், சிறைச்சாலையில் வைக்கக்கூடாது;

ஆனால் மேற்சொல்லிய கிரமப்படி காவலில் வைத்தபோதிலும் பாக்கிதாரன் கொடுக்கவேண்டிய தொகை செத்துப்போகமாட்டாது. பாக்கிதாரன் சிறைச்சாலையிலிருக்கையில் அவனுக்கு வாரண்டுவாங்கினவன் ஏற்பாடாயிருக்கிற வீதப்பிரகாரம் படிச்செலவு கொடுக்கவேண்டும், கொடாவிட்டால் கைதி விடுதலை செய்யப்படுவான்.

49. இந்த ஆக்டை சாக்கிட்டுக்கொண்டு நடத்தப்பட்ட யாதொரு நடவடிக்கையினாலே அநியாய மடைந்ததாக நினைக்கிறவன் கலெக்ட்டரிடத்திலே நஷ்டத்தைக்குறித்து சம்மேரிவியாச்சியந்தாக்கல் செய்து நியாயம் பெற்றுக்கொள்ளலாம்.

50. இந்த ஆக்டின்படி கலெக்டரிடத்திலே வியாச்சியந் தொடரவேணுமானால் பிரியாதர்ஜீ கொடுத்துத் தொடரவேண்டியது, அந்த அர்ஜியிலே வாதியினுடைய பேர் முதலான விவரங்களையும் வாசஸ்தலத்தையும், நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளக்கூடியமட்டில் பிரதிவாதியினுடைய பேர் முதலான விவரங்களையும் வாசஸ்தலத்தையுந் தாவா இப்படிப்பட்டதென்பதையும் தாவாதொகையையும், கிடைச்கவேணுமென்கிற நியாயத்தையும், வியாச்சியமூலம் பிறந்த தேதியையும் கண்டெழுதவேண்டியது. வாதியானவன் தன்னுடைய தாவாவிற்கு ஆதாரவாக தாக்கல் செய்யவேணுமென்கிற தஸ்தாவேஜிகளை பிரியாதர்ஜியோடுகூடக் கொடுக்கவேண்டியது, பின்புகொடுக்கப்பட்டால் ஏற்றுக்கொள்ளப்படாது. ஆனால் அப்படிப்பட்டதை தகுந்த முகாந்தரமிருந்தால் கலெக்ட்டர் ஏற்றுக்கொள்ளலாம்; ஆயினும் அக்கிரமமான அல்லது அபூர்த்தியான பிரியா தர்ஜிகளை கக்ஷிதாரனிடத்தில் மறுபடிகொடுத்துவிடலாம், அல்லது கலெக்ட்டருக்கு யுக்தமாகத்தோற்றினால் அதுகளைத் திருத்திக்கொண்டு வரும்படி அவர் உத்தரவு செய்யலாம்.

51. இந்த ஆக்ட்டின்படி சம்மேரி வியாச்சியங்களை வியாச்சிய மூலம் பிறந்த தேதி முதற்கொண்டு முப்பதுநாளைக்குள் கொண்டுவாவேண்டியது.

52. இந்த ஆக்டின்படி கலெக்ட்டரிடத்தில் கொண்டு வரப்பட்ட வியாச்சியங்களிலே வாதிப் பிரதிவாதிகள் பட்சத்தில் விவகாரம் நடத்துவதற்கு பந்துவையாவது வேலைக்காரனையாவது அதிகாரம்

பெற்ற வேறே ஏஜெண்டையாவது நேமித்துக்கொள்ளும்படி வாதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் செலவு கொடுக்கப்படும்.

53. வாயிதாவிற்குள் வியாச்சியங் கொண்டு வரப்பட்டதென்றும், அது கலெக்ட்டரால் விசாரிக்கப்படத் தக்கதுதானென்றும் பிரியாதர்ஜியினால் தெரியவந்தால், அதை விசாரணை செய்வதற்காக ஒருநாள் நிச்சயிக்கப்பட்டு, வாதியினுடைய பேரையும், சுருக்கமாக தாவா இப்படிப்பட்டதென்பதையும் தாவாதொகையையும் எதைக் குறித்து வியாச்சியங்கொண்டுவரப்படுகிறதோ அந்த நிலம் அல்லது இடத்தின் நிலைமையையும், நஷ்டமேதாவது நேரிட்டிருந்து அதை வாங்கிக்கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறதாயிருந்தால் அந்தநஷ்டத்தொகையையும் கண்டெழுதி, பிரதிவாதிபேருக்கு சம்மன் அனுப்பப்படும். சம்மன் பிறப்பிப்பதற்கும் அதைச்சேர்ப்பிப்பதற்குமுண்டான செலவை அந்த சம்மன்பேரில் எழுதவேண்டும்; செலவில்லாமல் சம்மன் பிறப்பிக்கும்படி கலெக்ட்டர் உத்தரவுசெய்யாவிட்டால் அந்தச்செலவு தொகையை வாதி கட்டவேண்டியது. வாதி பார்க்க வேணுமென்கிற தஸ்தாவேஜிகளில் நியாயமாய்க் கொண்டுவரக் கூடாமையான தஸ்தாவேஜிகள் தவிர மற்றவைகளையும், பிரதிவாதி தனக் கனுகூலமாகக் காட்டவேணுமென்கிற சகல தஸ்தாவேஜிகளையும், எடுத்துக்கொண்டு, பிரதிவாதியினுடைய சாட்சிகள் சம்மன் கொடுக்கப்படாமலே ஆஜராக இஷ்டமுள்ளவர்களாயிருந்தால் அவர்களையும் இட்டுக்கொண்டு, நிச்சயிக்கப்பட்ட தினத்திலே கலெக்ட்டர்கச்சேரியில் பிரதிவாதி ஆஜராகவேண்டியதென்று சம்மனில் உத்தரவு செய்யவேண்டியது. வியாச்சியத்தின் பிரதம விசாரணைகாலத்தில் யாதொரு தஸ்தாவேஜை பிரதிவாதி கொண்டுவந்து காட்டலாமேயல்லாமல், பின்பு கொண்டுவந்து காட்டுகிறதாயிருந்தால் அதை ஏற்றுக்கொள்ளுவதற்குத் தகுந்த முகாந்தரம் கலெக்ட்டருக்குத் தெரிவிக்சப்பட்டாலொழிய அப்படியே பின்புகொண்டுவந்து காட்டும்படி பிரதிவாதிக்கு செலவு கொடுக்கப்படாது.

54. பிரதிவாதி நேரில் ஆஜராகவேண்டியது அவசியமாயிருக்கிறதென்று கலெக்ட்டருக்குத் திருப்தியாகும்படித்தெரிவித்து வாதி கேட்டுக்கொண்டாலும், பிரதிவாதி நேரில் ஆஜராகும்படி கலெக்ட்டரோ உத்தரவுசெய்தாலும், அப்படிப்பட்ட பிரதிவாதிகளில் பயிரங்

கத்தில் வரத்தகாத ஜாதியைச்சேர்ந்த அல்லது அந்தஸ்துள்ள ஸ்திரீகள் தவிர மற்றவர்களுக்கு அப்பிரகாரமே நேரில் ஆஜராகும்படி சம்மன் பிறப்பிக்கப்படும். அப்படிக்கில்லாவிட்டால் நோய்ப்பிரதிவாதியாவது அவனுக்கு வதிலாய் அவனுடைய அதிகாரம்பெற்ற ஏஜெண்டாவது ஆஜராகவேணுமென்று சம்மனில் உத்தரவுசெய்யப்படும்.

55. சாத்தியமானுல் பிரதிவாதிக்கு நேராய் சம்மன் பிரதியைக்கொடுக்கவேண்டும்; நேரில் கொடுக்கக்கூடாவிட்டால், அவனுடைய குடும்பத்தைச்சேர்ந்த யாதொரு வயதுவந்த ஆண்பிள்ளையினிடத்திலாவது, அவனுடைய அதிகாரம்பெற்ற ஏஜெண்டினிடத்திலாவது சேர்ப்பிக்கவேண்டும். அதுவும் கூடாமையானுல் அவன் வழக்கமாய் வாசஞ்செய்கிற இடத்தில் எல்லாருக்குந் தெரியும்படியான இடத்திலே ஒரு பிரதியையும் கலெக்ட்டர் கச்சேரியில் ஒரு பிரதியையும் ஒட்டவேண்டியது.

56. வியாச்சியம் நடந்துகொண்டிருக்கையிலெப்போதாகிலும் விசாரணைக்கு நேரில் ஆஜராகும்படி வாதியை வரவழைக்க முகாந்தரமிருந்தால் அப்படியே வரவழைக்கவும், உத்தரவின்படி வாதி ஆஜராகாவிட்டால், செலவுடனேகூட வியாச்சியத்தைத தள்ளிப்போடவும் கலெக்ட்டருக்கு அதிகாரமுண்டு.

57. வியாச்சிய விசாரணைக்கு நிச்சயிக்கப்பட்ட தினத்திலாவது, விசாரணையை நிறுத்தி அதற்காக நிச்சயிக்கப்பட்ட வேறொரு தினத்திலாவது உபய கட்சிக்காரர்களும் நேரில் ஆஜராகாவிட்டாலும், அவர்களுக்குவதிலாய் அதிகாரம்பெற்ற ஏஜெண்டு ஆஜராகாவிட்டாலும், வியாச்சியந் தள்ளிவிடப்படும். பிரதிவாதிமாத்திரம் ஆஜராளுல், அவன் வியாச்சிய மூலத்தை ஒப்புக்கொள்ளாதபட்சத்தில், வாதி ஆஜராகாமையினுலே அவன்பேரில் கலெக்ட்டர்தீர்ப்புசெய்யவேண்டியது; வியாச்சிய மூலத்தைப்பிரதிவாதி ஒப்புக்கொண்டால் அப்பிரகாரமே கலெக்ட்டரானவர் கோர்ட்டுச் செலவைத் தள்ளித் தீர்ப்புச்செய்யவேண்டும்; ஆனுல் ஒருவனல்லாமல் பிரதிவாதிகள் பலராயிருந்து அவர்களில் எவனுவது அப்படி ஒப்புக்கொண்டால் அவன்பேரில் மாத்திரம் மேற்சொல்லிய பிரகாரம் தீர்ப்புச் செய்யப்படும். வாதிமாத்திரம் ஆஜராளுல், கிரமமாய் சம்மன் சேர்ப்பிக்கப்

பட்டதென்று ருஜுவாவதின்பேரில், கலெக்ட்டரானவர் வாதியையும் அவனுடைய சாட்சியத்தையும் பரிசீலனைசெய்து, பிரதிவாதி பட்சத்திலாவது அவனுக்குவிரோதமாகவாவது ஒருதலையாய்த்தீர்ப்புச் செய்யலாம்.

58. ஆஜராகாத பிரதிவாதிக்கு விரோதமாய் ஒருதலையாகச் செய்யப்படுகிற தீர்ப்பின்பேரிலாவது, வாதி ஆஜராகாமையினுலே அவனுக்குவிரோதமாய்ச் செய்யப்படுகிற தீர்ப்பின்பேரிலாவது அப்பீல் பிடிக்கப்படாது. ஆனுல் அப்படிப்பட்ட விஷயங்களிலே, எவன்பேரில தீர்ப்புசெய்யப்பட்டிருக்கிறதோ அவன் வாதியாயிருந்தால் கலெக்ட்டருடைய உத்தரவின் தேதிமுதற்கொண்டு பதினைந்து நாளைக்குள்ளும், அவன் பிரதிவாதியாயிருந்தால் தீர்ப்பின்படி நடப்பிப்பதற்கான வாரண்டு முதலிய கட்டளை நிறைவேற்றப்பட்ட பின்பு பதினைந்து நாளைக்குள் அல்லது அதற்குமுன்னிட்டும், நேரில் அவனுவது அவனுக்குவதிலாய் ஏஜெண்டாவது ஆஜராகி, அவன் முன்னமே ஆஜராகாமற்போனதற்குத் தகுந்த முகாந்தாத்தைத்தெரிவித்து, நீதி தவறிப்போயிருக்கிறதென்று கலெக்ட்டருக்குத் திருப்திகரமாய் ருஜுப்படுத்துகிறபட்சத்தில், அந்த கலெக்ட்டரானவர் செலவுகளைக்குறித்தாகிலும் வேறே எதைக்குறித்தாகிலும் தமக்கு யுக்தமாகத்தோற்றுகிற திட்டங்களைச்செய்து, வியாச்சியத்தைப் புனர்விசாரணைபண்ணி அந்த வியாச்சியத்திலுள்ள நியாயப்படிக்கு, அந்தத்தீர்ப்பைமாற்றலாம், அல்லது ரத்துசெய்யலாம். ஆனுல் எதிர்கட்சிக்காரன் ஆஜராகி அந்தத் தீர்ப்புக்கு அனுகூலமான சங்கதிகளைச் சொல்லிக்கொள்ளும்படி அவனுக்கு முன்னதாய் சம்மன் அனுப்பாமல் அந்தத்தீர்ப்பை மாற்றவுங்கூடாது திருத்தவுங்கூடாது.

59. விசாரணைக்கு நிச்சயிக்கப்பட்ட தினத்திற்குமுன்னமே எப்போதாவது தாவாவைப் பிரதிவாதி ஒப்புக்கொண்டு, தாவாதொகையையும் சம்மன் செலவையும் கலெக்ட்டர் கச்சேரியிலாவது வாதியினிடத்திலாவது அவனுடையஅதிகாரம்பெற்ற ஏஜெண்டுனிடத்திலாவது செலுத்தலாம், அப்படி செலுத்தினுல், பின்பு யாதொரு நடவடிக்கையும் நடத்தாமல் வாதிபட்சத்தில் தீர்ப்புசெய்யப்படும். மேலும் பிரதிவாதியானவன் வாதியினுடைய தாவாவில் தனக்கு எவ்வளவு யுக்தமாகத் தோற்றுகிறதோ அவ்வளவை ஒப்புக்கொள்ள

லாம், அல்லது தாவாதொகையில் தான் எவ்வளவு கொடுக்கவேண்டியதாக ஒப்புக்கொள்ளுகிருனே அவ்வளவை மேற்சொல்லியபடி செலுத்தலாம், வாதி அதற்குச் சம்மதியாமல் வியாச்சியத்தை நடத்தி, பிரதிவாதியினுல் மேற்சொல்லியபடி செலுத்தப்பட்ட அல்லது ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையைவிட அதிகமாக வரப்பெறுவதற்கு தீர்ப்பு அடையாமற்போனுல் பின்னிட்ட செலவுகளையெல்லாம் அவன் கொடுக்கவேண்டியது.

60. இந்த ஆக்ட்டின்படி நீதிவிசாரணை நடத்துகிற கலெக்ட்டர்கள் தஸ்தாவேஜிகளைக் கொண்டுவந்து காட்டும்படி செய்வதைக் குறிததும் சாட்சிகளை ஆஜராகும்படி செய்வதைக்குறித்தும் ஆஜராகாதவர்களையும் சாட்சிசொல்லாதவர்களையும் தெண்டிப்பதைக்குறித்தும் சீவில் ஜட்ஜிகளுக்குண்டாகிய அதிகாரங்களை உடையவர்களாவார்கள்.

61. கட்சிக்காரர்கள் தங்களுடைய சாட்சிகளை விசாரணைகாலத்தில் இட்டுககொண்டு வரவேண்டியது, சாட்சி சொல்லும்படிக்காவது தஸ்தாவேஜு கொண்டுவந்து காட்டும்படிக்காவது யாதொரு சாட்சியை ஆஜர்படுத்துவதற்கு உபயகட்சிக்காரர்களில் எவனுக்காகிலும் சகாயம் வேண்டியிருந்தால், அவன்விசாரணைக்கு நிச்சயிக்கபட்டதினத்தில் அந்தசாட்சி ஆஜராவதற்கு சாவகாசமுண்டாகும்படி அந்த தினத்திற்குமுன்னமே தகுந்தகாலத்தில் கலெக்ட்டருக்கு மனுவுசெய்துகொள்ளவேண்டும், அதற்குமேல் அந்தசாட்சி ஆஜராகும்படி அவனுக்கு கலெக்ட்டர் சம்மன் பிறப்பிப்பார்.

62. சம்மேரிவியாச்சிய விசாரணை நடக்கையில் கலெக்ட்டர் பிறப்பிக்கிற சம்மன் முதலானதுகளிலே அவருடைய கையெழுத்தும் முத்திரையும் போட்டு, அவரால் நேமிக்கப்படுகிறவனுலே அதுகளைக்கொண்டுபோய் சேர்ப்பிக்கப்படும், அல்லது நிறைவேற்றப்படும். அப்படி செய்வதற்குண்டான செலவை அதுகளைப்பிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறவன் ஏற்றுககொள்ளவேண்டும். அந்த செலவுதொகையையும் சாட்சியினுடைய வழிச்செலவுக்கு வேண்டியபணத்தையும் அந்த சம்மன்முதலானது பிறப்பிக்கப்படுவதற்கு முன்னமே கலெக்ட்டர் கச்சேரியில் கட்டவேண்டியது. ஆனுல், யாதொருவிஷயத்தில் கலெக்ட்டருக்கு தகுந்த காரணந்தோற்றினுல்,

செலவில்லாமலே அந்த சம்மன் முதலானதைச் சேர்ப்பிக்கும்படி அவர் உத்தரவு செய்யலாம்.

63. வியாச்சிய விசாரணையில், கட்சிக்காரர்கள் அல்லது அவர்களுடைய அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகளையும், வாதி பிரதிவாதிகளுடைய சாட்சிகளையும், சாட்சி விசாரணையைக்குறித்து அப்போதைக்கப்போது வழங்கிவருகிற சட்டப்படி பிரமாணத்தின்பேரிலாவது உறுதிமொழியின்பேரிலாவது வேறே எவ்விதமாயாவது விசாரணை செய்யலாகும். சாட்சிகளின் வாக்குமூலத்தை அந்த டிஸ்திரிக்ட்டின் சுயபாஷையிலாவது இங்கிலீஷிலாவது சங்கதி ஜோர்வையாக எழுதிக்கொண்டு அதை சாட்சிக்குப் படித்துக்காட்டி அவசியமானால் அதை விவரமாய்ச் சொன்னபின்பு அதில் கலெக்ட்டர் கையெழுத்துப்பண்ணவேண்டியது. வேறே யாதொரு சாட்சியத்தையாவது தஸ்தாவேஜுகளையாவது கொண்டுவரும்படி உத்தரவு செய்யவும் அந்த வியாச்சியத்தை விளங்கச்செய்வதற்கு வேண்டிய வேறே சாட்சிகளை சம்மனனுப்பி வரவழைக்கவும் கலெக்ட்டருக்கு அதிகாரமுண்டு.

64. வியாச்சியக்கட்டிலே பிரியாதர்ஜியும், பிறப்பிக்கப்பட்ட சம்மன்கள் அல்லது அதுகளின் நகல்களும், வாதி அல்லது அவனுடைய அதிகாரம்பெற்ற ஏஜெண்டைச்செய்த பரிசீலனையும், பிரதிவாதி அல்லது அவனுடைய அதிகாரம்பெற்ற ஏஜெண்டு கொடுத்த வாக்குமூலமும், யாதொரு விவரப்பத்திரிகையைப் பிரதிவாதி தாக்கல்செய்திருந்தால் அதுவும் சாட்சிகளின் வாக்குமூலமும் தாக்கல் செய்யப்பட்ட தஸ்தாவேஜுகளின் ஜாபிதாவும் சேர்ந்திருக்கவேணும். அந்த தஸ்தாவேஜுகளை கலக்ட்டர் வைத்துக்கொண்டால், அதுகளை அந்தக்கட்டில் சேர்க்கவேண்டியது.

65. இந்த ஆக்ட்டின்படி கலெக்ட்டர்கள் நடத்துகிற நடவடிக்கைகள் சுருக்கமாயிருக்கவேண்டும், பிரியாதர்ஜி தாக்கல்செய்யப்பட்டபின்பு பிரதிவாதி ஆஜராயிருந்தால், அந்த வியாச்சிய விசாரணையை உடனே நடத்துவதற்கு கலெக்ட்டருக் கதிகாரமுண்டு.

66. யாதொரு வியாச்சியத்திலே விவகரிப்பதற்கு வாதிக்காவது பிரதிவாதிக்காவது எந்தவிஷயத்திலாகிலும் கலெக்ட்டர் வாயி

தாகொடுக்கலாம், மேலும் யாதொரு தகுந்த முகாந்தரமிருந்தால் அதை யெழுதிவைத்து தனககு யுக்தமாகத்தோற்றுகிறபடி அந்த விசாரணையை நிறுத்திவைக்கலாம்.

67. யாதொரு வியாச்சியம் நடந்துகொண்டிருக்கையி லெப்போதாவது கலெக்ட்டரானவர் விவாதமுண்டான இடத்திலே விவாதசங்கதியைக்குறித்து விசாரணைசெய்து அறிக்கைப்பண்ணும படி தனக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தனுக்கு உத்தரவுசெய்யலாம். அந்த அறிக்கையும் அதற்கு ஆதாரமான சாட்சியமும் தஸ்தாவேஜுகளும் அந்த வியாச்சியக்கட்டைச் சேர்ந்ததாகும். தீர்ப்புசெய்கையில் கலெக்ட்டரானவர் அதுகளைப்பார்வையிட்டு யோசித்துப் பண்ணவேண்டியது.

68. வியாச்சிய விசாரணை முடிந்தபின்பு கலெக்ட்டரானவர் தீர்ப்புசொல்லவேண்டியது. அந்தத்தீர்ப்பை அதற்குண்டான ஏதுக்கள் சகிதமாய் இங்கிலீஷிலே கலெக்ட்டர் எழுதி, அந்த தீர்ப்பு சொல்லுங்காலத்தில் அவர் தேதிபோட்டுக் கையெழுத்துபண்ணவேண்டியது. உபயகட்சிக்காரர்களில் அவனவன் மனுவுசெய்துகொண்டால், கலெக்ட்டருடைய தீர்ப்புக்கு நகலை தர்ஜுமாசகிதமாய் செலவில்லாமல் அவர்களுக்குக் கொடுக்கவேண்டியது.

69. கலெக்ட்டர் இந்த ஆக்ட்டின்படிசெய்கிற சகல தீர்ப்புகளின்பேரிலும் ஜில்லா ஜட்ஜியினிடத்தில் கிரம அப்பீல்செய்யலாகும். அப்படி அப்பீல்செய்துகொள்ளுகிறதானால் கலெக்ட்டருடைய தீர்ப்பின் தேதிமுதற்கொண்டு முப்பதுநாளைக்குள் ஜில்லா கோர்ட்டில் செய்யவேணும். ஆனால் கலெக்ட்டர் இந்த ஆக்ட்டின்படி செய்கிறதீர்ப்புகளை சாராம்சங்களைப்பற்றிமாத்திரம் ரத்துசெய்யலாமே தவிர, ஒழுங்கு குறைவாயிருப்பதைப்பற்றியாவது நடவடிக்கைகள் கிரமப்பிசகாயிருப்பதைப்பற்றியாவது ரத்துசெய்யக்கூடாது.

70. கலெக்ட்டர் தன்னுடைய தீர்ப்பை நிறைவேற்றும்படி உடனே வாரண்டு பிரப்பிக்கலாம், ஆனால் தீர்ப்புசெய்யப்பட்ட நஷ்டமாவது தெண்டமாவது செலவாவது அப்பீல்வாயிதா முப்பது நாள் கழிகிறவரையில் வசூல்செய்யவும்படாது. இந்த ஆக்ட்டிலுள்ள நிபந்தனைகளின்படி யாதொரு ரயித்தை நிலஸ்வாதீனத்திலிருந்து

அப்புறப்படுத்தவுங்கூடாது. மேலும் எவன்பேரில் தீர்ப்புசெய்யப்பட்டதோ அந்த கடன்காரனாகிய ஆளின்பேரிலும் அவனுடைய சொத்தின்பேரிலும் ஒருமிக்க வராண்டுபிறப்பிக்கக்கூடாது. கலெக்ட்டருடைய தீர்ப்புக்குட்பட்ட சகல தொகைகளும் சர்க்கார்தீர்வை பாக்கியைப்போல வசூல் செய்யப்படத்தக்கதாகும்.

71. பட்டாகொடுக்கும்படி தீர்ப்புசெய்யப்பட்டால், அந்தப்படி பட்டாகொடுக்கவேண்டியவன் கொடுக்கமாட்டேனென்றாலும், ஆலசியஞ்செய்தாலும், தீர்ப்பிலுள்ள திட்டங்களை அனுசரித்து கலெக்ட்டரானவர் தன்னுடைய கையெழுத்து முத்திரைசகிதமாய் பட்டாகொடுக்கலாம். அந்தபட்டா மேற்படியானால் கொடுக்கப்பட்டாற்போலவே செலாமணியாகும்.

72. முச்சிலிக்கா கொடுக்கும்படி தீர்ப்பு செய்யப்பட்டால், அந்தப்படி முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கவேண்டியவன் அதை யெழுதிக்கொடுக்கமாட்டேனென்கிற பட்சத்தில் மேற்படி தீர்ப்பானது அவனிடத்திலிருந்து வரவேண்டிய குத்தகைத்தொகைக்கு சாட்சியமாவது மல்லாமல் அந்தத்தீர்ப்புக்கு கலெக்ட்டருடைய கையெழுத்து முத்திரை சகிதமாய்க் கொடுக்கப்படுகிற நகலானது மேற்படியானால் எழுதிக் கொடுக்கப்படுகிற முச்சிலிக்காவைப்போலவே செலாமணியாகும்.

73. யாதொரு ரயித்தினுடைய அனுபோகத்திலிருந்து நிலத்தை எடுத்துக்கொள்ளும்படியாவது, எடுத்துக்கொள்ளப்பட்ட நிலத்தை மறுபடியும் அவனுடைய அனுபோகத்தில் விடும்படியாவது தீர்ப்பு செய்யப்பட்டால், அந்தத்தீர்ப்பின்படி எடுத்துக்கொண்டு எவனுடைய ஸ்வாதீனஞ் செய்யவேண்டியதோ அல்லது எவனுடைய அனுபோகத்தில் விடவேண்டியதோ அந்தப்படி அந்த நிலத்தை ஒப்பித்து தீர்ப்பை நிறைவேற்றவேண்டியது; அப்பிரகாரம் ஒப்பிக்கும்படி செய்யப்படுகிற உத்தரவை நிறைவேற்றுகையில் எதிரியாவது மற்றவர்களாவது எதிர்ப்பார்களாகில், மனுவு செய்யப்படுவதின் பேரில், மாஜிஸ்திரேட்டானவர் அந்த உத்தரவின்படி நிலத்தை ஒப்பிக்கவேண்டியது.

74. சிவில் புரோசீடர்கோடில் பஞ்சாயத்தைக்குறித்து 6-ம் அத்தியாயத்தில் சொல்லியிருக்கிற நிபந்தனைகள் இந்த ஆக்ட்டின்

படி கலெக்ட்டர்களிடத்தில் செய்யப்படுகிற சம்மேரி வியாச்சியங்களுக்குச் சம்பந்தப்படும். இந்தப்பிரிவின்படி யாதொரு வியாச்சியத்தை பஞ்சாயத்திற்கு கலெக்ட்டரனுப்பினால், அந்த பஞ்சாயத்தில் ஒருவராகவாவது பலராகவாவது விசாரணை செய்கிறவர்களால் செய்யப்பட்ட தீர்மானத்தை கலெக்ட்டரானவர் தானே செய்தாற்போல் நிறைவேற்ற அதிகாரமுடையவராவார்.

75. இந்த ஆக்ட்டின்படி கலெக்ட்டரிடத்தில் செய்யப்படுகிற சம்மேரிவியாச்சியங்களுக்கு முத்திரைக்கடுதாசித்தீர்வை வேண்டுவதில்லை.

76. இந்த ஆக்ட்டின்படி நடத்தப்பட்ட நடவடிக்கைகளில், கலெக்ட்டரால் செய்யப்படுகிற தீர்ப்பின்பேரிலும், தீர்ப்புக்குப்பின்பும் அதை நிறைவேற்றுவதைக்குறித்தும் அவரால் செய்யப்படுகிற உத்தரவின்பேரிலும், ஜில்லாக்கோர்ட்டில் செய்யப்படுகிற அப்பீலிலாவது 58-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடிக்காவது புனர் விசாரணை செய்யப்படுமே தவிர, மற்றப்படி புனர் விசாரணை செய்யப்படாது.

77. பிரதி கலெக்ட்டரும் தான் விசாரித்துத் தீர்மானிக்கிற சம்மேரி வியாச்சியங்களுக்கு அடியில் கண்டிருக்கிற நமூனாப்படி ரிஜிஸ்தர் வைக்கவேண்டியது :—

| வியாச்சிய நம்பர். | பிரியா சுர்ஜியின் தேதி. | பிரியா தர்ஜியின் சுருக்கம். | பிரதிவாதி சொல்லிக்கொள்ளுகிற நியாயங்களின் சுருக்கம். | தீர்ப்பின் தேதியும் சுருக்கமும். |
|---|---|---|---|---|
| | | | | |

78. கொடுத்திருக்கிறபணத்தை வாப்பற்றுவதற்காவது, இந்த ஆக்ட்டிலுள்ள அதிகாரத்தைக்கொண்டு பரிஷ்காரமாய்ச் செய்யப்பட்ட யாதொரு காரியத்தைக்குறித்து நஷ்டத்தை வரப்பற்றுவதற்காவது சாதாரணமான நியாயஸ்தலங்களிலே எவனுகிலும் விவகா

ரம் நடத்துவதற்கு இந்த ஆக்ட்டிலுள்ள யாதொரு நிபந்தனையினலே தடங்கலுண்டாயிருப்பதாக ஒருவரும் எண்ணக்கூடாது. ஆனல் அப்படிப்பட்ட வியாச்சியமூலம்பிறந்த காலமுதற்கொண்டு ஆறுமாசத்திற்குள் அந்த சாட்சிக்காரர்கள் அதைக்குறித்து வியாச்சியந் தொடராமல் பின்பு தொடர்ந்தால் சீவில்கோர்ட்டார் அதை விசாரணைசெய்யக்கூடாது. மேலும் முன்னதாய் அவசியமான விவரப் பத்திரிகை கொடுக்கப்பட்டிருக்கிற விஷயத்தில், அந்த பத்திரிகை பொய்யானதென்று ருஜுவானபோதிலும், 41-வது, 45-வது பிரிவுகளில் சொல்லியிருக்கிறபடி வாரண்டுகள் பிறப்பித்ததைக்குறித்து யாதொரு ரிவினியூ அதிகாரியின்பேரில் செய்யப்படுகிற வியாச்சியமும், யாதொருபோலீசு உத்தியோகஸ்தன் யாருக்கு உட்பட்டிருக்க வேண்டியதோ அந்த அதிகாரியினல் உத்தரவுசெய்யப்படுகையில் யாதொரு வாரண்டை நிறைவேற்றினதைக்குறித்தாவது இந்த ஆக்ட்டின்படிக்குண்டாகிய சம்மன்முதலானதுகளைச் சேர்ப்பிப்பதற்கு உதவிசெய்வதைக்குறித்தாவது அந்தபோலீசு உத்தியோகஸ்தன் பேரில் செய்யப்படுகிற வியாச்சியமும் பிடிக்கப்படாது.

79. பூமிக்குடையவர்கள் இந்த ஆக்ட்டின்படி தங்களுக்குண்டாகிய அதிகாரங்களையெல்லாம் தங்களுடைய ஏஜெண்டுகளுக்காவது காரியக்காரர்களுக்காவது கொடுக்கத்தக்கவர்களாவார்கள். அந்த ஏஜெண்டுகளாலாகிலும் காரியக்காரர்களாலாகிலும் அநியாயமடைந்தவர்கள் அவ்விருதிறத்தாரில் யார்பேரிலாவது அவர்களுடைய முதலாளியின்பேரிலாவது இரண்டுபேரிலுமாவது வியாச்சியங்கொண்டு வரலாம். ஆனல், பிரியாதுக்குட்பட்ட காரியம் முதலாளியினுடைய அனுமதியில்லாமல் அவனுடைய ஏஜெண்டியினலாவது காரியக்காரனலாவது செய்யப்பட்டபட்சத்தில் அந்த முதலாளியை எந்தவிஷயத்திலும் காவலில்வைக்கவுங்கூடாது, அவனிடத்தில் வாதிக்கு வாஸ்தவமாய் உண்டான நஷ்டத்தைவிட அதிக நஷ்டத்தொகையை வாங்கவுங்கூடாது.

80. குத்தகைத்தொகை பாக்கியைக்குறித்து சம்மேரி விவகாரந்தொடருவதற்கு இந்த ஆக்ட்டினலே அதிகாரம்பெற்றவர்களுடைய வாரிசுதாரர்களாவது நியாயமான பிரதிநிதிகளாவது, அந்த லத்தில் தங்களுக்கு நியாயமாய் பாத்தியதையுண்டானகாலத்தில்

மேற்படி பாக்கி ஏற்பட்டதாயிருந்தாலும் முன்னிட்டு ஏற்பட்டதா யிருந்தாலும், அப்படிப்பட்ட விவகாரந் தொடருவதற்காவது தொடரப்பட்டிருக்கிற விவகாரத்தைப் பின்னும் நடத்துவதற்காவது தங்கள் மூலபுருஷர்களுக்குண்டாகிய அதிகாரத்தை உடையவர்களாவார்கள்; இந்தப் பிரிவின்படி அவர்கள் முதலில்செய்ய எத்தனிக்கிற காரியத்தை கலெக்டருக்காவது அதற்காக அதிகாரமுடைய வேறே உத்தியோகஸ்தருக்காவது தெரியப்படுத்தவேண்டும்.

81. பணமாகவாவது தானியமாகவாவது செலுத்துவதற்கு பூமிக்குடையவர்களிடத்திலே ரசீதுபெற்றுக்கொள்ள ரயித்துகளுக்கு பாத்தியமுண்டு; குத்தகைத்தொகை முழுமையையும் அவர்கள் செலுத்திவிட்டால், அவர்கள் பூரா ரசீது பெறறுக்கொள்ளத் தக்கவர்களாவார்கள். யாருக்கு ரசீதுகொடுப்பதில்லையென்று மறுக்கப்படுகிறதோ அவர்கள் அதை கலெக்டரிடத்திலே சம்மேரி வியாச்சியந் தொடர்ந்து ருஜுவுசெய்வார்களாகில் தாங்கள் செலுத்திய தொகைக்கு இரட்டத்தனைக்கு அதிகப்படாமல் நஷ்டத்தை செலவுடனேகூட வரப்பற்றலாம்.

82. பூமிக்குடையவரிடத்திலிருந்து மனுவு பெற்றுக்கொள்வதின் பேரில், கலெக்டராவது அவரால் நேமிக்கப்பட்ட உத்தியோகஸ்தராவது தகுந்த முகாந்தரங் காணுகிறபட்சத்தில், ரயித்து செலுத்தவேண்டிய தொகைக்கு அவன் மாசூல் அல்லது பலனை அறுத்து எடுத்துக்கொண்டு போவதற்குமுன்னமே ஜாமீன்கொடுக்கும்படி அந்த ரயித்துக்கு உத்தரவுசெய்ய அதிகாரமுடையவராவார். அந்த ரயித்து அப்படி ஜாமீன்கொடாவிட்டால், அந்த மாசூல் அல்லது பலனில் அந்த மனுவுதாரருக்குச் சேரவேண்டிய தொகைக்குச் சரியான பாகத்தை அவரிடத்தில் ஒப்பித்துவிட மேற்படி கலெக்ட்டர் அல்லது உத்தியோகஸ்தருக்கு அதிகாரமுண்டு.

83. குத்தகைத்தொகையாக மாசூலில் ஓர் பாகத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கு பாத்தியமுள்ள பூமிக்குடையவனெவனாகிலும் தனக்குத் தெரிவிக்காமலாவது தன்னுடைய கண்காணமில்லாமலாவது மாசூல் அறுத்துவிடப்பட்டதென்றும், தனக்குக் கொடுக்கவருகிற அல்லது தனக்காக வைத்திருக்கிற பாகம் குறைவாயிருக்கிறதென்றும் பிரியாதுசெய்தால், அதைக்குறித்து சம்மேரி வியாச்சியம்

தாக்கல்செய்யப்படுவதின்பேரில், அந்த வியாச்சியத்தை விசாரணை செய்து, எவ்வளவு நியாயமாகத் தோற்றுகிறதோ அவ்வளவு ஜாஸ்தி தானியத்தையாவது பலனையாவது அதற்குச்சரியான கிரயத்தையாவது பூமிக்குடையவனுக்கு ரயித்துகொடுக்கும்படி தீர்ப்புசெய்ய கலெக்ட்டருக்கு அதிகாரமுண்டு. பூமிக்குடையவனுக்குத் தெரிவித்து அவனுடைய சம்மதி பெற்றுக்கொள்ளாமல் மாசூலை அறுத்ததற்காக இந்தியன் பினல்கோடின் 17-வது அத்தியாயத்திலுள்ள நிபந்தனைகளின்படி யாதொரு அபராதம் அல்லதுதெண்டனையை அந்த ரயித்துக்கு விதிக்கவேண்டியதற்கு மேற்படி தீர்ப்பினாலே பாதகமுண்டாகமாட்டாது.

84. யாதொரு ரயித்துவின்பேரிலாவது அவனுடைய ஜாமீன்தாரன்பேரிலாவது அவ்விருவர்பேரிலுமாவது விவகாரம் நடத்த பூமிக்குடையவர்களுக்கு அதிகாரமுண்டு. ஆயினும், பாக்கியும் வட்டியும் கோர்ட்டுச்செலவு முதலான செலவுகளும் சேர்ந்ததொகை மொத்தத்தைவிட அதிகமாக அவ்விருவரிடத்தில் வசூல் செய்யக்கூடாது.

85. பூமிக்குடையவர்களாகிய அசமர்த்தாளுக்குரிய ஸ்திதியின் காரியநிர்வாகிகளும், சர்க்கார்தீர்வை பாக்கிக்காக ஜப்தியிலுள்ள நிலங்களையாவது சீவில்கோர்ட்டாருடைய உத்தரவின்படி நிலங்களையாவது விசாரணைசெய்கிற சர்க்கார் அதிகாரிகளும், தங்களுடைய வசத்திலிருக்கிற பூஸ்திதி அல்லது நிலங்களின் சொந்தக்காரர்களே இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளின்படி எவ்விதமாய் நடவடிக்கை நடத்தத்தக்கதோ அவ்விதமாகவே குத்தகைத்தொகையை பாக்கிக்காக ரயித்துகள்பேரில் நடவடிக்கை நடத்த அதிகாரமுடையவர்களாய், அந்த பூஸ்திதி அல்லது நிலங்கள் தங்களுடைய விசாரணையிலிருக்கிறவரையில் பூமிக்குடையவர்களைப்போலவே நிர்ப்பந்தங்களுக்குட்பட்டு, இந்த ஆக்ட்டின்படி பூமிக்குடையவர்களுக்குண்டாகிய அதிகாரங்களையெல்லாஞ் செலுத்தலாம்.

86. சர்க்கார்பேரிஜா குத்தகை செய்துகொள்ளுகிறவர்களெல்லோரும்-தங்களுடைய உள்குத்தகைதாரர்கள் செலுத்தவேண்டிய குத்தகைத்தொகையைக் கண்டெழுதி உடன்படிக்கைகளை அந்த உள்குத்தகைதாரர்களிடத்தில் வாங்கிக்கொண்டிருப்பார்களாகில்,

இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளின்படி அந்த உள்குத்தகைத் தொகையைவசூல்செய்வதற்காக அவர்கள்பேரில் நடவடிக்கை நடத்த அதிகாரமுடையவர்களாவார்கள்.

87. வியாச்சியந் தொடரக்கூடாதென்று இதில் முன்னமே விலக்கப்பட்டிருப்பதுதவிர பூமிக்குடையவர்கள் முதலானவர்கள் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினால் தங்களுக்கு வரவேண்டியகுத்தகை அல்லது தீர்வை பாக்கிக்காக சிவில்கோர்ட்டுகளிலே வியாச்சியந் தொடரலாம். ஆனால் குத்தகைத்தொகையைக்குறித்த வியாச்சியங்களைத் தீர்மானிப்பதில் கோர்ட்டார் இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளை அனுசரிக்கவேண்டியது.

88. சென்னபட்டணத்து சட்டபுஸ்தகத்திலுள்ள 1802-ம் ஹூ 2-வது சட்டம் 12-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி சென்னபட்டணத்து ராஜதானியின் சரஹத்துக்குள் குத்தகைத் தொகை அல்லது சர்க்கார் தீர்வையைவசூல்செய்வதற்கு இந்த ஆக்டிலுள்ள எந்த நிபந்தனையும் சம்பந்தப்படமாட்டாது.

89. அடியில் கண்டிருக்கிற சட்டங்கள்-வேறே ஆகட்டுகளையும் சட்டங்களையுமாவது வேறே ஆக்டுகளின் பாகங்களையும் சட்டங்களின் பாகங்களையுமாவது ரத்துசெய்கிறமட்டிலும், இந்த ஆக்ட்டு வழங்கத்தொடங்குவதற்கு முன்னமே நடந்திருக்கிற நடவடிக்கைகள் அல்லது சங்கதிகளுக்குச் சம்பந்தப்படுகிறமட்டிலுந்தவிர இதனால் ரத்துசெய்யப்படுகிறது :—

1802 ஹூ - 28 - வது - சட்டம்.
1802 ஹூ - 30 - வது - சட்டம்.
1806 ஹூ - 2 - வது - சட்டம், 4-வது 6-வது பிரிவுகள்.
1858 ஹூ - 39 - வது - ஆக்ட்டு.
1826 ஹூ - 1 - வது - சட்டம்.

90. இந்த ஆக்டானது சென்னபட்டணத்து கவரன்மெண்டார் நிச்சயித்து சர்க்கார் கெஜட்டில் பிரசித்தஞ்செய்விக்கிற தேதிமுதற்கொண்டு வழங்கிவரவேண்டியது.

## பொதுவான காரியங்களுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்கள், எடுத்துக்கொள்ளும் விதம்.

கவர்ன்மெண்டார் கைவசத்திலிராத நிலங்கள் பொதுவானகாரியங்களுக்குக் காயமாகவேண்டியிருந்தால், அப்படிப்பட்ட நிலங்களை ஒரோரிதியாய் 1894௵த்து I-வது ஆக்ட்டின் பிரகாரம் எடுத்துக்கொள்ளவேண்டும்; ஏனென்றால்:—அந்த ஆக்ட்டின்பிரகாரம் நிலங்களைக் கிரகிப்பதனால் கவர்ன்மெண்டாருக்கு சாஸ்வதமான ஸ்வதந்தரம் ஏற்படுகின்றது. ஸ்வல்பகால உபயோகத்துக்காக நிலங்களைக் கிரகிப்பதிலே, அந்த ஆக்ட்டை (VI-வது பாகம்) சாத்தியமான சந்தர்ப்பங்களில் பிரயோகிக்கவேண்டும்.

2. நிலம் எந்த இலாக்காதாரருக்கு வேண்டியிருந்தாலுஞ்சரி இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிற பிரகாரம் கலெக்ட்டர் எடுத்துக்கொள்ளவேண்டும்.

### 3. நிலமெடுத்துக்கொள்வதற்கான ஆக்ட்டை அமுலுக்குக்கொண்டுவருவதற்குமுன்னே அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை.

இதரமான இலாக்காதாரர்களுக்குப் பொதுவான காரியங்களுக்காகத் தேவையான நிலங்களை எடுத்துக் கொள்ளவேண்டுமானால், எந்த இலாக்காவுக்குத் தேவையாயிருக்கிறதோ அந்த இலாக்காவின் டிஸ்ட்ரிக்ட் தலைவரானவர் அந்த நிலங்களின் உருவப்படத்தைக்கூட வைத்துக் கலெக்ட்டருக்கு விண்ணப்பஞ்செய்துகொள்ளவேண்டும். அதன்மேல், கலெக்ட்டரானவர் தாமேயாவது தம்முடைய கீழுத்தியோகஸ்தர்களில் ஒருவர் மூலமாகவாவது நிலம் தேவையாயிருக்கிற இலாக்காவின் யாதொரு உத்தியோகஸ்தருடனே அந்த நிலமிருக்கிற இடத்தைப்போய்ப் பார்வையிடவேண்டும். அப்புறம் அந்தநிலத்தில் குச்சடித்து, அந்த நிலத்தை எடுத்துக்கொள்வதற்காகப் பிடிக்கும் தோராயமான செலவைக் கணக்கிடும்பொருட்டு அநுபந்தத்தில் காட்டியிருக்கிற நமூனாவின் பிரகாரம் அந்த நிலமிருக்கிற இடம் அதன் விஸ்தீரணம் முதலான விவரங்க ளடங்கிய ஒரு ஸ்டேட்மெண்டில் 5-முதல் 17-வரையிலுமுள்ள கலங்களில் செய்யப்பட்ட பதிவுகளுக்கு, கிராம அதிகாரிகளிடத்திலிருந்து பெறத்தக்க சங்கதி

களே ஆதாரமாகுமென்பதை விதியாக வைத்துக்கொள்ளவேண்டும். அந்த சங்கதிகள் சரியானவை என்பதற்கு அவர்களே உத்தரவாதிகளாகச் கொள்ளவேண்டும். ரெஜிஸ்ட்டர் செய்யப்பட்ட ரெவினியு புலத்தின் யாதொரு பாகம் மாத்திரமே தேவையாயிருந்தால், அது சங்கதியை 7-வது கலத்தில் குறிக்கவேண்டும்.

4. அந்த நிலத்தை எடுத்துக்கொள்வதில் அதன் சொந்தக்காரர்களுக்காவது அநுபோகதாரர்களுக்காவது ஏதாகிலும் ஆக்ஷேபனையிருக்குமாகில், அந்த ஆக்ஷேபனைகளடங்கிய யாதொரு ஸ்ட்டேட்மென்டை அவர்களிடத்தில் தவறுமல் வாங்கி அதை, பின்னுல் 7-வது பாராவில் பிரஸ்தாபிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் கவர்ன்மென்டாருக்கு அனுப்பவேண்டும்.

5. மூன்ருவது பாராவில் பிரஸ்தாபிக்கப்பட்ட ஸ்ட்டேட்மென்டின் காரியங்களுக்காக நிலத்தின்கிரயத்தை மதிப்பிடுகையிலே கலெக்ட்டரானவர் பின் வருகிற விஷயங்களை அநுசரிக்கவேண்டும் :—

(1) நிலத்தின் கிரயமானது சாதாரணமாய் அதன் ஊர் விலையாக இருக்கவேண்டும் ; எனவே, அதைச் சாதாரண சந்தர்ப்பங்களில் விற்பனை செய்தால், என்னகிடைக்கக்கூடுமோ அந்தத்தொகையாகும்.

(2) இதை மதிப்பிடுவது கஷ்டமாயிருக்குமாகில், அக்கம்பக்கத்தில் அதைப்போன்ற நிலங்களின் ஊர் விலையை அநுசரிக்க வேண்டும்.

(3) இந்த விஷயத்தைக்கூட அறிய முடியாத பக்ஷத்தில், நிலத்தின் மதிப்புக் கிரயத்தைப் பின் வருமாறு கணக்கிடவேண்டும் :—

(a) ரயத்துவாரி நிலங்களின் விஷயத்திலே அஸெஸ்மென்ட் ஏற்படுத்தப்பட்ட பிறகு நிலத்தில் சாஸ்வதமான சீர் திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, அஸெஸ்மென்டுக்கு 15-மடங்காயிருப்பதாகக் கிரயத்தைக் கொள்ளவேண்டும் ; அந்தப்படி சீர் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்குமாகில், அதன் மதிப்புக்கிரயத்தை, அதிலிருந்து தேறுகடையாகிற நிகர வருமானத்துக்கு 15 - மடங்காகக் கணக்கிடவேண்டும்.

(b) இனும் அல்லது ஜமீன்தாரி நிலங்களின் விஷயத்திலே—

(i) நிலத்திற்கு ஸர்வே அஸெஸ்மென்டாவது பைமாஷ் அஸெஸ்மென்டாவது விதித்திருக்குமாகில், ஜமீன்தாரர் அல்லது இனும்தாருடைய மேல்வார சுவதந்தரத்தைப்பற்றிய பிரதிபலனை, அந்த அஸெஸ்மென்டுக்கும் அதன் அளவுக்கேற்ற பேஷ்கஷ் அல்லது க்விட்ரென்டுக்கும் உள்ள வித்தியாசத்துக்கு 15-மடங்களவாசக் கணக்கிடவேண்டும்; நிலத்தின் அநுபோக ஸ்வதந்தரம் சொந்தக்காரரிடத்திலேயே யிருந்தாலும் சரி, யாதொரு குடியானவனிடத்திலிருந்தாலும் சரி, அதைப்பற்றிய பிரதி பலனை அஸெஸ்மென்டுக்கு 15-மடங்களவாகக் கணக்கிடவேண்டும்.

(ii) நிலத்தின்மேல் அப்படிப்பட்ட அஸெஸ்மென்ட் யாதொன்றும் விதித்திராவிட்டால், நிலத்தின் சொந்தக்காரருடைய மேல்வார ஸ்வதந்தரத்தைப்பற்றிய பிரதிபலனை, அந்த நிலத்தின் தீர்வைக்கும் அதற்கேற்ற பேஷ்கஷ் அல்லது க்விட்ரென்டுக்கும் உள்ள வித்தியாசத்துக்கு 15-மடங்களவாகக் கணக்கிடவேண்டும். இந்த விஷயத்திலே, சொந்தக்காரரே அநுபோக ஸ்வதந்தரத்தை நிலத்தில் உடைத்தாயிருந்தால், அந்த ஸ்வதந்தரத்துக்காகப் பிரத்தியேகமான யாதொரு பிரதிபலனும் கொடுக்கவேண்டிய அவசியமில்லை; ஏனென்றால், அது தீர்வைத்தொகையில் அடங்கியிருக்கும். ஆயினும், அநுபோக ஸ்வதந்தரம் யாதொரு குடியானவனுக்கு இருந்தால், அதற்காக அவனுக்குக்கொடுக்கவேண்டிய பிரதிபலனை, அவன் கட்டுகிற தீர்வைக்கு 15-மடங்களவாகக் கணக்கிடவேண்டும்.

iii. ஜமீன்தாரி கிராமங்களிலும் இனும் கிராமங்களிலுமுள்ள தரிசு நிலங்களின் விஷயத்திலே, அவைகளின மதிப்பிட்ட தீர்வையின் தற்கால விலைமதிப்பை அநுசரித்துப் பிரதிபலனைக் கணக்கிடவேண்டும். இந்தத் தற்கால விலைமதிப்பை நிஷ்கரிஷை செய்யவேண்டுமானால், முதலில், சாகுபடியிலிருக்கிற அதுபோன்ற நிலங்களின் வீதங்களை அநுசரித்துத் தீர்வை மதிப்பிட்டுக்கொண்டு, அதன்பிறகு, அந்த நிலம் இன்னும் எத்தனைவருஷத்தில் ஏருழ விசைவாகுமோ அதற்கேற்றபடி, அநுபந்தத்திலுள்ள ஸ்டேட்மென்டின் இரண்டாவது கலத்தில் கொடுத்திருக்கிற சங்கியைப் பிரமாணத்தை அதற்குப் பிரயோகிக்கவேண்டும். ஆயினும், இந்தக்கால அள

வை எவ்வளவேனும் சரியாகமதிப்பிட முடியாவிட்டால் தீர்வையின் தற்கால விலேமதிப்பை, அதன் மதிப்பிட்ட தொகைக்குப் பேர்பாதியாயிருப்பதாக நிஷ்கரிஷை செய்யலாம்.

6. யாதொரு விஸ்தாரமான பொதுவேலேக்காக நிலம்தேவையாக இருந்தால், பிரதிபலனே முடிவுசெய்வதற்கென்று ஏற்படுத்தப்படும் உத்தியோகஸ்தருக்காகப் பிடிக்கும் செலவை, நிலத்தை எடுத்துக்கொள்வதற்கான மதிப்புக் கிரயத்தில் சேர்த்துக் கணக்கிடவேண்டும். அதனுலுண்டாகிற அதிகச் செலவானது நிலத்தின் கிரயத்துக்காகக் கொடுக்கப்படுகிறதொகை குறைவதனுலும், பிரதிபலனே அதிதுரிசமாய் முடிவுசெய்வதனுல் வட்டியும் இதரமான செலவுகளும் கூடிவருவதனுலும் பெரும்பான்மையாய் நிரவிக்கொண்டுபோகும்.

7. நிலமெடுத்துக்கொள்வதற்காக இவ்வளவு பிடிக்குமென்று மதிப்பிட்ட செலவுத்தொகையானது பிரத்தியேகமாகவாகிலும், நிலம் எந்தக்காரியம் அல்லது ஏற்பாடுக்காகத் தேவையாயிருக்கிறதோ அந்தகாரியம் அல்லது ஏற்பாட்டின் மதிப்புத்தொகையின் பாகமாகவாகிலும் யாதொரு தகுந்த அதிகாரியால் ஜாரிசெய்யப்பட்டு, இது சங்கதி கலெக்ட்டர் அறிந்துகொண்டபிறகு, அவர் சந்தர்ப்பத்திற்கேற்றபடி, ஆக்ட்டின் 6-வது பிரிவின்படி நிலத்தைச் சாஸ்வதமாக எடுத்துக்கொள்ளும்பொருட்டு அவசியமான ட்ராப்ட் டிக்ளரேஷன் என்னும் விளம்பரத்தின் மசோதாவையாகிலும், ஆக்ட்டின் 35-வது பிரிவின்படி நிலத்தை ஸ்வல்பகாலம் அநுபோகிப்பதற்காக உத்தரவு கொடுப்பதற்கான யாதொரு விண்ணப்பத்தையாகிலும், அநுபந்தத்தில் கொடுத்திருக்கிற நமூனுவின் பிரகாரம், அதற்குரிய கவர்ன்மென்ட் ஸெகெர்டேரியட் டிபார்ட்மென்டுக்கு அனுப்பவேண்டும்.

**ஆக்ட்டின்படி செய்வித்தபிறகு நடத்தவேண்டிய நடவடிக்கை.**

8. மேலே பிரஸ்தாபிக்கப்பட்ட டிக்ளரேஷன் என்னும் விளம்பரத்தைப் பஹிரங்கப்படுத்தினபிறகு, ஆக்ட்டில் ஏற்படுத்திருக்கிற நடவடிக்கையை அநுசரிக்கவேண்டும்.

**குறிப்பு.**

நிலத்தை எடுத்துக்கொள்வதாக நேரிடும்போது நிலத்தின் கிரயத்தைப்பற்றி முதலில் போட்டமதிப்பு அதன் பெறுமானத்துக்கு

மிகக்குறைவாயிருக்கிறதாக ஏற்பட்டால், கலெக்ட்டராவது அவருடைய வேலையை நடத்துவதற்கென்று பிரத்தியேகமாய் ஆக்ட்டின் 3-வது, 7-வது பிரிவுகளின்படி நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தராவது அந்த நிலத்துக்காக முதலில் விண்ணப்பம் செய்துகொண்ட உத்தியோகஸ்தனை, அந்த நிலத்தை எடுத்துக்கொள்ளும் விவகாரத்தை முடிவுசெய்துவிடலாமா என்று விசாரிப்பது நல்லதாகும்.

9. தாழ்ந்த உத்தியோகஸ்தர்களுடைய ரிபோர்ட்டுகளை ஆதாரமாகக்கொண்டு கலெக்ட்டர்கள் தீர்மானங்கள் செய்யலாம்; ஆனால், இந்த விவகாரத்தில் சம்பந்தமுடைய நபர்கள் தங்களுக்கு யுக்தமாகத்தோற்றினால் நேரில் வந்து ஹாஜராகக் கூடியவர்களாயிருக்கும்படி, தீர்மானஞ்செய்யப்போகும் தேதியைக்குறித்து அவர்களுக்கு நோட்டிஸ் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

தாழ்ந்த உத்தியோகஸ்தர்களால் ஒழுங்குசெய்யமுடியாத யாதொரு விவாதம் உண்டாகிற பக்ஷத்தில், கலெக்ட்டராவது தகுந்த அதிகாரம்பெற்ற இதரமான உத்தியோகஸ்தராவது அவ்விடத்துக்குப்போய் விவகாரங்களை நேரில் நடத்தவேண்டும்.

10. நிலமெடுத்துக்கொள்வதற்கான ஆக்ட்டின் 17-வது பிரிவு பிரயோகப்படுகிற அவசரமான விஷயங்களில் தவிர, 11-வது பிரிவின்படி தீர்மானம் செய்யப்பட்டபிறகே, ஆக்ட்டின் 16-வது பிரிவில் அநுமதிகொடுத்திருக்கிறபிரகாரம் நிலத்தை ஸ்வாதீனம் செய்துகொள்ளவேண்டும்.

குறிப்பு.

நிலத்தை ஸ்வாதீனம்செய்துகொள்ளும் தேதிக்கும் பிரதிபலனைக்கொடுக்கும் தேதிக்கும் மத்தியிலுள்ள கால அளவில் உண்டாகும் மாசூலின் நஷ்டத்துக்காகப் பிரத்தியேகமாய்ப் பிரதிபலன் கொடுப்பதென்று ஆக்ட்டின் நிபந்தனைகளில் யாதொரு அம்சமுமில்லை. இதுவிஷயத்தில் உள்ளபாத்தியதைக்கு 34-வது பிரிவில் ஏற்பாடுசெய்திருக்கிறது: அதாவது, நிலத்தை அநுபோகிக்கத்தொடங்கும் தேதியிலிருந்து பிரதிபலனைக்கொடுக்கும் தேதிவரையில், முடிவாயிருக்கிற பிரதிபலன் தொகையின்மேல் நூற்றுக்கு 6 வீதமாக வட்டிகட்டிக் கொடுக்கவேண்டுமென்பதாம்.

11. பிரதிபலனைச் செலுத்துகிறவிதம்.

I. ரொக்கமாகக் கொடுப்பது.

ஆக்ட்டின் 11-வது பிரிவின்படி தீர்மானஞ்செய்தவுடனே கலெக்ட்டாராவது தகுந்த அதிகாரம் பெற்ற வேறே உத்தியோகஸ்தராவது பிரதிபலனுக்கு ஹக்குதாரர்களாயிருப்பவர்களில் எவரெவர்கள் நேரிலாகிலும் பிரதிநிதிகள் மூலமாகவாகிலும் அந்நேரம் ஹாஜராகிறார்களோ அவர்களிடத்தில் பைசலான பிரதிபலனைக் கொடுத்துவிடவேண்டும். அப்படி ஹாஜராகாதவர்களுக்கு உடனே தாசில்தாரர் மூலமாகவாவது டெப்புட்டி தாசில்தாரர் மூலமாகவாவது ஒரு நோட்டிஸை அனுப்பவேண்டும். அந்த நோட்டிஸிலே, தீர்மானஞ்செய்திருக்கிற சங்கதியைத் தெரிவிப்பதுமன்றி, குறிக்கப்படுகிற கால அளவுக்குள்ளாக நேரிலாவது தகுந்தபடி அதிகாரங்கொடுக்கப்பட்ட ஏஜென்டின் மூலமாகவாவது, தீர்மானஞ்செய்யப்பட்ட தொகையைப்பெற்றுக்கொள்ளாவிட்டால், அந்தப்பணம் ஆக்ட்டின் 31-வது பிரிவு (2) குறிப்பிட்டபாகத்தின்படி கோர்ட்டில் கட்டிவிடப்படுமென்றுங் காணவேண்டும். ஆக்ட்டின் 45-வது பிரிவில் சொல்லியிருக்கிற விதமாக நோட்டிஸைச் சேர்ப்பிக்கவேண்டும். சேர்ப்பிக்கப்பட்ட நோட்டிஸை யநுசரித்தோ அல்லது வேறுவிதமாகவோ, ஹாஜராயிருக்கிறநபர்கள் கலெக்ட்டர் கொடுப்பதாகச் சொல்வதை ஏற்றுக்கொண்டாலுஞ்சரி, அல்லது தொகையைப்பெற்றுக்கொள்ள அதற்கப்புறம் நேராகவாவது தகுந்த அதிகாரங்கொடுக்கப்பட்ட ஏஜெண்டுகள் மூலமாகவாவது கலெக்ட்டருக்கெதிரில் ஹாஜராலுஞ்சரி, கலெக்ட்டரானவர் அநுபந்தத்திலகண்ட B குறிப்பு நமூனாவின்படி ரசீதைவாங்கிக்கொண்டு கூடுமானால் உடனே ரொக்கமாகப் பணத்தைக் கொடுத்துவிடவேண்டும்; இல்லாவிட்டால் கஜானாவில்பெற்றுக்கொள்ளும்படி உத்தரவுசெய்யவேண்டும். பணம் வாங்கிக்கொள்ள ஒப்புக்கொண்டும் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நபர்கள் ஹாஜராகாவிட்டால், B குறிப்பு நமூனாவின்படியுள்ள கௌண்டர்பாயில் ரசீதை அவார்ட் (தீர்மானஞ்செய்த) ஸ்ட்டேட்மென்டுகளைக்கொண்டு பூர்த்திசெய்து, பணத்தைப்பெற்றுக்கொள்ள வேண்டியவர் கையெழுத்து செய்யவேண்டிய இடத்தைக் காலியாக விட்டுவைத்து, ' க்கு என் எதிரில் பணங்கொடுக்கப்பட்

டது' என்பதை ' க்குப் பணத்தைக் கொடுக்கவும்' என்று மாற்றிவிடவேண்டும். அதன்பிறகு, பணத்துக்கு ஹக்குதாரர்களிடத்தில் அந்தத்தொகையைச் செலுத்தும்பொருட்டு அவர்கள் எந்த ஸப் ட்ரொழரி ஆபிஸருடைய அதிகாரவரம்புக்குள் வசிக்கிறார்களோ அந்த ஆபீஸருக்கு அசல்ரசீதை அனுப்பவேண்டும். இப்படி அவரவர்களுக்குப் பணஞ்செலுத்தும்பொருட்டு பே ஆர்டர்களை அனுப்பும் உத்தியோகஸ்தருக்கு, அந்த ஆர்டர்களை அநுசரித்துக் கொடுக்கப்படும் பணங்களுக்காக ஸப் ட்ரெழரி ஆபிஸரானவர் யாதொருகாலக்கிரமப்படி கணக்கு அனுப்பவேண்டும். கொடுப்பதாகச் சொல்லப்பட்ட பிரதிபலன் தொகையைப் பெற்றுக்கொள்ளாமல் மறுத்தாலுஞ்சரி, அல்லது குறித்தகாலத்துக்குள்ளாகத் தங்களுக்குச் சேரவேண்டியபணங்களைப் பெற்றுக்கொள்ளாவிட்டாலுஞ்சரி, அல்லது ஆக்ட்டின் 31-வது பிரிவு (2) குறிப்பிட்ட பாகத்தில் சொல்லியிருக்கிற வேறே அசந்தர்ப்பங்கள் ஏதாவது நேரிட்டாலுஞ்சரி, அந்தப்பிரிவில் ஏற்படுத்தியிருக்கிற நடவடிக்கையை அநுசரிக்கவேண்டும்: ஏனென்றால், அப்படி அநுசரிப்பதனாலே, 34-வது பிரிவின்படி வட்டி செலவுகள் மேலும் மேலும் ஏறாதபடி நிற்பாடாகும்.

பழைய 1870-ம் வருஷத்து 10-வது ஆக்டின்படி பப்ளிக்வொர்க்ஸ் இலாக்காதாரரால் பொதுவான காரியங்களுக்காக எடுத்துக்கொள்ளப்படும் நிலங்களுக்காகப் பிரதிபலன் கொடுப்பதைக்குறித்தும் அப்படி கொடுக்கப்படுபவைகளை மேற்பரிசோதனை செய்வதைக்குறித்தும் இந்தியா கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட விதிகளானவை அநுபந்தத்தில் காட்டப்பட்டிருக்கின்றன. அந்த விதிகளானவை 1894 - ம் வருஷத்து 1 - வது ஆக்டின் நிபந்தனைகளுக்கும் இந்த ஸ்ட்டாண்டிங் ஆர்டரில் அடங்கியிருக்கிற திட்டங்களுக்கும் முரண்படமேலிருக்கிறமட்டில், கவர்ன்மெண்டைச்சேர்ந்த எந்த டிபார்ட்மெண்டாராவது நிலங்களை எடுத்துக்கொள்ளுகிற விஷயத்திற்கு அவசியமான மாறுதல்களுடன் பிரயோகிக்கப்படத் தக்கவைகளாகும்.

## 11. பணத்தை ரொக்கமாய்க் கொடுப்பதற்குப் பர்த்தியாகப் புதிய நிலமுதலானவைகளைக் கொடுப்பது.

ஆக்ட்டின் 11 - வது பிரிவின்படி தீர்மானஞ்செய்யப்பட்ட ரொக்கப்பணத்தைக் கொடுப்பதற்குப் பர்த்தியாக இதரமான நிலங்களைக் கொடுப்பதென்றாவது பேரீஜைத் தள்ளுபடி செய்வதென்றாவது அஸெஸ்மெண்டை ஒப்படை செய்வதென்றாவது பிரதிபலனுக்கு ஹக்குதாரர்களாகிய நபர்களுடனே ஏற்பாடு செய்யவாகிலும், அப்படிப்பட்ட நபர் ஜமீன்தாரர் அல்லது இனும்தாரராக இருக்கிற பக்ஷத்தில், சந்தர்ப்பத்துக்கேற்றபடி, பேஷ்கஷ் அல்லது க்விட்ரெண்டாக குறைக்க ஏற்பாடுசெய்யவாகிலும் கலெக்ட்டருக்காயினும் 3-வது, 7-வது பிரிவுகளின்படி தகுந்த அதிகாரம்பெற்ற வேறு உத்தியோகஸ்தருக்காயினும் ஆக்ட்டின் 31-வது பிரிவைச்சேர்ந்த 3-வது, 4-வது உட்பிரிவுகளின்படி அதிகாரமுண்டு. எடுத்துக்கொள்ளப்பட்ட நிலத்துக்கு நபரானவர் பூரணபாத்தியதை யில்லாதவராய், அந்த நிலத்தைக்குறித்துக் கன்ட்ராக்ட் செய்யத்தகுதியில்லாதவராகவாவது சிறிதுமட்டில் தகுதியுள்ளவராகவாவது (எப்படியென்றால் தேவஸ்தான ட்ரஸ்ட்டியாக) இருக்கிறபக்ஷத்தில், ரொக்கமாய்ப் பணஞ்செலுத்துவதற்குப் பர்த்தியாக மேலேசொல்லப்பட்ட ஏற்பாடுகளில் யாதொன்றைச் செய்வதற்குப் பிரதேச கவர்ன்மெண்டாருடைய அநுமதியைப்பெற்றுக் சொள்ளவேண்டும். 31-வது பிரிவின் 4-வது உட்பிரிவைச்சேர்ந்த மற்றவிஷயங்களில் அப்படிப்பட்ட அநுமதி அவசியமில்லை: அந்த விஷயங்களைக்கலெக்ட்டராவது வேறே உத்தியோகஸ்தராவது தம்முடைய சொந்த அதிகாரத்தின் மேல் பைசல் பண்ணலாம். ஆயினும், அப்படிப்பட்ட விஷயங்களடங்கிய யாதொரு ரிபோர்ட்டை, போர்டாருக்குச் சங்கதி தெரியும்பொருட்டு, அநுபந்தத்தில் கண்டிருக்கிற நமூனாவின்பிரகாரம் அனுப்பவேண்டும். அப்படியனுப்புவதில் அந்த விஷயங்கள் எந்த சவுர அரைவருஷத்திற்குச் சம்பந்தப்பட்டவைகளோ அந்த அரைவருஷம் முடிந்ததுமுதல் ஒருமாதத்திற்குள்ளாகப் போர்டாரிடம் சேரும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

12. பிரதிபலனாகிற பணத்துக்குப் பர்த்தியாகப் புதுநிலங்கள் கொடுக்கப்படுகிற விஷயத்தில், எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்க

ளின் ஊர் விலையானது எந்த கோட்பாடுகளை அநுசரித்துக் கணக்கிடப்பட்டதோ அந்த கோட்பாடுகளை அநுசரித்தே அந்தப்புது நிலங்களின் பெறுமான கிரயத்தைச் சாதாரணமாய்க் கணக்கிடவேண்டும். பரிவர்த்தனம் செய்வதைக்குறித்து ஏற்பாடு பண்ணுகையிலே, கலெக்ட்டரானவர் யாருக்காக ரொக்கபிரதிபலன் தீர்மானிக்கப்படுகிறதோ அந்த நபருடனே மாத்திரம் சாதாரணமாய் விவகாரம் நடத்தவேண்டும்; நிலத்தைத் தெரிந்தெடுக்கிற விஷயத்திலே நியாயமான கால அளவில் (கொடுப்பதாகச் சொல்லப்பட்ட தேதியிலிருந்து, ஆறுமாதகாலமென்று வைத்துக்கொள்வோம், யாதொரு ஏற்பாடு செய்யமுடியாவிட்டால், தீர்மானஞ்செய்யப்பட்டிருக்கிற ரொக்க பிரதிபலனை வாங்கிக்கொள்ளும்படி நபருக்கு அநுமதிகொடுக்க வேண்டும். பரிவர்த்தனமாக நிலங்களைக்கொடுப்பதிலே, மற்ற விவகாரங்களில் சாதாரணமான தர்க்காஸ்து விதிகளின்படி கொடுக்கப்படும் நிலங்களைமாத்திரம் கொடுக்கவேண்டும். அதனால் குடியிருக்கிற ரயத்துகளுக்கு உள்ளபடி நியாயமாய் வேண்டியிருப்பவைகளுக்கு யாதொருபாதகம் உண்டாகுமென்று கலெக்ட்டருக்குத் திருப்திகரமாய்த் தெரியவருகிற விஷயங்களில் தவிர மற்றப்படி, விதிகளின் பிரகாரம் ஏற்பட்டிருக்கிற முன்னதாய்ப் பாவிக்கத்தக்க சிலாக்கியமான உரிமைகளை அநுசரிக்கவேண்டியதில்லை.

13. அநுபோகத்திலுள்ள நிலத்தின் அஸெஸ்மென்டை பிரதிபலனுக்குப் பர்த்தியாக கொடுப்பதென்று ஏற்பாடு செய்கிற பக்ஷத்தில், முன்னதாக நிலங்களின் அநுபோகதாரர்களுடைய சம்மதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

14. பிரதிபலனுக்குப் பர்த்தியாக பேஷ்கஷ் அல்லது க்விட்ரென்டை குறைப்பதானல், எந்த ரொக்கத்தொகைக்குப் பர்த்தியாக அவ்வாறு தள்ளுபடி செய்யப்படுகிறதோ அந்த ரொக்கத்தொகையின் பதினைந்தில் ஒருபாகத்தைத் தள்ளுபடி செய்யவேண்டும்.

15. யாதொரு ஜமீன்தாரர் வசத்திலாவது இனம்தாரர் வசத்திலாவது இருக்கிற நிலத்தின் பாகங்கள் பொதுவான காரியங்களுக்குத்தேவையாயிருந்தால், எடுத்துக்கொள்ளப்பட்ட நிலத்துக்காகப் பிரதிபலன் பெறுவதோடுகூட சொந்தக்காரர்-அவருடைய மொத்தமான பேஷ்கஷ் அல்லது க்விட்ரென்டில் அளவுக்கேற்றபடி தள்ளு

படி செய்யப்பெறுவதற்கும் அர்ஹராவார். பூஸ்திதியின் மொத்தத் தீர்வைக்கு பேஷ்கஷ் அல்லது க்விட்ரென்ட் எவ்வள விருக்கிறதோ அந்த சங்கியாப் பிரமாண அளவாகவே, கைக்கொள்ளப்பட்ட நிலத்தின் தீர்வைக்குத் தள்ளுபடி செய்யப்பட்ட தொகை இருக்கவேண்டும்.

### பொதுவான திட்டங்கள்.

16. முடிவு செய்யப்பட்ட பிரதிபலன் தொகையானது 50-ரூபாய்க்கதிகப்படாத சந்தர்ப்பங்களில் தவிர, நிலமெடுத்துக்கொள்வதைக்குறித்த ஆக்ட்டின் 11-வது பிரிவின்படி கலெக்ட்டர்களால் செய்யப்பட்ட தீர்மானங்களானவை எப்போதும் ரெஜிஸ்டடர் செய்யப்பட வேண்டும். கவர்ன்மென்டார் நிலவுரிமையைக் கிரகிக்கிற விஷயத்தில் மூன்றுவது நபர்கள் மோசஞ்செய்யவொட்டாமல் தவிர்ப்பதே ரெஜிஸ்ட்ரேஷன் செய்தவன் கருத்தாகையால், ஆக்ட்டின் 3-வது, 4-வது பாகங்களின்படி செய்யப்பட்ட ரெபெரென்ஸ்களின் மேல் கோர்ட்டார்செய்யும் உத்தரவுகளை ரெஜிஸ்ட்ரேஷன்செய்வது அநாவசியமாம். எல்லா விஷயங்களிலும், அவசியமான திருத்தங்களைக் கிராமக்கணக்குகளிலும் செய்யவேண்டும்.

17. லோகல் போர்ட்டுகளுக்காவது மியுனிஸிபாலிடிகளுக்காவது தேவையான நிலங்களைக்குறித்த உத்தரவுகள் 12 - A குறிப்பு ஸ்ட்டாண்டிங்க் ஆர்டரின் 2-வது, 7-வது, 8-வது பாராககளில் காணப்படும்.

18. பொதுவான காரியங்களுக்காகத் தேவையான நிலங்களைக்கைக்கொள்ளுவதில் செய்யப்பட்டவிருத்தியையும், அதற்காகக் கொடுத்த பிரதிபலனையும் அநுபந்தத்திற் கண்டிருக்கிற நமூனுக்களின் பிரகாரம் காட்டுவதான ஸ்ட்டேட்மென்டுகளைக் கலெக்ட்டர்கள் சவுரவருஷத்தின் பிரதிபாகிஷூத்திற்காகவும் முறையே ஜூலைமீ 31வுக்கும் ஜனவரிமீ 31வுக்கும் மேற்படாமல் போர்ட்டாருடைய ஆபீஸில்போய்ச் சேரும்படியாக அனுப்பவேண்டும். இந்த ஸ்ட்டேட்மென்டுகளில் இரண்டாவதுடனே, அகாவது, டிஸெம்பர்மீ 31வுயோடு முடிவாகிற கால அளவுக்காக அனுப்பப்பட்ட ஸ்ட்டேட்மென்டுடனே, 1888ஷூ பிப்ரவரிமீ 7வு 118-ம் நம்பர் போர்டாருடைய நடவடிக்கையுடனே தெரிவிக்கப்பட்ட 1888ஷூ ஜனவரிமீ

7வ (பலவகையான) 84-ம் நம்பர் கவர்ன்மென்ட் உத்தரவினுல் சிறிதுமட்டில் மாற்றப்பட்டிருக்கிற அதே மாதிரியாக சவுரவருஷ முழுமைக்கும் நடந்த விவகாரங்களின் மொத்தத்தைக் காட்டும் இரண்டு அப்ஸ்ட்ராக்ட் ஸ்ட்டேட்மென்டுகளை அனுப்பவேண்டும். அதன் மேல், போர்டார் இவைகளையெல்லாம் ஒன்முய்த்தொகுத்து வருஷாந்தர ஸ்ட்டேட்மென்டைக் கவர்ன்மென்டுக்கு அனுப்பவேண்டும்.

## விட்டு விடுவது.

19. பொதுவான காரியங்களுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்கள் பின்னுல் விட்டுவிடப்படும்போது அவைகளை அடியிற்கண்டபடி பைசல் பண்ணவேண்டும்:—

I. நிலங்களானவை பிரதமத்தில் ரயத்துவார் ஸ்வதந்தர ஏற்பாட்டின்படி வைத்துக்கொள்ளப்பட்டிருந்தால், அக்கம்பக்கத்தில் அதுபோன்ற நிலங்களின் விற்பனைக்கிரயத்தை அநுசரித்து நிஷ்கரிஷை செய்யப்பட்ட யாதொரு சரியான கிரயவீதப்படி அந்த நிலங்களைப் பிரதம சொந்தக்காரர்களுக்குப் பட்டாவின்மேல் கொடுப்பதாகச்சொல்லவேண்டும்.

II. நிலங்களானவை பிரதமத்தில் இனும் அல்லது ஜமீன்தாரியாகவும், அவைகளின் அநுபோக ஸ்வதந்தரம் பாயக்காரிகளுடையதாகவுமிருந்தால், அப்படிப்பட்ட ஸ்வதந்தரங்களின் தற்கால ஊர் விலைகளைக்கொடுத்துத் தங்களுடைய பழைய ஸ்வதந்தரங்களை மறுபடியும் கைக்கொள்ள இஷ்டமுண்டாயென்று சொந்தக்காரர்களையும் பாயக்காரிகளையும் கேட்கவேண்டும். பாயக்காரிகளுக்குத் தங்கள் பழைய ஸ்வதந்தரத்தைப் பெற்றுக்கொள்ளப் பிரியமில்லாவிட்டால் காணியாட்சி ஸ்வதந்தரமும், பாயக்காரி ஸ்வதந்தரம் ஆகிய இரண்டையும் அதே ஏற்பாடுகளின்படி சொந்தக்காரர்களுக்கே கொடுக்கலாம். ஆயினும் பாயக்காரிகளுக்கு நிலங்களில் பிரத்தியேகமாக அநுபோக ஸ்வதந்தர மில்லாவிட்டால், அந்த நிலங்களின் கிரயத்தைக் கட்டுவதன்மேல் அந்த ஸ்வதந்தரங்களைச் சொந்தக்காரர்களுக்கே மீண்டும் கொடுத்துவிடவேண்டும். எந்தவிதத்திலும், நிலங்களையெடுத்துக்கொண்டபோது, சங்கியாப் பிரமாணப்படி வஜா செய்யப்பட்டிருந்திருக்கும் பேஷ்கஷ் அல்லது க்விட்ரென்டை மறுபடியும் விதிக்கவேண்டும்.

III. மேற்சொல்லப்பட்ட ஏற்பாடுகளுக்குப்பிரஸ்தாபசொந்தக்காரர்கள் அல்லது காணியாட்சிக்காரர்கள் சம்மதிக்காவிட்டால், வருஷவாரித்தீர்வை கட்டித்தீரவேண்டுமென்றுசெப்பி, இவ்வளவென்று குறைந்த கிரயமேற்படுத்தாமலே அந்த நிலங்களைப் பஹிரங்கமான ஏலத்தில் விற்பனை செய்யவேண்டும்.

1894-ம் ௵ ஸெப்டெம்பர் ௴ 1௳ 370-ம் நம்பர்

போர்டாருடைய நடவடிக்கை.

1894-ம் ௵ அக்டோபர் ௴ 30௳ 755-ம் நம்பர் கவரன்மெண்ட் உத்தரவு.

---

11-ம் நம்பர் ஸ்ட்டாண்டிங் ஆர்டர் 5-வது பாரா,

(3) (b) (iii) குறிப்பிட்ட உட்பிரிவு.

**தீர்வையின் தற்காலமதிப்பை நிஷ்கரிஷைசெய்வதற்கான விதங்கள்.**

| உத்தேசம் எத்தனைவருஷத்தில் நிலம் பயிரிட உதவும்போவிருக்கிறதென்பது. | தீர்வையின் தற்கால மதிப்பானது மதிப்பிட்ட தீர்வையில் எவ்வளவுக் கெவ்வளவாக இருக்கிறது. |
|---|---|
| 1 வருஷமுதல் 2 வருஷம்வரையில் | ... 9. |
| 2 ஷை 4 ஷை | ... 8. |
| 4 ஷை 6 ஷை | ... 7. |
| 6 ஷை 9 ஷை | ... 6. |
| 9 ஷை 12 ஷை | ... 5. |
| 12 ஷை 16 ஷை | ... 4. |
| 16 ஷை 21 ஷை | ... 3. |
| 21 ஷை 28 ஷை | ... 2. |
| 28 ஷை 40வரையிலும் அதற்கு மேற்பட்டும் | 1. |

11-நம்பர் ஸ்டாண்டிங் ஆர்டர் 7-வது பாரா.

1894-ம் ௵த்து I-வது ஆக்ட்டின் 6-வது பிரிவின்படி, பின்வருகிற ஷெட்யூலில் காட்டியிருக்கிற ஏகரா அளவுள்ள (ஏறக்குறைய இருந்தாலும் சரிதான்) நிலமானதுயாதொரு பொதுவானகாரியத்துக்கு, அதாவது, க்காகத் தேவையாயிருக்கிறதென்றும், ஆக்ட்டின்பிரகாரம் கலெக்டர்செய்யவேண்டிய கடமைகளைச் செய்வதற்காக அதே ஆக்ட்டின் 3-வது, 7-வது பிரிவுகளின்படி நியமிக்கப்பட்டு, ஷை

நிலத்தைக் எடுத்துக்கொள்வதற்காக உத்தரவுபெற்றுக்கொள்ளும்படி திட்டஞ்செய்யப்பட்டிருக்கிறாரென்றும் ஆலோசனை சபையிலுள்ள மஹாகனம்பொருந்திய கவர்னரவர்கள் இதனால் அறிக்கை செய்கிறார்கள்.

---

11-ம் நம்பர் ஸ்ட்டாண்டிங் ஆர்டர், 11-வது பாரா.

**பொதுவான காரியங்களுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்களுக்காகப்பிரதிபலன் கொடுப்பதைக்குறித்து இந்தியாகவரன்மென்டாரால் பிறப்பிக்கப்பட்ட விதிகள்.**

1. அந்தந்த காலத்தில் வழங்கிவருகிற இலாகா விதிகளின்படி எஸ்டிமேட் (மதிப்பு) முதலானவைகளைக்குறித்து அவசியமான பீடிகா காரியங்களைத் தக்கபடி நடத்தினபிறகு, நிலமானது - கலெகட்டராலாவது, ஆக்ட்டின்படி கலெக்ட்டருடைய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு பப்ளிக் ஒர்க்ஸ் இலாகாதாரருடைய வசத்தில் விடப்பட்டிருக்கிற யாதொரு பிரத்தியேகமான உத்தியோகஸ்தராலாவது எடுத்துக்கொள்ளப்படும்; இந்த இரண்டு விஷயங்களிலும் நடவடிக்கை வித்தியாசப்படுகின்றது.

2. ஆக்ட்டின்படி கலெக்ட்டருடைய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டும், இந்த வேலைக்கென்றே நியமிக்கப்பட்டும் பப்ளிக் ஒர்க்ஸ் இலாக்காதாரருடைய வசத்தில் விடப்பட்ட உத்தியோகஸ்தர்கள் பப்ளிக் ஒர்க்ஸ் டிஸ்பர்ஸர்களாக எண்ணப்படுகிறார்கள்; மேலும், அவர்கள்-ஸிவில் அக்கௌன்ட் கோட் 24-ம் அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறபடிக்கான எக்ஸிக்யூட்டிவ் எஞ்சினியர்களைப் போலவே பணத்தொகைகள் (பண்டுகள்) சர்ப்பரா செய்யப்படுவார்கள். அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்கள் பின்வருகிற நடவடிக்கையை அநுசரிக்கவேண்டும்.

3. நிலத்துக்குப் பாத்தியத்தை யுடையவர்கள் பிரதிபலன் தொகைக்குச்சம்மதித்து ஆக்ட்டின் 14-வது பிரிவின்படி தீர்மானம் செய்யப்பட்டபிறகு, அந்த உத்தியோகஸ்தரானவர் தீர்மானத்தின் படி பிரதி நபருக்கும் கொடுக்கவேண்டிய தொகைகளைக் கட்டுவதாய் அநுபந்தத்திற்கண்ட (A குறிப்பு செய்திருக்கிற) நமூனாவின்படி யாதொரு ஸ்ட்டேட்மென்டைத் தயார் செய்விக்கவேண்டும்: மே

லும், அவர் தீர்மானஞ் செய்யப்படுகிற தேதியிலே, அந்த ஸ்ட்டேட் மென்டின் ஒரு பிரதியில் கையெழுத்துசெய்து பிரஸ்தாப டிவிஷன் எக்ஸிக்யூட்டிவ் எஞ்சினியர் மூலமாக, தாம் யாரோடு கணக்கு விவகாரம் நடத்துகிறாரோ அந்த பப்ளிக் ஓர்க்ஸ் அக்கௌன்ட்ஸ் எக்ஸாமினருக்கு அனுப்பவேண்டும்: அந்த எக்ஸிக்யூட்டிவ் எஞ்சினியர் அந்த ஸ்ட்டேட்மென்ட்டின் 9-வது கலத்தைப் பூர்த்திசெய்து அதை எக்ஸாமினருக்கு அனுப்பவேண்டும். கவர்ன்மென்ட் ரெயில்வேக்களுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்களின் விஷயத்தில் அந்த ஸ்ட்டேட்மென்ட்டை ரெயில்வேக்களைப்பற்றிய கன்ஸல்டிங்க் எஞ்சினியர் மூலமாக அனுப்பவேண்டும். அந்தப்பிரதியில் கையெழுத்து போடுவதற்கு முன்னமே அந்த உத்தியோகஸ்தரானவர் - தீர்மானத்தின்படி கொடுக்கவேண்டிய தொகைகளை அதில் சரியாகக் காட்டியிருக்கிறதா யென்று கவனமாய்த் திருப்திகாரமாகத் தெரிந்து கொள்ளவேண்டும்: அல்லாமலும், ஸ்ட்டேட்மென்டின் 6-வது கலத்தின் மொத்தத்தை அசலிலும் நகலிலும் தாமே எழுத்தால் எழுத வேண்டும்.

4. தீர்மானத்தின்படி சேரவேண்டிய தொகைகளைக் கொடுக்கையிலே பணங்கொடுக்கப்படுகிற பிரதி நபருடைய ரசீதையும் உத்தியோகஸ்தரானவர் - அநுபந்தத்திற்கண்ட (B குறிப்பு செய்திருக்கிற) நமூனாவின்படி யாதொரு பிரத்யேகமான வௌச்சர் மூலமாக எழுதி வாங்கவேண்டும்; அதில், முந்திய பாராவிலே சொல்லப்பட்ட ஸ்ட்டேட்மென்டில் அந்த நபருக்குக்கொடுக்கவேண்டிய தொகையைக்காட்டுவதற்கான அம்சத்தின் பிரஸ்தாபம் அடங்கியிருக்க வேண்டும். பணங்கொடுக்கிற தேதியையும் அந்த வௌச்சரில் பதிவுசெய்யவேண்டும். உத்தியோகஸ்தரானவர் - தொகைகள் கொடுக்கப்பட்ட மாதத்தின் கணக்கை, யாரோடு தாம் கணக்கு விவகாரம் நடத்துகிறாரோ அந்த பப்ளிக் ஓர்க்ஸ் அக்கௌன்ட் எக்ஸாமினருக்கு அனுப்பும்போது தொகைகளைப் பெற்றுக்கொண்டவர்களுடைய ரசீதுகளையும் கூட அனுப்பவேண்டும்.

5. தீர்மானம் செய்த தேதிமுதல் ஒரு வருஷ காலத்திற்குள் பணத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டிய நபர்கள் பணத்தைப் பெற்றுக்கொள்ள ஹாஜராகாவிட்டால், அவர்களுக்குக் கொடுக்கவேண்

டிய தொகைகளை, ரெவினியு டிப்பாசிட்டாகக் கஜானுவிலே கட்டி வைத்து, (C குறிப்பு செய்திருக்கிற) பின்வரும் நமூனுவின்படி உறுதிச்சீட்டு ஏற்படுத்தி வைக்கலாம். ஆயினும், டிப்பாசிட்டாகக் கஜானுவில் பணத்தைச்கட்டிவைப்பதைக் கூடியமட்டில் தவிர்க்கும்படி, பணத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டியவர்கள் பணத்தைப்பெற்றுக் கொள்வதற்கு ஆஜராகும்படியான பிரதி பிரயத்தனத்தையும் செய்யவேண்டும். பணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியவர்கள் டிப்பாசிட்டாக வைத்திருக்கிற தொகைகளைக்கொடுக்கும்படி கடைசியில் கேட்கும்போது சாதாரணமான ரெவினியு டிப்பாசிட்டுகளைப் போலவே அந்தத்தொகைகளைக்கலெக்ட்டருடைய அதிகாரம்பெற்று அவர்களிடத்தில் கொடுத்துவிடவேண்டும்.

6. கொடுப்பதாகச் சொல்லப்பட்ட பிரதிபலனை அதற்குரிய நபர்கள் சம்மதித்து ஏற்றுக்கொள்ளாத காரணத்தினாலே, அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய தொகைகள் ஆக்டின் III-வது பாகத்தைச்சேர்ந்த நிபந்தனைகளின்படி கோர்ட்டாரால்செய்யப்பட்ட தீர்மானத்தினால் முடிவாகுமாகில், கோர்ட்டாருடைய தீர்மானம் இன்னதென்று விசாரித்தறிந்தவுடனே, ஸ்பெஷல் ஆபீஸரானவர் - தீர்மானத்தின்படி செலுத்தவேண்டிய தொகைகளைக் காட்டுவதற்கான A குறிப்பு நமூனுவின்படி ஒரு ஸ்டேட்மென்டைத்தயார்செய்து, 3-வது பாராவில் சொல்லியிருக்கிற பிரகாரம், அதன் ஒரு நகலை சந்தர்ப்பத்துக்கேற்றபடி எக்சிக்யூட்டிவ் எஞ்சினியர் மூலமாகவாவது ரேயில்வேக்களைப்பற்றிய கன்சல்டிங்க எஞ்சினியர் மூலமாகவாவது எக்ஸாமினருக்கு அனுப்பவேண்டும். அப்படிப்பட்ட தீர்மானத்தின்படி கொடுக்கவேண்டிய தொகைகளைக்கொடுக்கையிலே, அந்த உத்தியோகஸ்தானவர்-பணங்கொடுக்கப்பட்ட பிரதி நபரிடத்திலிருந்து B குறிப்பு நமூனுவின் பிரகாரம் ஒரு ரசீது வாங்கிக்கொள்ள வேண்டும்; அல்லது, பணத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டிய நபர்கள் தீர்மானஞ்செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒருவருஷகாலத்துக் குள்ளாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள ஆஜராகாவிட்டால், C குறிப்பு நமூனுவின்பிரகாரம் கஜானு உத்தியோகஸ்தரிடத்திலிருந்து யாதொரு ரசீதை வாங்கிக்கொள்ளவேண்டும்: சற்று முன்னே பிரஸ்தாபிக்கப்பட்ட ஸ்டேட்மென்டில் கொடுக்கவேண்டிய தொகையைக்காட்

டுவதற்கான பதிவின் பிரஸ்தாபம் அந்த ரசீதில் அடங்கியிருக்கவேண்டும். எந்த மாதத்தில் தொகைகள் கொடுக்கப் படுகின்றனவோ அந்த மாதத்துக் கணக்குகளை பப்ளிக் ஒர்க்ஸ் அக்கௌன்ட்ஸ் எக்ஸாமினருக்கு அனுப்பும்போது அந்த ரசீதுகளையும் ஷை உத்தியோகஸ்தர் அனுப்பவேண்டும்.

7. பணத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டியவர்கள் எந்த கிராமத்துக்குரியவர்களோ அந்த கிராமத்திலாவது அதன் சமீபத்திலாவது அவர்களுககுச் சேரவேண்டிய பணத்தைச்சேர்க்கத் தம்மாலியன்றமட்டில் ஸ்பெஷல் ஆபீஸரானவர் ஏற்பாடு செய்யவேண்டும். இதனால், பணத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டியவர்கள் ஆஜராவது அதிக சுலப சாத்தியமாகும்; ஆகவே, 5-வது பாராவின்படி டிப்பாசிட்டில் வைக்கவேண்டியதொகைகளின் சங்கியையும் குறைவாகும்.

8. சிவில் கோர்ட்டாருக்கு ரெபரென்ஸ் செய்யப்பட்டு, ஸ்பெஷல் ஆபீஸர் தமக்கென்று நியமிக்கப்பட்ட வேலைகளினின்றும் விடுதலை செய்யப்படுகிறவரையில் கோர்ட்டார் தீர்மானஞ்செய்யாதிருக்கிற யாதொரு விஷயத்திலே, தீர்மானத்தின்படி சேரவேண்டியிருக்கிற தொகைகளை கலெக்ட்டர் கொடுக்கவேண்டும். அப்படி செய்வதில் கலெக்ட்டரானவர், சிவில் கோர்ட்டில் தாமே ரெபெரென்ஸ் செய்தாற்போல, கீழே 9-வது, 10 வது பாராக்களில் சொல்லியிருக்கிற நடவடிக்கையை அநுசரிக்கவேண்டும்.

9. நிலமானது கலெக்ட்டராலாவது அவர்கென்று நியமிக்கப்படாத வேறே யாதொரு சிவில் உத்தியோகஸ்தராலாவது எடுத்துக்கொள்ளப்பட்டால், அந்த கலெக்ட்டராவது சிவில் உத்தியோகஸ்தராவது பப்ளிக்வொர்க்ஸ் டிஸ்பர்ஸர் ஆகமாட்டார்: ஆனால், அவர் தம்மாலாவது ஸிவில்கோர்ட்டாராலாவது செய்யப்பட்ட தீர்மானத்தின்படி கொடுக்கவேண்டிய தொகையை ஸிவில் கஜானாவிலிருந்து வாங்குகிறார். அப்படிப்பட்ட கலெக்ட்டராவது ஸிவில் உத்தியோகஸ்தாவது தாமே தீர்மானஞ்செய்தவுடனேயாகிலும், ஸிவில் கோர்ட்டாரால் யாதொரு தீர்மானஞ்செய்யப்பட்டதென்று விசாரித்தறிந்தவுடனேயாகிலும், கொடுக்கவேண்டிய தொகைகளைக்காட்டுவதற்கான A குறிப்பு நமூனாவின்படி ஸ்டேட்மெண்டைத் தயார்செய்து, 3-வது, 6-வது பாராக்களில் சொல்லியிருக்கிறபிரகாரம் அதன்

பிரதியொன்றைச் சந்தர்ப்பத்துக்கேற்றபடி, எக்ஸிக்யூட்டிவ் எஞ்சினியர் மூலமாகவோ அல்லது ரெயில்வேக்களைப்பற்றிய கன்ஸல்டிங்க் எஞ்ஜினியர் மூலமாகவோ அதுவிஷயத்தில் சம்பந்தப்பட்ட பப்ளிக் வொர்க்ஸ் அக்கவுன்ட்ஸ் எக்ஸாமினருக்கு அனுப்பவேண்டும்.

10. தீர்மானத்தின்படி சேரவேண்டியிருக்கிறதொகைகளைக் கொடுக்கையிலே, கலெக்ட்டரானவர் பணங்கொடுக்கப்பட்ட பிரதிநபரிடத்திலிருந்தும் B குறிப்பு நமூனுவின்படி ரசீதை வாங்கிக்கொள்ளவேண்டும்: பணங் கொடுக்கப்பட்டவனுக்குச் சேரவேண்டிய தொகையைக் காட்டுகிற தீர்மானத்திலுள்ள பதிவின் பிரஸ்தாபம் அந்த ரசீதில் அடங்கியிருக்கவேண்டும். இந்த ரசீதுகள் தொகைகளைக் கொடுத்ததற்காகக் கஜானு உத்தியோகஸ்தருடைய வௌச்சர்களாகும்; அவைகளை அவர் அந்தந்த மாதக்கணக்குகளுடனே அந்தந்த ராஜதானியின் அக்கௌன்டன்ட் ஜெனரலுக்கு அனுப்பவேண்டும். அவர் அவைகளை வழக்கப்படி பப்ளிக்வொர்க்ஸ் அக்கவுன்ட்ஸ் எக்ஸாமினருக்கு அனுப்பிவிடுவார். பணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியநபர்கள் தீர்மானஞ்செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருஷகாலத்துக்குள்ளாகப் பணத்தைப்பெற்றுக்கொள்ள ஹாஜராகாவிட்டால், அந்தத்தொகைகளை ரெவின்யு டிப்பாஸிட்டில் வைத்து, 5-வது விதியில் ஏற்படுத்தியிருக்கிற பிரகாரம் C குறிப்பு நமூனுவின்படி ரசீதுகளை வாங்கிக்கொள்ளலாம்.

11. தீர்மானத்தைப் பற்றியாவது தீர்மானத்தைக் குறித்த ஸ்ட்டேட்மென்டைப் பற்றியாவது கஜானு உத்தியோகஸ்தருக்கு யாதொரு விசாரமுமில்லை; கலெக்ட்டருடைய அதிகாரத்தையாவது, பிரதிபலனை ஏற்படுத்தும் இதரமான உத்தியோகஸ்தருடைய அதிகாரத்தையாவது அநுசரித்து அவர்தொகைகளைக் கொடுக்கிறார், கலெக்ட்டரானவர் பணத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டிய பிரதிநபருக்குச் சேரவேண்டிய தொகையைத் தனித்தனியாகவும் வாங்கலாம், அல்லது தீர்மானத்தின்படி ஏற்படுகிற மொத்தத்தொகையைத் தாமே ரசீதுகொடுத்து அட்வான்ஸாகவும் வாங்கலாம். தனித்தனியாக வாங்குகிறபக்ஷத்தில், B குறிப்பு நமூனுவின்படியுள்ள ரசீதில் அவர்மேற் கையெழுத்துசெய்து, 'ரொக்கமாக / செக்காக' என்

னெதிரில் கொடுக்கப்பட்டது' என்பதை 'கொடு' என்பதாகமாற்றி பணத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டியவருக்குப் பணத்தைக் கஜானுவில் கொடுக்கும்படி செய்யவேண்டும்: பணத்தை அட்வான்ஸாக மொத்தத்தொகையாய் வாங்குகிறபக்ஷத்தில், தொகைகளைக்கொடுத்துவிட்டபிறகு, பணத்தைப் பெற்றுக்கொண்டவர்களுடைய ரசீதுகளைக் கஜானு உத்தியோகஸ்தரிடம் அட்வான்ஸுக்கு ஒத்திட்டுப் பார்க்கும்பொருட்டு அனுப்பவேண்டும். பணத்தைத் தனித்தனியாக வாங்குகிறவிஷயத்தில், பணங்கொடுக்கும்படி ஜாரி செய்யப்பட்ட நமூனுக்களின் அட்வைஸ் ஜாபிதா ஒன்றைக் கஜானு உத்தியோகஸ்தருக்கு அனுப்பவேண்டும்; தம்முடைய வரிசைக்கிரமப்படி அவர் பணங்கொடுக்கப்பட்ட ஆர்டர்களின் அட்வைஸை வாரந்தோறும் அனுப்பவேண்டும்.

12. யாதொரு ஸ்பெஷல் ஆபிஸரால் பணங்கொடுக்கப்பட்டிருந்தாலுஞ்சரி, கலெக்ட்டரால் (அல்லது இதரமான ஸிவில் உத்தியோகஸ்தரால்) கொடுக்கப்பட்டிருந்தாலுஞ்சரி, இதை பப்ளிக்வொர்க்ஸ் அக்கவுண்ட்ஸ் எக்ஸாமினர் பரிசோதனை (ஆடிட்) செய்கையிலே, பணங்கொடுக்கப்பட்ட பிரதி அமிசத்துக்கும் B அல்லது C குறிப்பு நமூனுவின்படி யாதொரு ரசீது ஆதாரமாக இருக்கிறதா என்றும், அப்படிப்பட்ட ரசீதின் முகாந்தரமாகக் கொடுக்கப்பட்ட தொகையானது ஸ்ட்டேட்மெண்டுகளில் காட்டியிருக்கிற பிரகாரம் தீர்மானத்தின்படி பணம் பெற்றுக்கொள்ளவேண்டியவருக்குக் கொடுக்கவேண்டிய தொகைதானு என்றும் பார்க்கவேண்டும். இதற்காக, முன்சொல்லிய உத்தரவுகளின்படி, ஸ்ட்டேட்மெண்டுகளின் பிரதிகளை அவர் வரப்பெற்றிருப்பார்.

13. வௌச்சர்களைப் பெற்றுக்கொள்ளும்போது எக்ஸாமினரானவர் (A குறிப்பிட்டநமூனு) அவார்ட் (தீர்மான) ஸ்ட்டேட்மென்டின் 8-வது கலத்தில் பதிவுகளைப் பூர்த்திசெய்யவேண்டும். பணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியவருக்குப் பணங்கொடுத்ததையாவது, கஜானுவில் டிப்பாஸிட்டின்மேல் கட்டினதையாவது காட்டும் வௌச்சர்களையெல்லாம் வரப்பெற்றுக்கொண்டபிறகு, அவர் A குறிப்பு நமூனுவின்படி பூரணமான ஸ்ட்டேட்மென்டின் பிரதியொன்றைப் பிரதானரெவினியு அதிகாரிக்கு அனுப்பவேண்டும். இதனேடு

எக்ஸாமினருடைய ஆடிட் (பரிசோதனை) பூர்த்தியாகிவிடுகிறது. பிரதிபலன் தொகையை ஏற்படுத்தும் அல்லது கொடுக்கும் உத்தியோகஸ்தர்களிடத்திலிருந்துவரும் இதரமான அல்லது இன்னும் அதிகமான எவ்விதகணக்குள் அல்லது ரிபோர்ட்டுகளும், மேலே சொல்லப்பட்ட 5-வது, 10-வது விதிகளின்படி டிப்பாஸிட்டாக வைக்கப்பட்டதொகைகளைக் கொடுப்பதைக்குறித்த எவ்வித ரிபோர்ட்டுகளும் எக்ஸாமினருக்கு அனுப்பப்படாமலே பிரதானரெவினியு அதிகாரியால் பைசல் பண்ணப்படும்.

14. மிலிட்டெரிவொர்க்ஸ் இலாக்காவின்பொருட்டு நிலத்தை எடுத்துக்கொண்டு, அந்தக்கிரயத்தை அந்த இலாக்காவின்கணக்கிலே செல்லுவைப்பதானல், மேலே ஏற்படுத்தப்பட்ட நடவடிக்கையை அநுசரிக்கவேண்டும். ஸ்ட்டேட்மெண்டுகளையும் கணக்குகளையும் மிலிட்டெரி வொர்க்ஸ் அக்கௌண்ட்ஸ் எக்ஸாமினருக்கு நேராக அனுப்பவேண்டும்.

15. பப்ளிக்வொர்க்ஸ் இலாக்காவாவது மிலிட்டெரிவொர்க்ஸ் இலாக்காவாவது அல்லாத வேறே யாதொரு இலாக்காவின்பொருட்டு நிலம் எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்த இலாக்காவின்கணக்கிலே கிரயத்தைச் செல்லுவைப்பதானுலும் அதே நடவடிக்கையைத்தான் அநுசரிக்கவேண்டும்; கொடுக்கப்பட்ட பணத்தொகைகளின் கணக்கைப் பரிசோதிக்கும் கணித உத்தியோகஸ்தரின் பெயரை பப்ளிக் வொர்க்ஸ் அக்கௌன்ட்ஸ் எக்ஸாமினர் என்பதற்குப்பார்த்தியாக அமைத்துக்கொள்ளவேண்டும்.

16. பணவிஷயத்தில் கவர்ன்மென்டாருக்குட்படாமல் சுயேச்சையாயுள்ள யாதொரு முனிஸிபாலிட்டியின் பொருட்டாவது இதரமான கூட்டத்தாரின் பொருட்டாவது நிலம் எடுத்துக்கொள்ளப்படுகிற யாதொரு விஷயத்திலே, அதற்காகக் கொடுக்கப்படுகிற தொகைகளை, அப்படிப்பட்ட கூட்டத்தார் சாதாரணமாய்த் தொகைசெலுத்துவதைப்போலச் செய்வதற்கும் கணக்கு பரிசோதிப்பதற்கும் பார்த்தியாய், கவர்ன்மெண்டாருக்காக அந்த நிலம் எடுத்துக்கொள்ளப்பட்டதுபோலவே, தொகை செலுத்தவேண்டியதென்றும், கணக்கு பரிசோதிக்கவேண்டியதென்றும் பிரதேசகவர்ன்மெண்டார் திட்டஞ்செய்யலாம். பிரதேச கவர்ன்மெண்டார் அப்படிப்பட்ட

உத்தரவுசெய்தால், எடுத்துக்கொள்ளப்பட்ட நிலத்தின் பொருட்டுத் தொகைசெலுத்தும் கலெக்ட்டராவது இதரமான உத்தியோகஸ்தராவது கஜாணவிலிருந்து பணத்தொகைகளைவாங்கி, இந்தவிதிகளில் ஏற்படுத்தப்பட்டவிதமாகவே தொகைகளைச்செலுத்தி, இதற்கென் றேற்படுத்தப்பட்ட நமூனக்களை உபயோகித்து, ஸிவில் அக்வுன்டன்ட் ஜெனரலுக்குக் கணக்கை ஒப்பிக்கவேண்டும். பிரதிபலன் மதிப்புகிரயத்தை முனிஸிபாலிட்டியாராவது இதரமான கூட்டத்தாராவது பிரதேச கவர்ன்மெண்டார் திட்டஞ்செய்யும் தேதிகளிலும் தவணைகளிலும் கவர்ன்மெண்டாருடைய வரவுகணக்கிலே அட்வான்ஸாகக் கட்டிவிடவேண்டும். கொடுக்கப்பட்ட தொகைகள் அட்வான்ஸாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகையைவிட அதிகப்பட்டதாக அக்கவுன்டன்ட்ஜெனரல் ரிபோர்ட்செய்தவுடனே கவர்ன்மெண்டுக்கு இன்னும் கட்டவேண்டிய தொகையைக் கட்டிவிடவேண்டும். முனிஸிபாலிட்டியாரிடத்தி லிருந்தாவது இதரமான கூட்டத்தாரிடத்தி லிருந்தாவது வரப்பெற்ற அட்வான்ஸுகளுக்கு நேராக, செலுத்தும் தொகைகளைச் செல்லுவைத்து அக்கவுன்டன்ட் ஜெனரலானவர் கணக்குகளையும் செலுத்தப்பட்ட தொகைகளையும் இந்த விதிகளில் சொல்லியிருக்கிறபடி விவகரிக்கவேண்டும்.

---

## PART III.

### கிராமகணக்கு தாலூகாகணக்கு.

### *Village and Taluk Accounts.*

1. கிராமங்களில் முக்கியமாக வைக்கவேண்டிய கணக்குகள் இருவகைப்படும். அவைகளுள் சிலகணக்குகள் நிலையானதாகவும், சில கணக்குகள் மாசவாரி வருஷவாரியாகவும் வைக்கவேண்டும். நிலையானவைகள் 5 கணக்குகள். அவை,

| | |
|---|---|
| ரிஜிஸ்தர் A. | புலங்களின் விவரத்தையும் அவைகளில் உண்டாகிற மாறுதல்களையும் காட்டுகிறரிஜிஸ்தர். |
| ஷெக்கு உள்ளடக்கம். | கவர்ன்மெண்டு இனம் நிலங்களின் மொத்த விஸ்தீர்ணத்தையும் பாபுவாரியாய் தரவாரியாய் தெரிவிக்கிற கோஷ்வாரா. |

| | |
|---|---|
| ரிஜிஸ்தர் B. | இனங்களையும் அவற்றின் மாறுதல்களையும் பற்றிய ரிஜிஸ்தர். |
| ரிஜிஸ்தர் C. | ஒவ்வொரு பாய்ச்ச லாதாரத்தின் கீழுள்ள நன்செய் ஆயக்கட்டு அல்லது நீர்ப்பாயத் தகுந்த விஸ்தீரணத்தைக் குறித்தரிஜிஸ்தர். |
| ரிஜிஸ்தர் D. | ஒவ்வொரு பாய்ச்சலாதாரத்தின்கீழுள்ள கைப்பற்று நிலத்தையும் தண்ணீர்தீர்வை போடப்பட்ட விஸ்தீர்ணத்தையும் வருஷத்தொடர்ச்சியாகக் காட்டுகிற ரிஜிஸ்தர். |
| ரிஜிஸ்தர் E. | வருஷத்தொடர்ச்சியாய் லாண்டு ரெவினியூ செட்டில்மெண்டைக் காட்டுகிற ரிஜிஸ்தர். |

மேல்சொன்ன கணக்குகளுள் A. B. E. கணக்குகள் பழைய பைமாஷ்கணக்கு A ரிஜிஸ்தருக்கும், அதன் இரண்டாவது உள்ளடக்கம், B ரிஜிஸ்டருக்கும் பதிலாகவருவது C. D ரிஜிஸ்டர்கள் இரிகேஷன் கணக்குகளைக் காண்பிக்கும் கணக்குகள்.

A. ரிஜிஸ்தரானது புலங்களின் விவரத்தையும் அவைகளில் உண்டாகிற மாறுதல்களையும் காட்டுகிற நிலையான ரிஜிஸ்தர். இதை சர்வேசெய்த சகல கிராமங்களுக்கும் அச்சிட்ட செட்டில்மெண்டு ரிஜிஸ்தர்களிலிருந்து எழுதவேண்டியது. புலங்களை சர்வேநம்பர் வரிசையாய் தாகல்பண்ணவேண்டியது, யாதொரு (block) பிளாக் அல்லது பிரிவினை சர்வே செய்யப்படாதிருந்தால் அதற்கு ஸ்ட்டேட்டுமெண்டின் கடைசியில் நம்பர் கொடுக்கவேண்டியது, அந்த பிளாக்கில் எந்தபாகமாவது பின்னிட்டு சர்வேசெய்யப்பட்டால் அதற்கு ஒரு சப்நம்பரைக்கொடுத்து ரிஜிஸ்தரில் சேர்க்கவேண்டியது. ஷராகலத்தில் புறம்போக்கு நிலங்கள் விவரத்தையும் தரிசுநிலங்களிலுள்ள மரங்களின் கணக்கையும் கட்டடங்கள் முதலியதையும் கண்டெழுதவேண்டியது; இனம்நிலங்கள் சர்க்கார் நிலமாகவும் புன்செய் நன்செயாகவும் நன்செய் புன்செயாகவும் இப்படிப்பட்ட நிலையான மாறுதல்கள் சர்வேய்க்குப் பின்னிட்டு செய்யப்பட்டால் அவைகளை அந்தப்பிரகாரமே ஷராகலத்தில் எழுதவேண்டியது. ரிஜிஸ்தரைத் தயார்செய்தபின்பு உண்டாகும் அப்படிப்பட்ட மாறுதல்களையும்

நேரிடும்போதே குறிக்கவேண்டியது. இந்த மாறுதல்களை பத்து பதிஙைந்து வருஷம்வரையில் ஒரே ரிஜிஸ்தரில் எழுதுவதற்கு அனுகூலமாயிருக்கும்படி, வரிகளுக்கு மத்தியில் இடம் ஜாஸ்தியாய்விட்டு ஷராக்கலத்தை அதிகமாக்கி ரிஜிஸ்தரைத் தயார்செய்யவேண்டியது. பத்துபதிஙைந்து வருஷமானபின்பு வேறேரிஜிஸ்தர் தயார்செய்யலாம். ரிவினியூபதங்களை சுருக்கமாயெழுதி இடத்தை மிகுதிப்படுத்திக் கொள்ளலாம்; திருஷ்டாந்தம், புன்செய் என்பதை புன்சை என்றும் நன்செய் என்பதை நன்சை என்றும் தீர்வைஏற்படாதது என்பதை தரம் இல் என்றும் புறம்போக்கு என்பதை புற என்றும் இப்படியாக சுருக்கி எழுதலாம். திருநெல்வேலி ஜில்லாவில் செட்டில்மெண்டு டிபார்ட்டுமெண்டாரால் ஏற்படுத்திய பிரத்தியேகமான நமூனபடி ரிஜிஸ்தரை தயார்செய்யவேண்டியது. ரிஜிஸ்தரின் கடைசியில் அடியில் கண்ட விவரங்களை குறிக்கவேண்டியது.—

(1) சர்வேய்க்கு முன்னிட்டிருந்த விஸ்தீர்ணமும் சர்வேயினுல் தெரியவந்த ஜாஸ்தியும்.

(2) குடிமராமத்து விஷயத்தில் குடிகள் செய்யவேண்டியதைப்பற்றி செட்டில்மெண்டு காலத்தில் தாக்கல்செய்த விவரமும்.

(3) கிராம உத்தியோகஸ்தர்களும் தொழிலாளிகளுக்கும் மேறைகள் கொடுக்கிற வழக்கமிருந்தால் இன்னவீதப்படி கொடுக்கவேண்டியதென்பதும்.

4. A. ரிஜிஸ்தரின் உள்ளடக்கமானது நிலவிஸ்தீர்ணத்தை பாபுவாரியாயும் தரவாரியாயும் காட்டுகிற கோஷ்வாரா. இது செட்டில்மெண்டு டிபார்ட்டுமெண்டாரால் தயார்செய்யப்படுகிறபடியால், பெரும்பாலும் கர்ணம் அதற்கு நகல் செய்யவேண்டியதாகவே யிருக்கும்; சர்வே ஆனபின்பு மாறுதல்களேதாவது நேரிட்டிருந்தால் அவைகளை சேர்த்துக்கொண்டு வேறே கோஷ்வாரா தயார்செய்யவேண்டியது, அதற்குப்பின்னிட்டு அதைவருஷந்தோறும் திருத்திக் கொண்டு வரவேண்டியது.

சர்வே செட்டில்மெண்டு மாகாத ஜில்லாக்களில், A. ரிஜிஸ்தரும் அதின் உள்ளடக்கமும் (பழைய மானுயல் புஸ்தகத்தில் குறிக்

கப்பட்டு) இதுவரையிலிருந்த நமூனாப்பிரகாரமே இருக்கவேண்டியது, இந்த ஜில்லாக்களில் சர்வேயும் செட்டில்மெண்டும் ஆகிறவரையில் அந்த நமூனாவே தகுதியுள்ளதாயிருக்கிறபடியால் மாறுதல் ஒன்றும் செய்யவேண்டுவதில்லை. மேற்கண்ட ரிஜஸ்தர்கள் பூர்த்தியாய் வேறே தயார் செய்யும்போது பழய ரிஜிஸ்தர்களை தாலுகா கச்சேரிக்கு அனுப்பவேண்டியது.

5. B. ரிஜிஸ்தரானது இனங்களின் விவரத்தைக்காட்டும் நிலையான ரிஜிஸ்தர். ஒவ்வொரு இனம் பட்டாவிலும் சேர்ந்த புலங்களை தேவாதாயம் தருமாதாயம் சொந்தம் ஊழியம் என்கிற விவரங்களின்படி வரிசையாய் எழுதவேண்டியது. 5-வது கலத்திலும் 6-வது கலத்திலும் முறையே நன்செய் புன்செய் என்றும் ஒருபோகம் என்றும் கண்டிருக்கிற விவரம் இனம் கமீஷன் ரிஜிஸ்டருக்கு ஒத்திருக்கவேண்டியது. மேற்கண்ட விவரங்களில் B. ரிஜிஸ்தருக்கும் A. ரிஜிஸ்தருக்கும் வித்தியாசமேதாவதிருந்தால் அதை A. ரிஜிஸ்தரில் ஷராக்கலத்திலே குறித்து B. ரிஜிஸ்தரில் தாக்கலான விவரத்தையே பின்னிட்ட எல்லாக் கணக்குகளிலும் குறிக்கவேண்டியது. 8-வது கலத்திலே செட்டில்மெண்டு டிபார்ட்டுமெண்டாரால் நிர்ணயிக்கப்பட்ட தரம் தீர்வையைக் குறிக்கவேண்டியது, அப்படி நிர்ணயிக்கப்படாதிருந்தால் இனம் ரிஜிஸ்தர்களில் தாகலான தீர்வையை பதிவு செய்யவேண்டியது. கோதாவரி கிருஷ்ணா ஜில்லா டெல்ட்டா தாலூக்காக்களிலும் கர்னூல் ஜில்லா சில பாகங்களிலும் நன்செய் நிலங்களுக்கு செட்டில்மெண்டு டிபார்ட்டுமெண்டார் புன்செய் தீர்வை போட்டிருப்பதால், இந்த ரிஜிஸ்தரில் நஞ்சையாக தாகலான நிலங்களின் தீர்வையுடன் தண்ணீர் தீர்வையையும் சேர்க்கவேண்டியது. கிருஷ்ணா கர்னூல் ஜில்லா சில பாகங்களிலே தீர்வையில் லாண்டு வில்லேஜ் செஸ்களும் சேர்ந்திருக்கிறபடியால், அதுபோக நிகர தொகையைமாத்திரம் இந்தரிஜிஸ்தரில் (8-வது கலத்திலே) பதிவுசெய்யவேண்டியது. இனமுக்கு குவிட்டுரெண்டு மொத்தமாய் விதிக்கப்பட்டிருந்தால், அதை 8-வது கலத்திலுள்ள தீர்வை விதமாய் ஒவ்வொரு புலத்திற்கும் பங்கிட்டு 9-வது கலத்தில் எழுதவேண்டியது, இனம் அளவு ஜாஸ்திக்காக விதிக்கப்பட்ட தொகை அதில் சேர்ந்திருந்தால் அதை ஷராக்கலத்தில் எழுத

வேண்டியது. இனும் செட்டில்மெண்டுக்குப்பின்னிட்டு, இனும் நிலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஜாஸ்திக்காக போர்டாருடைய 173-வது நம்பர் ஸ்ட்டாண்டிங் ஆர்டரின் பிரகாரம் விதிக்கப்பட்ட தீர்வையை 10-வது கலத்தில் எழுதவேண்டியது. ரிஜிஸ்தரைத் தயார்செய்த பின்பு நிலையான மாறுதல்களேதாவது உண்டானால் அவைகளை A. ரிஜிஸ்தரில் தாகல்செய்வதுபோல இந்த ரிஜிஸ்தரிலும் ஷராக்கலத்தில் தாகல்செய்யவேண்டியது. இந்த ரிஜிஸ்தருக்கு இரண்டு பிரதிகள் தயார்செய்து, ஒரு பிரதியை தாலூகாவில் வைக்கவேண்டியது; ரிஜிஸ்தரை மறுபடி எழுதும்போது பழைய ரிஜிஸ்தரையும் A. ரிஜிஸ்தர் விஷயமாய் உத்தரவு செய்திருப்பதுபோல தாலூகா கச்சேரியில் வைக்கவேண்டியது.

6. C. ரிஜிஸ்தரானது ஒவ்வொரு பாய்ச்ச லாதாரத்தின் கீழுள்ள கவரன்மெண்டு - இனும் ஆயக்கட்டையும் அதின்தீர்வை அல்லது குவிட்டுரெண்டையும் காட்டுகிற நிலையான ரிஜிஸ்தர். ஆயக்கட்டில் நிலையான மாறுதல்களேதாவது உண்டானால் அவைகளை ஷராக்கலத்தில் எழுதவேண்டியது.

7. D. ரிஜிஸ்தரானது ஒவ்வொரு பாய்ச்ச லாதாரத்தின்கீழும் நீர் பாய்ச்சப்பட்ட அல்லது நீர் பாய்ச்சப்பட்டதென்று தீர்வைவிதிக்கப்பட்ட கவரன்மெண்டு இனும் நிலங்களின் விஸ்தீர்ணத்தையும் அவைகளின் தீர்வையும் வருஷத்தொடர்ச்சியாய் தெரிவிக்கிறது. அதை 8-வது நம்பர் ஸ்ட்டேட்டுமெண்டைக்கொண்டும் அதின் உள்ளடக்கத்தைக் கொண்டும் தயார்செய்யவேண்டியது இதர கிராமங்களின் நிலங்களுக்கும் நீர்பாய்ச்சப்பட்டால், அந்தந்த கிராமங்களுக்கு இவ்வளவு ஜலம்பாய சுதந்தரமிருக்கிறதென்பதை ஷராக்கலத்தில் குறிக்கவேண்டியது.

8. E. ரிஜிஸ்தரானது லாண்டுரிவினியூ செட்டில்மெண்டையும் கிராம வசூலையும் வருஷதொடர்ச்சியாய் காட்டுகிறது. இதில் தாகல் செய்கிற தொகைகளை பெரும்பாலும் 12-வது நம்பர் ஸ்ட்டேட்டுமெண்டிலிருந்து எடுத்துக்கொள்ளவேண்டியது, 49 முதல் 57-வரையிலுள்ள கலங்களை 14-வது நம்பர் ஸ்ட்டேட்டுமெண்டின் A. உள்ளடக்கத்தைக்கொண்டு தயார்செய்யவேண்டியது.

9. இந்த ஐந்து ஸ்ட்டேட்டுமெண்டுகளும் அவைகளின் உள்ளடக்கமும் தகவலுக்கு வேண்டிய நிலையான ரிஜிஸ்தர்கள் பின்னிட்டு சொல்லப்படுகிற ஸ்ட்டேட்டுமெண்டுகள் மாசவாரி அல்லது வருஷவாரி கணக்குகள்.

1-வது நம்பர் ஸ்ட்டேட்டுமேண்டானது.

10. கிராமத்தினுடைய மாசவாரி சாகுபடி கணக்கு. இதிலிருந்து தாலூகா கச்சேரிக்கு அனுப்பப்படுகிற மாசாந்தர கணக்கை தயார்செய்யவேண்டியது, வருஷ சாகுபடி ரிஜிஸ்தராகிய 2-வது நம்பர் அடங்கல் கணக்கை தயார்செய்யும் கர்ணனுக்கு இது ஆதாரமாயிருக்கிறது. மாசம் பின்பாதியில் கர்ணம் புலங்களைப் போய்ப் பார்வையிட்டு, அந்தமாசத்தில் சாகுபடியான நிலங்களை அந்தந்த கலங்களில் தாகல்செய்யவேண்டிய விவரங்களுடன் தொடர்ச்சியாய் எழுதவேண்டியது. கவரன்மெண்டு நிலங்களை வேருகவும் இனும் நிலங்களை வேருகவும் புன்செய் நன்செய் விவரத்துடன் எழுதவேண்டியது. ஒரே நம்பரில் வெவ்வேறுபாகங்களிலே ஓரேமாசத்தில் வெவ்வேறுதினுசு பயிர் சாகுபடிசெய்தாலும் வெவ்வேறு பாய்ச்சலாதாரங்களிலிருந்து நீர் பாய்ச்சினுலும், ஒவ்வொரு பாகம் ஒவ்வொருவரியில் எழுதவேண்டியது; இரண்டு மூன்று தினுசு பயிர் வெவ்வேறு சாலில் போடப்பட்டால், ஒவ்வொருபயிரின் விஸ்தீர்ணத்தை உத்தேசமாய் எழுதவேண்டியது. விரைகளைக் கலந்துவிரைத்து பயிரான கலப்பட பயிர் விஷயத்தில், எது முக்கியமான பயிராக அந்த கிராமத்தில் எண்ணப்படுகிறதோ அதைமாத்திரம் பதிவுசெய்து, மற்றதை விட்டுவிடவேண்டியது. முந்திய மாசத்தில் சாகுபடியான புலங்களிலேதாகாவது பிந்திய மாசத்தில் நீர் பாய்ச்சினுல, அதை பின்மாச கணக்கின் அடியிலே குறிக்கவேண்டியது. அந்தந்த மாசத்திய மொத்த சாகுபடியை புன்செய் நன்செய் தீர்வை ஏற்படாதது - புறம்போக்கு என்கிற விவரத்துடனும் சவர்ன்மெண்டு இனும் என்கிற விவரத்துடன் எழுதவேண்டியது. அதின்கிழ் சென்றமாசவரைக்கும் ஏற்பட்ட மொத்தத்தை சேர்த்து நிகழும் மாசமுள்பட மொத்தத்தை காட்டவேண்டியது. எந்த மாசத்தில் சாகுபடியானதோ அந்த மாசத்திலேயே பூராய் தாகலாகும்படி பார்க்கவேண்டியது.

11. பிரதிபுலத்தையும் கர்ணம் அளக்கவேண்டிய அவசிய மிருக்காது. பூரா நம்பர்சாகுபடி செய்யப்பட்டால், கணக்குப்படி அதின் விஸ்தீர்ணத்தை தாக்கல் பண்ணவேண்டியது, நம்பரில் கொஞ்சபாகம் மாத்திரம் சாகுபடியானபோது சாகுபடி விஸ்தீர்ணத்தின் பேரிலேயே தீர்வை கட்டவேண்டி யிருக்கிறபக்ஷத்தில் சாகுபடி பாகத்தையாவது தருசாக விடப்பட்ட பாகத்தையாவது எது அனுகூலமோ அதை அளந்து சரியான சாகுபடி விஸ்தீர்ணம் தாக்கல் செய்யவேண்டியது. இந்த பிரகாரம் சாதாரணமாய் நீர் பாய்ச்சப்பட்ட நிலங்கள் விஷயத்தில் செய்யவேண்டியதாயிருக்கும் கணக்குமட்டில் சாகுபடி விவரம் தெரியவேண்டியிருந்து தீர்வை கட்டவேண்டியதற்கு அவசிய மில்லாதிருந்தால் சாகுபடி விஸ்தீர்ணத்தை உத்தேசமாய் நமூது செய்யலாம். இப்படி சாதாரணமாய் நீர் பாய்ச்சலில்லாத (புன்செய்) நிலங்கள் விஷயத்தில் செய்யவேண்டியதா யிருக்கும். பசலியில் முதல் தடவை சாகுபடிசெய்கிற எல்லாநிலத்தையும் முதல் போகமாயும் இரண்டாம் தடவை மூன்றும்தடவை சாகுபடி செய்கிற நிலத்தை இரண்டாம்போகம் அல்லது மூன்றும் போகமாயும் தாக்கல் செய்யவேண்டியது. சில ஜில்லாக்களிலே முதல்போகமானது இரண்டாம்போகம் அவ்வளவு விசேஷமில்லாமலிருக்கலாம். இதினுல் சாகுபடியை முதல் போகம் இரண்டாம் போகமாக விவரித்து எழுதுவதில் பேதம் உண்டாகாது. இரண்டாம் தடவை சாகுபடியாகிற நிலம் தீர்வைக்குட்பட்டதா யிருந்தாலு மிராவிட்டாலும் அதை இந்த ஸ்டேட்மெண்டில் தாக்கல் செய்யவேண்டியது. அதெப்படியென்றல் புன்செய் நிலத்தில் இரண்டாம் தடவை விளைகிற புன்செய்பயிர்க்கு தீர்வை யில்லையாயினும் அதை இந்த ஸ்டேட்மெண்டிலும் 2-வது நம்பர் ஸ்டேட்மெண்டிலும் காட்ட வேண்டியது.

12. பட்டா கிடைக்குமென்று சாகுபடி செய்கிறவர்களையும் பட்டாதார் என்றே எண்ணவேண்டியது, ஆதலால் சர்க்கார் தரிசு நிலங்களை எவனுவது சாகுபடி செய்தால் அவனுடையபெயரை இதிலும் மற்ற ஸ்டேட்டுமெண்டுகளிலும் "பட்டாதார் அல்லது இனும்தார்" என்கிற கலத்தில் தாக்கல் செய்யவேண்டியது. இதில் கர்ணம் தேதியும் கையெழுத்தும்போட்டு பிரதி மாசத்திலும் 25உக்கு

முன் ரிவினியூ இன்ஸ்பெக்டருக்கு தவருமல் அனுப்பவேண்டியது, அவர் தான் தாலூக்காவிற்கு அனுப்பவேண்டிய கோஷ்வாராவில் வேண்டிய தாக்கல் எழுதிக்கொண்டு அதில் கையெழுத்தும் தேதியும்போட்டு மறுபடியும் கர்ணனுக்கு அனுப்பிவிடவேண்டியது. இந்தக்கணக்கு சரியாயிருப்பதைக்குறித்து கர்ணமே முழு ஜவாபுதாரியாக எண்ணப்படுவான், அவனுடைய கையெழுத்துமாத்திரம் அதில் போடவேண்டியது. ஆயினும் மணியக்காரன் பலான புலம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதா இல்லையாவென்று கர்ணனை சப்ஜாயஷி கேட்கவும் சாகுபடியானது ஏதாவது மறைக்கப்பட்டிருந்தாலும் விட்டுவிடப்பட்டிருந்தாலும அது தனக்குத் தெரியவருகிற பட்சத்தில் அதைக்குறித்து தாசில்தாருக்கு ரிபோர்ட்டு பண்ணவும் அதிகாரமுண்டு. இந்த கணக்கை பிரதி வருஷத்திலும் மார்ச்சுமீ முடிவுவரையில் எழுதிக்கொண்டுபோகவேண்டியது, அதற்குப்பின்பு சாகுபடியாய் சாதாரணமாய் அடுத்த பசலியில் அறுவடையாகிற எல்லா நிலங்களையும் அடுத்த வருஷத்திய கணக்கில் தாக்கல் காட்டவேண்டியது. ஆனல் மார்ச்சுமீ த்திற்குப் பின்பு பசலிக்குள் (ஜூன்மீ 30வுக்குள்) போடப்பட்ட பயிர்களில் எதாவது அறிதாய் அறுவடையாகிற பட்சத்தில், அந்த நிலங்களுக்கு பிரத்தியேகமான ஒரு கணக்கு தயார்செய்து ஜூன்மீ கடைசியில் ரிவினியூ இன்ஸ்பெக்டருக்கு அனுப்பவேண்டியது. தோப்புகள் தென்னமரங்கள் முதலியவை யிருக்கிற நிலங்களை பசலியில் முதல் மாசத்திய கணக்கிலே சாகுபடியான நிலங்களாகக் காட்டவேண்டியது. கட்டடங்கள் கட்டியிருக்கிற நிலங்களை சாகுபடிசெய்த நிலங்களாக தாக்கல் செய்யக்கூடாது. இந்தமாதவாரி கணக்குகளை பசலி முடிந்த இரண்டு மாசத்தில் தாலூக்காவில் தாக்கல் செய்யவேண்டியது.

### 1-வது நம்பர் ஸ்ட்டேட்மேண்டுக்கு உள்ளடக்கம்.

13. இது சாகுபடி ஸ்ட்டேட்மெண்டுக்குக்கோஷ்வாரா. இதில் சாகுபடி செய்யப்பட்ட விஸ்தீர்ணத்தையும் பயிர் வகைகளையும் அவற்றின் நிலைமையையும் அறுவடையான மாசுலேயும் காட்டவேண்டியது. இந்த கணக்கில் எழுதப்படுகிற நிலவிஸ்தீர்ணத்திலே கவரன்மெண்டு - இனும், நன்செய்-புன்செய், முதல்போகம் இரண்டாம்போகம்-இந்த நிலங்கள் சேர்த்திருக்கவேண்டியது. இந்த கண

க்கு தயார் செய்வதற்கு ஒவ்வொரு புலத்திலுமுள்ள பயிரின நிலைமையையாவது அதின் விளைச்சல் இவ்வளவென்பதையாவது மதிப்பு போட வேண்டிய அவசியமில்லை. கர்ணமும் மணியக்காரனும் விளைந்துகொண்டிருக்கிற பயிர்களை சரியாய் தனிகைசெய்து, பிரதி பயிரின் தற்காலஸ்திதியை யோசித்து அதின் விளைச்சல் உத்தேசம் இவ்வளவு காணுமென்று தோராயமாய்க்குறிக்கவேண்டியது. காலஸ்திதி பிரகாரம் பயிரின் நிலைமையும் மாதத்திற்கு மாதம் வேறுபடக்கூடும், அப்படியே விளைச்சலின் மதிப்பும் வேறுபடும். அறுவடையான பயிர் விஷயத்தில் அந்தப்பிரகாரமே கிராம உத்தியோகஸ்தர்கள் நேராய்ப்பார்வையிட்டு விசாரித்தறிந்து, கணக்கு எந்தமாசத்தியதோ அந்த மாசத்தில் ஒவ்வொரு வகைப்பயிரும் அறுவடையான மொத்த விஸ்தீர்ணத்தில் கிடைத்த சராசரி மாசூலைக் குறித்துக்கொள்ள வேண்டியது. மாசூலை நமூனாவில் கண்டிருக்கிற நான்கு பிரிவினையாக, காட்டவேண்டியது. அதாவது 20 அணா-16 அணா-8 அணா-4 அணா இது பூராபலம் சராசரி நடுத்தரம் அல்பபலம் இவைகளுக்குச்சமானமாகும். செம்மையான சராசரி விளைச்சல் 16 அணாவாகவும், சராசரி விளைச்சல் அல்லது 16அணாவுக்கு மேற்பட்ட மாசூலையெல்லாம் 20 அணாவாகவும் காட்டவேண்டியது. சராசரியில் பாதி (அதாவது நடுத்தரமான) விளைச்சல் 8 அணாவாகவும், சராசரியில் கால்பங்கு விளைச்சலும் அதற்கு குறைந்ததும் 4 அணாவாகவும் குறிக்கப்படும். மாதாந்தர சாகுபடி கணக்கோடு கூட இந்த ஸ்டேட்மெண்டையும் ரிவினியூ இன்ஸ்பெக்டருக்கு அனுப்பவேண்டியது, அவர் அந்த மாதத்தில் தான் சொந்தமாய்ச்செய்த தனிகையின் பேரில் தனக்கு அவசியமாகக்காணுகிற குறிப்புகளை அதில் எழுதி அந்த அசல் பிரதியை தன்னுடைய சாகுபடி கோஷ்வாராவோடு கூட தாலூக்காவிற்கு அனுப்பவேண்டியது.

### 2-வது நம்பர் ஸ்டேட்டுமெண்டானது

14. கைப்பற்று நிலத்தையும் சாகுபடியையும் புலவாரியாய் காட்டுகிற வருஷவாரி ஸ்டேட்டுமெண்டு. அஜிமாயிஷுக்கும் ஜமாபந்திக்கும் வேண்டியிருக்கிற எல்லா விவரங்களும் அதில் அடங்கியிருக்கவேண்டியது. பயிர் சுமாராய் வளர்ந்துவந்தபின்பு இந்த

கணக்கு ஆரம்பிக்கவேண்டியது. அப்படி செய்வதில் இந்த ஸ்டேட்டுமெண்டிலுள்ள முதல் 12 கலங்களை முந்திய வருஷத்திய ஸ்டேட்டுமெண்டைக்கொண்டு எழுதவேண்டியது. A. குறிப்பு ரிஜிஸ்தரிலும் 3-வது நம்பர் ஸ்டேட்டுமெண்டிலும் பதிவுசெய்திருக்கிற பின்னிட்ட மாறுதல்களை அனுசரிக்கவேண்டியது. புலங்களை சர்வே நம்பர் வரிசையாய் கவரன்மெண்டு இனும் வேறு வேருய் எழுதவேண்டியது, வெவ்வேறு தினுசு பயிர் சாகுபடி ஆனுலும் வெவ்வேறு ஜலாதாரத்திலிருந்து நீர் பாய்ச்சினுலும் அப்படிப்பட்ட புலங்களின் பாகங்களை தனித்தனி எழுதுவதற்காக வரிகளின் மத்தியில் போதுமான இடம் விடவேண்டியது. 13, 14, 15-வது கலங்களை 1-வது நம்பர் ஸ்டேட்மெண்டிலிருந்து எழுதவேண்டியது. நீர் பாச்சப்படுகிற புன்செய் நிலங்கள் அல்லது புன்செய்ப் பயிரின்பேரிலும் இரண்டாவது போகம் சாகுபடியின்பேரிலுமுள்ள தண்ணீர் தீர்வையை 12-வது கலத்தில் கொண்டுவரக்கூடாது. அது 6-வது நம்பர் ஸ்டேட்மெண்டில் தாக்கல் செய்யப்படும். இரண்டாவதுபோகம் சாகுபடியாகிற விஷயத்திலே, மூதல் போகத்திற்கு பாய்ந்த ஜலாதாரமன்றி வேறே ஜலாதாரத்திலிருந்து நீர் பாய்ச்சினுலும் வேறே பயிர் சாகுபடி செய்யப்பட்டாலும் அந்த விவரங்களை நமூனுவில் கண்டிருக்கிறபடி 10-வது 13-வது கலங்களில் வெவ்வேறு வரியில் எழுதவேண்டியது. அஜிமாய்ஷ்தாருக்கு அவசியமாய் தெரியவேண்டிய விவரங்கள் அதாவது சாவி-மாசூல் கம்மி முதலியவைகளை 16-வது கலத்திலே கர்ணம் குறிக்கவேண்டியது. இன்ன தேதியில் கணக்கை முடிவு பண்ணவேண்டியதென்று தாசீல்தாரிடத்திலிருந்து உத்திரவு வந்த உடனே கர்ணம் அந்த கணக்கை அந்த தேதிவரைக்கும் பூர்த்திசெய்து ஒவ்வொரு பக்கத்திற்கும் மொத்தம்போட்டு, புன்செய்-நன்செய் - நன்செயாகமாற்றப்பட்ட புன்செய் என்கிற பிரிவினையின்கீழ் கைப்பற்று சாகுபடி-தரிசு இவற்றின் விவரங்களைக்காட்டுகிற ஒரு கோஷ்வாரா போடவேண்டியது. பின்பு அதில் தன்னுடைய கையெழுத்தையும் அதை அனுப்புகிற தேதியையும்போட்டு அந்த கணக்கை ரிவினியூ இன்ஸ்பெக்டருக்கு அனுப்பவேண்டியது. ரிவினியூ இன்ஸ்பெக்டரிடத்தில் இந்த ஸ்டேட்மெண்டு வந்தவுடன் அஜிமாயிஷுக்கு போகவேண்டியது. இந்த கணக்கை கையில் வைத்துக்கொண்டு புலங்களைப்பார்த்து கணக்கு சரியாயிருக்கி

றதா இல்லையாவென்று பார்க்கவேண்டியது. பிசகாயிருந்தால் திருத்தி எதாவது ஜாஸ்தி சாகுபடியிருந்தால் அதை புலவாரி விவரங்களுடன் குறிக்கவேண்டியது. தான் எழுதவேண்டியது ஏதாவதிருந்தால் அதை 17-வது கலத்தில் குறிக்கவேண்டியது. மேலும் தான் ஒவ்வொரு புலத்திற்கு நேராக தன்னுடைய கையெழுத்து குரிப்பையும் தேதியையும் கணக்கில் போடவேண்டியது. ஜமாபந்திக்கு முன்னே ஆகிற சாகுபடி எந்த பிரகாரம் எழுதி தணிகி செய்யப்படுகிறதோ அதே பிரகாரம் ஜமாபந்திக்கு பின்னிட்டு ஆகிற சாகுபடியையும் எழுதி தணிகைக்கு கொண்டுவரவேண்டியது. இந்த கணக்கை அடுத்துவருகிற பசலியில் நடக்கும் ஜமாபந்திகாலத்திலே தாலூகா கச்சேரியில் தாக்கல் செய்யவேண்டியது.

2-வது நம்பர் ஸ்ட்டேட்மெண்டுக்கு A குறிப்பு உள்ளடக்கத்தில்,

15. தர்க்காஸ்தில்லாமல் கைப்பற்றிக்கொண்ட நிலத்தின் விவரங்களைக்காட்டவேண்டியது. சாகுபடி செய்வதற்காகவாவது வேறெந்த காரியத்திற்காகவாவது கைப்பற்றிக் கொள்ளப்பட்டிருக்கிற புறம்போக்கு தீர்வை ஏற்பட்ட அல்லது ஏற்படாத தரிசாகிய ஒவ்வொரு பாபத்து நிலமும் இதில் சேரவேண்டியது. 15-வது கலம் தவிர மற்றெல்லாக்கலங்களையும் 2-வது நம்பர் ஸ்ட்டேட்மெண்டைக்கொண்டும் A-குறிப்பு ரிஜிஸ்தரைக்கொண்டும் ஜமாபந்திக்கு முன்னிட்டே கர்ணம் எழுதவேண்டியது. அவசியமாய்ச் செய்யவேண்டிய விசாரணைகளை தகுந்த காலத்தில் செய்வதற்கும் எந்த சங்கதியை எந்த விதமாய் பைசல் செய்யவேணுமென்பதைக்குறித்து ஜமாபந்திக்கு முன்னே உத்தரவுகள் பிறப்பிப்பதற்கும் சாத்தியமாயிருக்கும்பொருட்டு, (2-வது நம்பர்) அடங்கல் கணக்கு முடிந்தவுடனே இந்த கணக்கை ரிவினியூ இன்ஸ்பெக்ட்டருக்கு அனுப்ப வேண்டியது. மேலே கண்டபடி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால், 15-வது கலத்தை ஜமாபந்திக்குமுன்னே எழுதவேண்டியது; இல்லாவிட்டால், ஜமாந்தி ஆபீசருடைய உத்தரவுபடி ஜமாபந்தி காலத்திலே அந்த கலத்தை எழுதவேண்டியது, ஜமாபந்திசெய்கிறவர் சங்கதிகளை யோசித்து சாகுபடியை மிஸ்லேனியஸ் அல்லது ரயத்வார் ஆகிய எதின்கீழ் கொண்டுவரவேண்டியதோ அதை தீர்மானிப்பார். அதெப்படியென்றால் நிலம் புறம்போக்காயிருப்பதினாலே சாகுபடி செய்

வது ஆக்ஷேபனைக்குட்பட்டதாயிருந்து அதில் சாகுபடியை நிறுத்த வேண்டியதாயிருந்தால் அதற்கு பட்டா கொடுக்கப்படாது, அதை 7-வது நம்பர் ஸ்ட்டேட்மெண்டில் மிஸ்லேனியஸ் என்பதின்கீழ் தாக்கல் செய்யவேண்டியதாகும்; சாகுபடி செய்வது ஆட்சேபனைக்கிடமில்லாததாயிருந்தால் அதற்கு பட்டா கொடுக்கப்பட்டு நிலம் ரயத்வாரில் சேர்த்துக்கொள்ளப்படும். இந்த கணக்கு ஜமாபந்தி காலத்தில ஜமாபந்தி ஆபீசருக்கு உதவியாயிருக்கும்பொருட்டு மாத்திரம் தயார் செய்யப்படுகிறதாகையால் அதை கிராமத்திற்குத் திரும்பக்கொண்டுவரவேண்டியதில்லை. அதை தாலூக்கா கச்சேரியில் வைத்துவைக்கவேண்டியது.

2-வது நம்பருக்கு B. குறிப்பு உள்ளடக்கம்.

16. பயிர்வாரி சாகுபடி விஸ்தீர்ணத்தைக் காட்டுகிற ஸ்ட்டேட்டுமெண்டு சாகுபடிகாலம் ஆனபின்பு இதை 2-வது நம்பரிலிருந்து தயார்செய்து ஏப்ரில்மீ 15உக்குமுன்னே தாலூகாவிற்கு அனுப்பவேண்டியது.

2-வது நம்பருக்கு C குறிப்பு உள்ளடக்கம்.

17. கவர்ன்மெண்டு நிலங்களிலுள்ள தோட்டம் தோப்புகளைக்குறித்த ஸ்டேட்டுமெண்டு. அதில் முந்திய வருஷத்தில் ஏற்பட்டதோட்டம் தோப்புகளையும் நிகழும் வருஷத்தில் ஏற்பட்டவைகளையும் சேர்த்து தாகல்பண்ணவேண்டியது. அந்தகணக்கு மூன்று பிரிவு—முதல் பிரிவு கவரன்மெண்டு தோட்டங்களை காட்டுகிறது. இரண்டாவது பிரிவு குடிகளுடைய சொந்ததோட்டங்களை காட்டுகிறது. மூன்றுவது பிரிவு கவரன்மெண்டாரால் வரி போடப்பட்டாகிலும் குத்தகைக்கு விடப்பட்டாகிலுமிருந்து அங்கங்கே சிதறிக்கிடக்கிற தனிமரங்களை காட்டுகிறது. தோட்டம் தோப்புமரங்கள் இவைகளை கொடுக்கப்பட்ட ஷரத்துகளையும் கவரன்மெண்டாருக்கு அல்லது தோப்பு சொந்தக்காரர்களுக்குள்ள சுதந்தரங்களைப் பற்றிய மற்ற விவரங்களையும் ஷராக்கலத்தில் குறிக்கவேண்டியது.

2-வது நம்பருக்கு D குறிப்பு உள்ளடக்கம்.

18. இந்தஸ்ட்டேட்டுமெண்டு சர்க்கார் ஜலாதாரத்தின்கீழும் குடிகளின் சொந்த ஜலாதாரத்தின்கீழும் சாகுபடிசெய்யப்பட்ட

விஸ்தீர்ணத்தையும், நமூனுவில் கண்டிருக்கிற அந்தந்த பயிர்களின் சாகுபடி விஸ்தீரணத்தையும்காட்டுகிறது. இந்தவிவாமும் B-குறிப்பு உள்ளடக்கத்தில் தாகல்செய்யப்படுகிற விவரமும் (statistical) கணக்குகள் நிமித்தம் வேண்டியிருக்கின்றன.

2-வது நம்பருக்கு E குறிப்பு உள்ளடக்கம்.

19. இது கிராமத்தின் சர்க்கார் இனும் ஆயக்கட்டு விவரங்களைத் தெரிவிக்கிற ஸ்ட்டேட்டுமெண்டு, இதை முந்தியவருஷத்து கணக்கைக்கொண்டும் நாளது பசலிவரையில் திருத்தப்பட்டிருக்கிற A குறிப்பு B குறிப்பு ரிஜிஸ்தர்களைக்கொண்டும் தயார்பண்ண வேண்டியது.

3-வது நம்பர் ஸ்ட்டேட்டுமெண்டானது.

20. புலங்களின் மாறுதல்களைகாட்டும் வருஷவாரி ரிஜிஸ்தர் இந்த மாறுதல்களை அனுசரித்து சர்க்காருக்குச் செலுத்தப்படத்தக்க ரிவினியூவை மாற்றவேண்டியதாயிருக்கிறபடியால் அதை காட்டுகிறதற்கு கர்ணத்துக்கு ஆதாரமாயிருக்கும்படியாய் இந்தகணக்கு ஏற்பட்டது. மாறுதல்கள் எந்த வரிசைக்கிரமமாய் நேரிடுகிறதோ அல்லது கர்ணத்திற்கு தெரிவிக்கப்படுகிறதோ அந்த வரிசைக்கிரமமாய் இந்த கணக்கில் எழுதவேண்டியது, மேலும் அவைகளின் விஷயமாய் தாசில்தார் அனுமதிகொடுத்துச் செய்கிற உத்தரவை அதில் குறிக்கவேண்டியது ; இவைகளில் எதுவாவது நிலையான மாறுதல்களாயிருந்தால் அவைகளை அந்தந்தபுலத்திற்கு நோாய் A குறிப்பு B குறிப்பு ரிஜிஸ்தர்களில் ஷராக்கலத்திலே குறிக்கவும் வேண்டியது. எல்லா மாறுதல்களும் ஜமாபந்தியிலே விட்டுப்போகாமல் கிரமமாய் யோசிக்கப்பட்டதென்பதற்கும் நிலையான மாறுதல்களெல்லாம் A குறிப்பு B குறிப்பு ரிஜிஸ்தர்களில் விட்டுப்போகாமல் பதிவு செய்யப்பட்டதென்பதற்கும் நிதர்சனமாக அந்தந்த கணக்குகளில் அந்த மாறுதல்கள் குறிக்கப்பட்டதென்கிற சங்கதியை ஷராக்கலத்திலே காணவேண்டியது.

3-வது நம்பருக்கு A குறிப்பு உள்ளடக்கம்.

21. 3-வது நம்பரில் விவரமாய்க் குறிக்கப்பட்ட மாறுதல்களுக்கு இதுகோஷ்வாரா, அந்த ஸ்ட்டேட்டுமெண்டிலுள்ள தொகை

களை வேறே கடுதாசியில் எடுத்து ஆவர்ஜாபோட்டு இதைத் தயார் பண்ணவேண்டியது.

4-வது நம்பர் ஸ்ட்டேட்டுமேண்டானது.

22. ரிவினியூ பாக்கிக்காக ஏலத்தில் கவரன்மெண்டாரால் வாங்கப்பட்ட நிலங்களைக்குறித்து போர்டாருடைய 111-வது நம்பர் ஸ்ட்டாண்டிங் ஆர்டரிலுள்ள 2-வது பாராவின்படி கர்ணம் வைக்கவேண்டிய ரிஜிஸ்தர் அதை ஜமாபந்தியிலே டிவிஷனல் ஆபீசர்கள் ஜாக்கிரதையாய்ப் பரிசோதித்துப்பார்த்து, எந்த நிலங்களை மறுபடியும் விற்றுவிடவேண்டியதோ வென்பதையும் எந்தநிலங்களை பிரயோசனமற்றதென்று ரிஜிஸ்தரிலிருந்து அடித்துவிட்டு கிராம தரிசோடு சேர்த்துப் போடவேண்டியதோ வென்பதையுங் குறித்தும உத்தரவுகள் பிறப்பிக்கவேண்டியது.

5-வது நம்பர் ஸ்ட்டேட்டுமேண்டானது.

23. லாண்டு ரிவினியூ வஜாக்களைக்குறித்த வருஷவாரி ரிஜிஸ்தர் காலஸ்திதியை அனுசரித்து கொடுக்கப்பட்ட வஜாக்களும் மாமூல்வஜாக்களும் இதில் சேரவேண்டியது. காலஸ்திதி வஜாவானது சாவி மாசூல் கம்மிமுதலானது. மாமூல் முஜராவானது தீர்வை கம்மி பேரீஜில் சேர்ந்த ரோட்டுபண்டு கிராம உத்தியோகஸ்தர்களுடைய மேரைவகைரா காலஸ்திதி வஜாக்கள் விஷயத்திலே பிரதி ஜலாதாரத்தின்கீழும் பிரதிஆசாமியினுல் எந்தெந்தபுலத்தினபேரில் பூர்த்தியாகவாவது கொஞ்சமாகவாவது எந்தெந்த வஜாக்கள் கேழ்க்கப்படுகிறதோ அந்தவிவரங்களை 1 முதல் 9வரையிலுள்ள கலங்களில் தாகல்செய்யவேண்டியது. இன்னவிஷயங்களினிமித்தம் வஜாகேட்கப்படுகிறதென்கிற சங்கதியை கர்ணம் 14-வது கலத்திலே சுருக்கமாய்க் குறிக்கவேண்டியது; 7-வது கலத்தில் பதிவுசெய்யப்படுகிற பூரா நம்பரின்பேரில் தீர்வை வஜாகோராமல்போனுல் எந்த பாகத்திற்காக வஜாகேட்கப்படுகிறதோ அந்த பாகத்தையும் அந்த (14-வது) கலத்தில் காட்டவேண்டியது. காயம் வஜாக்கள் மாமூலான முஜராக்கள் இவைகளுக்கு புலவாரி விவரங்கள் எழுதவேண்டிய அவசியமில்லை, இந்த முஜராக்களின் மொத்தங்களைவேண்டிய விவரங்களுடன் கணக்கு கடைசியில் பதிவுசெய்யலாம். அதெப்படியென்

ரூல் பேரிஜிலே ரோட்டுபண்டு சேர்க்கப்படுகிற விஷயத்தில், அது அப்படி சேர்க்கப்பட்டிருக்கிற பேரீஜ் மொத்தத்தையும், அது கண க்குசெய்யப்படுகிற வீதத்தையும், 14-வது கலத்தில் காட்டவேண்டி யது, அப்படி பேரிஜிலிருந்து வஜாசெய்யப்பட்ட தொகையை 13-வது கலத்திலே "முஜரா செய்யப்பட்டதொகை" என்பதின்கீழ் கா ட்டவேண்டியது. காலஸ்திதி வஜாக்கள்விஷயத்தில் 1 - முதல் 9 - வரையிலுள்ள கலங்களை ஜமாபந்திக்கு முன்னிட்டும், மற்ற கலங் களை வஜா தகரார்கள் ஜமாபந்தியிலே பைசல்செய்தபின்பும் கர்ணம் எழுதவேண்டியது, ஜமாபந்தி ஆபீசருடைய தீர்மானத்தை 16-வது கலத்திலே குறிக்கவேண்டியது. பிரதிபாபத்து வஜாதுகையை சர்க் கார் இனும் புன்செய் நன்செய் விவரங்களுடன் கணக்கின் அடியில் கோஷ்வாரா போடவேண்டியது.

5-வது நம்பருக்கு A குறிப்பு உள்ளடக்கம்.

24. வஜாகொடுக்கும் விஷயத்தில ஜமாபந்தி ஆபீசருக்கு உதவியாயிருக்கும்பொருட்டு, ஏரிக்கு வந்த ஜலத்தையும் சர்க்கார் இனும் பூமிகளுடைய சாகுபடி பஞ்சர் விவரத்தையும் காட்டுகிற கணக்கு. வஜாகொடுப்பதற்கு இது ஜமாபந்தி ஆபீசருக்கு ஆதார மாயிருக்கிறது. முதல் மூன்றுகலங்களை C குறிப்பு ரிஜிஸ்தரிலிருந் தும் 5-வது கலத்தை 20-வது நம்பர் கணக்கின் 2-வது பிரிவிலிருந் தும் மற்ற கலங்களை 2 - வது நம்பர் ஸ்ட்டேட்டுமெண்டிலிருந்தும் எழுதவேண்டியது.

6-வது நம்பர் ஸ்ட்டேட்டுமெண்டானது.

25. பிரத்தியேகமாய் தண்ணீர்வரி விதிக்கப்பட்ட பாய்ச்சல் நிலங்களை காட்டுகிறதற்கு ஏற்பட்டது. இது கோதாவரி - கிருஷ்ணா ஜில்லா டெல்டாவில் முக்கியமானது. இப்பொழுதிருக்கிற நிபந்தனை பிரகாரம் ஜலம்பாயாத நிலங்களுக்குக்கூட சிலசமயத்தில் இந்த வரி விதிக்கப்படுகிறது; இதற்கு திருஷ்டாந்தம் யாராவது தண்ணீருக் காக மனுவுபண்ணி தண்ணீர் இருந்தபோதிலும் உபயோகப்படுத்திக் கொள்ளாதிருந்தபக்ஷத்தில் தண்ணீர்தீர்வை விதிக்கப்படும் மேலும் நீர்பாய்ச்சப்பட்ட விஸ்தீர்ணம் போர்டாருடைய 5-வது நம்பர் ஸ்ட் டாண்டிங் ஆர்டரில் நிர்ணயிக்கப்பட்ட விஸ்தீர்ணத்துக்கு குறைவா

யிருந்தாலும், தண்ணீர்வரி விதிக்கப்படுகிறது. இந்தவிஷயத்தைப் பற்றிய நிபந்தனைகள்பிரகாரம் காரியம் நடந்தது இல்லையென்று தெரியும்பொருட்டு, வாஸ்தவத்தில் நீர் பாய்ச்சப்பட்ட விஸ்தீர்ணத்தையும் தண்ணீர் தீர்வை விதிக்கப்பட்ட விஸ்தீர்ணத்தையும் தெரிவிப்பதற்காக இந்த கணக்கில் கலங்கள் ஏற்பட்டிருக்கிறது. இந்த கணக்கு சர்க்கார் இனும் என்கிற இரண்டுபாகமாய் விபஜனை பண்ணப்பட்டிருக்கிறது. முதல் பதினொருகலங்களை 2-வது நம்பர் ஸ்ட்டேட்டுமெண்டிலிருந்தும் தண்ணீருக்காக செய்யப்பட்ட சர்காஸ்தைக் கொண்டும் எழுதவேண்டியது. 12 முதல் 18 வரையிலுள்ள கலங்களை தண்ணீர் தீர்வையைகுறித்து தற்காலத்திலுள்ள உத்தரவுகளை அனுசரித்து எழுதவேண்டியது. வஜாகலங்களை அவைகளைகுறித்து தகரார் ஜமாபந்தியிலே பைசல்செய்யப்பட்டபின்பு எழுதவேண்டியது. தண்ணீர் தீர்வை விதிக்கப்படுகிற நிலங்கள் ஜமாபந்திக்குப் பின்னிட்டு சாகுபடியானால் அவைகளுக்கு இதேபிரகாரம் கணக்கு தயார்செய்து, பசலிமுடிவில் தாலூகாவிற்கு அனுப்பவேண்டியது.

**7-வது நம்பர் ஸ்ட்டேட்டுமேண்டானது:**

26. லாண்டு ரிவினியூவில் சில்லரைபாபத்து ரிவினியூவைக் காட்டுகிற ரிஜிஸ்தர். இதை இரண்டுபாகமாய் எழுதவேண்டியது. ஒன்று ஜமாபந்திக்கு முன்னிட்டு ஏற்படுகிற பாபத்தைக்குறித்தும் மற்றொன்று ஜமாபந்திக்கு பின்னிட்டு வருவதற்கும் எழுதவேண்டியது. ஒவ்வொரு நபரும் செலுத்தவேண்டியதாகிற பாபத்துகளை புலவாரி விவரங்கள்சகிதமாய்க் கண்டெழுதவேண்டியது. ஆனால் இந்த பாபத்துகளில் எதற்காவது இவ்வித விவரங்கள் இதரகணக்கில் எழுதப்பட்டிருந்தால் அவைகளை மறுபடியும் இவ்விடத்தில் விவரிக்க வேண்டுவதில்லை; அதெப்படி யென்றால் குயிட்ரொண்டுக்கு புலவாரி விவரங்கள் B குறிப்பு ரிஜிஸ்தரில் கண்டிருக்கிறபடியால், இந்த கணக்கில் பிரதிநம்பருக்கும் எழுதாமல் குயிட்ரொண்டு மொத்தத்தை மாத்திரம் காட்டவேண்டியது. 6-வது கலத்தில் தாகலாகவேண்டிய இனுங்களின் விவரத்தை B குறிப்பு இனும் ரிஜிஸ்தரிலிருந்து எடுத்துக்கொள்ளவேண்டியது. இந்த கணக்கை 8-வது கலம்வரையில் கர்ணம் எழுதவேண்டியது, மற்ற கலங்களை வஜா தகரார்கள் ஜமாபந்தியில் பைசலான பிற்பாடாவது அதைப்பற்றி பிரதியேகமான உத்த

ரவு ஆன்பிற்பாடாவது எழுதவேண்டியது. பாபத்துகளை வரிசைக் கிரமமாக எழுதி ஒவ்வொன்றுக்கும் மொத்தம் போட்டு கணக்குக்குக் கடைசியில் ஒரு கோஷ்வாரா போடவேண்டியது.

8-வது நம்பர் ஸ்ட்டேட்டுமேண்டு.

27. அதின் உள்ளடக்கமும் இரிகேஷன் ரிவினியூகணக்குகளை தயார்பண்ணுவதற்காக ரிவினியூ செட்டில்மெண்டு அண்டு ஆக்ரிகல்சர் டைரெக்ட்டர் ஆபீசுக்கு கர்ணங்கள் இப்போது அனுப்புகிற B குறிப்பு A குறிப்பு கணக்குகள் 8-நெம்பர் கணக்கில் பிரதி ஜலாதாரத்திலிருந்தும் நீர்பாய்ச்சப்பட்ட எல்லா புலங்களின் விவரங்களையும் தள்ளிக்கொடுக்கப்பட்ட வஜாக்களையும் காட்டவேண்டியது. அதை 2-வது 5-வது 6-வது 7-வது நம்பர் கணக்குகளைக்கொண்டு தயார் பண்ணவேண்டியது. இந்த ரிஜிஸ்தர்களை தயார் பண்ணுவதற்காக ரிவினியூ செட்டில்மெண்டு அண்டு ஆக்ரிகல்சர் டைரெக்ட்டர்தபசில் நிபந்தனைகளை முன்னமேயே பிறப்பித்திருக்கிறார். அவைகள் இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

9-வது நம்பர் ஸ்ட்டேட்டுமேண்டானது.

28. 10-வது நம்பர் கணக்கில் தாக்கல் பண்ணப்படுகிற ரயத்வார் நிலங்களின்பேரில் வசூல் செய்யப்படுகிற செஸ்கள் தவிர மற்ற லோகல்பண்டுகளையும் ஸ்பெஷல்பண்டுகளையும் காட்டுகிறதற்கு அதை B. குறிப்பு ரிஜிஸ்தரைக்கொண்டும் 6-வது 7-வது நம்பர் ஸ்ட்டேட்டுமெண்டுகளைக்கொண்டும் தயார்பண்ண வேண்டியது. கிராம உத்தியோகஸ்தர்களுக்கு சம்பந்தப்பட்ட ஒவ்வொரு ஸ்பெஷல் பண்டையும் இந்த கணக்கில் காட்டவேண்டியது. ஷராகலத்திலே எதின்பேரில் எவ்விதமாய் பண்டு வசூல்செய்யப்படுகிறதோ அந்த சங்கதியை எழுதவேண்டியது. அதற்கு திருஷ்டாந்தம் பாசிவரி விஷயத்திலே எந்த ஏரிக்காக அது வாங்கப்படுகிறதோ அந்த ஏரியின் பெயரையும் அந்தவரி இஜாரா அல்லது மாமூலை அனுசரித்து கட்டினதையும் இதில் குறிக்கவேண்டியது. இந்த கணக்கையும் 3-வது 5-வது 6-வது 7-வது நம்பர் கணக்குகளையும் அவைகளின் உள்ளடக்கங்களையும் அடுத்த பசலியில் நடக்கும் ஜமாபந்தியின்போது தாலூகாவில் சேர்த்து வைத்துவைக்கவேண்டியது.

10-வது நம்பர் ஸ்ட்டேட்டுமேண்டானது.

29. ஜமாபந்தி நபர்கதி சிட்டா. அது இரண்டு பிரவுள்ளது, முதல்பிரிவானது கைப்பத்து நிலங்களுக்கு புலவாரி விவரங்களேயும் இரண்டாம்பிரிவானது பைசலாத்தி விவரத்தின்மொத்தத்தையும் தெரிவிக்கின்றன. I-வது பிரிவை முதலில் தயார்பண்ணும்போது முந்தியவருஷத்திய ஸ்ட்டேட்மெண்டை அனுசரித்து அதில், ஒவ்வொரு நபரினுடைய கைப்பற்றிலிருக்கும் புலங்களை நம்பர்வாரியாய் தாம், விஸ்தீரணம், தீர்வை இந்த விவரங்களுடன் புன்செய் நன்செய் பாபுவாரியாய் காட்டவேண்டியது. இதில் எந்த நம்பராவது கம்மி செய்யவேண்டியதாயிருந்தால் அதற்கெதிராய் ஷாராகலத்தில் அந்த மாறுதலின் விவரத்தை காணவேண்டியது. புலங்கள் புதிதாய் கைப்பற்றுக்கு வந்தால் அவைகளை கணக்கில் சேர்க்கவேண்டியது. II-வது பிரிவிலே பைசலாதி விவரங்களை அடியிற்கண்டபடி பதிவு செய்யவேண்டியது. வருஷவாரம்பத்தில் ரய்த்தாதீனத்திலிருந்த நிலங்களை புன்செய் நன்செய் பாபத்தின்கீழ் மொத்தமாய் எழுதவேண்டியது. ராஜிநாமாவின்பேரிலாவது அல்லது வேறே எந்தவிதமாயாவது விடுதலையான நிலங்களை அதில் கழித்து, மிகுதியோடு தர்காஸ்து செய்தாவது வேறே எந்தவிதமாயாவது கைப்பற்றிக்கொண்ட நிலங்களைச்சேர்த்துக்கொள்ளவேண்டியது. இந்த மொத்தத்தோடு 6-வது நம்பர் ஸ்ட்டேட்டுமெண்டை அனுசரித்து பின்னும் அதிக தீர்வைகள் ஏதாவது சேர்க்கவேண்டியதிருந்தால் சேர்த்து, பின்பு 5-வது நம்பர் ஸ்ட்டேட்டுமெண்டின் பிரகாரம் வஜாக்களைக் கழிக்கவேண்டியது. மிகுதியோடு 7-வதுநம்பர் ஸ்ட்டேட்டுமெண்டின்படி வஜாக்கள் போக நிற்கிற மிஸலேனியஸ் ரிவினியூவையும், லாண்டு செஸ் வில்லேஜ் செஸ் முதலாகிய லோகல்பண்டு ஸ்பெஷல் பண்டுகளையும் சேர்க்கவேண்டியது. இதினால் பிரதிரயத்தும் செலுத்தவேண்டியதாகிற யாவத்து மொத்தமும் எற்படுகிறது. இந்த ஸ்ட்டேட்டுமெண்டை வருஷாவருஷம் வேறே எழுதவேண்டியதில்லை. இதை ஒரு புஸ்தகமாய்தைத்து சுமார் ஐந்துவருஷத்திற்கு பிரதி ரய்தாதீனத்திலுண்டாகிற மாறுதல்களை எழுதுவதற்கு போதுமான காகிதம் விட்டு பிரதி நபருக்கும் இந்த பிரிவுகளை வரிசையாய் எழுதவேண்டியது. ஆயினும் உண்டாகிற மாறுதல்களினாலே இந்த புஸ்தகம் 5-

வருஷத்துக்கு முன்னேயாவது பின்னிட்டாவது எழுதவேண்டிய தவசியமாய் தாசில்தார்கள் அல்லது ஜமாபந்தி ஆபீசருக்கு தோன்றும் பக்ஷத்தில் அப்பொழுது வேறே எழுதலாம். படிக்கத்தெரிந்த குடிகள் இந்த ஸ்ட்டேட்டுமெண்டை பார்வையிட விரும்பினால் தாராளமாய் அவர்களைப் பார்வையிட விடவேண்டியதுமல்லாமல், அவர்கள் அதில் கையெழுத்து போடவேண்டுமென்றால் அப்படியே போடவிடவும் வேண்டியது. இந்த ஸ்ட்டேட்டுமெண்டை வேறே எழுதும்போது அசல் பிரதியை தாலூகா கச்சேரியில் வைத்துவைக்கவேண்டியது.

10-வது நம்பருக்கு உள்ளடக்கம்.

30. பவுதி பட்டாதார்களின் பெயரையும் யார்பேரில் பட்டாக்களை ஜாரிசெய்யவேண்டியதோ அந்த வார்சுகளின் பெயரையும் தெரிவிக்கிற ஸ்ட்டேட்டுமெண்டு ஜமாபந்திக்குமுன்னே 1-வது 2-வது 3-வது கலங்களை கர்ணம் எழுதி பூர்த்திபண்ணவேண்டியது. யார் பேரில் பட்டா பிறப்பிக்கவேண்டியதோ அந்த நபரைக்குறித்து முன்னதாய் உத்தரவுகள் செய்யப்பட்டிருநதால் அப்போது 4-வது கலத்தையும் எழுதவேண்டியது. அப்படி உத்தரவுகள் செய்யப்படாதிருந்தால் அந்தவிஷயம் தீர்மானமானபின்பு ஜமாபந்திகாலத்திலே 4-வது கலம் எழுதி பூர்த்திசெய்யப்படும். ஜமாபந்தி முடிந்தபின்பு இந்த ஸ்ட்டேட்டுமெண்டை தாலூகா ரிகார்டுகளில் தாகல்செய்யவேண்டியது.

11-வது நம்பர் ஸ்ட்டேட்டுமேண்டானது

31. ஒவ்வொரு ரயத்துக்கும் கொடுக்கப்படுகிற பட்டா நமூனா. இது முக்கியாம்சத்தில் 10-வது நம்பர் ஸ்ட்டேட்டுமெண்டுக்கு நகல் தான், இதில் அதிகமாயிருக்கும் அம்சம் ரயத்து செலுத்தவேண்டியது மாசாந்தர கிஸ்துவிவரம் ஒன்றுதான்.

11-வது நம்பருக்கு உள்ளடக்கம்.

32. மிஸலேனியஸ் ரிவினியூவுக்காக கொடுக்கப்படுகிற பட்டா நமூனா. ரயத்துக்கு லாண்டு ரிவினியூ பட்டாவாவது இனும் பட்டாவாவது தான் செலுத்தவேண்டிய தொகையை தெரிவிக்கும்படியான இதர தஸ்தாவேஜாவது இல்லாமலிருக்கும் விஷயத்தில் தான் மிஸ்லேனியஸ்பட்டா கொடுக்கப்படுறது.

## 12-வது நம்பர் ஸ்ட்டேட்டுமேண்டானது

33. பிரதி ஆசாமி பிரதிபாபத்தின் கீழும் செலுத்தவேண்டிய கிராமபைசலாதி கோஷ்வாரா அது ஒவ்வொரு பாபத்தின்படிக்கும் ஒவ்வொருநபரும் செலுத்துவதற்குள்ளாயிருக்கிற மொத்ததொகையை (tabular form) அட்டவணை ரூபமாகக்காட்டுகிறது. இதை 5-வது 6-வது 7-வது 9-வது 10-வது நம்பர் ஸ்ட்டேட்டுமெண்டுகளிலிருந்து தயார்பண்ணவேண்டியது. அதை ஜமாபந்தியிலே முடிவுசெய்யவேண்டியது. ஜமாபந்தி ஆபீசர் அவைகளில் கையெழுத்தும் முத்திரையும் போடவேண்டியது, ஜமாபந்திக்குப் பின்பு வேறே பாபத்துகள் ஏற்பட்டால் அவைகளை கீழே சேர்த்து, கணக்கை பசலி ஆகையில் முடிவுபண்ணி நபாகதி விவரங்களில்லாமல் கிராமமொத்தத்திற்கு ஒரு கோஷ்வாரா தாலூகாவிற்கு அனுப்பவேண்டியது. அசல் பிரதியை அடுத்தவருஷத்திய ஜமாபந்தியின்போது தாலூகாவில் தாகல்செய்யவேண்டியது.

## 13-வது நம்பர் ஸ்ட்டேட்டுமேண்டானது

34. ரோஜ்வாரி கிராம தண்டல்கணக்கு இந்த கணக்கின் 6 முதலிய கலங்களில் கண்டிருக்கிற (b) இதரபாபத்தை திரோஜரிகணக்குக்காக அடியில்கண்ட பாபத்துவாரி வசூலை விவரித்து காட்டும்படி அக்கவுண்டாண்டு ஜனரல் தெரிவித்திருக்கிறார்:—(1) பிராஸஸ் அதாவது டிமாண்டுபடி; (2) கல்வெட்டுகுழிவரவு; (3) ரிவினியூகோர்ட்டார் விதித்த அபராதமும் பறிமுதலும்; (4) ரெயில்வேயாருக்கு கொடுக்கப்பட்ட C. வகுப்பு நிலங்களின் குத்தகை; (5) முந்தி வருஷங்களில் சர்க்காரால் ஜாஸ்தியாக செலவுசெய்த தொகைகளில் வாப்சுபெற்றது; (6) சர்வே டிபார்ட்டுமெண்டாருடைய வரவு; (7) தீர்வைவசூல் நிறுத்தினபோது அதற்காக செலுத்தப்படும் வட்டி; (8) இந்தியாவிலிருந்து செய்துகொண்ட அப்பீல் நிமித்தம் இங்கிலாந்திலே ஆன கோர்ட்டுசெலவுக்காக இந்தியாவில் ஆனவசூல்; கிராமங்களில் இந்தபாபத்துகள் அனேகம் நேரிடுகிறதில்லை ஆகையால் பிரதிபாபத்திற்கும் கிராமகணக்கில் கலம் விடாமல் இருக்கிற பாபத்துக்குமட்டில் இரண்டொருகலம் விட்டால்போதும். பாக்கி வசூல் கிராமச்சாவடியிலாவது ஜனம் கூடுவதான பயிரங்கமான இடங்களிலாவது தவிர இதர இடங்களில் செய்யக்கூடாது. பணஞ்செலுத்

தும்போது கர்ணம் மணியக்கார் இருவரும் வந்திருந்து ரசீதில் கையெழுத்து பண்ணவேண்டியது. வசூலான பணங்களை உடனுக்குடனே அந்தந்த பாபத்தின்கீழ் ஜமைகட்டி ஆசாமி வாரி தினவாரி மொத்தம் போடவேண்டியது. பிரதிபாபத்து மொத்தமும் கிராம மொத்தமும் போடவேண்டியது. இருசால் அனுப்பும்போது கணக்கை முடிவுகட்டி, கிராம சிப்பந்திக்குக் கொடுக்கப்படுகிற சம்பளத்தையும் தேவாதாயம் முதலியவற்றிற்காக பேரீஸ்லிருந்து கொடுக்கப்படுகிற முஜராக்களையும் கழித்து பாக்கி ஏற்படுத்தவேண்டியது. வேறே கிராமங்களுக்காகச் செலுத்தப்படுகிற தொகையும் இந்த தண்டல் கணக்கில் சேர்த்துக்கொண்டு அந்த சங்கதியை ஷராகலத்தில் எழுதவேண்டியது. இந்தப்படி கணக்கை முடித்ததாக கர்ணமும் மணியக்காரரும் கையெழுத்துபோட்டு, இதைக்கொண்டு 14-வது நம்பர் ஸ்ட்டேட்டுமெண்டை எழுதி அசல்தண்டலை இருசால் நாமாவோடு தாலூகாவிற்கு அனுப்பவேண்டியது. வசூலாகிற பணம் எப்போதும் மணியக்காரருடைய வசத்திலிருக்கவேண்டியது. ஆனால் கர்ணமும் மணியக்காரனும் பணத்தைச் செலுத்துகிறவனுக்குக் கொடுக்கிற ரசீதில் கையெழுத்து பண்ணவேண்டியது; ஏனென்றால் தொகையைப் பெற்றுக்கொண்டதற்காக மணியக்காரனும் அதை கணக்கில் பதிவுசெய்துகொண்டதற்காக கர்ணமும் அப்படி கையெழுத்து போடவேண்டியது. ஒருபோதும் கர்ணம் பணத்தை வாங்கக்கூடாது.

### 14-வது நம்பர் ஸ்ட்டேட்டுமேண்டானது.

35. மேற்சொல்லிய 13 நம்பர் கணக்குக்குக் கோஷ்வாரா. இது ஆசாமிவாரி வசூல் தொகையைக்காட்டுகிறது. இதை 13-வது நம்பர் ஸ்ட்டேட்மெண்டைக்கொண்டு அந்தந்த தினத்திய வசூல் முடிந்தவுடனே தயார் செய்யவேண்டியது. 2-முதல் 5-வரையிலுள்ள கலங்களில் காணவேண்டிய விவரங்கள் 13-வது நம்பர் ஸ்ட்டேட்டுமெண்டு 8-வது கலத்திலிருந்து எடுத்தெழுதப்படும். வருஷத்தின் எல்லா மாதங்களின் வசூலைக் காட்டுவதற்காக பிரதி ஆசாமிக்கும் காய்தத்தின் ஒருபக்கம் விட்டால் போதுமானது. லாண்டு ரிவினியூ அண்டு செஸ்களின் கீழிருக்கிற பகாயா பாக்கித் தொகையை முந்திய வருஷத்திய ஸ்ட்டேட்மெண்டைக் கொண்டு அந்தந்த பசலிக்கு நேராய் எழுதவேண்டியது, ஆனால் நிகழும் பசலித்தொகையை ஜமா

பந்தி ஆய் பேரிஜ் நிர்ணயம் ஆகிறவனாயில் எழுதக்கூடாது. வட்டி நிமித்தம் ஏற்படுகிற டிமாண்டுத்தொகையை 17-வது நம்பர் ஸ்ட் டேட்டுமெண்டிலிருந்தெடுத்து மொத்தமாய் எழுதவேண்டியது. பணம் வசூலான உடனே அந்தந்த கலங்களில் தேதிவாரியாயும் மா சவாரியாரிம் எழுதவேண்டியது, வசூலாகமாட்டாதென்று கணக்கி லிருந்து நீக்கிவிடும்படி உத்தரவுசெய்யப்பட்ட துகையைக்கழித்து நிகரபாக்கி ஏற்படுத்தி அதை மறுவருஷத்திய ஸ்ட்டேட்டுமெண்டுக் குக்கொண்டு போகவேண்டியது. 7-வது 8-வது 9-வது கலங்களில் பழமுதல் புதுமுதல்பாக்கி வரவும் பத்து எழுதவேண்டியது. அடுத் த வருஷத்திய ஜமாபந்தியின்போது இந்த கணக்கை தாலூகாவிலே தாகல்செய்யவேண்டியது.

### 14-வது நம்பருக்கு A குறிப்பு உள்ளடக்கம்.

36. அனேகமாய் 14-நெம்பர் கணக்கை அனுசரித்தே தயார் செய்யவேண்டிய கோஷ்வாரா. இதில் கிராமமொத்தத்திற்கு வருஷ முடிவில் ஏற்படுகிற டிமாண்டு வசூல் பாக்கியைகாட்டவேண்டியது.

### 14-வது நம்பருக்கு B குறிப்பு உள்ளடக்கம்.

37. வசூலாகமாட்டாத பாக்கிகளை தெரிவிக்கப்பட்ட விவரங் களைக் காட்டுகிற ஸ்ட்டேட்டுமெண்டு. ஜமாபந்தி ஆபிசரிட உத்த ரவுநிமித்தம் இதை 14-வது நம்பர் ஸ்ட்டேட்டுமெண்டிலிருந்து தயார்பண்ணவேண்டியது, அவர் தான்செய்கிற உத்தரவை கடைசி கலத்திலே தன் கைப்பட எழுதவேண்டியது. வசூலாகமாட்டாதெ ன்று சிபாரிசுசெய்யப்பட்ட பாக்கியை அந்தநபருக்கு லாண்டு ரிவி னியூ செஸ்களின்கீழ் ஏற்பட்டிருக்கும் பாபத்துவாரி பேரீஜ மொ த்தத்தை அனுசரித்து தாமாஷாபிரகாரம் பாபுவாரியாய் விபஜிக்க வேண்டியது.

### 14-வது நம்பருக்கு C குறிப்பு உள்ளடக்கம்.

38. ஜாஸ்திவசூல் விவரங்களைக் காட்டுகிற ஸ்ட்டேட்டுமெ ண்டு, அதை 14-வதுநம்பர் ஸ்ட்டேட்டுமெண்டைக்கொண்டு தயார் செய்யவேண்டியது.

### 15. வது நம்பர் ஸ்ட்டேட்டுமேண்டானது.

39, இருசால்னுமா, இதில் 13-வது நம்பர் ஸ்ட்டேட்டுமெண் டில் நமூதாயிருக்கிற அந்தந்த பாபத்துக்களின்கீழான வசூல் விவரங்

களையும் கிராமத்தில் செலவானமொத்தத்தின் விவரங்களையும் தாலூகாவிற்கு அனுப்பப்பட்ட மொத்த நாணயவாரி விவரத்தையும் நமூனவின் அந்தந்த கலங்களில் கண்டிருக்கிற மற்ற விவரங்களையும் காட்டவேண்டியது. தாலூகாவுக்கு இருசால்வந்த உடனே தாசில்தாராவது தாலூகா சிரஸ்ததாராவது அந்த இருசால்னுமாவில் கையெழுத்துபண்ணவேண்டியது; இருசாலை எண்ணிப்பார்த்து அது சரியாயிருந்தபக்ஷத்தில் அந்தசங்கதியை இருசால்னுமாவுக் கடியிலே எழுதி சராப்பும் நகதிகுமஸ்தாவும் தாலூகா சிரஸ்ததாரும் தாசில்தார் கஸ்பாவிலிருந்தால் அவரும் கையெழுத்துபோட்டு, அந்த இருசால்னுமாவை இருசாலோடுகூடவந்த நபரிடத்தில் கொடுத்துவிடவேண்டியது. ரோஜ்வாரி தண்டல் சிட்டா மொத்தத்தை சரியாய் தணிகைசெய்து அதற்கும் இருசால்னுமாவுக்கும் சரிபார்க்கவேண்டியது. கிராமத்தில் வசூலானபணத்தை விசேஷகாலம் இருசால்பண்ணுமல் நிறுத்திவைத்துக்கொண்டதாய் ஏற்பட்டால், அதைக்குறித்து விவரங்கேட்கவேண்டியது. இப்போது கிராமத்திலிருந்து அனுப்பப்படுகிற இருசால்னுமா இரண்டாம் பிரதிக்கு பதிலாய் இந்த தண்டல்கணக்கை கச்சேரியில் வைத்துக்கொள்ளவேண்டியது.

### 16. வது நம்பர் ஸ்ட்டேட்டுமேண்டானது.

40. மாசக்கடைசியில் பிரதிநபரும் செலுத்தவேண்டிய பசலிவாரிபாக்கி ஜாபிதா. கிஸ்திமொத்தம் ஏற்படுத்துவதில், பட்டாகொடுப்பதற்கு முன்னே முந்திப வருஷத்து பேரீஜையும் பின்னிட்டு மாறுதல்களேதாவதிருந்தால் அதுகளை அனுசரித்தும், பட்டா கொடுத்தபின்பு அதில்கண்டிருக்கிற வாயிதாக்களின்படிக்கும், கிஸ்தி ஏற்படுத்தப்படும்; 14-வது நம்பர் ஸ்ட்டேட்டுமெண்டிலிருந்து வசூல்மொத்தத்தை தாகல்செய்து ஒவ்வொரு மாசத்திற்கும் பாக்கி ஏற்படுத்தவேண்டியது. ஸ்ட்டேட்டுமெண்டுக்கு அடியிலே, கிராமமொத்தத்துக்கும் பாபத்துவாரியாய் பசலிவாரியாய் டிமாண்டு வசூல் பாக்கி இவைகளைதெரிவிக்கிற ஒருகோஷ்வாரா போடவேண்டியது. தாசில்தார் ஆவசியமில்லாமல் டிமாண்டு ஜாரிபண்ணும்பொருட்டு, இந்த ஸ்ட்டேட்டுமெண்டை இருசாலோடு தாலூகாவிற்கு அனுப்பவேண்டியது. இதை தாசில்தார் உடனேகர்ணனுக்கு வாப்சு செய்யவேண்டியது. அனுகூலமில்லாத பக்ஷத்தில் கணக்குவந்த

5 தினத்திற்குள் அதை தப்பாமல் அனுப்பிவிடவேண்டியது. கர்ணம் ஸ்டேட்டுமெண்டை தயார்செய்து இருசாலோடு அனுப்புவதற்கும், தாசில்தார் அந்த ஸ்டேட்டுமெண்டை ஆலசியஞ் செய்யாமல்திரும்பி அனுப்பிவிடுவதற்கும் அனுகூலமாயிருக்கும்பொருட்டு, கிராம கணக்குகளை இருசால்தேதிக்கு இரண்டொரு தினத்திற்கு முன்னிட்டு முடிவுசெய்யவேண்டியது. மேலும் கிராமத்திலிருந்து இருசால் அனுப்புவதில் எல்லாகிராமத்திய இருசாலும் 16-வது நம்பர் கணக்கும் ஏககாலத்தில்வராமல் ஒவ்வொருதினத்தில் கொஞ்சம் கிராமங்களுக்குமாத்திரம் அனுப்பும்படியாய் ஏற்பாடுசெய்யவேண்டியது. கணக்குகளை பசலியுடன் முடிவுசெய்து மறுவருஷத்திய ஜமாபந்தியின்போது தாலுகாவில் தாகல்செய்யவேண்டியது.

17. வது நம்பர் ஸ்டேட்டுமெண்டானது.

41. பிரதிநபரும் செலுத்தவேண்டிய வட்டியைக்குறித்த டிமாண்டு வசூல் பாக்கி இவற்றின் விவரங்களைத் தெரிவிக்கிறகணக்கு புது உத்தரவுகளின்படி ரிவினியூபாக்கிக்காக பசலி முடிவுவரையில் வட்டிபோடப்படாது. இதற்கு திர்ஷ்டாந்தம் ஒரு குடியானவன் கவரன்மெண்டுக்கு 500 ரூபாய் பாக்கியிருந்து பசலிக்குள் 400 ரூபாய் செலுத்திவிடும்பக்ஷத்தில் அந்த மொத்தத்தை வாய்தாமீறி செலுத்தியிருந்தாலும் கிஸ்திபந்தி பிரகாரம் செலுத்தத் தவறிப்போனானென்று வட்டி போடக்கூடாது; ஆனால் பசலி முடிவில் பாக்கியாய் நிற்கிற 100 ரூபாய்க்குமாத்திரம் வட்டி விதிக்கப்படும். மேலும் மாசத்தில் சில்லறை தினங்களுக்கு வட்டிகட்டக்கூடாது. எப்படி யென்றால் மேற்சொல்லிய பாக்கியில் 50 ரூபாய் அடுத்த ஜுலைமீ 29உயில் செலுத்தப்பட்டால், அந்த மாசத்திற்கு வட்டியானது பாக்கியிருக்கும் தொகைக்குமாத்திரமே போடப்படுமேயொழிய செலுத்தினதொகைக்கு அந்த 29 நாளுக்கு வட்டிபோடப்படாது. இந்த ஸ்டேட்டுமெண்டை 16-வது நம்பர் ஸ்டேட்டுமெண்டோடு தாலுகாவிற்கு அனுப்பவேண்டியது.

18. வது நம்பர் ஸ்டேட்டுமெண்டானது.

42. ரசீது நமூனா. ரயத்தான் செலுத்தவேண்டிய மொத்தத்திற்காக அந்த வருஷத்திலே செலுத்திய பணத்தை வாங்கிக்கொண்டதற்கு தாக்கலாவாக அவனுக்குக்கொடுக்கவேண்டியது. அப்போ

தைக்கப்போது குடிகளுக்குக் கொடுக்கப்படும்பொருட்டு, தாசில்தார் நம்பரும் முத்திரையும்போடப்பட்ட காலிரசீது புஸ்தகங்களை மணியக்காரனுக்கு அனுப்பவேண்டியது. பழமுதல் பாக்கிக்காவது புது முதல் பாக்கிக்காவது பணஞ்செலுத்தின உடனே அதை வேண்டிய விவரங்களுடன் அந்த ரசீதுபுஸ்தகத்தில் தாக்கல்செய்து மணியக்காரனும் கர்ணமும் அதில் கையெழுத்து போடவேண்டியது. ரசிதிலே எண்களையும் பாபத்துகளையும் தமிழிலெழுதவேண்டியது, செலுத்தப்பட்ட மொத்ததொகையை எழுத்தாலும் எழுதவேண்டியது. யார் தங்களுக்கு நிலத்தில் பாத்தியதையுண்டாயிருப்பதினாலே பட்டாதார்களுக்காக பணஞ்செலுத்துகிறார்களோ அவர்களுக்கு சப்ரசீதுகள் கொடுக்கப்படும். பட்டாதார் கோறினபோது சப்ரசீதுகளிலுள்ள மொத்தம் அவர்களுடைய ரசீதிலே எடுத்தெழுதப்படும். சப்ரசீதானது அசல் ரசிதின் நமூனாப்படியே யிருக்கும், அதில் "சப்ரசீது" என்கிற வார்த்தைகள் குறுக்காய் எழுதியிருக்கும்.

19. வது நம்பர் ஸ்ட்டேட்டுமேண்டானது.

43. பிரஜைகளின் ஜனனமரணங்களையும் கால் நடைகளுக்கு வியாதியையும் மரணத்தையுங்குறித்த ரோஜ்வாரி ரிஜிஸ்தர். இதை இரட்டைப்பிரதியாக எழுதுவதற்கு வெற்று நமூனாக்கள் கர்ணத்திற்குக் கொடுக்கப்படும். ஒரு பிரதியை அடுத்தமாசம் ஐந்தாந்தேதிக்குள் தாலூகாவிற்கு அனுப்பிவிடவேண்டியது. மற்றொரு பிரதியை பசலிமுடிந்தபின்பு இரண்டுமாசத்திற்குள் தாலூகாக்ச்சேரியில் தாக்கல் செய்யவேண்டியது. III-வது பிரிவிலுள்ள அந்தந்த கலங்கள் ஸ்பஷ்டமாயிருக்கிறது. ஜாட்டியம் விஷயத்திலே, அது சம்பவித்தபோது 13-வது கலத்திலெழுதவேண்டியது. அந்தப்பிராணி மரணமடைகிறவரையிலாவது சொஸ்தமாகிறவரையிலாவது 14-வது 15-வது கலங்களை எழுதாமல் வைத்திருக்கவேண்டியது. எந்த மாசத்திற்காகிலும் புதுசாய் ரிஜிஸ்தர் எழுதும்போது, முந்தியமாசத்து ரிஜிஸ்தரில் ஜாட்டியம் நிவர்த்தியானதாகவாவது மரணமடைந்ததாகவாவது எழுதாமலிருக்கிற கால்நடைகளை முன்னே எழுதி புதிசாய் வியாதிசம்பவித்த கால்நடைகளை எழுதவேண்டியது.

20. வது நம்பர் ஸ்ட்டேட்டுமேண்டானது.

44. இரண்டு பிரிவாயிருக்கிறது. முதல் பிரிவில் கிராமத்தில் பெய்கிற மழையை காட்டவேண்டியது. அதை சாதாரணமாய் ஜன

ங்களுக்குள் வழங்குகிறபடி இத்தனைபதுனு (செவி) மழையென்று எழுதவேண்டியது. புழுதிநிலத்தை உழுவதற்குப் போதுமான அவ்வளவுமழையை ஒருபதினு (செவி) யென்று சொல்லப்படும். ஷராக்கலத்திலே, காலஸ்திதியைப்பற்றியும் ஜனங்களுடைய ஆரோக்கியத்தையும் கால்நடைகளின் ஸ்திதியையும் அம்மைகுத்தப்பட்டவர்கள் இத்தனைபேரென்பதையும் முக்கியமானதாயிருக்கிற வேறே விவரங்களையுங்குறித்து கர்ணம் எழுதவேண்டியது. இரண்டாம் பிரிவில் கிராமத்திலே பிரதி ஜலாதாரத்துக்குவந்த ஜலத்தையும் செலவான ஜலத்தையும் காட்டவேண்டியது. இந்தப்பிரிவுகளை கர்ணமும் மணியக்காரனும் கையெழுத்துபோட்டு 1-வது நம்பர் ஸ்டேட்டுமெண்டோடு ரிவினியூ இன்ஸ்பெக்டருக்கு அனுப்பவேண்டியது. அவர் தன்னுடைய கணக்குகளில் எழுதவேண்டிய தாகல்களை எழுதிக்கொண்டு தன்னுடைய கையெழுத்து குறிப்போடு திரும்பி அனுப்பவேண்டியது.

## 21-வது நம்பர் ஸ்டேட்டுமெண்டானது.

45. இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது, முதல்பிரிவில் பட்டாதார் இனம்தார் வகைரா விவரங்களையும், இரண்டாவதுபிரிவில் அவர்களுக்கிருக்கிற விவசாயசம்பந்தமான கால்நடை முதலிய விவரங்களையும் காட்டவேண்டியது. அந்தந்த கலங்கள் ஸ்பஷ்டமாயிருக்கிறது. முதல்பிரிவு 1-வது பாபத்தின்கீழ் ரயத்வாரி பூமிபட்டாதாரர்களை தனிபட்டாதாரர்களென்றும் கூட்டுப்பட்டாதாரர்களென்றும் பிரித்து தாகல்செய்யவேண்டியது. 2-வது பாபத்தின்கீழ் இனும்தாரர்கள் எல்லாரையும் குயிட்டுகொண்டு இருந்தாலும் இராவிட்டாலும் தாகல்செய்யவேண்டியது. 3-வது பாபத்தின்கீழ் ஒரே தடவையாய் கொஞ்சம்தொகையை செலுத்தி ரயத்வார் நிலத்தின் தீர்வையையாகிலும் இனம் நிலத்தின்பேரிலுள்ள குயிட்டுரெண்டை யாகிலும் சாசுவதமாய் மாப் பண்ணிக்கொண்ட நிலங்களின் விவரங்களை காட்டவேண்டியது. 4-வது பாபத்தின்படி சம்பவிப்பது அபூர்வமாயிருக்கும், தரிசு நிலங்களைப்பற்றிய நிபந்தனைகள் அமுலிலிருக்கிற ஜில்லாக்களில் மாத்திரம் அந்த பாபத்தின் பிரகாரம் விவரமெழுதப்படும், இந்தப்பிரிவைச்சேர்ந்த 4 வது கலத்திலே கணக்கில் ரிஜிஸ்தரான பங்குக்காரர்களை மாத்திரம் சேர்க்க

வேண்டியதேயல்லாமல், கணக்குகளிலே தங்களுடைய பெயர் நமூதில்லாமல் யாதொரு அனுபோசமாத்திர மிருக்கிறவர்களைச் சேர்க்கக்கூடாது. II-வது பிரிவிலே நான்குவருஷத்திற்கு மேற்பட்ட வயசுள்ள மாடுகளை 2, 3, 4, 5 - வது சலங்களில் குறிக்கவேண்டியது, நான்குவயசுக்குட்பட்டமாடுகளை 6-வது 7-வது கலங்களில் குறிக்கவேண்டியது. இந்த ஸ்ட்டேட்டுமெண்டை வருஷாவருஷம் தயார் செய்து பிரதிவருஷத்திலும் ஏப்ரில்மீ 15உக்குமுன் தாலூகாவிற்கு அனுப்பவேண்டியது.

22-வது நம்பர் ஸ்ட்டேட்டுமெண்டானது.

46. சிகஸ்த்திலும் தூரஸ்திலுமிருக்கிற சர்க்கார் தசபந்தம் சொந்தம் ஜலாதாரவேலைகள் இத்தனையென்று காட்டுகிறது. மாதிரியாகக் காட்டப்பட்ட நமூனுவில் கண்டிருக்கிறபடி, ஜலாதாரங்களை அவைகளின் ஆயக்கட்டைப்பிடித்து தர்ஜேவாரியாய் விபஜிக்கவேண்டியது. ஜலாதாரங்களின் வாஸ்தவமாயிருக்கிற ஸ்திதியை அனுசரித்து இந்த ஸ்ட்டேட்டுமெண்டை தயார்செய்து பசலி முடிந்தபின்பு ஒருமாசத்திற்குள் தாலூகாவிற்கு அனுப்பவேண்டியது.

23-வது நம்பர் ஸ்ட்டேட்டுமெண்டானது.

47. கிராம தர்ஜேவாரிகணக்கு, இது இதுவரையில் ஐந்துவருடத்திற்கு ஒருதடவை தயார்செய்யப்பட்டது. இனிமேல் வருஷாவருஷம் 12-வது நம்பர் ஸ்ட்டேட்டுமெண்டிலிருந்து தயார் செய்யப்படும். செஸ்களும் மேனாகளும்போக நின்றபேரீஜ் அதாவது முஜராவும் தண்ணித்தீர்வையும்சேர்ந்த மயத்வாரி பேரீஜை அனுசரித்து பட்டாதார்களை தர்ஜேவாரியாய் எழுதவேண்டியது.

---

### இரிகேஷன் ரிவினியூ கணக்குகளை தயார்செய்வதற்காக ரிவினியூ செட்டில்மேண்டு அண்டு அக்ரிகல்சர் டைரேக்ட்டர் பிறப்பித்த பத்ததிகள்.

இந்த கணக்கின் உபயோகமாவது—

(1) ஜலம் பாய்ச்சப்பட்ட நிலங்களின் தீர்வையில் பாய்ச்சலுக்குள்ள பாகத்தை தெரிவிக்கிறது.

(2) புதுசாய் பாய்ச்சலாதாரங்கள் உண்டாவதினலாவது பழய ஆதாரங்களை தூரஸ்து அல்லது விருத்திசெய்வதினலாவது உண்

டாகும் பாய்ச்சல் விருத்தியையும் ஜாஸ்தி சாகுபடியையும் தெரிவிக்கிறது.

(3) அப்படிப்பட்ட பாய்ச்சலாதாரங்களால் உண்டாகும் லாபநஷ்டத்தையும் தெரிவிக்கிறது.

மேலே குறிக்கப்பட்டிருக்கிற முதலாவது அம்சத்தைப்பற்றி மாத்திரமே இதில் பத்ததிகள் சொல்லப்படுகின்றன.

2. இந்த பிரசிடென்சியில் ஜலம் பாய்ச்சப்பட்ட நிலங்களுக்கு தீர்வை (2) விதமாய் ஏற்பட்டிருக்கிறது.

(1) கிருஷ்ணா, கோதாவரி டெல்டாக்களில் நிலத்தீர்வை வேருகவும் தண்ணீர்தீர்வை வேருகவும் ஏற்பட்டு தண்ணீர்தீர்வை ஒரே ரேட்டுப்படி விதிக்கப்படுகிறது.

(2) இந்தபிரசிடென்சியின் மற்ற இடங்களில் ஜலம் பாய்ச்சப்பட்ட நிலங்களுக்கு நிலத்துக்கும் நீருக்கும் பிரத்தியேகமாய் தீர்வை ஏற்படாமல் ஒரேமொத்தமாய் நன்செய் தீர்வை ஏற்பட்டிருக்கிறது. இந்த கணக்குகள் தயார்செய்வதற்கு நிலத்தீர்வையையும் தண்ணீர் தீர்வையையும் பாகிக்கவேண்டியது அவசியமாயிருக்கிறபடியால், அவைகளை அடியிற்கண்ட மாதிரியாய் பிரிக்கவேண்டியது :—

மொத்தமாய் தீர்வை யேற்பட்டு ஜலம் பாய்ந்துவருகிற எல்லா பூமிகளையும் ஒருபோக நன்செய் நிலமென்ருவது இருபோக நன்செய் நிலமென்ருவது கண்டு தீர்வை யேற்பட்டிருக்கிறது. அவைகளின் தீர்வையை நிலத்துக்கும் நீருக்கும் அடியிற்கண்டமாதிரியாய் பாகிக்கவேண்டியது.

I. ஒருபோக நன்செய்.

(1) புது செட்டில்மெண்டு ஆகாத இடங்களில் பாய்ச்சலாதாரம் எப்போது உண்டானதோ அல்லது விருத்திபண்ணப்பட்டதோ அல்லது எதுமுதற் கணக்குகள் வைக்கப்பட்டிருக்கிறதோ அவ்வருஷத்துக்குமுன் 5 வருஷத்திய புஞ்சை தீர்வையை சருசரிசெய்து கிடைத்த தீர்வைரேட்டை ஜலம்பாய்ந்த மொத்தவிஸ்தீர்ணத்துடன் பெருக்கி, வந்த தொகையை நிலத்துக்குள்ள பாகமாகவும் பாக்கிதொகையை நீருக்குள்ள பாகமாகவும் வைத்துக்கொள்ளவும். கிராம சருசரி நிர்ணயிக்கக்கூடாமையாக இருந்தால் தாலூகா சருசரியை

யாவது அதுவுமில்லாவிட்டால் ஜில்லா சருசரியையாவது எடுத்துக் கொள்ளவும்.

எப்படியென்றால் மேல்காட்டியபிரகாரம் தீர்மானிக்கப்பட்ட சருசரி புஞ்சைரேட்டு ஏகரா 1-க்கு 2 ரூபாய் என்றும் (10,000) ரூபாய் மொத்த தீர்வையுள்ள (1,000) ஏகர் நஞ்சை நிலங்களிருக்கிறதென்றும் வைத்துக்கொள்வோம். இந்த மொத்த தீர்வையில் (2,000) ரூபாய் நிலத்துக்கும் பாக்கி (8,000) ரூபாய் நீருக்குமாகிறது.

(2) புது செட்டில்மெண்டு ஆன இடங்களில் நஞ்சைவகுப்புக்கும் இனத்துக்கும் அந்த கிராம புஞ்சை குருப்பை அனுசரித்துயென்ன புஞ்சைதீர்வை விழுமோ அதை நிலத்துக்கும் மொத்த தீர்வையின் மற்ற பாக்கியை நீருக்கும் வைக்கவும்.

அது எப்படியென்றால் ஒரு குறித்த கிராமத்தில் (10,000) ரூபாய் மொத்த தீர்வையுள்ள $\frac{1}{4}$ நஞ்சை ஆயிரம் ஏகரா யிருக்கிறதாகவும் $\frac{1}{4}$ புஞ்சைக்கு ஏகரா 1 க்கு 2 ரூபாய்வீதம் தீர்வை ஏற்பட்டிருக்கிறதாகவும் வைத்துக்கொள்ளுவோம். அந்த மொத்த தீர்வையில் (2,000) ரூபாய் நிலத்துக்கும் பாக்கி (8,000) ரூபாய் நீருக்கும் வைக்கவேண்டியது.

II. இருபோக நஞ்செய்.

இருபோக நிலங்களில் வருஷத்தில் இரண்டுதரம் நன்செய் பயிர் ஆகிறதென்கிற உத்தேசத்துடன் இரண்டு போகத்துக்கும் சேர்த்து மொத்த தீர்வை ஏற்பட்டிருக்கிறது.

இந்த பிரசிடென்சியில் சர்க்கார் ஜலமில்லாமல் முதல்போக நன்செய் நிலத்தில் எந்தவிதமான இரண்டாம்போகம் சாகுபடிபண்ணிலும் அதற்காக தீர்வை வசூல்பண்ணுகிறதில்லை யாகையால் இரண்டாம் போகத்தின் தீர்வை பூராவும் தண்ணீர் தீர்வையென்று சொல்லவேண்டியது, சாசுவத இருபோக நிலத்தீர்வையை பாகிப்பதற்கு நாம் முதலில் இரண்டாம்போகத்துக்கு உள்ள பாகத்தை நிர்த்தாரணஞ் செய்துக்கொள்ளவேண்டியதாக இருக்கிறது. அதில் யாதொரு கஷ்டமில்லை.

திருநெல்வேலி தவிர மற்ற எல்லாவிடங்களிலும் சாசுவத இருபோக நிலத்தின் தீர்வை அதே வகுப்பும் இனமுமுள்ள ஒருபோக

நிலத்தின் தீர்வைக்கு ஒன்றரைப்பங்காயிருக்கிறது, ஆகையால் இருபோகநிலத்தின் தீர்வையில் 3-ல் 1 பங்கு சாதாரணமாய் இந்த பிரசிடென்சி முழுமைக்கும் மாமூல் 2-வது போகத் தீர்வையாகிறது.

திருநெல்வேலியில் இருபோகநிலத்தின் தீர்வை ஒருபோகநிலத் தீர்வைக்கு $1\frac{2}{3}$ பங்காயிருக்கிறது, ஆகையால் திருநெல்வேலியில் இருபோகநிலத்தின் மொத்தத் தீர்வையில் 5-ல் 2-பங்கு மாமூல் இரண்டாம் போகத்துக்கு ஆகிறது.

3. புது செட்டில்மெண்டு ஆன இடங்களில் இருபோக நிலங்களுக்கு இரண்டாம்போகத்தீர்வை சாசுவதமாய் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது, இரண்டாம்போகம் சாகுபடிக்கு வேண்டிய ஜலம் எந்தெந்த இடங்களில் நிஷ்கரிஷையாய் கிடைக்கமாட்டாதோ அந்த விஷயங்களில் ஜலக்குறைவுக்கு தக்கபடி மாமூலான தண்ணீர் தீர்வைக்கு குறைந்த தீர்வைக்கு சாசுவதமாய் ஒப்புக்கொள்ளும்படி அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி சாசுவத தீர்வைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டவைகளில் உயர்ந்த ரேட்டு திருநெல்வேலியில் முதல்போகத் தீர்வையில் பாதியாகவும் மற்ற ஜில்லாக்களில் 3-ல் ஒருபங்கும் அதற்கு கம்மியாகவு மிருக்கிறது.

முதல்போகத் தீர்வையில் பாதியாகவிருக்கும்போது இரண்டாம்போகத்துக்கு உள்ளபாகம் மொத்தத் தீர்வையில் 3-ல் ஒரு பங்காகிறது

முதல் போகத் தீர்வையில் 3-ல் ஒரு பங்காயிருக்கும்போது இரண்டாம்போகத்துக்கு உள்ளபாகம் மொத்தத்தீர்வையில் 4-ல் ஒரு பங்காகிறது.

கிருஷ்ணு கோதாவரி டெல்டாக்களில்கூட சாசுவத இருபோகத் தீர்வைக்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறது, அவ்விடங்களில் குறைந்த தீர்வைக்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறது ஜலக்குறைவினுலல்ல ஆனுல் இரண்டாம்போகம் நெல்பயிர் சாகுபடிசெய்ய முயற்சிசெய்யும் பொருட்டாவது ஆல்லது வருஷ முழுமைக்கும் ஜலம் வேண்டியிருக்கிற கரும்பு, வாழை, வெற்றிலை முதலான குறிப்பிட்ட சில விசேஷ பயிர்களை சாகுபடிசெய்ய உத்ஸாகப்படுத்தும் பொருட்டாவது குறைந்த தீர்வைக்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

மேலும் கிருஷ்ண கோதாவரி டெல்டாக்களிலும் மற்ற இடங்களிலும் குறைந்த தீர்வைக்கு ஒப்புக்கொடுக்கிறதில் மற்றொரு வித்தியாசமிருக்கிறது. அதாவது கிருஷ்ண கோதாவரி டெல்டாக்களில் (5) வருஷத்துக்குக் குறையாமல் குறிப்பிட்ட காலம் வரைக்குமே அப்படி கொடுக்கப்படுகிறது, மற்ற இடங்களில் புது செட்டில்மெண்டு இருக்கிற காலம்வரையிலு மிருக்கிறது.

மொத்த தீர்வையில் முதல்போகத்துக்குள்ள பாகத்தை மேற்சொன்னமாதிரியாய் பாகிக்கவும்.

அது எப்படியென்றால் ஒரு ஏகரா இருபோக நஞ்சை நிலத்தின் மொத்த தீர்வை மாமூல் 2-வது போக ரேட்டுப்பிரகாரம் 18-ரூபாயாக வைத்துக்கொள்வோம். இதில் 3-ல் 1-பங்கு அதாவது

| தீர்வை. | | | |
|---|---|---|---|
| முதல் போகம். | | 2-வது போகம். | மொத்தம். |
| நிலத்துக் குள்ள பாகம். | நீருக்குள்ள பாகம். | தண்ணீர் தீர்வை. | |
| ரூ. 4 | ரூ. 8 | ரூ. 6 | ரூ. 18 |

6-ரூபாய் 2-வது போகத் தீர்வையாகிறது அதே வகுப்பும் இனமுமுள்ள 1-ஏகரா புஞ்சை நிலத்தின் ரேட்டு 4-ரூபாயாக வைத்துக் கொள்வோம் இப்படியாக மேற்கண்ட மொத்த தீர்வையை பாகிக்கும்போது அடியில் கண்டமாதிரியாய் ஏற்படுகிறது.

4. நஞ்சை இனம் அதாவது தீர்வை மாப்பாய் ஜலம் பாய்ச்சப்பட்ட இனங்களின் குயிட்டுரெண்டு அதேமாதிரியாய் பாகிக்கப்படுகிறது, ஒருபோக இனம்நிலங்களின் குயிட்ரெண்டை 3 ல் 1-பங்கு நிலத்துக்கும் மற்ற 3-ல் 2-பங்கு நீருக்குமாக பாகிக்கவேண்டியது இருபோக இனம் நிலங்களின் மொத்த குயிட்ரெண்டில் 3 ல் 1-பங்கு 2-ம் போகத்திக்கும் மறற 3 ல் 2-பங்கை ஒருபோக நில மாதிரியாய் பாகிக்கவேண்டியது.

5. ஜமீன் கிராமங்களில் தீர்வை மாப்பாய் பாய்ச்சலுள்ள மாமூல் நன்செய்நிலங்களுக் குள்ள பேஷ்கஷை நீருக்கும் பாகிக்க ஆதாரமில்லாததினுல் அதைக்குறித்து பிரயத்தினப்படவில்லை. அப்படிப்பட்ட நிலங்களின் விஸ்தீர்ணத்தைமாத்திரம் தாகல்செய்யவும்.

6. பிரத்தியேகமாய் ஏற்பட்டிருக்கிற தண்ணீர் தீர்வையும் மொத்த தீர்வையிலிருந்து மேற்சொன்னமாதிரி பாகித்து எடுக்கப்படுகிற தண்ணீர் தீர்வையும் சேர்ந்து நஞ்சை நிலங்களுக்கு நீருக்குள்ள பாகமாகிறது.

7. இந்த ரெவினியூ கணக்கு தயார்செய்வதற்காக எ. நமூனுபாரம் ஒன்றே எல்லா பாய்ச்சலாதாரங்களுக்கும் போதுமானதாயிருக்கிறது.

சர்க்கார் ஜமீன்தாரி இனும் ஆகிய மூன்று பாபத்து பாய்ச்சல் விவரமும் இதில் அடங்கியிருக்கிறது.

சர்க்கார் உட்பிரிவு.

(1) மாமூல் நன்செய்,—அதாவது புது பாய்ச்சலாதாரம் ஏற்பட்டதினுல் எடுபட்டுபோன இதற பாய்ச்சலாதாரத்தினுல் ஜலம் பாய்ச்சப்பட்டும் கைப்பற்றிலுமிருந்து இப்பொழுது பாயச்சலாதாரம் உண்டானதுமுதல் இதனுல் ஜலம் பாய்ச்சப்பட்டு விடாமல் கைப்பற்றிலிருந்துகொண்டிருக்கிற நிலம்.

(2) புன்செயில் நன்செயும் புன்செய்ப்பயிருக்கு ஜலம் பாய்ச்சப்படுவதும், அதாவது முதல் தடவை ஜலம் பாய்வதற்குமுன் கைப்பற்றிலிருந்த புஞ்சைநிலம்.

(3) தரிசு சாகுபடி அதாவது பாய்ச்சலுக்கு வரும்போது தருசாயிருந்த நிலம்.

(4) சில்லரைபாபத்துள்ள அதாவது மேல்சொன்ன பாபத்துகளாயிராத அதாவது பட்டாவில்சேராத எல்லா பாபத்துகளும்.

ஜமீன்தாரி இனும்,—இவைகள் இரண்டுவகுப்புகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன.

(1) ஜலம்பாய்ந்து தீர்வை ஏற்பட்டது.
(2) தீர்வை மாப்பாய் ஜலம் பாய்ச்சப்பட்டது.

தீர்வை மாப்பாய் ஜலம் பாய்ச்சப்பட்ட நிலமானது சர்க்கார் மாமூல் நன்செய்க்கு சமானம். பாய்ச்சல் ஏற்படுவதற்கு முன்னிட்டிருந்த ஜமீன் பாய்ச்சல் இதனால் எடுபட்டுபோய்விட்டபடியால் அதற்கு பிரதியாய் அப்படிப்பட்ட பாய்ச்சலுள்ள நிலங்களுக்கு தீர்வை மாப்பாயிருக்கிறது. சர்க்கார் பாய்ச்சல் உண்டானதுமுதல் ஜலம் பாய்ந்துவருகிற நிலம்மாத்திரமே ஜலம் பாய்ந்து தீர்வை ஏற்பட்ட அம்சத்தின் கீழ் வருகிறது.

8. நன்செய் நிலங்களுக்கு ஜலம் பாய்ந்ததற்குள்ள பாகத்திலிருந்து வருஷவாரி சில வஜாக்கள் செய்யப்படுகின்றன. அவைகள் 3-விதமாக பிரிந்திருக்கின்றன. அவைகளாவன, காயம், அங்காமி, காலஸ்திதியை அனுசரித்து கிரமமாய் கொடுக்கப்படுகிற வஜா.

காயம் வஜா, இதில் அடியில்கண்ட அம்சங்கள்மாத்திரம் சேர்ந்திருக்கின்றன.

(1) கிருஷ்ணா கோதாவரி டெல்டாக்களிலுள்ள ஜமீன்தார்களின் எஸ்டேட்களில் தீர்வை ஏற்பட்டிருக்கிற நிலங்களுக்கு தண்ணீர்தீர்வை வசூல்செய்வதற்காக ஜமீன்தார்களுக்கு 100-க்கு 10-விழுக்காடு தள்ளி கொடுக்கப்படுகிறது காயம் வஜா.

(2) கிருஷ்ணாஜில்லா குடிவாடா தாலூகா கொலேர்பாகத்தில் பாது இனாம்தார்களுக்கு தள்ளிக்கொடுக்கப்படுகிற தொகையில் ஜலத்துக்குள்ள பாகம் காயம் வஜா சால்வ அல்லது முதல்போக 100-க்கு $6\frac{1}{4}$-விழுக்காடும் தாள்வா அல்லது 2-வது போகத் தீர்வையில் 100-க்கு $12\frac{1}{2}$-விழுக்காடு தள்ளிக் கொடுக்கப்படுகிறது.

(3) நன்செய்நிலங்களின் மொத்த தீர்வையிலிருந்து கழிக்கப்பட்டு கொடுக்கப்படுகிறமேனா அல்லது கிராம உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தில் பாய்ச்சலுக்குள்ள பாகம் காயம் வஜா.

(4) மொத்த நன்செய் தீர்வையுடன் சேர்க்கப்பட்டும் அதிலிருந்து கழிக்கப்பட்டுமிருக்கிற ரோட்ஸெஸ்ஸில் பாய்ச்சலுக்குள்ள பாகம் காயம் வஜா.

குறிப்பு.—கோதாவரி ஜில்லாவில் நிலத்தீர்வையுடன் சேர்ந்திருக்கிற ரோட்ஸெஸ்ஸையும் கிருஷ்ணாஜில்லா மசலிபடாம் பாகத்

தில் நிலத்தீர்வையுடன் சேர்ந்திருக்கிற ரோட் செஸ்ஸையும் வில் லேஜிசெஸ்ஸையும் காயம் வஜா கீழ்கொண்டுவர வேண்டியதில்லை. அவைகளை நிலத்தீர்வையிலிருந்து கழித்து பாக்கி துகையை கணக்கில் தாகல்செய்யவேண்டியது.

(5) சிடெட் ஜில்லாக்களில் தசபந்தம் தார்களுக்கு கொடுக்கப்படும் வஜா காயம் வஜா.

அங்காமி வஜா,—நட நீர்பாய சாத்தியமில்லாத மேடான இடங்களில் குடிகள் சொந்தசெலவில் இறைவை சாமான்கள்வாங்கி தண்ணீர் இறைத்துக்கொள்ளுகிறார்கள் அதற்காக தள்ளிகொடுக்கப்பட்டது அங்காமி வஜா ஷை பாபத்துக்காக சாதாரணமாய் தளிக் கொடுக்கப்படுகிறது. ஏகராவுக்கு 1 - ரூபாய். சில செட்டில் மெண்டுகளில் மொத்தத் தீர்வையில் 4ல் ஒருபாகமாகவுமிருக்கிறது.

குறிப்பு.—செட்டில்மெண்டு ஜாஸ்தியை சில கெடுவுக்குள் செலுத்தும்படியாய் ஏற்பட்டிருககிற தறகதி அல்லது முனைசப்கம்பியை இந்த வஜாவின்கீழ் கொண்டுவரக்கூடாது. மொத்த நன்செய் தீர்வையிலிருந்து அந்தந்த வருஷத்து கம்மியைகழித்துவிட்டு பாக்கியை இந்த கணக்கில் கொண்டுவரவேண்டியது.

காலஸ்திதி வஜா:—அதாவது கிறமமாய் கொடுக்கப்பட்ட வஜாவும் வாப்சுகுடுக்கப்பட்டதொகையும், ஜாஸ்திநீர் (முழுகடை) னாலாவது நீர்தட்டினாலாவது க்ஷாமம் முதலான கெட்டகால ஸ்திதியினாலாவது நேரிட்ட நஷ்டத்துக்கு வஜா கொடுக்கப்படுகிறது.

நீர் ஜாஸ்தி (முழுகடை) அல்லது நீர்கட்டுக்காக கொடுக்கப்பட்ட வஜாக்களின நிலத்துக்குள்ள பாகத்தையும் நீருக்குள்ள பாகத்தையும்சேர்த்து இரிகேஷன் ரிவினியூ அதாவது ஜலத்துக்குள்ள பாகத்திலிருந்து கழிக்கவேண்டியது. இந்த பிரசிடன்சியில் வழக்கம் நிலத்தீர்வைக்குமாத்திரமேஅல்லது தண்ணீர்தீர்வையையும் சேர்த்தே வஜா கொடுக்கப்படுகிறது. நீர் ஜாஸ்தி (முழுகடை) யினாலாவது நீர் தட்டினாலாவது நேரிட்ட நஷ்டம் பாய்ச்சலாதாரத்தின் குறைவினால் நேரிட்டதாகவிருக்கிறபடியால் வஜா கொடுக்கப்பட்ட முழு மொத்தத்தையும் இரிகேஷன் ரெவினியூவிலிருந்து கழிக்கவே

ண்டியது. பாய்ச்சலின் குறைவினால் அல்லாத இதர காரணங்களு க்கு கொடுக்கப்படுகிற வஜாவில் நீருக்குள்ள பாகத்தைமாத்திரமே கழிக்கவேண்டியது.

வாபசு கொடுக்கப்பட்டது என்கிற அம்சத்தை விவரிக்கவேண் டியதில்லை.

9. கைப்பற்று விவரத்தில் வருஷப்பயிரென்கிற பாபத்தில் வருஷமுழுமைக்கும் தண்ணீர் பிடிக்கிற கரும்பு வெற்றிலை வாழை முதலான விசேஷபயிர்கள் செய்யப்பட்ட நிலங்களின் மொத்தவிஸ் தீர்ணத்தை தாகல்செய்யவேண்டியது.

10. சாதாரணமாய் மொத்ததீர்வை முதலில் நிலத்துக்கும் நீருக்கும் பாகிக்கப்படுகிறது ஆனால் சில பாய்ச்சலாதாரங்களின் கீழ்நிலத்துக்கும் நீருக்குள்ள பாகத்தை பின்னும் பாகிக்கவேண்டிய தாகவிருக்கிறது.

கிருஷ்ணாஜில்லா ரேபல்லி பாபட்லா தாலூகாக்களின் சில கி ராமங்களிலுள்ள புஞ்சைநிலங்களுக்கும் தருசு நிலங்களுக்கும் அ ணைக்கட்டு ஜலம் பாய்ந்தால் அவைகளின் நிலத்தீர்வை 1872ம்வரு மேமீ 14உ 798 நம்பருள்ள கவரன்மெண்டு உத்திரவுபிரகாரம் இ ரண்டாவது குறாப் ரேட்டிலிருந்து முதல் குறாப்ரேட்டுக்கு உயர்த் தப்படுகிறது. இந்த விஷயத்தில் தான் நிலத்தீர்வையை பின்னும் அடியில்கண்டமாதிரியாய் பாகிப்பது அவசியமாயிருக்கிறது.

நிலத்தீர்வை.

| மாமூல். | ஜலம்பாய்ந்ததினால் உண்டான ஜாஸ்தி. |
|---|---|

இந்த ஜாஸ்திதீர்வை நிலத்தீர்வையுடன் சேர்ந்திருக்கிறபடியா ல் இது பரோக்ஷமாய் ஜாஸ்தியாய்வந்த நிலத்தீர்வையென்று பாய்ச் சலாதாரத்தின் கணக்கில் தாகல்செய்யப்படுகிறது.

அதே ஜில்லாவில் பந்தர் குடிவாடா தாலூக்காக்களின் சிலபா கங்களில் சில நஞ்சைநிலங்கள் புது செட்டில்மெண்டான காலத்தில் அணைக்கட்டு ஆதாரத்துக்கு உள்பட்டதென்று கணக்கில் கொண்டு வரப்பட்டும் அணைக்கட்டு ஜலம் நாளதுவரையில் பாயாமலே யிருக்

கிறபடியால் அப்படிப்பட்ட நிலங்களை பாய்ச்சல் குறைவுள்ள பூமி யென்று ஏற்படுத்தி அவைகளுக்கு அணைக்கட்டு தண்ணீர்வரி ரேட்டில் 3ல் 2 பங்கு விகிதம் தீர்வை ஏற்பட்டிருக்கிறது இந்த நிலங்களுக்கு அணைக்கட்டு ஜலம் பாயும்போது பூரா தண்ணீர் தீர்வை ஏற்படுகிறது இந்த தண்ணீர்வரி பூரு ரேட்டுக்கும் குறைந்த ரேட்டுக்குமுள்ள வித்தியாசமானது பாய்ச்சலாதாரக்கணக்கில் பிரத்தியட்சமாய் வந்தவரவென்று கொண்டுவரப்படுகிறது இதற்காக தண்ணீர் தீர்வை அடியில்கண்டமாதிரியாய் பாகிக்கப்படுகிறது.

தண்ணீர் தீர்வை.

| மாமூல். | பாய்ச்சல் பூர்த்தியானதினால்உண்டான ஜாஸ்தி. |
|---|---|

பக்கத்தில் உதகரித்த பாய்ச்சலாதாரங்களினால் நீர் பாய்ச்சப்படும் நிலங்களின் தீர்வை மொத்தமாய் ஏற்பட்டும் அவைகளை பாச்சல் ஏற்பட்டபிறகு மாற்றி ஜாஸ்தி பண்ணப்பட்டுமிருக்கிறது. அப்படி ஜாஸ்தியானதில் பாய்ச்சல் விருத்தியை அனுசரித்து தீர்வை உயர்த்தப்பட்ட அம்சமும் சேர்ந்திருக்கிறது. பாய்ச்சல் விர்த்தியாகாமலிருந்தால் அது எந்த வகுப்பில் சேர்க்கப்படுமென்றும் விருத்திபண்ணினதால் எந்தவகுப்பில் சேர்ந்திருக்கிறதென்றும் தெரிந்துக் கொண்டு மேற்கண்ட அம்சத்தை நிர்த்தாரணம் செய்யவேண்டியது. இந்த விஷயத்திலும் நீருக்குள்ள பாகமானது மறுபடியும் அடியில் கண்ட மாதிரியாய் இந்த ஆபீசுகணக்கில் பாகிக்கப்படுகிறது.

நீருக்குள்ள பாகம்.

| மாமூல். | செட்டில்மெண்டு ஜாஸ்தி. |
|---|---|

இந்த பாய்ச்சலாதாரங்களுக்கு ஜில்லாக்களிலிருந்து அனுப்பும் கணக்குகளில் குறுப்புவாரியாய் அந்தந்த வகுப்புக்கும் இனத்துக்கும் மொத்த விஸ்தீரணத்தை தாகல்செய்வது போதுமானது.

**11.** A ஸ்டேட்மெண்டு தயார்செய்வதற்குமுந்தி புலவாரி விவாமுள்ள B ஸ்டேட்டுமெண்டு தயார்செய்வது அவ்சியமாயிருக்கிறது. எந்த வருஷமுதல் கணக்கு வைக்கப்படுகிறதோ அந்த முதல்

வருஷத்துக்குமாத்திரம் புலவாரி விவரம் தயார்செய்வது போதுமானது. பின்னிட்டவருஷங்களுக்கு அடியிற்கண்ட மாதிரியாய்சம்மி ஜாஸ்தியைக் காட்டலாம்.

பிராக்படி—

சம்மி ராஜினுமாமுதலானது.

(இதற்கு நம்பர்வாரி)

பாக்கி—

ஜாஸ்தி.

(இதற்கு நம்பர்வாரி)

நாளது வருஷத்துக்கு மொத்தம்.

பிரதி வருஷத்திய அடங்கல் கணக்கு பூர்த்தியானபிறகு அதிலிருந்து B-ஸ்டேட்டுமெண்டு தயார்செய்து அதை A-ஸ்டேட்டுமெண்டுடன் பிரதிவருஷத்தின் ஜுன்மீ 30உக்குள் கர்ணன்கள் தாசில்தாரிடம் தாகல்செய்யவேண்டியது.

12. 1882ளு நவம்பர்மீ 11உயுள்ள 918 I, நம்பர் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்டுமெண்டு உத்திரவுமூலமாய் தெரிவித்திருக்கிற ஸ்டேட் செக்ரடெரியின் உத்திரவுபிரகாரம் ஜலம் பாயப்பட்ட நிலங்களில் வருஷத்தில் உண்டான பயிரின் தினசும் மொத்த மாசூலும் காலக்கிரயமும் தெரியவேண்டியதாயிருக்கிறது இந்த விவரங்களை தாகல்செய்வதற்கு A-ஸ்டேட்டுமெண்டின் பின்புறத்தில் பாரம் அச்சிட்டிருக்கிறது.

13. ஒரு கிராமத்தின் பாய்சல் விவர முழுமையும் B-ஸ்டேட்டுமெண்டில் தாகல்செய்யலாம் ஆனால் 10 ஏகராவுக்குமேல் ஆயக்கட்டுள்ள பிரதி பாய்ச்சலாதாரத்துக்கும் A-ஸ்டேட்டுமெண்டு பிரத்தியேகமாய் அனுப்பவேண்டியது. 10 ஏகராவும் அதற்கு கீழ்பட்டும் ஆயக்கட்டுள்ள பாய்ச்சலாதாரங்களுக்கு மொத்தமாய் கணக்கு தயார்செய்யலாம், ஆனால் அவைகளின் பெயர்மாத்திரம் ஷராகலத்தில் காட்டவேண்டியது.

14. 1880ளு ஜனவரிமீ 29உயுள்ள 154 நம்பர் போர்ட்டாருடைய புரோசீடிங்சில் ஏற்படுத்தியிருக்கிற பிரகாரம் பாய்ச்சலா

தாரத்தின் வரத்தவை A-ஸ்டேட்மெண்டின் தலைப்பில் காட்டவேண்டியது.

(a) நதிகளிலிருந்தும், ஆறுகளிலிருந்தும் ஜலம் வரப்பட்ட பாய்ச்சலாதாரங்கள்.

(b) மழை ஜலம் வரத்துள்ள ஏரி வகுப்புகள்.

(c) ஷை தனி ஏரிகள்.

(d) சில்லரை பாய்ச்சலாதாரங்கள்.

15. ஒரே தலைமையான பாய்ச்சலாதாரம் அல்லது கால்வாய் ஜலம் ஒரு கிராமத்துக்கு மேற்பட்டு அனேக கிராமங்களுக்கு பாய்ந்தால் அந்த பாய்ச்சலாதாரம் அல்லது கால்வாயின் பெயரையேஅப்படி பாயப்பட்ட பிரதி கிராமத்தின் A - ஸ்டேட்மெண்டின் தலைப்பில் காட்டவேண்டியது.

16. கவர்ன்மெண்டுக்கு தனித்தனியாய் கணக்கு அனுப்பவேண்டிய பாய்ச்சலாதாரங்களை சுலபமாய் தெரிவிக்கும்படியாய் அவைகளின் ஜாபிதா இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

17. பாய்ச்சல் விஸ்தீரணத்தில் வருஷவாரி கம்மி ஜாஸ்திக்கு காரணம் காட்டவேண்டியது மேலும் கிராம கணக்குகளை இவிடம் அனுப்புவதற்குமுன் அதில் தாகலாயிருக்கிற தொகைகள் ஜமாபந்தி கணக்குகளுக்கு ஒற்றுமையாயிருக்கிறதாவென்று தாசில்தார் பார்க்கவேண்டியது.

18. ஒவ்வொரு கிராமத்திய A-B-ஸ்டேட்டுமெண்டுகளும் பிரதிவருஷத்தின் ஜூலைமீ 7உக்குள் தாலூகா கச்சேரியிலிருந்து இந்த ஆபீசுக்கு அனுப்பவேண்டியது.

---